ஈமான் மொழி வாசகம்

புலவர். செல்வராசனார் (H)

பொன் மொழி வாசகம்

(இரண்டாம் புத்தகம்)

ஆசிரியர்கள் :

புலவர் பு. செல்வராசனர்,
தலைமைத் தமிழாசிரியர்,
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

ஆபிரகாம் அருளப்பன், B. A.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அர்ச். சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிப்பாசிரியர் :

சு. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in. Geog.)
தலைமையாசிரியர்
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்

ஸ்ரீ வைகுண்டம்

1954

பதிப்புரிமை] [விலை அணா 6

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

'பொன் மொழி வாசகம்' என்னும் பெயரோடு வெளிப் போதரும் தமிழ் வாசக வரிசையில் இது இரண்டாம் புத்தக மாகும். இது 1941–ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதன் கண் 400 புதிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. மொழிப் போதனையில் முக்கியமாகக் கருதப்படுவது மொழிப் பயிற்சியேயாகும். இப்பயிற்சிக்குப் போதிய வாய்ப்பளிக் கும் முறையில் இதன்கண் பல்வேறு வகையான ஓவியங் கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அவற்றைப் பயன் படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழியறிவு ஆக்கமுறும் வகையில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இப் பயிற்சிகள் அனைத்தையும் குழந்தைகள் செய்யுமாறு தூண்ட வேண்டுவது ஆசிரியர் கடமையாகும். அன்றியும் வகுப்புக்கு ஏற்றவையாகச் சில இலக்கண பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கு இன்பு மூட்டத்தக்க இனிய எளிய பாடல்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப் பாட்டுக்களைக் குழந்தைகள் மனப்பாடம் செய்வது நல மாகும். இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ள பாடங்கள் சிறு வர் சிறுமியரின் தமிழறிவையும், பொது அறிவையும் வளரச்செய்யும் என்பது உறுதி. அறிஞர்கள் தமிழ்ச்சிறுவர் சிறுமியர்க்கு இந்நூல் பயனளிக்குமாறு செய்வார்கள் என முற்றிலும் நம்புகின்றோம்.

சென்னை
7–11–54.

ஆசிரியர்கள்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	விலங்குகளின் ஒலிகளும் பறவைகளின் ஒலிகளும்	...	4
2.	வீட்டு விலங்குகள்	...	6
3.	காட்டு விலங்குகள்	...	8
4.	கிராமத் தொழிலாளர்	...	10
5.	வடமொழி எழுத்துக்கள்—I	...	12
6.	வடமொழி எழுத்துக்கள்—II	...	13
7.	எலிக்குக் கலியாணம்	...	14
8.	ஒன்றும் ஒன்றுக்கு மேலும்	...	16
9.	வாகனங்கள்	...	17
10.	படம் சேர்த்துப் படித்தல்	...	19
11.	நிறங்கள்	...	20
12.	சுவைகள்	...	21
13.	இரட்டைச் சொற்கள்	...	22
14.	பிரிக்க முடியாத இரட்டைச் சொற்கள்	...	23
15.	உச்சரிப்பு	...	24
16.	பறவைகள்	...	25
17.	இதற்கு இது இயல்பு	...	26
18.	திசைகள்	...	27
19.	உள்ளவனும் இல்லாதவனும்	...	29
20.	சைக்கிள் வண்டி (பாட்டு)	...	30
21.	மேல், கீழ், உள்ளே, வெளியே	...	31
22.	எனது வீடு	...	32
23.	எங்கள் ஊர்	...	33
24.	கிராமச்சாவடி	...	34
25.	மழை	...	36
26.	பள்ளிக்கூடம்	...	37
27.	பசுவும் கன்றும்	...	38
28.	பசுவும் கன்றும் (பாட்டு)	...	39
29.	சூரியனும் சந்திரனும்	...	40
30.	குல்லாய் வியாபாரி (கதைப்படம்)	...	42
31.	கைத்தொழில் (பாட்டு)	...	44
32.	நாணயங்கள்	...	45
33.	ஆமையும் முயலும்	...	46
34.	தோட்டம்	...	48
35.	நெல் வயல்	...	49
36.	எஸ்கிமோக்கள்	...	52
37.	குரங்குப் பாலம்	...	55
38.	சந்தை	...	58
39.	மைனாவும் முயலும்— I (உரையாடல்)	...	60
	மைனாவும் முயலும்—II (உரையாடல்)	...	61
	செய்யுட் பாடங்கள்	...	63
	1. ஆத்திச்சூடி	...	
	2. உலகநீதி	...	64

உரையாடல் 1:—ஆசிரியர் படங்களைப் பற்றி உரையாடல் நடத்தவேண்டும்.



உரையாடல் 2:—ஆசிரியர் படத்தைப் பற்றி உரையாடல் நடத்தவேண்டும்.



உரையாடல் 3:—ஆசிரியர் படங்களைப் பற்றி உரை யாடல் நடத்தவேண்டும்.



கோடுள்ள இடங்களில் தகுந்த எழுத்துக்களை எழுது:

1. கடி—ரம்	6. சே—ல்	11. —ம்—
2. க—ம்பு	7. —ர்	12. ம–வெ–டி
3. – –யவிமா–ம்	8. எ—து	13. —னை
4. முத—	9. –ள–கு	14. சி—க—
5. பெ—டி	10. —ன்	15. —லி
		16. க—டி

1. விலங்குகளின் ஒலிகளும், பறவைகளின் ஒலிகளும்



விலங்குகளின் ஒலிகள்

குதிரை கனைக்கும். எருது முக்காரமிடும்.
நாய் குரைக்கும். கழுதை கத்தும்.
கரடி உறுமும். நரி ஊளையிடும்.
யானை பிளிறும். சிங்கம் கர்ச்சிக்கும்.

பறவைகளின் ஒலிகள்

கிளி பேசும்.
மயில் அகவும்.
சேவல் கூவும்.
காகம் கரையும்.
ஆந்தை அலறும்.
குயில் பாடும்.

பயிற்சி:

கோடுள்ள இடங்களில் தக்க சொற்களை எழுது :—

காகம் ' கா...கா ' என்று——.
நாய் 'வள்...வள் ' என்று——.
குயில் ' க்கூ...க்கூ ' என்று——.
சேவல் ' கொக்கரக்கோ ' என்று——.

2. வீட்டு விலங்குகள்



பசு சாதுவான பிராணி. அது நமக்குப் பால் தருகிறது.

எருது ஏர் உழ உதவும். அது வண்டியும் இழுக்கும்.

ஆட்டின் உடலில் நீண்ட உரோமம் உண்டு.

நாய் நன்றி உள்ள மிருகம்.

அது வீட்டைக் காக்கும்.

பூனை எலி பிடிக்கும்.
அது பால் குடிக்கும்.



குதிரை வேகமாக ஓடும்.
அது வண்டி இழுக்கும்.

இம்மிருகங்களை வீடுகளில் வளர்க்-கிறோம்.

ஆகையால் இவை வீட்டு விலங்கு-கள் எனப்படும்.

விலங்கு என்னும் சொல்லுக்கு மிருகம் என்பது அர்த்தம்.

பயிற்சி :

1. பசு நமக்கு என்ன தரும் ?
2. ஆட்டினால் நமக்குப் பயன் என்ன ?
3. வேறு இரண்டு வீட்டு விலங்குகளின் பெயர்களைக் கூறு.

3. காட்டு விலங்குகள்

மிருகங்களுள் மிகப்
பெரியது யானை.





மான் வெகு வேகமாக
ஓடும்.

இவை இரண்டும் மாமிசம் புசியா.

கரடியின் உடலில் கருமை-
யான நீண்ட உரோமம்
உண்டு.





சிங்கம் மிருகங்களுக்கு
அரசன்.



புலியின் உடலில் மஞ்சள் நிறமும், கருமை நிறமும் கலந்திருக்கும்.

குள்ளநரிதந்திரம் மிக்கது. அது நண்டு தின்னும்.

இவை காட்டில் வாழும் விலங்குகள்.
இவ்விலங்குகள் மாமிசம் தின்பவை.
இவை சாதுவானவை அல்ல; துஷ்ட மிருகங்கள்.

விடை கூறு:—

1. இரண்டு சாதுவான மிருகங்களின் பெயர்களை எழுது.
2. இரண்டு துஷ்ட மிருகங்களின் பெயர்களை எழுது.
3. மிருகங்களுக்கு அரசன் யார்?
4. யானைக்குத் தந்தங்கள் எங்கே உள்ளன?

4. கிராமத் தொழிலாளர்

நிலத்தை உழுது பயிர் செய்பவர் *உழவர்.*

பித்தளைப் பாத்திரங்கள் செய்பவர் *கன்னார்.*

இரும்பு வேலை செய்பவர் *கொல்லர்.*

வீடு கட்டுபவர் *கொத்தர்.*



மரவேலை செய்பவர் *தச்சர்.*

மண்பாண்டம் செய்பவர்

குலாலர்.

ஆடை நெய்பவர் *நெசவாளர்.*

நகை செய்பவர் *தட்டார்.*

எவர் எதைச் செய்வார் ?

1. தையற்காரர்———.
2. கணக்கப்பிள்ளை———.
3. பாடகர்———.
4. ஆசிரியர்———.

5. வடமொழி எழுத்துக்கள்—1



ஜ ஸ க்ஷ

ஜலம்	வாஸனை	திராக்ஷை
ஜாடி	புஸ்தகம்	பக்ஷி
பஜ்ஜி	ஸிம்மம்	க்ஷேமம்
ஜோதி	ஸுலபம்	லக்ஷ்மி

ஜன்னல் கம்பி
ஜால வித்தை
ஸரஸ்வதி பூஜை
பக்ஷணம் தின்னு

6. வடமொழி எழுத்துக்கள்—2

ஷ ஹ ஸ்ரீ

விஷம்	ஹனுமான்	ஸ்ரீ ராமர்
கஷாயம்	ஹாரம்	ஸ்ரீ கிருஷ்ணர்
பாஷை	ஹிமயம்	ஸ்ரீ காந்தி
புஷ்பம்	ஹோமம்	ஸ்ரீ தரன்

ஷஷ்டி பூஜை
புஷ்ப ஹாரம்
ஹிமய பர்வதம்

8. ஒன்றும் ஒன்றுக்கு மேலும்

இவன் ஒரு **பையன்.**

இவர்கள் **பையன்கள்.**

இவள் ஒரு **பெண்.**

இவர்கள் **பெண்கள்.**



இது ஒரு **நாற்காலி.**



இவைகள் **நாற்காலிகள்.**

இது ஒரு **பசு.**

இவை **பசுக்கள்.**



9. வாகனங்கள்

1. ஒரு மாடு இழுக்கும் வண்டி
   ஒற்றை மாட்டு வண்டி.
2. இரண்டு மாடுகள் இழுக்கும் வண்டி
   இரட்டை மாட்டு வண்டி.
3. குதிரை இழுக்கும் வண்டி குதிரைவண்டி.
4. இரண்டு குதிரைகள் இழுக்கும் வண்டி
   கோச்சு வண்டி.

5. அநேகர் ஏறிச்செல்வது மோட்டார் பஸ்.
6. மோட்டார்வண்டி வேகமாய்ச் செல்லும்.
7. இரயில் வண்டி நீராவியால் ஓடுகிறது.
8. நீராவிக் கப்பலால் கடல்களைக் கடக்கலாம்.
9. ரிக்‌ஷா வண்டியை மனிதன் இழுக்கிறான்.
10. மூட்டைகள் ஏற்ற உதவுவது கட்டை வண்டி.
11. மனிதர் சுமந்து செல்வது பல்லக்கு.
12. ஆகாய விமானம் வானத்தில் பறக்கும்.
13. குதிரை, சவாரி செய்ய உதவும்.
14. யானையின்மேல் அரசர் செல்வர்.
15. கட்டுமரம் மீன் பிடிக்க உதவும்.

விடை எழுது :

1. மோட்டார் பஸ் எதற்கு உபயோகம் ?
2. மனிதன் இழுக்கும் மூட்டை வண்டியின் பெயர் என்ன ?
3. படகு எதற்கு உபயோகம் ?
4. இரண்டு குதிரைகள் இழுக்கும் வண்டியின் பெயர் என்ன ?

10. படம் சேர்த்துப் படித்தல்

நான் ஒரு வாங்கினேன்.

கந்தன் ஒரு வாங்கினான்.

மரத்தின் மேல் இருக்கிறது.

 கன்றுக்குப் பால் தருகிறது.

பாம்பாட்டி பெட்டியில்  இருக்கிறது.

மிகவும் பெரிய மிருகம்.

அணிலின் முதுகில் மூன்று ——— ——— ——— இருக்கின்றன.

எங்கள் வீட்டில் ஒரு  இருக்கிறது.

11. நிறங்கள்

1. கிளியின் நிறம் *பச்சை*.

2. எலுமிச்சம் பழத்தின் நிறம் *மஞ்சள்*.

3. சங்கின் நிறம் *வெண்மை*.

4. மிளகாய் வற்றலின் நிறம் *சிவப்பு*.

5. வானத்தின் நிறம் *நீலம்*.

6. காக்கையின் நிறம் *கறுப்பு*.

பயிற்சி

அ. தகுந்த சொல்லால் கோட்டை நிரப்பு :

1. இலையின் நிறம்——.
2. சாமந்திப்பூ நிறம்—.
3. பாலின் நிறம்——.
4. இரத்தத்தின் நிறம்—.
5. கடலின் நிறம்———.
6. அடுப்புக்கரியின் நிறம்—.

ஆ. விடை எழுது :

1. உப்பின் நிறம் என்ன ?
2. மிளகின் நிறம் என்ன ?

12. சுவைகள்



கரும்பு இனிக்கும்.



எலுமிச்சம்பழம் புளிக்கும்.



பாக்கு துவர்க்கும்.

உப்பு உவர்க்கும்.



மிளகாய் காரும்.

பாகற்காய் கசக்கும்.

இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காரம், கசப்பு என்பன அறு சுவை எனப்படும்.

13. இரட்டைச் சொற்கள்

1. வாழைக் காய் *சீப்புச் சீப்பாய்* இருக்கும்.
2. பூக்கள் *கொத்துக் கொத்தாய்ப்* பூத்தன.
3. சிறுவர் *வரிசை வரிசையாய்* நின்றனர்.
4. தேங்காய் *குலை குலையாய்க்* காய்க்கும்.
5. ஆடுகள் *மந்தை மந்தையாய்* மேய்கின்றன.
6. நெல்லைப் *போர் போராய்க்* குவித்தார்கள்.
7. அரிசியை *மூட்டை மூட்டையாய்க்* கட்டினார்கள்.
8. மக்கள் *கூட்டம் கூட்டமாய்ச்* சென்றார்கள்.

பயிற்சி

தகுந்த இரட்டைச் சொற்களால் கோடுகளை நிரப்பு :

சுளை சுளையாய்—கட்டுக் கட்டாய்—
முடிச்சு முடிச்சாய்

1. விறகைக்———கட்டினர்.
2. நெல் நாற்றை———கட்டுவார்கள்.
3. பலாப் பழத்தைச்———எடுக்கலாம்,

14. பிரிக்க முடியாத இரட்டைச் சொற்கள்

1. கந்தன் *கலகல* எனச் சிரித்தான்.
2. பாலன் பல்லை *நறநற* வென்று கடித்தான்.
3. உலை *தளதள* வென்று கொதித்தது.
4. கத்தி *பளபள* வென்று மின்னியது.
5. பம்பரம் *கிறுகிறு* வென்று சுழன்றது.
6. திருடன் *திறுதிறு* வென்று விழித்தான்.
7. பரதன் *படபட* வென்று பேசினான்.
8. கண்ணன் *கடகட* வெனப் புரண்டான்.

பயிற்சி

தகுந்த சொற்களால் கோடுகளை நிரப்பு :

மளமள—சலசல—வளவள

1. இலைகள்——என்று அசைந்தன.
2. பிள்ளைகள்———என்று பேசினார்கள்.
3. கிளை———என்று ஒடிந்தது.

15. உச்சரிப்பு

1. இது ஒரு கல்.

2. அவை பசுக்கள்.

3. பத்துப் பலம் சர்க்கரை வாங்கிவா.

4. அது நெல் அடிக்கும் களம்.

5. எனக்கு மாம்பழம் வேண்டும்.

6. ஆகாயத்தின் நிறம் நீலம்.

7. இந்த அறையின் நீளம் என்ன ?

8. தங்கக் கிண்ணத்தில் தண்ணீர் கொண்டு வா.

9. மன்னர் வெந்நீர் குடித்தார்.

10. நண்டு வலையில் இருந்து வளையில் புகுந்தது.

இவற்றின் உச்சரிப்பை அறிந்து கொள்.

கல்—கள் ; பலம்—களம்—பழம் ; நீலம்—நீளம் ; கிண்ணம்—மன்னர் ; தண்ணீர்—வெந்நீர்–வலை–வளை.

16. பறவைகள்



1. பறவை ஆகாயத்தில் எப்படிப் பறக்கிறது ?
2. பறவை தன் சிறகுகளின் உதவியால் பறக்கிறது.
3. சில பறவைகள் வெகு உயரம் பறக்கும்.
4. சில பறவைகள் வெகு தூரம் பறக்கும்.
5. எல்லாப் பறவைகளும் அப்படிச்செய்ய முடியாது.
6. பறவையின் மூக்குக்கு அலகு என்பது பெயர்.
7. பறவைகள் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்.



17. இதற்கு இது இயல்பு

காலையில் விழிக்கும்;
'கொக்கர கோ' என்று கூவும்.



நன்றி மிக்கது ;
எசமானன் வீட்டைக் காக்கும்.

உருவில் சிறியது ;
ஆனால், சுறுசுறுப்பு உள்ளது.

அழகில் சிறந்தது ;
தோகை விரித்து ஆடும்.



கம்பீரமான மிருகம்;
வேகமாக ஓடும்.



மந்த குணம் உடையது ;
சேற்றில் விழுந்து புரளும்.

உறுப்பில் சிறந்தது.

18. திசைகள்

1. சூரியன் உதிக்கும் திசை **கிழக்கு.**

2. சூரியன் மறையும் திசை **மேற்கு.**

3. நீ சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நின்றால் உனது இடக்கைப்பக்கம் **வடக்கு.**

4. உனது வலக்கைப்பக்கம் **தெற்கு.**

5. சுவரில் மாட்டி உள்ள தேசப் படத்தின் திசைகளை எப்படி அறிவாய் ?



6. படத்தின் தலைப்பக்கம் வடக்கு.

7. படத்தின் கீழ்ப்பக்கம் தெற்கு.

8. படத்தின் இடப்பக்கம் கிழக்கு.

9. படத்தின் வலப்பக்கம் மேற்கு.

திசைகள் நான்கு. அவை வடக்கு, கிழக்கு. தெற்கு, மேற்கு என்பன.

விடை எழுது :

1. உன் வீடு எந்தத் திசையை நோக்கி இருக்கிறது ?
2. உன் பள்ளிக்கூடம் உன் வீட்டிற்கு எத்திசையில் இருக்கிறது?

19. உள்ளவனும் இல்லாதவனும்

1. படிப்பு உள்ளவன் பண்டிதன்.
2. படிப்பு இல்லாதவன் மூடன்.
3. பணம் உள்ளவன் பணக்காரன்.
4. பணம் இல்லாதவன் ஏழை.
5. உண்மை பேசுபவன் சத்தியவான்.
6. உண்மை பேசாதவன் பொய்யன்.
7. புத்தி உள்ளவன் அறிவாளி.
8. புத்தி இல்லாதவன் மடயன்.
9. தைரியம் உள்ளவன் தைரியசாலி.
10. தைரியம் இல்லாதவன் கோழை.
11. கோபம் உள்ளவன் கோபக்காரன்.
12. கோபம் இல்லாதவன் சாது.

பயிற்சி

தகுந்த சொற்களால் கோடுகளை நிரப்பு :

செவிடன்—நோயாளி—குருடன்—
நொண்டி—ஊமை.

1. கண் இல்லாதவன்———.
2. கால் இல்லாதவன்———.
3. காது கேளாதவன்———.
4. பேச முடியாதவன்———.
5. நோய் உள்ளவன்———.



20. சைக்கிள் வண்டி

(பாட்டு)

தங்கையே பார், தங்கையே பார்,
சைக்கிள் வண்டி இதுவே பார்! 1
சிங்கார மான வண்டி!
சீமையிலே செய்த வண்டி! 2
மாடில்லே, குதிரை இல்லே
மாயமதாய்ப் பறந்திடும் பார்! 3
காலாலே மிதிப்ப தனுல்
கடும்விசையில் போயிடும் பார்! 4
ஒன்றன்பின் ஒன்ருக
உருளும்பை தாக்களேப் பார்! 5
அக்காளும் தங்கையும் போல்
அவை போகும் அழகைப் பார்! 6

—கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளை

21. மேல், கீழ், உள்ளே, வெளியே



புத்தகம் மேசைமேல் இருக்கிறது.



நாற்காலியின் கீழ் பந்து இருக்கிறது.



பணம் பெட்டியின் உள்ளே இருக்கிறது.

நாய் வீட்டுக்கு வெளியே படுத்திருக்கிறது.

கோடுகளைத் தகுந்த சொற்களால் நிரப்பு :

1. மேசையின் —— புத்தகம் இருக்கிறது.
2. பெட்டியின் —— பணம் இருக்கிறது.
3. வீட்டுக்கு —— நாய் படுத்திருக்கிறது.
4. நாற்காலியின் —— பந்து இருக்கிறது.



22. எனது வீடு

1. இது எனது வீடு. இது சிறிய வீடு.
2. வீட்டில் நான்கு அறைகள் உள்ளன.
3. வீட்டைச் சுற்றித் தோட்டம் இருக்கிறது.
4. வீட்டின் பக்கத்தில் கிணறு இருக்கிறது.
5. நாங்கள் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்கிறோம்.
6. எங்கள் தோட்டத்தில் மா, பலா, வாழை, தென்னை முதலிய மரங்கள் உள்ளன.
7. மாலை நேரத்தில் நாங்கள் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடுவோம்.

விடை கூறு :

1. உன் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன?
2. உனது வீட்டுக்குச் சன்னல்கள் உண்டா ?



23. எங்கள் ஊர்

1. எங்கள் ஊர் *பொன்னூர்.*
2. எங்கள் ஊரில் சில தெருக்கள் உண்டு.
3. எங்கள் ஊரில் குடிசை வீடுகளே அதிகம்.
4. எங்கள் ஊரில் ஒரு கோவில் இருக்கிறது.
5. எங்கள் கிராமத்தில் தேர் இருக்கிறது.
6. எங்கள் ஊரில் ஒரு பள்ளிக் கூடம் இருக்கிறது.
7. எங்கள் கிராமத்தைச் சுற்றி வயல்கள் உள்ளன.

விடை கூறு:

1. உன் ஊரின் பெயர் என்ன?
2. உன் ஊரிலுள்ள முக்கிய இடங்கள் எவை?

24. கிராமச் சாவடி

1. எங்கள் ஊரில் கிராமச் சாவடி ஒன்று இருக்கிறது.
2. அங்குக் கிராம அதிகாரிகளைக் காணலாம்.
3. கிராமத் தலைவருக்குக் *கிராம முனிசிப்* என்பது பெயர். அவரை *மணியக்-காரரர்* என்றும் சொல்வது உண்டு.
4. மணியக்காரரர் நிலவரி வசூல் செய்கிறார்.
5. அவர் வழக்குகளையும் தீர்த்து வைக்கிறார்.
6. கணக்கப்பிள்ளை நிலவரிக் கணக்குகளை எழுதுவார்.

7. தலையாரியும், வெட்டியானும் மணியக்காரருக்கும், கணக்கப் பிள்ளைக்கும் வேண்டிய உதவிகளைச்செய்கின்றனர்.

விடை எழுது :

1. கிராமத்தில் நிலவரி வசூலிப்பவர் யார்?
2. உங்கள் கிராமக் கணக்கப்பிள்ளையின் வேலை என்ன ?

இவற்றைத் தெரிந்துகொள் :

பெரியது		*சிறியது*
பசு	—	கன்று
எருமை	—	கன்று
யானை	—	கன்று
நாய்	—	குட்டி
பூனை	—	குட்டி
ஆடு	—	குட்டி

25. மழை

1. வானத்தில் புகை போல ஒரு பொருளைப் பார்க்கிறாய்.
2. அதற்கு மேகம் என்பது பெயர்.
3. மேகத்தில் நீராவி இருக்கிறது.
4. மேகத்தின் மேல் குளிர்ந்த காற்றுப் பட்டால், நீராவி நீர்த்துளிகளாக மாறும்.
5. நீர்த்துளிகள் மழையாகப் பெய்யும்.
6. மழை இல்லாவிட்டால் எந்த ஜெந்துவும் உயிரோடு இருக்க முடியாது.
7. மழையினால் நாம் நீரைப் பெறுகிறோம்.
8. விலங்கு, பறவை, முதலிய உயிர்களும் மழை இல்லாமல் வாழ முடியாது.
9. மழை இல்லாவிட்டால் பயிர்த்தொழில் செய்ய முடியாது.



26. பள்ளிக்கூடம்

1. இது எனது பள்ளிக்கூடம்.
2. இதில் எட்டாம் வகுப்புவரை இருக்கிறது.
3. நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.
4. எங்கள் பள்ளிக்கூடத்தில் முந்நூறு பிள்ளைகள் படிக்கிறார்கள்.
5. எங்கள் பள்ளிக்கூடத்தில் பத்து ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.
6. எங்கள் ஆசிரியர்கள் எல்லாரும் நல்லவர்கள்; நன்றாய்ப் படித்தவர்கள்.
7. ஆசிரியர்கள் எங்களிடம் அன்புடன் பழகுகிறார்கள்.
8. நாங்கள் நன்றாய்ப் படிக்கிறோம்.

விடை எழுது :

1. உன் பள்ளிக்கூடத்தின் பெயர் என்ன ?
2. நீ எந்த வகுப்பில் படிக்கிறாய் ?



27. பசுவும் கன்றும்

1. பசு சாதுவான மிருகம்.
2. பசுவை நாம் வீட்டில் வளர்க்கிறோம்.
3. பசு நமக்குப் பால் தருகிறது.
4. பசுவின் பால் உடம்பிற்கு நல்லது.
5. பசு, புல் வைக்கோல் பிண்ணாக்கு தவிடு முதலியவற்றைத் தின்னும்.
6. பசுவை அடிக்கக்கூடாது.
7. பசுவை அடித்தால் அது முட்டும்.
8. பசுவினிடம் அன்பாய் இருக்கவேண்டும்.

விடை எழுது :

1. உனது வீட்டில் பசு இருக்கிறதா ?
2. அதன் நிறம் என்ன ?



28. பசுவும் கன்றும்

(பாட்டு)

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு;—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி. 1

'அம்மா' என்குது
வெள்ளைப் பசு;—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி. 2

நாவால் நக்குது
வெள்ளைப் பசு;—பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி. 3

—கவிமணி, தேசிக விநாயகம் பிள்ளை



29. சூரியனும் சந்திரனும்

1. நாம் பூமியில் வசிக்கிறோம்.

2. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகாயத்தில் காணப்படுகின்றன.

3. ஆகாயத்திற்கு வானம் என்பது வேறு பெயர்.

4. காலையில் சூரியன் கிழக்குத் திசையில் தோன்றுகிறது.

5. மாலையில் சூரியன் மேற்குத் திசையில் மறைகிறது.

6. இரவில் நட்சத்திரங்களும், சந்திரனும் வானில் தெரிகின்றன.

7. முழு வட்டமான சந்திரன் தோன்றும் நாளைப் பௌர்ணமி என்கிறோம்.

8. சந்திரன் தெரியாத நாளை அமாவாசை என்கிறோம்.

பயிற்சி :

விடை எழுது :

1. ஆகாயத்திற்கு வேறு பெயர் என்ன ?
2. அமாவாசையன்று சந்திரன் தெரியுமா ?
3. சூரியன் மறையும் திசை எது ?
4. இரவில் வானில் தோன்றுபவை யாவை ?

எதிர்ப் பதங்கள் எழுது :

வெப்பம் ×
காலை ×
பகல் ×

கோடுள்ள இடங்களை நிரப்பு:

1. சந்திரன்———தோன்றுகிறது.
2. சூரியன்———பிரகாசிக்கிறது.
3. நாம்———வசிக்கிறோம்.
4. ஆகாயத்தில் ——— காணப்படுகின்றன.

30. குல்லாய் வியாபாரி

(கதைப்படம்)

குறிப்பு

படம் 1: குல்லாய் வியாயாரி குல்லாய் மூட்டையோடு போகிறுர்.

படம் 2: வெயில் அதிகம். ஆதலால் ஓர் ஆலமரத்தின் கீழ் மூட்டையை வைக்கிறுர்.

படம் 3: வியாபாரி தூங்குகிறுர். குரங்குகள் ஒவ்வொன்றும் ஒரு குல்லாயை எடுத்துப் போட்டுக்கொள்கின்றன.

படம் 4: வியாபாரி தூங்கி விழிக்கிறுர். மூட்டை காணப்படவில்லை.

படம் 5: வியாபாரி கோபத்தால் தம் தலையில் இருந்த குல்லாயைக் கீழே எறி-கிறார். எல்லாக் குரங்குகளும் குல்-லாய்களை எறிகின்றன.

படம் 6: வியாபாரி குல்லாய்களை மூட்டை கட்டிக்கொண்டார்.

பயிற்சி

1. குறிப்புக்களைப் படித்துக் கதையைச் சொல்லு.

2. கோடுகளைத் தக்க சொற்களால் நிரப்பு.

1. வியாபாரி தோளில்———தூக்கிக்கொண்டு போனார்.
2. ஓர் ஆல———நிழலில் தங்கினார்.
3. அந்த மரத்தில்———இருந்தன.
4. வியாபாரி———விட்டார்.
5. குரங்குகள்———இரங்கி வந்தன.
6. குரங்குகள்———ஐ அவிழ்த்தன.
7. ஒவ்வொரு குரங்கும் ஒரு———போட்டுக் கொண்டது.
8. வியாபாரி———பார்த்தார்.
9. குரங்குகள் தலைகளில்———இருந்தன.
10. வியாபாரி கோபத்தால் தமது———கீழே எறிந்தார்.
11. ———குல்லாய்களை எறிந்தன.
12. வியாபாரி———எடுத்துக் கொண்டார்.



31. கைத்தொழில்

(பாட்டு)

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ? 1

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது.
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ? 2

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள்?
குசவர் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடந்திட வேண்டுமென்றும்? 3

—நாமக்கல் கவிஞர்



32. நாணயங்கள்

1. நீ மிட்டாய் வாங்குகிறாய். மிட்டாய்க்காரனுக்குக் காசு தருகிறாய்.
2. காசுக்கு வேறு பெயர் நாணயம் என்பது.
3. நாணயங்களின் படங்களை மேலே பார்.
4. நாணயங்களுள் மிகப் பெரியது ஒரு ரூபாய்.
5. பதினாறு அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய்.
6. எட்டு அணாக்கள் கொண்டது அரை ரூபாய்.
7. நான்கு அணாக்கள் கொண்டது கால் ரூபாய்.
8. நான்கு காலணாக்கள் கொண்டது ஓர் அணா.

விடை எழுது :

1. ஒரு ரூபாய்க்கு எத்தனை அரை ரூபாய்கள் ?
2. எத்தனை அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய் ?



33. ஆமையும் முயலும்

1. ஒரு காட்டில் மிருகங்கள் கூடின. அவை வேடிக்கையாய்ப் பேசின. முயல் ஆமையை ஓட்டப் பந்தயத்துக்கு அழைத்தது. ஆமை ஒப்புக்கொண்டது.

2. பந்தயம் தொடங்க வேண்டிய இடத்தில் யானை நின்றது. பந்தயம் முடிய

வேண்டிய இடத்தில் மான் நின்றது. பந்தயம் தொடங்கியது.

3. முயல் வெகு வேகமாய் ஓடிற்று. அது சேர வேண்டிய இடம் சிறிது தூரத்தில் இருந்தது. முயல் திரும்பிப் பார்த்தது. ஆமை வெகு தூரத்தில் இருந்தது.

4. ஆமை வருவதற்கு நேரம் பிடிக்கும். ஆகையால் முயல் சற்று இளைப்பாற நினைத்தது. அது ஒரு மரத்தின் நிழலில் படுத்தது. அப்படியே தூங்கிவிட்டது.

5. ஆமை எங்கும் நிற்கவே இல்லை; நேரே சென்றது. பந்தயம் முடிய வேண்டிய இடத்தை அடைந்தது. விடாமல் ஓடிய ஆமை வென்றது. முயல் தோற்றது. ஏன் தோற்றது ?

விடை எழுது :

1. காட்டில் கூடினவை எவை ?
2. மிருகங்களுக்கு வழங்கும் வேறு பெயர் என்ன?
3. ஆமை மெல்ல நடக்குமா ? வேகமாக நடக்குமா ?
4. முயல் ஏன் தோற்றது ?



34. தோட்டம்

1. இது ஒரு தோட்டத்தின் படம். மல்லிகை, முல்லை, சாமந்தி முதலிய பூஞ் செடிகள் உள்ளது பூந்தோட்டம் எனப்படும். வெண்டை, கத்தரி, கொத்தவரை முதலிய காய்கறிச் செடிகள் உள்ளது காய்கறித் தோட்டம் எனப்படும். மா, பலா, கிச்சிலி முதலிய பழ மரங்கள் உள்ளது பழத் தோட்டம் எனப்படும்.

2. தோட்டத்தில் உள்ள செடிகளுக்கு நீர் பாய்ச்சக் கிணறு இருக்கிறது. பட்டணங்களில் சிங்காரத் தோட்டங்கள் இருக்கும். மக்கள் அங்கு மாலை நேரத்தைக் கழிப்பார்கள்.

35. நெல் வயல்

1. நெல், கரும்பு முதலியவை பயிர் செய்யப்படும் இடத்-துக்கு *வயல்* என்பது பெயர். *கழனி* என்பது வய-லுக்கு வழங்கும் வேறு பெயர். வயலைச் சுற்றி வரப்புக்கள் இருப்பதால் வயலில் நீர் தேங்கி நிற்கும்.

2. உழவர் வயலை ஏரால் உழுவர். நீர் இல்லாத வயலை உழுதால், வயல் *புழுதி* ஆகும். அதில் நெல் முதலிய தானியங்களை விதைப்பர். நீர் உள்ள வயலை உழுதால், வயல் *சேறு* ஆகும். சேற்றில் நாற்றை நடுவர். நாற்று விடும் இடத்துக்கு *நாற்றங்கால்* என்பது பெயர்.

3. நெற்பயிருக்கு வயலில் நீர் தேங்கி நிற்க வேண்டும். பயிரோடுகூட முளைத்து

வளரும் புல்பூண்டுகளைக் களைய வேண்டும். இதற்குக் *களை எடுத்தல்* என்பது பெயர்.

4. நெற்பயிர் வளர்ந்து கதிர் விடும். கதிர் முற்றிப் பழுக்கும். பழுத்த கதிரைத் தாளோடு அறுப்பர். இதற்கு *அறுவடை* என்பது பெயர்.

5. அறுத்த தாளை அரி அரியாக வைப்பார்கள். பிறகு அரிகளைச் சேர்த்துக் கட்டுக்களாகக் கட்டுவார்கள். கட்டுகளைக் களத்திற் சேர்ப்பார்கள். நெல் அடிக்கும் இடத்திற்கு *நெற்களம்* என்பது பெயர்.

6. நெற் களத்தில் கட்டுகளை அவிழ்த்து, அரிஅரியாக எடுத்து, நிலத்தின் மேல் அடிப்பார்கள். அப்போது தாளில் இருந்து நெல் பிரிந்து விழும். தாளைப் போராகப் போடுவார்கள்.

7. நெல்லை முறத்தில் வாரித் தூற்றுவார்கள். அப்போது நெல்லோடு கலந்துள்ள பதர் காற்ருல் பிரிக்கப்படும். பதர் என்பது அரிசி இல்லாத நெல்.

8. தூற்றி முடிந்த பின் நெல்லைக் கோணிகளில் இட்டு மூட்டைகளாகக்கட்டு-

வார்கள். அம்முட்டைகளை வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு போவார்கள். நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசி நமது முக்கிய உணவுப் பொருள். நெல் நீக்கப் பட்ட தாளுக்கு *வைக்கோல்* என்பது பெயர். அது மாடுகள் தின்னப் பயன்படு-கிறது.

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்"

பயிற்சி

1. கோடுள்ள இடங்களை நிரப்பு:

அ. நெல் பயிராகும்———வயல் என்பது பெயர்.

ஆ. உழவர் வயலை———உழுவர்.

இ. நாற்று விடும் இடத்துக்கு———என்பது பெயர்.

ஈ. அரிசி இல்லாத நெல்லுக்குப்———என்பது பெயர்.

2. விடை சொல்.

அ. பயிர்த் தொழில் சம்பந்தமான பழமொழி உனக்குத் தெரிந்தால் இரண்டு பழமொழிகள் சொல்.

ஆ. பயிர்த்தொழில் நடப்பதை நீ நேரில் பார்.

36. எஸ்கிமோக்கள்

1. நாம் வசிக்கும் பூமி உருண்டை வடிவம் உடையது. இதன் வட முனையிலும், தென் முனையிலும் குளிர் மிகக் கடுமையாக இருக்கும். ஏன் தெரியுமா ? அங்கு எப்போதும் பனி பெய்து கொண்டே இருக்கும். தரையைப் பனிக்கட்டி மூடியிருக்கும். அம்மாதிரி இடங்களிலும் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுள் எஸ்கிமோக்கள் ஓர் இனத்தவர்.

2. எஸ்கிமோக்கள் வாழும் நாடு நமது நாட்டுக்கு வெகு தூரத்தில் இருக்கிறது. அந்த நாட்டில் மரங்கள் வளரா ; செடி கொடிகளும் வளரா. குட்டையான புதர்களும், சில பாசிகளும் வளரும்.

3. எஸ்கிமோக்கள் பனிக்கட்டி-களால் வீடுகட்டிக் கொள்கிறார்கள். ஏன் தெரியுமா? வீடு கட்ட மண்ணும், மரமும் வேண்டும். இவை அங்குக் கிடைப்பதே இல்லை. பனிக்கட்டிகள் கிடைக்கின்றன. ஆகையால், பனிக்கட்டிகளைக் கொண்டு வீடுகளை அமைக்கிறார்கள்.



4. எஸ்கிமோ நாட்டில் *வெண்கரடி*களும் *நாய்*களும் உண்டு. அந்த நாய்-களின் உடலில் மயிர் அடர்ந்து இருக்கும். அங்கு *ஸீல், வால்ரஸ்* என்னும் விலங்கு-கள் உண்டு. அவை நீரில் வாழும்.

5. எஸ்கிமோக்கள் நாய்களைப்பழக்கி, வண்டி இழுக்கச் செய்கிறார்கள். அந்த வண்டிகளுக்கு *ஸ்லெட்ஜ்* என்பது பெயர். ஸ்லெட்ஜுக்குச் சக்கரங்கள் இரா.

6. எஸ்கிமோக்கள் வெண்கரடி, ஸீல், வால்ரஸ் ஆகிய ஜெந்துக்களை வேட்டை

உயர்ந்த மரத்தின் மேல் ஏறிற்று. அது உயரத்தில் இருந்த ஒரு கிளையைப் பல-மாகப் பிடித்துக் கொண்டு தொங்கிற்று.

3. பிறகு ஒரு குரங்கு அதன் இடுப்-பைப் பிடித்துக் கொண்டது. மற்றொரு குரங்கு அதன் இடுப்பைப் பிடித்துக் கொண்டது. அப்படிப் பிடித்துக்கொண்ட பல குரங்குகள் ஒரு சங்கிலித் தொடர் போலக் காணப்பட்டன.

4. பிறகு அவை ஊஞ்சல் ஆடுவது போல ஆடின. அவை வேகமாய் ஆடிய போது, ஊஞ்சல் ஆற்றின் இக்கரைக்கும் அக்கரைக்குமாகப் போய் வந்தது. கடைசி-யில் தொங்கிய குரங்கு ஆற்றின் அக்கரை-யில் இருந்த ஒரு மரத்தின் கிளையைப் பிடித் துக் கொண்டது.

5. இரண்டு மரங்களுக்கும் இடையில் ஒரு குரங்குப் பாலம் ஏற்பட்டது. மற்றக் குரங்குகள் அப்பாலத்தின் மூலம் மறு கரையை அடைந்தன. பிறகு இக்கரையில் இருந்த மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு இருந்த குரங்கு கையை விட்டது. உடனே ஊஞ்சல் அக்கரையை அடைந்தது.

6. பிறகு ஒவ்வொரு குரங்கும் தன் பிடியை விட்டுக் கீழே குதித்தது. இவ்வாறு தங்கள் யோசனையாலும், ஒற்றுமையாலும் குரங்குகள் அரிய காரியத்தைச் செய்து முடித்தன.

பயிற்சி

1. கோடுகளைத் தக்க சொற்களால் நிரப்புக:

அ. ஒரு——பல குரங்குகள் இருந்தன.

ஆ. ஆற்றில்———அதிகமாக இருந்தது.

இ. பிறகு அவை——ஆடுவது——ஆடின.

ஈ. இரண்டு மரங்களுக்கு ஒரு———ஏற்பட்டது.

2. எதிர்ப்பதங்கள் சொல்:

பல ×

அந்த ×

கடைசி ×

இக்கரை ×



38. சந்தை

1. எங்கள் ஊர் சிற்றூர். பேருக்கு ஏற்றபடி அது சிறிய ஊர். அதில் ஐம்பது வீடுகளே உள்ளன. எங்கள் ஊரில் பெரிய கடைகள் இல்லை. ஆகையால் நாங்கள் சந்தைக்குப் போவோம். அங்கு எங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வருவோம்.

2. சந்தை என்பது பல வகையான பொருள்கள் விற்கும் இடம். எங்கள் ஊருக்கு இரண்டு மைல் தொலைவில் ஒரு புளியந்தோப்பு இருக்கிறது. அங்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் வியாபாரிகள் வருவார்கள். அவர்கள் வண்டிகளில் பொருள்களைக் கொண்டு வருவார்கள்.

3. சிலர் அரிசி கொண்டு வருவர். சிலர் ஆடைகள் கொண்டு வருவர். சிலர் தின்பண்டங்கள் கொண்டு வருவர். சிலர் மிளகாய், தனியா, புளி, மிளகு, பூண்டு முதலிய மளிகைப் பொருள்கள் கொண்டு வருவர். அவர்கள் தங்கள் சரக்குகளைத் தோப்பில் உள்ள சிறு கொட்டகைகளில் வைத்து விற்பர்.

4. நாங்கள் சந்தைக்குப் போவோம். எங்கள் வீடுகளில் அதிகமாக உள்ள பொருள்களைக் கொண்டு போவோம். அவற்றை விற்போம். அந்தப் பணத்தைக் கொண்டு எங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்வோம். இந்தச் சந்தை இல்லாவிட்டால் எங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும்.

பயிற்சி

கோடுகளைத் தகுந்த சொற்களால் நிரப்புக:

1. பேருக்கு ஏற்றபடி —— —— ஊர்:
2. சந்தை என்பது —— —— பொருள்கள் விற்கும் இடம்.
3. வியாபாரிகள் ——— பொருள்களைக்——— வருவார்கள்.

மைனாவும் முயலும்—I

(உரையாடல்)

மைனா :—ஏ, முயலே, எனது வீட்டில் நீ வந்து இருப்பது சரியா ?

முயல் :—இது என்ன கேள்வி? இது ஒரு மரப் பொந்து. இங்கு நான் வந்து தங்கினேன். இதில் தவறு என்ன ?

மைனா :—பல நாட்களாக நான் இதில் வாழ்ந்து வருகிறேன். நீ திடீரென்று இதில் வந்து புகுந்தது தவறு இல்லையா ?

முயல் :—இதில் தவறு ஏதும் இல்லை. நிழல் உள்ள இடம் எல்லார்க்கும் பொது-தானே. வேண்டுமானால் இந்த வழக்கை யாரிடமாவது சொல்லி நியாயம் கேட்கலாம்.

மைனா:—சரி, அது எனக்கும் சம்மதந்தான். யாரிடம் போகலாம்?

முயல்:—யமுனை ஆற்றங்கரையில் உள்ள கூர்ம்பல்லன் என்னும் தவசியாரிடம் போகலாம்.

மைனா:—என்ன! ஒரு பூனையிடமா போவது? அதற்கு நான் ஒப்பமாட்டேன்.

முயல்:—நாம் பூனையின் அருகில் செல்ல வேண்டா. தொலைவில் இருந்தே நமது வழக்கைக் கூறலாமே.

மைனா:—சரி, போவோம்.

மைனாவும் முயலும்—II

(உரையாடல்)

முயல்:—ஐயா, கூர்ம்பல்லரே, வணக்கம்.

மைனா:—ஐயா, தவசியாரே நமஸ்காரம்.

பூனை :—(கண்ணைத்திறந்து) யார் நீங்கள்? ஏன் இங்கு வந்து என் தவத்தைக் கெடுத்தீர்கள். ?

முயல் :—ஐயா, பெரியவரே, மன்னிக்க வேண்டும் ! உம்மிடம் எங்கள் வழக்கைக் கூற வந்தோம்.

பூனை :—வழக்கா ? உரத்துக் கூறும்.

மைனு :—ஆம், வழக்குதான்.

பூனை :—குழந்தைகளே, நான் மிகவும் வயதானவன். காது சரியாகக் கேட்பது இல்லை. நீங்கள் சொல்வதை அருகில் வந்து சொல்லுங்கள்.

முயல் :—அருகில் வந்தால், நீர் எங்களைக் கொல்வீர். நாங்கள் வர மாட்டோம்.

பூனை :—பயப்பட வேண்டா. நான் தவசி. தவம் செய்யத் தொடங்கியது முதல் நான் மாமிசம் தின்பதை விட்டு விட்டேன். ஆதலால் என் பேச்சை நம்புங்கள். அருகில் வந்து உங்கள் வழக்கைக் கூறுங்கள்.

(மைனுவும் முயலும் அருகில் சென்றன. பூனை திடீரெனப் பாய்ந்து அவற்றைக் கொன்று தின்றது.)

செய்யுட் பாடங்கள்

1. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கறவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. சனிநீர் ஆடு.
13. ஞயம்பட உரை.
14. தந்தை தாய் பேண்.
15. நன்றி மறவேல்.
16. தெய்வம் இகழேல்.

2. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டா.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டா.

3. மாதாவை ஒரு நாளும்
மறக்க வேண்டா.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டா.

5. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டா.

6. நஞ்சுடனே ஒருநாளும்
பழக வேண்டா.

7. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டா.

8. அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்க வேண்டா.

9. தனம்தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டா.

10. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டா.

பொன் மொழி வாசகம்

(மூன்றும் புத்தகம்)

ஆசிரியர்கள் :

புலவர் பு. செல்வராசனுர்,

தலைமைத் தமிழாசிரியர்,

சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,

சென்னை.

ஆபிரகாம் அருளப்பன், B. A.,

தமிழ்த்துறைத் தலைவர்,

அர்ச். சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிப்பாசிரியர் :

சு. சே. உமாபதி, M. A., L. T., (Dip. in. Geog.)

தலைமையாசிரியர்

சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,

சென்னை.

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்

ஸ்ரீ வைகுண்டம்

பதிப்புரிமை] *1954* [விலை அணு 8

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

'பொன் மொழி வாசகம்' என்னும் பெயரோடு வெளிப்போதரும் தமிழ் வாசக வரிசையில் இது மூன்றாம் புத்தகமாகும். இது 1941–ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதன்கண் 500 புதிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. மொழிப் போதனையில் முக்கியமாகக் கருதப்படுவது மொழிப் பயிற்சியேயாகும். இப்பயிற்சிக்குப் போதிய வாய்ப்பளிக்கும் முறையில் இதன்கண் பல்வேறு வகையான ஓவியங்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழியறிவு ஆக்கமுறும் வகையில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இப் பயிற்சிகள் அனைத்தையும் குழந்தைகள் செய்யுமாறு தூண்ட வேண்டுவது ஆசிரியர் கடமையாகும். அன்றியும் வகுப்புக்கு ஏற்றவையாகச் சில இலக்கண பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கு இன்பமூட்டத்தக்க இனிய எளிய பாடல்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப் பாட்டுக்களைக் குழந்தைகள் மனப்பாடம் செய்வது நலமாகும். இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ள பாடங்கள் சிறுவர் சிறுமியரின் தமிழறிவையும், பொது அறிவையும் வளரச்செய்யும் என்பது உறுதி. அறிஞர்கள் தமிழ்ச்சிறுவர் சிறுமியர்க்கு இந்நூல் பயனளிக்குமாறு செய்வார்கள் என முற்றிலும் நம்புகிறேன்.

சென்னை }
7–11–54. }

ஆசிரியர்.

பொருளடக்கம்

எண்	பாடம்		பக்கம்
1.	தமிழ் நாடும் தமிழ் மொழியும்	...	1
2.	மயில்	...	2
3.	வாழை	...	4
4.	கலைமகள் விழா	...	7
5.	பருத்தி	...	10
6.	நம் நாட்டுக் கொடி	...	14
7.	சிங்கமும் சுண்டெலியும் (கதைப்படம்)	...	15
8.	மதுரை நகரம்	...	16
9.	சாலை விதிகள்	...	19
10.	யானை	...	22
11.	மௌன வாசிப்பு—I	...	25
12.	தீபாவளி	...	26
13.	தமிழ் மொழி	...	29
14.	கவரி வீசிய காவலன் (நாடகம்)	...	31
15.	பழமொழிகள்	...	35
16.	இந்தியா	...	36
17.	காங்கோ நாட்டுக் குள்ளர்	...	40
18.	கிராம மக்கள்	...	43
19.	மழைப் பாட்டு	...	46
20.	மௌன வாசிப்பு—II	...	47
21.	உழவுத் தொழில்	...	50
22.	சூரியனும் பூமியும்	...	53
23.	மகாத்மா காந்தி	...	56
24.	நாட்டுப் பாட்டு	...	60
25.	நெல்லும் கரும்பும்	...	62
26.	ஔவையார்	...	65
27.	காகமும் குடமும் (கதைப்படம்)	...	68
28.	கடிதம் எழுதுதல்	...	69
29.	மௌன வாசிப்பு—III	...	71
30.	தந்திரத்தால் தாகம் தீர்ந்தது (கதைப்படம்)		73
31.	கடலில் காணும் பொருள்கள் (உரையாடல்)	...	74
32.	செய்யுட் பாடங்கள்		
	1. ஆத்திசூடி	...	78
	2. கொன்றைவேந்தன்	...	78
	3. வெற்றிவேற்கை	...	79

1. தமிழ் நாடும் தமிழ் மொழியும்

(பாட்டு)

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா !
அமிழ்தில் இனியதடி பாப்பா !—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! 1

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே,—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா !
செல்வம் நிறைந்த இந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா ! 2

சாதிகள் இல்லையடி பாப்பா !—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ;
நீதி, உயர்ந்தமதி, கல்வி,—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர். 3

உயிர்கள் இடத்தில்அன்பு வேணும் ;—தெய்வம்
உண்மை யென்று தான்அறிதல் வேணும் ;
வயிரம் உடையநெஞ்சு வேணும் ;—இது
வாழும் முறைமையடி பாப்பா ! 4

—சி. சுப்பிரமணிய பாரதியார்



2. மயில்

1. கடவுள் உலகத்தைப் படைத்தார். உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் படைத்தவர் அவரே. அவர் படைத்தவற்றை நாம் நன்ருய்க் கவனித்துப் பார்க்க வேண்டும். இளமைப் பருவம் முதற்கொண்டே எதையும் ஊன்றிப் பார்க்கப் பழக வேண்டும். ஒவ்வொரு பொருளையும் ஊன்றிப் பார்த்தால், பல விஷயங்கள் நமக்குப் புலப்படும்.

2. பறவைகளில் பல வகை உண்டு. அவற்றுள் மயில் ஒன்று. மயில் காட்டுப் பறவை. மயில் மிகவும் அழகான பறவை. அது, தானியங்களையும் பூச்சி, புழுக்களையும் தின்னும். மயிலின் இறகு பார்ப்பதற்கு மிக அழகாய் இருக்கும். அந்த இறகுகளில் நீலம், மஞ்சள், பச்சை என்னும் நிறங்களைக் காணலாம்.

3. மயிலின் உடல் பெரியது ; தலை சிறியது. மயிலுக்குக் கழுத்து நீண்டிருக்கும். அதன் கால்களும் நீளமானவை. அதன் இறக்கைகள் சிறியவை. ஆதலால் மயில் வானத்தில் பறப்பதில்லை. மயில் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆண் மயிலுக்குத் தலையின் உச்சியில் கொண்டை உண்டு. பெண் மயிலுக்குக்

கொண்டை இராது. ஆண் மயிலின் வால் இறகு நீள-மாக இருக்கும். அதற்குத் தோகை என்பது பெயர். மேகத்தைக் கண்டால் மயிலுக்கு மகிழ்ச்சி உண்டாகும். அப்போது அது தோகையை விரித்து ஆடும்.

4. விரிந்த தோகை பார்ப்பதற்கு மிகவும் அழ-காக இருக்கும். தோகை இறகின் முனையில் அழகான வட்டம் காணப்படும். அதனைக் கண் என்று கூறு-வார்கள். மயிலின் தோகையால் விசிறி செய்யலாம். மயில் இறகு மருந்துக்கும் பயன்படுகிறது. மயிலைக் கோவில்களிலும், வீடுகளிலும் வளர்ப்பார்கள். மயில் அழகிய பறவையாக இருந்தாலும், அதன் குரல் இனிமையாக இராது. மயில் கத்துவது அகவுதல் எனப்படும்.

அரும்பதங்கள்

படைத்தார்	பருவம்	இறகு	தோகை
இளமை	ஊன்றிப்பார்	உச்சி	மகிழ்ச்சி

பயிற்சி

1. விடை எழுது :

அ. மயில் எங்கு வசிக்கும் ?
ஆ. ஆண் மயிலுக்கும் பெண் மயிலுக்கும் உள்ள வேறு-பாடுகள் எவை ?
இ. மயிலின் உடலில் காணப்படும் நிறங்கள் எவை ?
ஈ. மயில் எப்போது ஆடும் ?

2. எதிர்ப்பதங்கள் எழுது :

இளமை ×
பலவகை ×
நீண்ட ×

3. பொருத்தி எழுது :

கடவுள்	புழு பூச்சிகளைத் தின்னும்.
பறவைகளில்	தோகை விரித்து ஆடும்.
மயில்	உலகத்தைப் படைத்தார்.
ஆண்மயில்	பல வகை உண்டு.

3. வாழை

1. வாழை மரத்தை நீ பார்த்திருக்கிருயா? வாழை மரம் உஷ்ண தேசங்களில் செழித்து வளரும். நமது நாட்டுக் கிராமங்களில் வாழைத் தோட்டங்களைக் காணலாம். வண்டல் படிந்த நிலத்திலும், மண் கலந்த களிப்பு நிலத்திலும் வாழை நன்ருகப் பயிராகும். அதற்கு நிரம்பத் தண்ணீர் வேண்டும்.

2. வாழையில் பல வகை உண்டு. பூவன், பங்காளா, மொந்தன், பேயன், மலைவாழை என்பன அவற்றுள் சிலவாம். வாழைக்குக் கிளை இல்லை; மட்டைகளே உண்டு. வாழையின் அடிப்பாகம் பட்டைகளால் மூடப்பட்டு இருக்கும். பட்டைகளை உரித்தால் உள்ளே தண்டு இருக்கும். வாழை இலை அகலமாகவும், நீளமாகவும் இருக்கும்.

3. வாழைக்கு விதை இல்லை. ஆனல், அதன் கிழங்கில் இருந்து கன்றுகள் தோன்றும். அக்கன்றுகளைப் பெயர்த்து எடுத்துப் பள்ளம் தோண்டிப் புதைப்பர். பிறகு அவற்றின் மேல் பாகத்தை வெட்டிவிடுவர். சில நாட்கள் கழித்துக் குருத்து வரும். அது இலையாக

விரியும். இலைகள் பல தோன்றும். கடைசியில் ஒரு சிறிய இலை தோன்றும். அதற்குக் 'கண்ணாடி இலை' என்பது பெயர். அதன் பின் பூ தோன்றும். பூ விரிந்தால், ஒவ்வோர் இதழின் அடியிலும் சீப்புச் சீப்பாய்ப் பிஞ்சுகள் இருக்கும்; பிஞ்சு முற்றிக் காயாகும். காய் முற்றிப் பழமாகும். வாழை மரம் ஒரே ஒரு குலைதான் விடும். குலைக்குத் தாறு என்பது வேறு பெயர். குலைகளிலுள்ள காய் முற்றிப் பழுத்ததும் வாழை அழிந்துவிடும்.

4. வாழையின் எல்லாப் பாகங்களும் நமக்குப் பயன்படுகின்றன. வாழைப்பட்டையை இணைத்தால் உண்கலமாக உதவும். வாழை நார் பூ தொடுக்க உதவும். தண்டு, காய், பூ ஆகியவற்றைச் சமைத்துச் சாப்பிடவும், இலையை உண்கலமாகவும் உபயோகிக்கிறோம். பழத்தைச் சாப்பிடுகிறோம். கலியாண காலங்களில் வாழையைக் கலியாணப்பந்தலில் கட்டுகிறோம். வாழை எக்காலத்திலும் பயிராகும். ஆகையால் வாழை இலை, தண்டு, காய், பூ, பழம் என்பன எப்போதும் கிடைக்கும். மா, பலா, வாழை முக்கனிகள் எனப்படும்.

அரும்பதங்கள்

உஷ்ண தேசம்	*செழித்து*	*நிரம்ப*	*பட்டை*
விதை	*இதழ்*	*சீப்பு*	*தாறு*
அழிந்து	*பயன்*	*பூ தொடுக்க*	*உண்கலம்*

பயிற்சி

1. *விடை எழுது :*
   - *அ. வாழை எங்குப் பயிராகும்?*
   - *ஆ. வாழை மரத்துக்கும் மற்ற மரங்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?*
   - *இ. விதை இல்லாமையால், வாழை எப்படி விருத்தி செய்யப்படுகிறது?*
   - *ஈ. வாழையின் உபயோகங்கள் யாவை?*

2. எதிர்ப் பதங்கள் எழுது :

பார்த்திருக்கிறேன் ×
நிரம்ப ×
இல்லை ×
விரியும் ×
கடைசி ×

3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

செழித்து–கிராமங்கள்–வண்டல்மண்–களிமண்–குருத்து–பட்டை–முற்றி–அழியும். ,

இலக்கணம் : பெயர்ச் சொல்

ஒரு பொருள் இருந்தால், அதற்கு ஒரு பெயர் இருக்க வேண்டும். அப்பெயரை இலக்கணத்தில் பெயர்ச் சொல் என்கிறோம்.

ஒரு பொருளின் பெயரே பெயர்ச் சொல்.

இவற்றைப்படி:

ஒன்று	பல
பழம்	பழங்கள்
வீடு	வீடுகள்
வண்டி	வண்டிகள்
பலகை	பலகைகள்
நாய்	நாய்கள்
பறவை	பறவைகள்

ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லின் எண் ஒருமை எண். ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும் சொல்லின் எண் பன்மை எண். இது இலக்கண வழக்கம்.

ஒரு பொருளைக் குறிப்பது, இரண்டு முதலாகப் பல பொருள்களைக் குறிப்பது என்று எண் இருவகைப்படும்.

4. கலைமகள் விழா

1. நம் இந்திய நாட்டில் இந்துக்கள் கல்வியையும் செல்வத்தையும் தெய்வமாகப் போற்றி வணங்கு-கிறார்கள். கல்விக்குத் தெய்வம் **கலைமகள்** என்பார். செல்-வத்திற்குத் தெய்வம் **திருமகள்** என்பார். கலைமகளை **நாமகள்** என்றும், **சரசுவதி** என்றும் கூறுவது உண்டு. திருமகளை **இலக்குமி** என்று அழைப்பர்.

2. இந்துக்கள் கலைமகளைத் தினந்தோறும் வழி-படுகிறார்கள். மேலும், வருடந்தோறும் விழாக் கொண்-டாடியும் வழிபடுகின்றார்கள். கலைமகள் விழா புரட்டாசி மாதத்தில் வரும். அன்று கலைமகள் படத்திற்கோ, உருவச் சிலைக்கோ பூமாலைகள் சூட்டி, அலங்காரம் செய்வார்கள். புத்தகங்களை எல்லாம் எடுத்து அழ-காக அடுக்கிப் படத்தின் முன் வைப்பார்கள். அவை களுக்குப் பூமாலை சூட்டிச் சந்தனம் தெளித்துக் குங்-குமம் இடுவார்கள். புத்தகங்களுடன் கலைமகள் படமோ, உருவமோ வைத்திருக்கும் இடத்தில் மாவிலைத் தோரணங்கள் கட்டியும், வாழைக் கன்றுகள் நாட்டி-யும் அலங்கரிப்பார்கள்.

3. அங்குக் கலைமகள் எதிரில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, அவல் கடலை முதலியன வைத்துப் படைப்பார்கள். சிலர் வடை, சுண்டல், பாயசம் முதலியனவும் வைப்பர். பள்ளியிற் படிக்கும் சிறுவர், சிறுமியர் தாங்கள் கல்வியில் சிறப்பு அடைய வேண்டும் என்று கலைமகளை வேண்டி வணங்குவார்கள். இவ்விழாவைச் சரசுவதி பூஜை என்பது வழக்கம்.

4. தொழிலாளர்கள் தங்கள் கருவிகளைக் கழுவி, துடைத்து, எண்ணெய் தடவி வரிசையாக வைப்பார்கள். அவற்றைப் பூமாலைகளால் அலங்கரிப்பார்கள்; தூபம் தீபம் காட்டி வழிபடுவார்கள். இவ்வழிபாட்டை ஆயுத பூஜை என்பது வழக்கம். இதனால் கைத்தொழிலும் ஒருவகைக் கல்வியே என்பதை நாம் அறிகிறோம் அல்லவா ?

5. கலைமகளை வழிபட்டுச் சிறப்பு அடையாதவர் இலர். முற்காலத் தமிழ்ப்புலவர் அனைவரும் கலைமகளை வழிபட்டவரே. கல்வியில் பெரியவரான கம்பர் கலைமகளைச் ' சரசுவதி அந்தாதி ' என்னும் நூல் இயற்றி வழிபட்டார். ஒட்டக்கூத்தர் என்பவர் கலைமகளுக்குக் கோவில் கட்டி வணங்கி வந்தார். குமரகுருபரர் என்பவர் 'சகல கலாவல்லி மாலை' என்னும் நூலைப் பாடிக் கலைமகளைத் துதித்தார்.

அரும்பதங்கள்

கல்வி	சரசுவதி	உருவச்சிலை	படைப்பார்கள்
செல்வம்	திருமகள்	மாலைசூட்டி	வணங்குவார்
கலைமகள்	இலக்குமி	தோரணங்கள்	துதித்தார்
நாமகள்	வழிபடு	அலங்கரிப்பர்	இயற்றி

பயிற்சி

1. *விடை எழுது :*

   அ. கல்விக்குத் தெய்வம் யார் ?

   ஆ. செல்வத்துக்குத் தெய்வம் யார் ?

இ. கலைமகள் விழா எந்த மாதத்தில் கொண்டாடப் படுகிறது?

ஈ. அவ்விழா எப்படிக் கொண்டாடப்படுகிறது?

உ. கம்பர் யார்? அவர் இயற்றிய நூல் யாது?

ஊ. சகலகலாவல்லி மாலையை இயற்றியவர் யார்?

2. எதிர்ப்பதங்கள் எழுது :

வரும் ×
செய்வார் ×
சிறப்பு ×
சுத்தம் ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

கூறுவர்–அழைப்பர்–அலங்காரம்–சிறப்பு–வணங்கு – வழிபடு–புலவர்–இயற்றினர்–நூல்.

வினைச்சொல்

வினை என்றால் வேலை அல்லது தொழில். ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

இவற்றைப்படி:

1, மாடு புல் மேய்கிறது.
2. கந்தன் படிக்கிறான்.
3. காக்கை பறக்கிறது.

மாடு என்ன செய்கிறது? மேய்கிறது. மேய்வது மாடு செய்யும் தொழில். கந்தன் என்ன செய்கிறான்? படிக்கிறான். படித்தல் கந்தன் செய்யும் தொழில். காக்கை என்ன செய்கிறது? பறக்கிறது. பறத்தல் காக்கையின் தொழில். இவ்வாறு ஒரு பொருளின் தொழிலைத் தெரிவிக்கும் சொல் வினைச் சொல் எனப்படும்.

5. பருத்தி

1. மக்களுக்கு உணவு, உடை, உறையுள் மூன்றும் மிகவும் அவசியமானவை. உறையுள் என்பது வசிக்கும் வீடு. உணவு, பயிர்த் தொழிலால்கிடைக்கின்றது. உடையை நாம் எவ்வாறு பெறுகிறோம்? உலகில் பல வகை ஆடைகள் நெய்யப்படுகின்றன. அவற்றுள் கம்பள ஆடை, பட்டு ஆடை, பருத்தி ஆடை என்பன முக்கியமானவை. கம்பள ஆடை குளிர் மிகுந்த நாடுகளுக்கு ஏற்றவை. பட்டு ஆடை மிகுந்த விலை உடையது. ஆதலால், ஏழை முதல் பணக்காரர் வரையில் எல்லாரும் உபயோகிக்கக் கூடியது பருத்தி ஆடையே ஆகும்.

2. பருத்தி என்பது பருத்திச் செடியிலிருந்து கிடைக்கிறது. பருத்திச் செடி வெப்ப மண்டலத்திலும், மித வெப்ப மண்டலத்திலும் பயிராகும். அது

கரிசல் மண் நிலத்தில் நன்ருகப் பயிராகும். பருத்திக்கு நீர் அதிகம் தேவையில்லே. பருத்திக்குப் பகை பனி. பனி பெய்தால் பருத்திக் காய்கள் உதிர்ந்துவிடும்.

3. பருத்திச்செடி ஏறக்குறைய ஆறு மாத காலத்தில் பயன் தரும். கோடையில் பயிர்செய்த பருத்திச் செடி நெட்டையாகவும், குளிர் காலத்தில் பயிர் செய்த பருத்திச் செடி குட்டையாகவும் இருக்கும். பருத்தி பறிக்கும் காலத்தில் சூரிய ஒளி அதிகம் வேண்டும்.

4. பருத்திச்செடி, மூன்று அல்லது நான்கு அடி உயரம் வளரும். இச்செடிக்கு ஆணிவேர் உண்டு. அந்த ஆணிவேர் பூமியின் அடியில் அதிக ஆழம் செல்லும். அதனுல் மழை சொற்பமாக இருந்தாலும் பருத்தி பலன் தரும். பருத்தி இலே ஐந்து பிரிவுகளேயும், நரம்புகளேயும் உடையதாகக் காணப்படும். காய் முற்றி வெடிக்கும்போது, அதில் மூன்று அறைகள் காணப்படும். அந்த அறைகளில் வெண்மையான பருத்தியும், கரிய விதைகளும் இருக்கும். பருத்திக் கொட்டை மாடுகளுக்கு உணவாகும். பருத்தி விதையிலிருந்து ஒருவித நெய்யும் எடுக்கிருர்கள்.

5. நம் நாட்டில் ஏராளமாகப் பருத்தி பயிராகிறது. தமிழ் நாட்டில் கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் பருத்தி அதிகம் பயிர் செய்யப்படுகிறது. பருத்தியைப் பயிர் செய்வதனுல் பலர் பிழைக்கலாம். பருத்தியைச் சேகரிப்பது, அதில் உள்ள கொட்டைகளே நீக்குவது, பருத்தியை அடித்துத் தூசி

துரும்புகளைப் போக்குவது, நூல் நூற்பது, ஆடை நெய்வது என்பன பருத்தி சம்பந்தமான தொழில்கள் ஆகும். பருத்தி மென்மையானது. கொட்டை நீக்கப்பட்ட பருத்திக்குப் பஞ்சு என்பது பெயர்.

6. நம் நாட்டில் மிகப் பழமையான காலத்திலிருந்து பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. பருத்தி ஆடைக்கு உடம்பிலுள்ள வியர்வையை இழுத்துக் கொள்ளும் இயல்பு உண்டு.





7. நூல் நூற்றல் மிக்க பயன் தரும் தொழில் என்று காந்தியடிகள் கூறியுள்ளார். அது மிகவும் மேன்மையான தொழில் என்றும் அவர் கூறியுள்ளார். இந்திய நாட்டு மக்கள் யாவரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேற்றுமை இல்லாமல் நூல் நூற்கவேண்டும். இதுவே காந்தியடிகளின் கருத்து. இராட்டையாலும் தக்ளியாலும் நூல் நூற்கலாம். அப்படி நூற்ற நூலால் நெய்யப்படும் ஆடை, **கதர் ஆடை** எனப்படும். இக் காலத்தில் நூல் நூற்பதற்கும், ஆடைகள் நெய்வதற்கும் இயந்திரங்கள் தோன்றி உள்ளன. ஆனால், நெடுங்காலமாக நம் இந்திய நாட்டு மக்கள் கைத்தறியில் ஆடை



நெய்து வந்தார்கள். அது அயல் நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வந்தது.

8. திருக்குறள் என்ற அருமையான தமிழ் நூலை இயற்றியவர் திருவள்ளுவர். அவர் நெசவுத் தொழிலைச் செய்து வந்தார் என்பதை நாம் அறிகிறோம்.

அரும்பதங்கள்

உறையுள்	வெப்பமண்டலம்	பகை
ஆசை	மித வெப்ப மண்டலம்	நெட்டை
ஏற்றவை	கரிசல் மண்	குட்டை

பயிற்சி

1. விடை எழுது :

அ. தமிழ் நாட்டில் பருத்தி எங்கெங்குப் பயிராகிறது?

ஆ. பருத்திக்கு ஏற்ற நிலம் எது?

இ. பருத்தி சம்பந்தமான தொழில்கள் எவை?

ஈ. பருத்திக் கொட்டையின் உபயோகங்கள் எவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

அரியமானவை ×
மிகுந்த ×
வெப்பம் ×
தரும் ×
உண்டு ×
நெட்டை ×

3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதவும்:

உடை-ஆடை-உண்டி-நெசவுத்தொழில்-நூல் நூற்றல் -பனி-பகை-அயல் நாடு.

6. நம் நாட்டுக் கொடி

கொடி பறக்குது! கொடி பறக்குது!
கொடி பறக்குது பாரடா!
கோணல் அற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா!

மனம் உவந்து உயிர் கொடுத்த
மான முள்ள வீரர்கள்
மட்டில் லாத துன்ப முற்று
நட்டு வைத்த கொடியிது!

தனம் இழந்து, கனம் இழந்து,
தாழ்ந்து போக நேரினும்
தாயின் மானம் ஆன இந்தக்
கொடியை என்றும் தாங்குவோம்.

—நாமக்கல் கவிஞர்



7. சிங்கமும் சுண்டெலியும்

கதைப் படம்

படத்தைப் பார்த்துக் குறிப்புக்களின் உதவியால் கதையைச் சொல்லு :

குறிப்புக்கள்:

படம் 1. சிங்கம் தூங்குகிறது. சுண்டெலி அதன்மீது விளையாடுகிறது.

படம் 2. சிங்கம் விழிக்கிறது; கோபத்தால் சுண்டெலியைக் கொல்லப் பார்க்கிறது. சுண்டெலி மன்னிக்க வேண்டுகிறது.

படம் 3. சிங்கம் வலையில் அகப்பட்டுக் கொள்கிறது. சிங்கம் கத்துகிறது.

படம் 4. சத்தம் கேட்ட சுண்டெலி வருகிறது. வலையைக் கடித்துச் சிங்கத்தை விடுவிக்கிறது.



8. மதுரை நகரம்

1. தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழ்நாடு. இதனைத் தமிழகம் என்றும் கூறுவர். தமிழ்நாடு முற் காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்ற மூன்று பிரிவுகள் உடையதாக இருந்தது. அவற்றை முறையே சேரர், சோழர், பாண்டியர் என்பவர் ஆண்டு வந்தனர். சேர நாட்டுத் தலைநகர் வஞ்சிமாநகர்; சோழ நாட்டுத் தலைநகர் காவிரிப்பூம்பட்டினம்; பாண்டி நாட்டுத் தலைநகர் மதுரைமாநகர்.

2. பாண்டிநாடு 'செந்தமிழ் நாடு' என்ற சிறப்பான பெயரையும் பெறும். பாண்டிய மன்னர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தினர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர்; தமிழில் சிறந்த நூல்களை இயற்றுவித்தனர். மதுரையில் சங்கத்தார் கோவில் என்னும் பெயருடன் ஒரு கோவில் இருப்பதை இன்றும் காணலாம்.

3. மதுரை ஒரு பெரிய நகரம். அது வியாபாரத்திற்குப் பெயர்பெற்றது. மதுரையில் சில பஞ்சாலைகள் உள்ளன. அங்குக் கைத்தறி நெசவும், சாயத்தொழிலும் மிகுதியாக நடைபெறுகின்றன. அதனால் அங்கு மக்கள் தொகை அதிகம். அன்றியும், மதுரை ஒரு புண்ணிய ஸ்தலமாகும்.

4. மதுரை நகரின் நடுவில் **மீனாட்சி அம்மன் கோவில்** இருக்கிறது. அது மிகப் பெரிய கோவில். அதில் அநேக அழகிய கருங்கற் சிலைகள் உண்டு. அங்குள்ள சிவபெருமான் பெயர் **சோமசுந்தரக் கடவுள்**. அவருக்குச் சொக்கநாதர் என்ற பெயரும் உண்டு. மீனாட்சி அம்மன் கோவிலில் பன்னிரண்டு மாதங்களிலும் திருவிழா நடைபெறும். ஆதலால் எல்லா நாட்களிலும் ஜனங்கள் திரள் திரளாய் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருப்பார்கள். அந்தக் கோவிலுக்குள் ஓர் அழகிய குளம் இருக்கிறது. அதற்குப் பொற்றாமரைக் குளம் என்பது பெயர்.

5. மதுரை நகரம் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. மதுரை நகரின் வீதிகள் கோவிலைச் சுற்றி ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளன. இவ்வூரில் இப்பொழுதும் ஒரு தமிழ்ச் சங்கம் இருக்கிறது. மதுரைக்கு மேற்கே நான்கு மைல் தொலைவில் திருப்பரங்குன்றம் என்னும் ஸ்தலம் இருக்கிறது.

6. திருமலை நாயக்கர் மஹாலும், மாரியம்மன் தெப்பக் குளமும் மதுரையில் பார்க்கத் தகுந்த இடங்களாகும். தமிழ்நாட்டின் மிகப் பழைய நகரங்களுள் மதுரை நகரமும் ஒன்றாகும். இக்காலத்திலும் அது பெருமையோடு விளங்குகிறது.

அரும்பதங்கள்

தமிழகம்	மன்னர்	அமைந்துள்ளது
முறையே	சங்கம்	புண்ணியஸ்தலம்
மாநகர்	சிலைகள்	தெப்பக்குளம்
மஹால்	தொகை	இயற்றுவித்தனர்

பயிற்சி

1. விடை எழுது:

அ. தமிழ்நாடு என்று எதற்குப் பெயர்?

ஆ. பழங்காலத்தில் தமிழ்நாடு எத்தனை பகுதிகளாக விளங்கியது? அப்பகுதிகளின் பெயர்கள் யாவை?

இ. மதுரை இக்காலத்தில் பெரிய வியாபார ஸ்தலமாக விளங்கக் காரணம் யாது?

ஈ. மதுரையில் உள்ள பெரிய கோவில் எது?

உ. மதுரையில் காணத்தக்க சிறந்த இடங்கள் எவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

முற்காலம் ×
பெரிய ×
உள்ளன ×
உள்ளே ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

கூறுவர்–ஆண்டனர்–நகரம்–நடுவில் – அழகிய–வீதிகள்–தோல்வு–பெருமை.



9. சாலை விதிகள்

1. நாம் சாலையில் செல்லும்பொழுது சில விதிகளைக் கவனிக்க வேண்டும். தெருவில் பல வகை வண்டிகள் வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கும் அல்லவா? சென்னை போன்ற பெரிய நகரங்களின் தெருக்களில் வண்டிகள் அதிகம். நாம் அவைகளையெல்லாம் கவனித்துச் செல்லாவிட்டால் நம் உயிருக்கே ஆபத்து உண்டாகும்.

2. சாலைகளில் செல்லும்போது நாம் நண்பர்களோடு பேசிக்கொண்டும், வேடிக்கை பார்த்துக் கொண்டும் செல்லலாகாது. சென்றால் நமக்கு முன் புறத்திலும் பின்புறத்திலும் வரும் வண்டிகளைக் கவனிக்க முடியாது. ஆகையால் நாம் வண்டியில் அகப்பட்டுக்கொள்ள நேரிடும்.

3. நடக்கும்பொழுது சாலையின் நடுவே நடப்பதை நீக்க வேண்டும். சாலை ஓரங்களில் அமைத்துள்ள நடைபாதைகளின் மீது நடந்து செல்ல வேண்-

டும். நடைபாதைகள் இல்லாவிடில் எப்பொழுதும் சாலையின் ஓரத்தில் இடப்பக்கமாகவே செல்லவேண்டும். நடைபாதையை விட்டுக் கீழே இறங்கிச் செல்வதால் விபத்துக்கள் உண்டாகின்றன.

4. சாலை ஓரமாகச் செல்லும் பொழுது கல் கண்ணாடித் துண்டு, ஆணி முதலியன கிடக்கும். ஆதலால், நாம் நடக்கும்பொழுது வழியைப்பார்த்து நடந்து செல்ல வேண்டும். அவை நம் கண்ணில் பட்டால் அவற்றை அப்புறப்படுத்த வேண்டும். வாழைப் பழத்தைத் தின்றுவிட்டு அதன் தோலை வழியில் எறிந்து விடுகிறார்கள். அவ்வாறு செய்வது பெருந்தவறு. ஏனெனில் நடந்து செல்பவர்கள் அதன்மீது காலை வைக்க நேர்ந்தால் அது வழுக்கிவிடும். அதனால் அவர்கள் கீழே விழுந்து துன்பம் அடைவார்கள்.

5. சாலையில் பலர் சேர்ந்து செல்லும்பொழுது ஒருவர் பக்கத்தில் ஒருவராகச் சுவர் வைத்தது போலச் சாலையை அடைத்துக்கொண்டு செல்லலாகாது. நாம் அவ்வாறு செல்வதால், பிறர் செல்வதற்குத் தடை செய்பவர் ஆவோம். ஒருவர் பின் ஒருவராய்ப் பிறர் செல்வதற்கு இடம் விட்டுச்செல்லுதல் வேண்டும்.

6. சாலையைக் கடக்கும்போது பாதி தூரம் வரை வலப்புறம் பார்த்துச் செல்ல வேண்டும். சாலையின் மத்தியை அடைந்த பின் இடப்புறம் பார்த்துச் செல்ல வேண்டும். இந்த விதிகளை நாம் கவனித்து நடந்து கொண்டால் விபத்துக்கள் நேரா.

7. சாலைகளில் வண்டி ஓட்டுபவர் கவனிக்க வேண்டிய விதிகள் சில உண்டு. எப்போதும் சாலையின் இடப் பக்கமாகவே வண்டியைச் செலுத்த வேண்டும். சாலைகள் கூடும் இடத்தில் போலீஸ்காரர் நிற்பார்

அவர் கைகளைக் காட்டி வண்டிகளை ஒழுங்காகச் செலுத்துவார். வண்டி ஓட்டுபவர் அவர் கைகளைக் கவனித்து வண்டியைச் செலுத்தினால் விபத்துக்கள் நேரா.

அருஞ்சொற்கள்

சாலைவிதி	நடைபாதை	பிறர்
நகரம்	தவறு	கடந்தல்
ஆபத்து	வழக்கும்	விபத்துக்கள்

பயிற்சி

1. விடை எழுது :
   அ. நாம் சாலையின் எந்தப் பகுதியில் நடந்து போக வேண்டும்?
   ஆ. சாலையைக் கடக்கும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?
   இ. சாலைகளில் நாம் செய்யத் தகாத காரியங்கள் எவை?
2. எதிர்ப் பதங்கள் எழுது :
   வேண்டும் ×
   இருக்கும் ×
   ஆகாது ×
   கீழே ×
3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:
   சாலை–விதிகள்–கவனிக்க வேண்டும்–ஆபத்து–நடுவே–ஓரம்.



10. யானை

1. விலங்குகளுள் மிகப் பெரியது யானை. அது காட்டு மிருகம். ஆயினும், அதனைப் பிடித்துப் பழக்கினால், அது மக்களுக்குப் பல வகையில் பயன்படுகின்றது. யானை, மாமிசம் தின்பதில்லை; இலை, தழை, புல், அரிசி, தேங்காய், பழம், கரும்பு முதலியவற்றைத் தின்னும். யானைக்குக் கரும்பில் விருப்பம் அதிகம். யானை, மலைப்பக்கங்களில் கூட்டம் கூட்டமாய்த் திரியும்.

2. யானை கருமை நிறம் உடையது. யானைக்குத் தும்பிக்கை என்னும் ஓர் உறுப்பு உண்டு. வேறு எந்த மிருகத்திற்கும் அந்த உறுப்பு இல்லை. யானையின் கால்கள் உரல் போல இருக்கும். அதன் காதுகள் முறம் போல அகன்று இருக்கும். யானையின் நெற்றியை மத்தகம் என்பர். அது மிகவும் உறுதியானது. யானையின் வால் குட்டையாகவும், நுனியில் சில தடித்த மயிர்களுடனும் காணப்படும். யானையின் தோல் தடித்ததாய்ச் சொரசொரப்பாய் இருக்கும்.

3. பெரிய வடிவத்தை உடைய யானைக்கு மிகச் சிறிய கண்களே உண்டு. ஆனால் அவை கூர்மையான பார்வை யுடையவை. தும்பிக்கையைத் துதிக்கை என்றும் கூறுவர். யானையின் தும்பிக்கை நீண்டு நுனியில்

ஒரு விரல் போன்ற உறுப்பைப் பெற்று இருக்கும். அதன் நுனியில் இரண்டு துவாரங்கள் உண்டு. அவையே அதன் மூக்குத் துவாரங்கள். தும்பிக்கை, யானைக்கு மூக்காகவும், கையாகவும் பயன்படுகிறது. யானை தனது தும்பிக்கையால் பூமியின்மேல் கிடக்கும் சிறிய ஊசியையும் எடுத்துவிடும். யானை தும்பிக்கையின் துவாரத்தினுல் நீரை உறிஞ்சிக் குடிக்கும்: அத் தும்பிக்கையால் மரக் கிளைகளை ஒடித்துத் தழையைத் தின்னும். யானையின் பாதம் அகலமாக இருக்கும்.

4. யானையின் முகத்தில் இரண்டு கொம்புகள் உண்டு. அவற்றைத் தந்தம் என்பர். தந்தத்தை உடையது ஆதலால், யானைக்குத் **தந்தி** என்னும் பெயரும் உண்டு. ஆண் யானையைக் **களிறு** என்றும், பெண் யானையைப் **பிடி** என்றும் கூறுவர். இளம் யானையைக் 'கன்று' என்று கூறவேண்டும். 'யானைக் குட்டி' என்று கூறுவதும் உண்டு. யானை, கட்டுத்தறியில் எப்பொழுதும் அசைந்துகொண்டிருக்கும். காடுகளில் ஆழமான குழிகள் வெட்டி அவற்றைக் கிளைகளாலும், தழைகளாலும் மூடிவைப்பார்கள். யானைகள் குழி இருப்பதை அறியாமல் அதில் விழுந்துவிடும். பிறகு பழகிய யானைகளைக் கொண்டு அவற்றைக் கரையில் ஏற்றிக் கொண்டு வந்து பழக்குவார்கள்.

5 யானை பத்து அல்லது பன்னிரண்டடி உயரம் இருக்கும். பருமனுன தலையைத் தாங்கும் யானையின் கழுத்து குட்டையானது. யானை கம்பீரமான மிருகம், முற்காலத்தில் அரசர்கள் யானைப்படை வைத்திருந்தார்கள். யானையை அலங்கரித்து, அதன் முதுகில் அம்பாரி வைத்து, அதில் அரசர்கள் அமர்ந்து செல்வார்கள். நமது நாட்டில் பெரிய கோவில்களில் யானை இருப்பதைப் பார்க்கலாம்.

6. யானையின் தந்தம் விலை உயர்ந்தது. அதனைக் கொண்டு அழகிய பல பொருள்கள் செய்வார்கள். ஆதலால், 'யானை இருந்தாலும், இறந்தாலும் ஆயிரம் பொன்,' என்னும் பழமொழி வழங்குகிறது.

7. மலைகளிலிருந்து பெரிய மரங்களை இழுத்து வரவும், அவற்றை அடுக்கவும் யானையை உபயோகிக்கிறார்கள். யானை மிகவும் அறிவுள்ள மிருகம். அது தனக்குச் செய்யும் நன்மை, தீமைகளை அறிந்து, சமயம் வாய்க்கும்போது திருப்பிச் செய்யும் குணம் உடையது. யானையை மேய்ப்பவன் யானைப்பாகன் என்று கூறப்படுவான். அவனை **மாவுத்தன்** என்றும் கூறுவர். அவன் யானையை அடக்குவதற்கு வைத்திருக்கும் ஆயுதம் அங்குசம் எனப்படும்.

அரும்பதங்கள்

மாமிசம்	*கருமை*	*உறுப்பு*	*மத்தகம்*
தந்தி	*துதிக்கை*	*நுனி*	*சொரசொரப்பு*
களிறு	*பிடி*	*கட்டுத்தறி*	*பருமன்*
யானைப்படை	*அம்பாரி*	*மாவுத்தன்*	*அங்குசம்*

பயிற்சி

1. *விடை எழுது:*
   - *அ. யானையை நீ பார்த்திருக்கிறாயா? எங்கே பார்த்தாய்?*
   - *ஆ. மற்ற மிருகங்களுக்கு இல்லாமல் யானைக்கு மட்டும் இருக்கும் உறுப்பு எது? அதனால் யானைக்கு என்ன பயன்?*
   - *இ. யானையை எவ்வாறு பிடிக்கிறார்கள்?*
   - *ஈ. யானையின் உபயோகங்கள் எவை?*

2. *எதிர்ப் பதங்கள் எழுது:*

   பயன்படும் ×
   அகன்றது ×
   கூர்மையான ×
   களிறு ×

8. *கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:*

   விலங்கு-கூட்டம் கூட்டமாய்-வடிவம்-துவாரம்-நன்மை-தீமை-யானைப்பாகன்.

11. மௌன வாசிப்பு—I

கீழே உள்ள கதையை மனத்துக்குள் படித்து வினாக்களுக்கு விடை எழுது :

1. ஒரு வேடன் வில்லும் அம்பும் கொண்டு காட்டில் திரிந்தான். நெடு நேரம் சுற்றியும் பறவை ஒன்றும் அகப்படவில்லை. அவன் களைத்துப் போனான். அவன் ஒரு மரத்தடியில் வந்து நின்றான்; அண்ணாந்து பார்த்தான். ஒரு கிளையில் புறா ஒன்று உட்கார்ந்திருந்தது. அதனைக் கண்டதும் வேடன் வில்லை வளைத்தான். அம்பை நாணில் வைத்துக் குறி பார்த்தான். அதே நேரத்தில் அப்புறாவைப் பற்றித் தின்ன ஒரு பருந்து வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

2. வேடன் நின்ற இடத்தில் எறும்புப் புற்று ஒன்று இருந்தது. குறி பார்த்துக் கொண்டிருந்த வேடன், ஒரு காலைப் புற்றின் மேல் வைத்தான். அப்பொழுது ஒரு பெரிய எறும்பு அவன் காலை 'வெடுக்' கென்று கடித்தது. அவன் துள்ளிக் குதித்தான். அதனால் அவன் வைத்த குறி தவறிற்று; ஆனால் கையில் இருந்த அம்பு சென்றுவிட்டது. அந்த அம்பு புறாவின்மீது படவில்லை; புறாவைப் பற்றிக்கொண்டு செல்ல மேலே பறந்து கொண்டிருந்த பருந்தின்மேல் பட்டது. பருந்து கீழே விழுந்தது. புறா மரத்தை விட்டுப் பறந்து போயிற்று. வேடன் வெறுங்கையாய் வீடு சேர்ந்தான்.

"நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்."

வினாக்கள்

1. வேடன் எங்குச் சென்றான்?
2. அவன் குறி பார்த்த பறவை எது?
8. புறாவைப் பற்றிக்கொண்டு போக நினைத்தது எது?
4. புறா எப்படித் தப்பியது?
5. பருந்துக்கு என்ன நேர்ந்தது?

12. தீபாவளி

1. மக்கள், மனம் மகிழ்ச்சி அடைவதற்காகப் பல வகைப் பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். பண்டிகை என்பதை விழா என்றும் கூறுவர். பண்டிகைக் காலங்களில் அவர்கள் தொழில் செய்யப் போகாமல் ஓய்வு கொள்கிறார்கள். பண்டிகை நாளில் மக்கள் உண்டு, உடுத்து மகிழ்கிறார்கள். அன்று அவர்கள் மனைவி மக்களுடனும், உற்றார் உறவினருடனும் கலந்து பேசி மகிழ்கிறார்கள். தினமும் போல அல்லாமல், அன்று விசேஷமான தின்பண்டங்களைச் செய்து உண்கிறார்கள். அவ்வாறு மகிழும் பண்டிகைகளுள் தீபாவளி ஒன்று.

2. 'தீப - ஆவளி' என்பது தீபங்களின் வரிசை என்று பொருள்படும். தீபம் என்பது விளக்கு. தீபாவளி, விளக்குகளை வரிசையாக வைத்து அலங்கரிக்கும் விழாவாகும். தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முந்திய நாளில் வரும்.

3. தீபாவளியன்று பொழுது விடிவதற்கு முன்பே மக்கள் எண்ணெய் தேய்த்து முழுகுவார்கள். புதிய ஆடைகளை உடுத்திக்கொள்வார்கள்; அணிகளை அணிந்துகொள்வார்கள். பல வகைத் தின்பண்டங்களைச் செய்து, குடும்பத்தவர் எல்லாரும் மகிழ்ந்து உண்பார்கள்; நண்பர், உறவினர்களுக்கும் அளிப்பார்கள்.

4. தீபாவளிப் பண்டிகை என்றால் சிறுவர் சிறுமியர்க்குக் கொண்டாட்டம் அதிகம். புதிய ஆடைகள், தின்பண்டங்கள் கிடைப்பது மட்டுமல்ல; அன்று சிறுவர்கள் பட்டாசுகளை வெடிப்பார்கள்; மத்தாப்புக்களைக் கொளுத்துவார்கள். பல வகை வெடிகளின்

சத்தம் அன்று காதைச் செவிடாக்கிவிடும். பல நிற மத்தாப்புக்களைச் சிறுவர்கள் கொளுத்தி மகிழ்வார்கள். முன்பு பட்டாசுகளும், மத்தாப்புக்களும் சீனுவிலிருந்து தருவிக்கப்பட்டு வந்தன. ஆதலால் பட்டாசுகளுக்குச் ' சீன வெடி ' என்ற பெயர் அமைந்தது. இக்காலத்தில் இந்தியாவில் உள்ள தீக்குச்சித் தொழிற்சாலைகளிலேயே பட்டாசுகளும், மத்தாப்புக்களும் செய்யப்படுகின்றன.

5. வடநாட்டினர் தீபாவளி அன்று செல்வத்திற்குத் தெய்வமான திருமகளை வணங்குவார்கள். அன்று வட நாட்டில் வீடுகளில் வரிசை வரிசையாகத் தீபங்கள் ஏற்றி அலங்கரிப்பது போலத் தென்னுட்டில் செய்யும் வழக்கம் இல்லை.

அரும்பதங்கள்

மகிழ்ச்சி	மனைவி	கொண்டாட்டம்
பண்டிகை	மத்தாப்பு	தொழிற்சாலை
விழா	நணபர்	வித்தியாசம்
உறவினர்	பட்டாசு	தென்னுடு

பயிற்சி

1. விடை எழுது:

அ. பண்டிகை என்பதற்குப் பொருள் யாது?
ஆ. தீபாவளி என்பதற்குப் பொருள் யாது?
இ. இந்துக்கள் தீபாவளியன்று என்ன செய்வார்கள்?
ஈ. வடநாட்டில் தீபாவளி எவ்வாறு கொண்டாடப்படுகிறது?
உ. தீபாவளி விழா சிறுவர் சிறுமியர்க்கு அதிக மகிழ்ச்சி தருவது ஏன்?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

மகிழ்ச்சி	×	பலவகை	×
விசேஷமான	×	சிறுவர்	×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

மகிழ்ச்சி–சிறுவர்–சிறுமியர் – பண்டிகை – விழா – தீபம் – வரிசை–எண்ணெய்–அலங்காரம்.

13. தமிழ் மொழி

(பாட்டு)

செந்தமிழ் மொழியின் சிறப்பெல்லாம்
செப்பிடின் ஆண்டுகள் பலவாகும்;
முந்தையர் தந்த முதுமொழியாம் ;
மூவகை யான தமிழ்மொழியாம் ! 1

தேனினும் இனிய சுவைதருமாம் ;
தேவரும் விரும்பும் தமிழ் மொழியாம் ;
வானினும் பரந்த தமிழ்மொழியாம் ;
வளத்தில் சிறந்த தமிழ்மொழியாம் ! 2

கடவுளர் விரும்பும் தமிழ்மொழியாம் ;
காசினி போற்றும் தமிழ்மொழியாம் ;
மடமையை அகற்றும் தமிழ்மொழியாம் ;
மன்னரும் ஏற்றும் தமிழ்மொழியாம் ! 3

நூல்பல உடையது தமிழ்மொழியாம் ;
நுட்பம் மிக்கதும் தமிழ்மொழியாம் ;
நால்வகைப் பாவால் நானிலத்தை
நன்குபு ரந்ததும் தமிழ்மொழியாம் ; 4

வள்ளுவன், கம்பன், இளங்கோவும்
வகுத்தநல் நூல்கொள் தமிழ்மொழியாம் ;
தெள்ளிய தெய்வத் தமிழ்மொழியாம் ;
தேவர்கள் பாக்கொள் தமிழ்மொழியாம் ! 5

பெற்றதாய் போன்றது தமிழ்மொழியாம் ;
பீடுற வைப்பதும் தமிழ்மொழியாம் ;
கற்றவர் போற்றிடும் தமிழ்மொழியாம் ;
கண்ணிய மாய்அதைப் போற்றுவமே ! 6

— *கௌணியன்*

அரும்பத உரை

1. செப்பிடின் – சொன்னல், ஆண்டுகள் – வருடங்கள், முந்தையர் – முன்னோர், முதுமொழி – பழைமையான மொழி, மூவகை – இயல்தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்.

2. வானினும் – ஆகாயத்தைவிட, வளமை – செழுமை.

3. கடவுளர்–தேவர்கள். காசினி–பூமியிலுள்ள மக்கள், மடமை–அறியாமை.

4. நுட்பம்–ஆராய்ந்து காணத்தக்க அரிய விஷயங்கள், நால்வகைப் பா–நான்கு வகைப் பாட்டுக்கள், நானிலம்–பூமி, புரந்ததும்–காப்பாற்றியதும்.

5. திருவள்ளுவன் இயற்றிய திருக்குறள், கம்பன் இயற்றிய இராமாயணம், இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரம், வகுத்த–எழுதிய, தேவர்கள்பா - தேவார, திருவாசக, திவ்விய பிரபந்தம்.

6. பீடுற-புகழ் உண்டாகும்படி, கண்ணியமாய்-பெருமையாக, போற்றுவோம்–வணங்கிக் காப்போம்.

இவற்றைக் கவனித்துப்படி:

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
எழுதினேன்	எழுதுகிறேன்	எழுதுவேன்
படித்தாய்	படிக்கிறாய்	படிப்பாய்
ஓடினான்	ஓடுகிறான்	ஓடுவான்
உண்டான்	உண்கிறான்	உண்பான்
பாடிற்று	பாடுகிறது	பாடும்
மேய்ந்தது	மேய்கிறது	மேயும்
தின்றேன்	தின்கிறேன்	தின்பேன்
பார்த்தாய்	பார்க்கிறாய்	பார்ப்பாய்
அழுதான்	அழுகிறான்	அழுவான்
வணங்கினேன்	வணங்குகிறேன்	வணங்குவேன்

14. கவரி வீசிய காவலன் [நாடகம்]

முதற்களம்

இடம் :	அரசனது அரண்மனையில் ஒரு பகுதி
காலம் :	முற்பகல்
பாத்திரம் :	புலவர் ஒருவர்

தமிழ்ப் புலவர் : (தமக்குள் பேசிக்கொள்கிறார்.) என்ன உலகம்! எவ்வளவு படித்திருந்தால்தான் என்ன? கையில் காசில்லாதவனை யார் மதிக்கிறார்? 'பணம் இல்லாதவன் பிணம்' என்பது சரியே. நம் ஊரை விட்டு நூற்று நாற்பது மைல் நடந்து வந்தோம். உணவும் தக்கவாறு இல்லை. இதோ, அரண்மனையை அடைந்து விட்டோம். இனி அரசனை எப்படியும் பார்ப்போம். நம் பாட்டைப் படித்துக் காட்டுவோம். சேர மன்னன், தமிழின் சுவை அறிந்தவனும். ஆதலால் ஏதேனும் தக்க பரிசு நமக்குக் கொடுப்பான். நம் வறுமை நீங்கி விடுவது நிச்சயம். (அருகில் இருந்த முரசு கட்டிலைக் கண்டு அதன் அருகில் செல்கின்றார்.) சற்று நேரம் இந்தக் கட்டிலில் படுத்துக் கிடந்து, களைப்பாறிவிட்டுச் செல்வோம். தூக்க மயக்கத்-தினால் கண்கள் சுழல்கின்றன. இங்குச் சேவகர் யாரையும் காணோம். அதுவும் நல்லதே. சற்றுப் படுத்துக் களைப்பாறுவோம்.

[புலவர் கட்டிலில் படுத்து அயர்ந்து தூக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறார்.]

இரண்டாம் களம்

இடம் :	அரண்மனையில் முரசு கட்டில் வைக்கும் முற்றம்
காலம் :	நண்பகல்
பாத்திரங்கள் :	புலவர், அரசன், பிரதானியர்

[சேர மன்னன், பிரதானியர் பின்வர முன்னே வருகிறான். கட்டிலில் உறங்கும் புலவரைக் காண்கிறான்.]

சேர மன்னன் : ஆ! முரசு கட்டிலில் யாரோ படுத்துத் தூங்குகிறன். அவனுக்கு எவ்வளவு துணிவு! முரசு கட்டிலில் உறங்கலாமா? உறங்கிஞல் அவன் தலைவெட்டப்படுவது நிச்சயம் என்பது எல்லாருக்கும் தெரியுமே! அப்படியிருந்தும் எவனே அதிற் படுத்து உறங்குகிறன். அவனுக்கு எவ்வளவு கர்வம் இருக்க வேண்டும்!

[அரசன் கோபத்தோடு உறையிலிருந்து வாளை உருவியபடி கட்டிலின் அருகே வருகிறன்.]

ஆ! மோசிகீரஞர்! தமிழ்ப் பெரும் புலவர்! இவரை வெட்டிவிடப் பார்த்தேனே! ஐயோ பாவம்! நீண்ட தூரம் நடந்து வந்திருக்கிறர் போலும்! அதஞல்



களைப்புற்றிருக்கிறர்; அயர்ந்து தூங்குகிறர்; தூங்குகிறவரை எழுப்புதல் ஆகாது. (வேலையாளைப் பார்த்து) யாரடா அங்கே. கவரி கொண்டு வா.

[வேலையாள் கவரி கொண்டு வருகிறன். அரசன் அதை வாங்கிப் புலவர் களை தெளிய வீசுகிறன். புலவர் கண் விழிக்கிறர்.]

[கண்விழித்த புலவர் அரசனைக்கண்டு திடுக்கிட்டு எழுகிறார் : அச்சத்தால் உடல் நடுங்குகிறது.]

அரசர்: புலவர் பெருமானே, அஞ்ச வேண்டா; உடல் நடுங்க வேண்டா; உமக்கு ஒரு தீங்கும் நேராது. இன்னும் சற்று நேரம் உறங்கலாம்.

புலவர்: அரசர்க்கு அரசரே, நான் அறியாமல் பெருங் குற்றம் செய்துவிட்டேன். அது மன்னிக்க முடியாத குற்றம். அக்குற்றத்திற்குத் தண்டனை உமது கை வாளால் என் தலையை வெட்டுவது-தான். நான் நீண்ட தூரம் வழி நடந்து வந்தேன். எனக்கு உண்டான களைப்பால் முரசு கட்டில் என்பதைக் கவனிக்கவில்லை. மதிமயங்கி அதன் மேல் படுத்து உறங்கிவிட்டேன். அதற்காக என் தலையை நீர் வெட்டியிருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. அதற்கு மாறாகக் கவரி கொண்டு வீசினீர். இச்செய்கை உமது தமிழ் அன்பை அல்லவா வெளிப்படுத்துகிறது? உமக்குத் தமிழ்ப் புலவரிடம் உள்ள மதிப்பை அல்லவா தெரிவிக்கிறது? நீர் நீடூழி வாழ வேண்டும்! உமது புகழ் உலகெலாம் பரவ வேண்டும்!

அரசர்: புலவரே, என்னை அளவு கடந்து புகழ்கிறீர். நீர் பெருந்தவறு ஏதும் செய்துவிடவில்லை. உம் தளர்ச்சியும் சோர்வும் உம்மை அவ்வாறு செய்யும்படி செய்தன. கவலை வேண்டா. வாருங்கள் அரண்மனைக்குச் செல்லலாம்.

(அரசனும் புலவரும் செல்கின்றனர்.)

அரும்பதங்கள்

பந்தி	முற்றம்	முரசு	தண்டனை
தக்கவாறு	சூழ்கின்றன	நிச்சயம்	கவரி
பரிசு	சோர்வு	விண்	தளர்ச்சி

பயிற்சி

I விடை எழுது:

அ. இந்நாடகத்தின் கதையை எழுது.

ஆ. பணமில்லாதவனைப் பற்றிய பழமொழி யாது?

இ. புலவர் அரசனைப் பற்றி எண்ணியது என்ன?

ஈ. அரண்மனை முற்றத்தில் புலவர் எதனைக் கண்டார்? என்ன நினைத்தார்?

உ. அரசர் புலவரைக் கண்டு எண்ணியது என்ன?

ஊ. புலவர் விழித்து எழுந்து அரசனைக் கண்டு யாது கூறினார்?

எ. புலவர் பெயர் யாது?

ஏ. அரசன் புலவருக்குச் செய்தது என்ன?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

இல்லாதவன் ×
அறிந்தவன் ×
அருகில் ×
உறக்கம் ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

சுவை-பரிசு-வறுமை-நிச்சயம்-களைப்பு-துணிவு – கர்வம்-அயர்ந்து-தீங்கு-குற்றம்-தவறு-அரண்மனை.

15. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
3. அகல உழுவதினும் ஆழ உழு.
4. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
5. கெடுவான் கேடு நினைப்பான்.
6. நாம் ஒன்று நினைத்தால்
   தெய்வம் ஒன்று நினைக்கும்.
7. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
8. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
9. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
10. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
11. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?
12. காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு.
13. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
14. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
15. சுத்தம் சோறு போடும்.
16. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

16. இந்தியா

1. நாம் வசிக்கும் நாடு இந்தியா. இதற்குப் பாரத தேசம், பரதக் கண்டம் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இந்தியா மிகப் பெரிய தேசம். இதில் பல உயர்ந்த மலைகள் இருக்கின்றன; நீண்ட ஆறுகளும் ஓடுகின்றன. இந்தியா ஒரு விவசாய நாடு. இந்நாட்டில் கிராமங்களே அதிகம். பல நகரங்களும் உண்டு.

2. உலகில் உள்ள மலைகளுள் உயர்ந்தவை இமய மலைகள். அவை இந்தியாவின் வடக்கில் உள்ளன. அவற்றில் மிக உயர்ந்த சிகரங்கள் உள்ளன. அவற்றுள் எவரெஸ்டு என்பது மிக உயர்ந்தது. இமயமலை எக்காலத்திலும் பனியால் மூடப்பட்டிருப்பதால், அப்பெயர் பெற்றது. இமம் என்னும் சொல்லுக்குப் பனி என்பது பொருள். இமய மலையிலிருந்து கங்கை, சிந்து, பிரம்மபுத்திரா என்னும் நதிகள் தோன்றுகின்றன.

3. இந்தியாவின் நடுவில் விந்திய மலைகளும், சாத்பூரா மலைகளும் உள்ளன. தென் இந்தியாவில் மேற்கு மலைத் தொடரும், கிழக்கு மலைத்தொடரும் இருக்கின்றன. விந்திய மலைக்குத் தெற்கே கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை, தாம்பிரபரணி முதலிய ஆறுகள் ஓடுகின்றன. இந்நதிகளும் இவற்றின் துணை நதிகளும், கிளை நதிகளும் இந்நாட்டை வளம்படுத்துகின்றன. ஆதலால் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர் வகைகள் செழித்து வளர்கின்றன.

4. இந்தியாவில் டில்லி, பாட்னா, கல்கத்தா, காசி, பம்பாய், சென்னை, திரிசிராப்பள்ளி, மதுரை,

திருநெல்வேலி போன்ற பெரிய பட்டணங்கள் உள்ளன. இந்தியாவின் தலைநகர் டில்லி.



5. தென்னாட்டில் இருப்பவர்கள் வடக்கே உள்ள காசிக்கும், வட நாட்டில் இருப்பவர்கள் தெற்கே உள்ள இராமேசுவரத்திற்கும் யாத்திரை செய்கிறார்கள்.

இவை இரண்டும் இந்துக்களுக்கு முக்கியமான புண்ணிய தலங்கள்.

6. இந்தியாவில் புத்தர், வர்த்தமானர், சங்கரர், சம்பந்தர் போன்ற மதபோதகர் தோன்றினர். பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தியடிகள் போன்ற தேசபத்தர் பலர் நமது நாட்டில் தோன்றியுள்ளனர். காளிதாசர், திருவள்ளுவர், ஔவையார், கம்பர், ரவீந்திரநாதர், பாரதியார், போன்ற புலவர் பலர் தோன்றி யுள்ளனர்.

7. இந்தியாவில் தஞ்சைப் பெரிய கோவில், மதுரை மீனாட்சி கோவில், தாஜ்மஹால் போன்ற சிறந்த கட்டடங்கள் பல உண்டு. அஜந்தா, எல்லோரா போன்ற குகைகளின் சுவர்களில் அழகிய வண்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. அவை வெகுகாலத்துக்கு முற்பட்டவை. மகாபலிபுரத்தில் கருங்கற்பாறைகளில் அழகிய உருவங்கள் செதுக்கப்பட்டு உள்ளன. பொன், இரும்பு, நிலக்கரி முதலியவை நம் நாட்டில் நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன.

8. இவற்றால் நாம் அறிவது யாது? நமது நாடு எல்லா வளங்களும் நிறைந்தது. ஆதலால் நாம் எல்லாரும் ஒற்றுமையாக இருந்து அவற்றைப் பயன் படுத்த வேண்டும். அப்போது நாமும் சுகமாக வாழலாம். நமது நாடும் பெருமையோடு விளங்கும்.

அரும்பதங்கள்

விவசாயநாடு	*சிகரங்கள்*	*உபநதி*
கிளைநதி	*வளம்படச்செய்*	*செழித்து*
யாத்திரை	*இந்துக்கள்*	*வண்ணம்*
ஒற்றுமை	*துணைநதி*	*சித்திரம்*

பயிற்சி

I. விடை எழுது:

அ. நமது நாட்டின் வடக்கில் உள்ள மலைகள் எவை?

ஆ. எவரெஸ்டு என்பது யாது? அது எங்கிருக்கிறது?

இ. நமது நாட்டில் பாயும் நதிகளில் மூன்றின் பெயரை எழுது.

ஈ. சிறந்த பட்டணங்கள் மூன்றின் பெயர்களைக் கூறு.

உ. நமது நாட்டுப் புலவர்களுள் நால்வர் பெயரை எழுது.

ஊ. மகாபலிபுரம் எதற்குப் பெயர் பெற்றது?

எ. நமது நாட்டை விவசாய நாடு என்று கூறக் காரணம் என்ன ?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

உயர்ந்த ×
மூடு ×
பெரிய ×
தென்றல் ×

3. கீழே வந்துள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

சிகரம் -வளம்-பட்டணங்கள் - யாத்திரை - மதபோதகர்- சிறந்த-பெருமை.

17. காங்கோ நாட்டுக் குள்ளர்கள்

1. **ஆப்பிரிக்கா** என்பது ஒரு கண்டம். கண்டம் என்பது ஒரு பெரிய நிலப் பிரிவு. ஆப்பிரிக்கா இந்தியாவுக்குத் தென்மேற்கில் வெகு தொலேவில் இருக்கிறது. ஆப்பிரிக்காக் கண்டத்தில் பல பெரிய ஆறுகள் ஓடுகின்றன. அவற்றுள் ஒன்று காங்கோ நதி. காங்கோ நதியின் இரு கரைகளிலும் வெகுதூரம் வரை காடுகள் அடர்ந்து இருக்கும். அக்காடுகளில் ஒருவகை மக்கள் வசிக்கின்றார்கள். அவர்களுக்குப் **பிக்மிக்கள்** என்பது பெயர்.

2. பிக்மிக்கள், ஏறக்குறைய நான்கடி உயரமே இருப்பார்கள். நம்மைப் போன்ற சாதாரண மக்களின் உயரம் ஐந்தடிக்குமேல் இருக்கும். பிக்மிக்கள் வாழும் காடுகளில் யானே, மான் போன்ற பலவகை விலங்குகள் காணப்படும். அங்குக் குரங்குகள் அதிகம். பலவகையான பறவைகளும் உண்டு. உண்ணக்கூடிய பழம் தரும் மரங்களும் உள்ளன.

3. பிக்மிக்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ்பவர் அல்லர். அவர்கள் செல்லும் காடுகளில் மரங்களை எரித்து இடம் உண்டாக்குவார்கள். அங்குத் தங்களுக்குச் சிறு குடிசைகள் அமைத்துக் கொள்வார்கள். அவர்கள் மரக்கிளைகளை நட்டு, அவற்றின் முனைகளை வளைத்து ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டுவார்கள்; அல்லது மறுபக்கத்தில் நடுவார்கள். அவற்றின்மேல் மரப்பட்டை, வாழையிலை, காட்டுப் புல் முதலியவற்றைப் போட்டு வண்டிக் கூண்டுபோல் அமைப்பார்கள். ஒரு குடிசையில் சிலரே இருக்கலாம்.

4. பிக்மிக்கள் நிலத்தைப் பயிரிடுவதில்லை. வேட்டையாடுவதே அவர்கள் தொழில். வில்லும் அம்பும் கொண்டு அவர்கள் திரிவார்கள். யானைகளை வேட்டையாடுவார்கள், அவர்கள் அதன் மாமிசத்தைப் புசிப்பார்கள். அவர்கள் குரங்கு, மான் ஆகியவற்றின் மாமிசங்களையும் தின்பார்கள் ; காய், கனி, கிழங்கு, ஆகியவற்றையும் தின்பார்கள். அவர்களுக்குத் தேன் சாப்பிடுவதில் பிரியம் அதிகம். நான்கே அடி உயரம் உள்ள ஒவ்வொரு பிக்மியும் ஒரு தாறு வாழைப் பழங்களைத் தின்றுவிடுவானும்.

5. அவர்கள் வாழும் காட்டில் வருஷம் முழுவதும் மழை பெய்யும். மழை பெய்யும்போது பிக்மிக்கள் உணவுக்குக் கஷ்டப்படுவார்கள். அப்போது அவர்கள் எலிகளையும் தவளைகளையும் சாப்பிடுவார்கள். அவர்கள் உணவைச் சமைத்து உண்பதில்லை.

6. பிக்மிக்களில் ஆண்கள் ஒரு சிறு ஆடையை உடுப்பார்கள். பெண்கள் இலைகளைக் கட்டிக் கொள்வார்கள். அவர்கள் குள்ளமாக இருந்தாலும் வலிமையும் தைரியமும் உடையவர்கள்; புதியவர்களைக் கண்டால் வெட்கத்தால் ஓடி ஒளி-

வார்கள்; மறைந்திருந்து அம்புவிட்டுக் கொல்வார்கள். அவர்கள் அம்புகளின் முனைகளுக்கு விஷம் தடவி வைப்பார்கள். அவர்கள் வட்டமாக நின்று நடனம் ஆடுவதில் விருப்பம் உடையவர்கள்.

7. அவர்கள் வியாபாரம் செய்வது விநோதமாக இருக்கும். அவர்கள் தாங்கள் வேட்டையாடிய விலங்குகளின் மாமிசத்தைக் காட்டின் எல்லையில் கொண்டுபோய் மரக்கிளைகளில் கட்டிவிட்டு வந்து விடுவார்கள். அருகில் வசிக்கும் நீக்ரோக்கள் அங்கு வந்து மாமிசத்தை எடுத்துக்கொள்வார்கள். பதிலுக்கு வாழைப்பழத் தாறுகளும், அம்புகளும் வைத்துச் செல் வார்கள். இந்த வியாபாரம் விநோதமாக இல்லையா ?

அரும்பதங்கள்

வடிவம்	பெருந்துன்பம்	வட்டமாக
ஏறக்குறைய	கட்டுப்பாடு	நடனம்
பிரதேசம்	கரடுமுரடான	அடர்ந்த

பயிற்சி

1. விடை எழுது:

அ. காங்கோ நதி எங்குள்ளது?
ஆ. அந்நதியின் கரைகள் எவ்வாறு உள்ளன?
இ. பூமத்திய ரேகை என்பது என்ன?
ஈ. பிக்மிக்கள் வாழும் காட்டில் என்ன கிடைக்கின்றன?
உ. பிக்மிக்களின் குடிசையைப் பற்றி எழுது.
ஊ. பிக்மிக்களின் தொழில் என்ன?
எ. அவர்களுக்கு எவற்றில் விருப்பம் அதிகம்?

2. கீழ் உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைக்கவும்:

ஏறக்குறைய, அடர்ந்த, துன்பம், வட்டமாக, கரடு முரடான.

3. எதிர்ப் பதங்கள் எழுது:

குள்ளம் ×
தொலைவு ×
முன்பக்கம் ×
சிறிதும் ×

18. கிராம மக்கள்

1. நம் தாய் நாடான இந்தியா நீர் வளம் நில-வளம் சிறந்து விளங்குகிறது. இந்நாட்டில் சிறப்பாகப் பயிர்த் தொழில் நடைபெற்று வருகிறது. அதனுல் இந்நாட்டில் நகரங்களைக் காட்டிலும் கிராமங்களே அதிகமாகும்..

2. கிராமத்தில் வசிக்கும் மக்கள் அதிகாலையில் எழுந்திருக்கிருர்கள். ஆண்கள் எழுந்தவுடனே கலப்-பை, மண் வெட்டி முதலியவற்ருேடு காளைகளை ஓட்டிக் கொண்டு வயலுக்குச் செல்கிருர்கள். பெண்கள் எழுந்தவுடனே வீடு வாசல்களைச் சுத்தம் செய்கிருர்கள். பிறகு குடத்தை எடுத்துக் கொண்டு குளத்துக்குச் சென்று, குளித்துவிட்டுத் தண்ணீர் கொண்டு வருகிருர்கள். பிறகு வீட்டு வேலைகளைக் கவனிக்கிருர்கள். இவ்வாறே கிராமத்தில் வசிக்கும் அனைவரும் காலையில் எழுந்தவுடனே தம் தம் தொழிலைச் செய்யத் தொடங்குகிருர்கள்.

3. பயிர்த் தொழில் செய்யும் வேளாளருக்கு உதவியாகப் பல தொழிலாளர் கிராமங்களில் வசிக்கின்றனர். வேளாண்மைக்குத் தேவையான கலப்பை பறம்புப் பலகை முதலியன செய்து கொடுக்கத் தச்சர் வேண்டும். மண்வெட்டி, அரிவாள், கோடரி, கொழு, இறைசால் முதலியன செய்து கொடுக்கக் கொல்லர் வேண்டும். வண்டி செய்ய இவ்விருவரும் வேண்டும்.

4. ஆடை நெய்யக் கைக்கோளர் வேண்டும். துணி வெளுக்கச் சலவைத் தொழிலாளரும், நகைகள் செய்யத் தட்டாரும், மண் பாண்டங்கள் செய்யக் குலாலரும், செம்பு பித்தளைப் பாத்திரங்கள் செய்யக் கன்னாரும், வீடு, கிணறு முதலியன கட்டக் கொத்தரும் கிராமங்களில் வாழ்கின்றனர். கோவிலில் பூசை செய்யக் குருக்களும், பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க உபாத்தியாயரும் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராம மக்களாகிய இத்தொழிலாளர் அனைவரும் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு எண்ணாமல் அன்புடையவராய் ஒற்றுமையோடு வாழ்கிறார்கள். எனவே கிராம வாழ்க்கை சிறப்பாகவும் இன்பமாகவும் இருக்கின்றது. இத்தொழிலாளர்களுள் பலருக்கு எல்லாக் காலத்திலும் வேலை இராது அல்லவா ? வேலை இல்லாத காலத்தில் அத்தொழிலாளரும் பயிர்த் தொழிலைச் செய்வர்.

5. கிராம மக்களுக்கு வேண்டிய பொருள்களைத் தருவித்து அவர்களுக்கு விற்பதும், அவர்களிடம் உள்ள பொருள்களை வாங்கி வெளியிடங்களுக்கு அனுப்புவதும் வியாபாரிகள் வேலை. அவர்கள் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை உடையவர்கள். அவர்களிடம் உண்மை, உழைப்பு, முயற்சி, ஒற்றுமை, உபகாரம் முதலான நல்ல பண்புகள் ஓங்கி வளர்கின்றன.

6. கிராமங்களில் தூய காற்றும், பசுமையான காய்கறிகளும் கிடைக்கின்றன. மக்களுக்கு உழைப்-பும் இருத்தலால் அவர்கள் உடல்உரம் பெற்று வாழ்-கிறார்கள்.

7. கிராமங்களில் மேய் புலங்கள் உள்ளன. ஆத லால் கிராம மக்கள் ஆடு, மாடு, பசு, எருமை முதலி யனவற்றை வளர்க்கிறார்கள். அவற்றால் அவர்கள் தயிர், பால், நெய் முதலியன பெற்றுப் பயன் அடை கிறார்கள். எனவே கிராம வாழ்க்கை மிக்க இன்பம் தரும் வாழ்க்கையாக அமைகிறது.

அரும்பதங்கள்

தாய்நாடு	வேளாளர்	உபாத்தியாயர்
நீர்வளம்	கோடரி	ஒற்றுமை
நிலவளம்	கொழு	உயர்வு தாழ்வு
அதிகாலை	கைக்கோளர்	ஆடம்பரம்
தொடங்கு	குருக்கள்	

பயிற்சி

1. விடை எழுது :-

அ. வேளாளர் காலையில் செய்வது யாது?
ஆ. கிராமப் பெண்கள் காலையில் செய்யும் வேலைகள் யாவை?
இ. கிராமத்தில் வாழும் தொழிலாளர் யாவர்?
ஈ. கிராம வாழ்க்கையின் பெருமைகள் யாவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது :

செல்வார்கள் ×
தொடங்கு ×
கொடு ×
இன்பம் ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

நீர்வளம் – நிலவளம் – எளிய – அதிகாலை – ஒற்றுமை – வாழ்க்கை – கல்வி – சிறப்பாக

19. மழைப் பாட்டு

மழையே மழையே வாவா !
மனது குளிர ஓடிவா.
வானில் இருந்து வாவா !
வாடிய செடிமேல் ஓடிவா. 1

மலையின் மேலே ஏறிவா
மடுவில் சேர ஓடிவா.
கத்தரி காய்க்க வாவா !
இத்தரை மீது ஓடிவா. 2

காயும் பழமும் உன்னாலே ;
கருப்பு நீங்குவது உன்னாலே ;
கோயில் பூசை உன்னாலே ;
குடிகள் சிறப்பது உன்னாலே. 3

உழவும் விதைப்பும் உன்னாலே ;
உண்டு உடுப்பதும் உன்னாலே ;
விளைவும் அறுப்பும் உன்னாலே ;
உயிர்கள் வாழ்வதும் உன்னாலே. 4

அரும்பதவுரை

1. வானம்—ஆகாயம்;
2. மடு—பள்ளம்;
3. கருப்பு—பஞ்சம்;
குடிகள்—நாட்டு மக்கள்;
4. உடுப்பது—ஆடை அணிவது
உயிர்கள்—மக்கள், மிருகம், பறவை முதலியன.

20. மௌன வாசிப்பு – 2

கீழே உள்ள கதையை மனத்திற்குள் படித்து வினைக் களுக்கு விடை எழுது :

சமயோசித புத்தி

1. ஒரு காட்டில் குளம் ஒன்று இருந்தது. அதன் கரையில் ஒரு நாவல் மரம் இருந்தது. நாவல் மரத்தில் ஒரு குரங்கும், குளத்தில் ஆண், பெண் முதலைகள் இரண்டும் வசித்து வந்தன. குரங்கும் ஆண் முதலை யும் நட்பாயிருந்தன. குரங்கு முதலைக்குத் தினந்தோறும் நாவற்பழங்கள் கொடுத்து வந்தது. முதலை சில பழங்களைத் தின்னும். சில பழங்களைப் பெண் முதலைக்கும் கொண்டு போய்க் கொடுக்கும்.

2. ஒரு நாள் பெண் முதலை ஆண் முதலையைப் பார்த்து, ''நீ கொடுக்கும் நாவற்பழங்கள் மிக்க சுவை உள்ளவையாய் இருக்கின்றன. அவற்றைத் தின்று நான் மகிழ்கிறேன். ஆனால், நம்மைக்காட்டிலும் நாவற் பழத்தை மிகுதியாகத் தின்பவன் உன் நண்பனாகிய குரங்கு. அவன் வயிற்றிலுள்ள ஈரல் நாவற்பழச்சாறு ஊறி மிகவும் இனிமையாக இருக்கும். அதனைத் தின்றால் எனக்கு மேலும் அதிகமான இன்பம் உண்டாகும். ஆதலால் அதனைக் கொண்டுவந்து கொடு,'' என்று கேட்டது.

3. அதனைக் கேட்ட ஆண் முதலை, ''பெண்ணே, நீ சொல்வது முடியாது. நீ என் நண்பனைக் கொல்லப் பார்க்கிறாய். அது மிகவும் பாவம். உப்பிட்டவரை உயிர் உள்ளளவும் நினைக்க வேண்டாவா?'' என்றது. ஆனால் பெண் முதலை அதற்கு ஒப்பவில்லை. அது பிடிவாத மாக, ''நான் அதனைத் தின்றே ஆகவேண்டும். இல்லா விட்டால் நான் உயிர் விடுவேன்,'' என்றது.

4. ஆண் முதலை ஒன்றும் சொல்ல முடியவில்லை. அது குளக்கரைக்கு வந்து மிக்க விசனத்தோடு தங்கி இருந்தது. குரங்கு வந்து, 'நண்பா, நீ ஏன் இன்று விசனத்தோடு இருக்கிறாய்?' என்று கேட்டது.அதற்கு முதலை "நண்பா,இன்று என் மனைவி, 'வெட்கமற்றவனே' என்று என்னை ஏசி விட்டாள். 'நீ மட்டும் தினந்தோறும் நண்பனிடமிருந்து நாவற்பழம் பெறுகிறாய். அவனை ஒரு நாளாவது நம் வீட்டிற்கு விருந்திற்கு அழைக்க வேண்டாவா? இன்று அழைத்து வா,' என்று கூறினாள். உன்னைக்கூப்பிட்டால் நீ வருவாயோ என்னவோ என்று வருத்தமாக இருக்கிறேன்," என்றது. அதனை உண்மை என்று நம்பிய குரங்கு, "நான் நீரில் எப்படி வர முடியும்?" என்று கேட்டது. "நீ என் முதுகில் ஏறிக் கொள்; நான் தூக்கிச் செல்கிறேன்" என்றது முதலை.

5. குரங்கு முதலை முதுகில் ஏறிக்கொண்டது. முதலை நீந்திக் கொண்டு நடுக் குளத்திற்குச் சென்றது. அப்போது முதலை 'இனிக் குரங்கு தப்பியோட முடியாது' என்று எண்ணியது. ஆதலால் தன் மனைவியின் கருத்தை வெளியிட்டது. அதனைக் கேட்ட குரங்கு, "நண்ப, இதனை அப்பொழுதே சொல்லக்கூடாதா? நாவற்பழச் சாற்றினால் நனைந்திருந்த என் ஈரலை மரக் கிளையில் உலர்த்திவிட்டு வந்துவிட்டேனே," என்றது. முதலை "நான் கொண்டுபோய்க் கரையில் விடுகிறேன். அதனை எடுத்துத் தருகிறாயா?" என்று கேட்டது. "நண்பனுக்கு இல்லாதது எனக்கு எதற்கு?" என்று சொல்லியது குரங்கு.

6. குரங்கை முதலை கரையில் கொண்டு போய் விட்டது. குரங்கு மரத்தின் மேல் ஏறிக் கொண்டு, "அற்பனே, நீ கொடியவன். என் முகத்தில் விழிக்-

காதே. போய்விடு,'' என்றது. முதலை நாணம் அடைந்து திரும்பியது.

வினாக்கள்

1. குரங்கு எங்கே வசித்து வந்தது?
2. குரங்கின் நண்பன் யார்?
3. குரங்கு முதலைக்கு என்ன கொடுத்து வந்தது?
4. பெண் முதலை எதன் மீது ஆசைப்பட்டது?
5. ஆண் முதலை குரங்கை எப்படி ஏமாற்றிக் கொண்டு போயிற்று?
6. குரங்கு முதலையை எப்படி ஏமாற்றியது?
7. இக்கதையால் நீ அறிவது யாது?

இலக்கணம்–பால்

இவற்றைப் படி :

ஆண்	பெண்
பாட்டன்	பாட்டி
அப்பா	அம்மா
மாமா	மாமி
மகன்	மகள்
சிறுவன்	சிறுமி
வேலைக்காரன்	வேலைக்காரி

இலக்கணத்தில் ஆணின் பெயர் ஆண்பாற் பெயர்; பெண்ணின் பெயர் பெண்பாற் பெயர்.



21. உழவுத்தொழில்

1. மக்கள் வாழ்க்கை நடத்தப் பற்பல தொழில்கள் செய்கிறார்கள். அத்தொழில்கள் எல்லாவற்றிலும் சிறந்தது உழவுத்தொழில். இதனைப் பயிர்த் **தொழில், வேளாண்மைத் தொழில், கிருஷித்தொழில்** என்றும் கூறுவர். திருவள்ளுவரும் உழவுத் தொழிலே மிகவும் சிறந்தது என்று சொல்லி இருக்கிறார். உழுது வாழ்பவர்தாம் பிறர்க்கு ஊழியம் செய்யாதவர்; மற்றவர் எல்லாரும் பிறர்க்குத் தொண்டு செய்து வாழ்பவரே யாவர். உழவின் மேன்மைக்கு வேறு காரணமும் உண்டு. உணவு இல்லாமல் எவ்வுயிரும் வாழமுடியாது? அவ்வுணவுப் பொருள்கள் உழவுத்தொழிலால் அன்றோ கிடைக்கின்றன ?

2. உழவுத் தொழிலைச் செய்பவர்க்கு **உழவர், விவசாயிகள், வேளாளர்** என்ற பெயர்கள் வழங்குகின்றன. பயிர் நிலம் **நன்செய், புன்செய்** என்று இருவகைப்படும். நீர் பாய்ச்சிப் பயிர் செய்யப்படும் நிலம் நன்செய். அதனை வயல், கழனி என்றும் கூறு-

வர். மழை நீரின் உதவியால் பயிர் செய்யப்படும் நிலம் புன்செய் எனப்படும். இது கொல்லைவெளி என்றும் கூறப்படும்.

3. நன்செய் நிலத்தில் நெல்லும் கரும்பும் பயிர் செய்வார்கள். சில இடங்களில் வெற்றிலையும், புகையிலையும், வாழையும் பயிரிடப்படும். நெல்லும் கரும்பும் அறுவடையான பின், உளுந்து, பயறு என்பன விதைப்பதும் உண்டு. கம்பு, சோளம், வரகு, மிளகாய், பருத்தி, காய்கறி என்பன புன்செய் நிலத்தில் விளைவன வாகும். எள்ளு, கொள்ளு, கடலை, மொச்சை, துவரை என்பனவும் புன்செய் நிலப் பயிர்களே.

4. வேளாளனுக்குப் பயிர்த்தொழில் செய்ய மிக்க உதவி செய்பவை மாடுகள். அவை அவனுக்கு வண்டி இழுக்கவும், ஏர் உழவும், நீர் இறைக்கவும் பயன்படுகின்றன. ஆடுமாடுகள் குடியானவனுக்கு மிகவும் அவசியமானவை. அவற்றின் சாணம் நல்ல எருவாகின்றது. பயிர்த் தொழிலுக்குப் பலவிதக் கருவிகள் வேண்டும். கலப்பை, மண் வெட்டி, களைக்கொட்டு, அரிவாள், பரம்புச் சட்டம், இறைசால் முதலியன பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கருவிகளாம்.

5. நன்செய் நிலத்தில் நீர் பாய்ச்சிச் சேருக்கிப் பயிர் செய்வார்கள். அது சேடைப் பயிர் எனப்படும். புன்செய் நிலத்தை ஈரமுள்ள பொழுது உழுது, புழுதி யாக்கிப் பயிர் செய்வர். அது புழுதிக்கால் எனப்படும். நன்செய் நிலத்தில் விதை விதைத்தும், நாற்று நட்டும் பயிர் செய்வார்கள். இவை முறையே விதைத்தல் என்றும், நடவு என்றும் கூறப்படும்.

6. பயிர்த்தொழில் செய்பவர்க்கு ஆண்டில் ஆறு மாதந்தான் வேலை இருக்கும். அக்காலத்தில் உழுதல், நீர்ப்பாய்ச்சல், எருவிடல், விதைப்பு, நடவு,

களை பிடுங்கல், அறுவடை என்பன நடைபெறும். மற்ற ஆறுமாத காலம் விவசாயிகளுக்கு அதிக-மான வேலை இராது. அவர்கள் அக் காலத்தில் பல சிறு குடிசைத் தொழில்களைச் செய்வார்களானால் இன்பமாக வாழலாம். நூல் நூற்றல், துணி நெய் தல், தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை வைத்தல் முதலியவை சில குடிசைத் தொழில்களாகும்.

உலகில் வாழும் உயிர்களுக்கு உணவுப் பொருள்-களைப் பயிரிட்டு உதவும் உழவர் மேலானவர். அவர்-களை இழிவாக நினைப்பது தவறு. அவர்களுக்கு வேண்-டிய வற்றை நாம் செய்யவேண்டும்.

அரும்பதங்கள்

வேளாண்மை	ஊழியம்	மேன்மை
விவசாயி	கொல்லைவெளி	கோழிப்பண்ணை

பயிற்சி

1. விடை எழுது:

அ. உழவர் மற்றவரைக் காட்டிலும் மேலானவர் என்பதற்குக் காரணம் என்ன?
ஆ. நிலம் எத்தனை வகைப்படும்?
இ. நன்செய் நிலப் பயிர்கள் யாவை?
ஈ. புன்செய் நிலப் பயிர்கள் யாவை?
உ. உழவர் செய்யத்தக்க குடிசைத் தொழில்கள் எவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

பற்பல ×
நன்செய் ×
மிக்க ×
ஈரமுள்ள ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

வேளாளர் – நன்செய்–புன்செய்–ஊழியம் – மேலானவர்–குடிசைத் தொழில்–நெசவுத் தொழில்.

22. சூரியனும் பூமியும்

1. நாம் பூமியின் மேல் வசிக்கிறோம். நாம் பகலில் சூரியனைக் காண்கிறோம். சூரியன் நமக்கு வெப்பத்தையும், வெளிச்சத்தையும் அளிக்கிறது.

2. சூரியனும் சந்திரனும் நமக்கு வட்டமாகத் தோன்றுகின்றன. நட்சத்திரங்கள் மிகச் சிறியனவாகப் புலப்படுகின்றன. நாம் வசிக்கும் பூமி நமது பார்வைக்கு வட்டமாகத் தோன்றவில்லை. அது தட்டையாகவே தோன்றுகின்றது. ஆனால், பூமி சூரியனையும் சந்திரனையும் போல உருண்டை வடிவானதே.

3. தினந்தோறும் சூரியன் கிழக்கே உதிப்பது போலவும், மேற்கே மறைவது போலவும் தெரிகிறது. பூமி இருந்த இடத்திலேயே இருப்பதுபோலத் தோன்றுகிறது. உண்மை அதுவன்று. சூரியன் இருந்த இடத்திலேயே இருக்கிறது. பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது. இரயில் வண்டியில் போகும்போது ஜன்னல் வழியாகப் பார்த்தால் பக்கத்தில் உள்ள மரங்களும், மலைகளும் எவ்வாறு தோன்றுகின்றன ?

அவை விரைவாக எதிர் நோக்கி ஓடுவது போலத் தோன்றுகின்றன. ஆனால், அவை ஓடவில்லை ; ரயில் வண்டிதான் ஓடுகிறது. அது போலவே, பூமி மிகவும் வேகமாகத் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் சுற்றுகிறது. சூரியன் ஒரே இடத்தில் இருக்கிறது.

4. பூமி வேகமாகத் தன்னைத்தானே சுற்றுவதால், சூரியன் எதிரில் இருக்கும் பக்கம் வெளிச்சமாகவும், மறுபக்கம் இருளாகவும் இருக்கும். மறுபக்கம் சூரியன் எதிரில் வரும்போது, அங்கு வெளிச்சமாக இருக்கும். இவ்வாறு வெளிச்சம் இருந்த பக்கம் இருளாகவும், இருள் இருந்த பக்கம் வெளிச்சமாகவும் மாறுவதை நாம் இரவு, பகல் என்கிறோம். இவ்வாறு பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்வதற்கு ஒரு நாள் ஆகிறது. எனவே அதில் பாதி பகலாகவும் பாதி இரவாகவும் உள்ளன.

5. பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கு முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் ஆகின்றன. அதனை ஓர் ஆண்டு என்கிறோம். பூமி சூரியனைச் சுற்றுவது போலச் சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்குள், சந்திரன் பூமியைப் பன்னிரண்டு முறை சுற்றிவிடுகிறது. அதாவது சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றிவர முப்பது நாட்கள் ஆகின்றன. அதனால் ஓர் ஆண்டிற்குப் பன்னிரண்டு மாதங்கள் ஏற்படுகின்றன. பூமியைச் சந்திரன் சுற்றி வரும்பொழுது பதினைந்து நாட்கள் சந்திரன் மீது படும் சூரியனுடைய ஒளி கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகி, வளர்ந்துகொண்டே வருகிறது. அதனை வளர்பிறை என்கிறோம். அதே போலப் பதினைந்து நாட்களில் சந்திரன்மீது படும் சூரிய ஒளி குறைந்துகொண்டே

வருகிறது. அதனைத் தேய்பிறை என்கிறோம். சூரிய ஒளி சந்திரன் மீது முழுவதும் பட்டுச் சந்திரன் முழு வட்டமாகத் தோன்றுவதைப் பௌர்ணமி என்கிறோம். சூரிய ஒளி சந்திரன்மீது படாமல் முழுவதும் மறையும் நாளை அமாவாசை என்கிறோம். சூரிய ஒளி சந்திரன் மீது படுவதற்கோ, படாமல் இருப்பதற்கோ காரணமாயிருப்பது பூமி.

6. சூரியன் பூமிக்கு வெகு தூரத்தில் உள்ளது. சந்திரன் பூமிக்குச் சமீபத்தில் உள்ளது, நாள், மாதம், வருடம் ஆகியவை பூமி சூரியனைச் சுற்றுவதாலும், பூமியைச் சந்திரன் சுற்றுவதாலும் ஏற்படுகின்றன.

அரும்பதங்கள்

வெப்பம்	வட்டம்	புலப்படுகின்றன	தினந்தோறும்
இருள்	ஆண்டு	அமாவாசை	பௌர்ணமி

பயிற்சி

1. விடை எழுது :

அ. சூரியன் நமக்குத் தருபவை யாவை?

ஆ. பூமி சூரியனை எப்படிச் சுற்றுகிறது?

இ. பகலும் இரவும் எவ்வாறு உண்டாகின்றன?

ஈ. வருடம், மாதம் ஆகியவை எவ்வாறு கணக்கிடப்படுகின்றன?

2. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

வசிக்கிறோம் – அளிக்கிறது – தினந்தோறும் – உண்மை – வெளிச்சம் – இருள் – மறுபக்கம்,



23. மகாத்மா காந்தி

1. நாம் இன்று சுதந்தர மக்கள்; நமது நாடு சுதந்தர நாடு. சுதந்தரம் என்பது பிறர் ஆட்சியின் கீழ் இல்லாமை. பிறர் ஆட்சியின் கீழ் இருப்பது அடி-மைத்தனம்.

2. சுமார் இருநூறு ஆண்டுகளாக நாம் ஆங்கிலே யரின் ஆட்சியின்கீழ் இருந்தோம். அக்காலத்தில் நாம் நினைத்தபடி ஒன்றும் செய்ய இயலாதிருந்தது. இந்தியா சுதந்தரத்தை இழந்து அடிமை நாடாக இருந்தது. அந்த அடிமை நிலை ஒழிந்தது யாரால் தெரியுமா? இந்-தியாவிற்குச் சுதந்தரத்தை வாங்கிக் கொடுத்தவர்

காந்தி அடிகள். காந்தி அடிகளின் பெருமை இந்தியா மட்டும் அல்ல, உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. ஒவ்வொரு நாடும் சுதந்தரம் அடையப் பல கஷ்டங்களேயும் நஷ்டங்களேயும் அடைந்திருக்கிறது; பல போர்கள் செய்திருக்கிறது. போர் என்பது சண்டை. சண்டையில் எத்தனே மக்கள் இறப்பார்கள்!

3. காந்தியடிகள் போர் இல்லாமலே நமக்குச் சுதந்தரத்தை வாங்கி அளித்தார். காந்தியடிகள் குஜரத்து நாட்டில் பிறந்தார். அவருடைய தகப்பனுர் சிற்றரசர் ஒருவரிடம் அமைச்சராய் இருந்தார். இளமைப் பருவம் முதற்கொண்டே காந்தியடிகளிடம் அரிய குணங்கள் பல விளங்கின. இவர் தாய்தந்தையரைப் போல உண்மையும், உறுதியும், தெய்வ பத்தியும் உடையவர். இவர் இளமையிலிருந்து பொய் பேசியதே இல்லே.

4. இவர் தம்மூரில் படிப்பை முடித்த பிறகு, இங்கிலாந்திற்குச் சென்ருர். அங்குச் சட்டக் கல்வி படித்துப் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றுத் திரும்பினுர். இளமை முதல் இவருக்குத் தாய்நாட்டினிடத்தில் அளவில்லாத பற்று உண்டு. இவர் ஆப்பிரிக்காவிற்குச் சென்ருர். அங்கு இந்தியர் ஆங்கிலேயரால் மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டனர். அதனேக் கண்ட காந்தியடிகள், ஆங்கில அரசாங்கத்தோடு போராடி, ஆப்பிரிக்காவில் வாழும் இந்திய மக்களுக்குப் பல நன்மைகளேத் தேடித் தந்தார்; பின்னர் அவர் இந்தியாவிற்கு வந்தார்.

5. அவர் இந்தியரின் அடிமை வாழ்க்கையைப் போக்க உறுதி கொண்டார். அவர் ஆங்கில அரசாங்கத்தோடு பல போராட்டங்கள் நடத்திஞர். காந்தி யடிகள் மக்கள் மனத்தில் தாய் நாட்டுப் பற்றை ஊட்-

டினர். காந்தியடிகள் தாம் பிறர்க்குச் சொன்ன எல்லா-வற்றையும் தம் வாழ்க்கையில் நடத்திக் காட்டினர். அதனால் மக்களுக்கு அவரிடம் நம்பிக்கையும் அன்பும் அதிகமாயின. மக்கள் காந்தியடிகள் சொல்லைக் கேட்டு நடந்தனர்.

6. காந்தியடிகள் எளிய வாழ்க்கையை உடைய-வர். தினமும் அவர் நூல்நூற்பார். அவருக்குப் பிறரிடம் வெறுப்பு என்பதே இல்லை. மக்கள் யாவரும் சகோதரர்-கள் என்று அவர் எண்ணினர். பிற நாட்டுப் பொருள்களை நாம் வாங்கலாகாது என்று அவர் போதித்தார். தாய்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களையே வாங்க வேண்டும் என்பது அவர் எண்ணம். ஒவ்வொருவரும் தாய்நாட்டினிடம் மிக்க அன்புடையவராக இருக்க-வேண்டும் என்று அவர் கூறினர்.

7. காந்தியடிகள் நடத்திய அமைதியான போராட்டத்தினால் ஆங்கிலேயர் இந்தியாவை இந்தியர் களிடம் பூரண சுதந்தரத்துடன் ஒப்படைத்துவிட்டு நீங்-கினர். 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் இந்தியா சுதந்தரம் பெற்றது. அவ்வாறு இந்தியா பூரண சுதந்-தரம் பெறும்படி செய்தவர் மகாத்மா காந்தியடிகள். அவரிடம் இருந்த உயர்ந்த குணங்களைக் கண்டு உலக மக்கள் அவரை 'மகாத்மா' என்று புகழ்ந்தார்கள். அவர் அவ்வப்போது கூறிய பொன்மொழிகளை நாம் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

அரும்பதங்கள்

சுதந்தரம்	ஆட்சி	அடிமைத்தனம்
இழந்து	போர்	அளித்தார்
அமைச்சர்	இளமை	தெய்வபத்தி
உறுதி	சட்டக்கல்வி	பற்று
தாய்நாடு	உறுதி	போராட்டங்கள்
அமைதி	மகாத்மா	பொன்மொழி

பயிற்சி

I. விடை எழுது:

1. நமது நாடு சுதந்தரம் பெறுவதற்கு முன், யார் ஆட்சியில் இருந்தது?

2. நாம் சுதந்தரம் அடையப் பாடு பட்டவர் யார்?

3. காந்தியடிகள் எங்கே பிறந்தார்?

4. அவருடைய சிறந்த குணங்கள் யாவை?

2. எதிர்ப் பதங்கள் எழுது:

இயலாது ×
இழந்தது ×
கஷ்டம் ×
பிறந்தார் ×
வந்தார் ×

3. எது எதற்குப் பொருந்தும்?

நாம் முன்பு	இங்கிலாந்து சென்று படித்தார்.
காந்தியடிகள்	காந்தியடிகள் போராடினர்.
காந்தியடிகள்	குஜராத்தில் பிறந்தார்.
ஆப்ரிக்க இந்தியருக்காக	ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தோம்.

24. நாட்டுப் பாட்டு

உலக மெலாம் போற்று புகழ்
ஒளிபெருகும் நாடு!
உமை கேள்வன் அளித்த தமிழ்
ஓங்கிவளர் நாடு! 1.

கன்னி முதல் இமயம் வரைக்
கண்ட தமிழ் நாடு!
காசினியோர் போற்றுகின்ற
கலைகள் வளர்நாடு! 2.

முடி மன்னர் மூவ ரவர்
மொய்ம்பு வளர் நாடு!
முச் சங்கம் நிறுவி தமிழ்
மொழி வளர்த்த நாடு! 3.

கம்பன் கும்பன் காளமேகம்
களித்த தமிழ் நாடு!
கணக்கில் பல நூல் பயின்ற
கன்னித் தமிழ் நாடு! 4.

வள்ளுவனைப் பெற்ற பெரு
மகிமை கொள்ளும் நாடு!
தெள்ளுதமிழ்ப் புலவரெலாம்
திகழ்ந்த பெரு நாடு! 5.

இத்திருநல் நாடுதனை
என்றும் போற்று வோமே
ஈசனருள் நிறைந்திடவே
என்று வாழ்த்துவோமே.! 6.

—'கௌணியன்'

அரும்பதவுரை

1. உலகம்—உலகிலுள்ள மக்கள், ஒளி—கீர்த்தி, உமை கேள்வன்—பார்வதியின் கணவனுன பரமசிவன்.

2. கன்னி—கன்னியாகுமரி முனை, காசினியோர்—பூமியிலுள்ள மக்கள், கலைகள்—சாத்திரங்கள்.

3. முடி மன்னர் மூவர்—சேரர் சோழர் பாண்டியர், முச்சங்கம்—முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று தமிழ்ச் சங்கங்கள்.

4. கும்பன் — அகத்தியன் - காளமேகம் - ஒரு புலவர், களித்த — மகிழ்ந்த, அம்புவியோர் — அழகிய பூமியிலுள்ள மக்கள்.

5. வள்ளுவன் – திருவள்ளுவர், மகிமை – பெருமை, தெள்ளு–தெளிவு, திகழ்ந்த – விளங்கிய.

6. ஈசன்–கடவுள்.

புவர். அங்கு இயந்திரத்தின் உதவியால் அதிலிருந்து சாறு பிழிந்து, சர்க்கரை செய்யப்படுகிறது.

6. கரும்பு நமது நாட்டின் பல பாகங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. வட இந்தியாவில் மிகப் பெரிய சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. தென் இந்தியாவிலும் சில இடங்களில் சர்க்கரை ஆலைகள் உண்டு. ஆலைகள் இல்லாத இடத்தில் விளையும் கரும்பை நாட்டு இயந்திரத்தில் கொடுத்துச் சாறு பிழிவார்கள். அதைக் காய்ச்சி வெல்லமும், நாட்டுச் சர்க்கரையும் செய்வார்கள்.

அரும்பதங்கள்

அணி	ஓங்கி	நன்செய்	புன்செய்
சுக்கான் தரை	கலப்பை	பறம்பு	நாற்றங்கால்
தாள்	வேல்	தேங்குவது	கணு
இயந்திரம்	ஆலைகள்	பதியும்	நாற்று

பயிற்சி

1 விடை எழுது:

அ. நன்செய் என்பது யாது?

ஆ. புன்செய் என்பது யாது?

இ. நெல் எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது?

ஈ. கரும்பு எப்படிப் பயிர் செய்யப்படுகிறது?

2. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

அணி – அழகு – முறை – களை – பிரி – கணு – கட்டு – சர்க்கரை ஆலை – சாறு – காய்ச்சி – வெல்லம்.

26. ஔவையார்

1. தமிழ் நாட்டில் ஔவையார் பெயரை அறியாதவர் இலர். சிறு குழந்தைக்கும் ஔவையார் பெயர் தெரியும். ஔவையார் பெண்பாற் புலவர். புலவர் என்ற சொல்லுக்கு 'நிறைந்த கல்வி உடையவர்' என்பது பொருள். ஔவையார் அழகிய இனிய கவிகளை இயற்றியுள்ளார். அவர் எல்லாரிடத்திலும் மிகுந்த அன்புடன் பழகினார்.

2. முற்காலத்தில் தமிழ் நாட்டை முடி மன்னர் மூவர் ஆண்டு வந்தனர். அவர் சேரர், சோழர், பாண்டியர் என்று கூறப்படுவர். அவர்களைத் தவிர, தமிழ் நாட்டில் சிற்றரசர் பலர் இருந்தனர். அவர் குறுநில மன்னர் எனப்படுவர். ஔவையாருக்கு முடிமன்னர் மூவரும் மரியாதை செலுத்தினர். குறுநில மன்னர்களும் ஔவையாரிடம் அன்பும், மதிப்பும் உடையவர்களாய் இருந்தார்கள்.

3. ஔவையார் சிறந்த தமிழ் அறிவு படைத்தவர். அவர் தெய்வ பத்தி உடையவராயும், சாந்த குணம் உடையவராயும் விளங்கினார். ஔவையாரைப் பற்றிப் பல கதைகள் உள்ளன.

4. சேலம் மாவட்டத்தில் தருமபுரி என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அதனை முற்காலத்தில் **தகடூர்** என்று அழைத்தனர். அவ்வூரில் **அதிகமான்** என்ற சிற்றரசர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த கொடையாளி. அவருக்கு ஔவையாரிடம் அளவில்லாத அன்பு உண்டு. ஒரு நாள் அவர் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றார். அங்கு அவருக்கு ஒரு கரு நெல்லிப் பழம் கிடைத்தது. அதனைத் தின்றால் நீண்ட காலம் உயிர் வாழலாம் என்பது அதிகமானுக்குத் தெரியும்.

5. அதிகமான் அதனைத் தின்ன விரும்பவில்லை. அதனை அவர் ஔவையாருக்குக் கொடுத்தார். அதை ஔவையார் தின்றார்; அதன் சிறப்பினை அதிகமான் கூறக் கேட்டார்; அதிகமான் தன்னிடம் வைத்திருந்த அன்பின் சிறப்பை உணர்ந்தார். அவரை மனமார வாழ்த்தினார். ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்தார். அவர் தமிழ் நாட்டிற்குப் பல அரிய நூல்களை எழுதி உதவினார். நீண்ட காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் பெண்கள் கல்வி கற்று மிக்க அறிவுடையவராய் விளங்கினர் என்பதற்கு ஔவையாரின் வரலாறு ஓர் உதாரணமாகும்.

அரும்பதங்கள்

இயற்றியுள்ளார்	*முடிமன்னர்*	*தெய்வ பத்தி*
குறுநிலமன்னர்	*சாந்த குணம்*	*சிற்றரசர்*
கொடையாளி	*புலவர்*	*இனிய*
உணர்ந்தார்	*அன்பு*	*கவி*

பயிற்சி

1. விடை எழுது :

   1. ஔவையார் என்பவர் யார்?
   2. அதிகமான் என்பவர் யார்?
   3. அதிகமான் ஔவையாருக்குச் செய்த நன்மை யாது?
   4. ஔவையார் தமிழ் நாட்டுக்குச் செய்தது என்ன?

2. எதிர்ப் பதங்கள் எழுது :

   அறியாதவர் ×
   இலர் ×
   நிறைந்த ×
   பலர் ×

3. பொருத்தி எழுது :

ஔவையார்	ஒரு கருநெல்லிக்கனி கிடைத்தது.
தகடூரை	கனியை ஔவையாருக்குக்கொடுத்தார்.
அதிகமானுக்கு	பல நூல்கள் இயற்றினர்.
அதிகமான்	அதிகமான் ஆண்டுவந்தார்.
ஔவையார்	பெண்பாற் புலவர்.



27. காகமும் குடமும்

(கதைப்படம்)

குறிப்புக்களைப் படித்துக் கதையைச் சொல் :

1. காகத்தின் தாகம்.
2. சாடியில் சிறிது நீர்.
3. சாடியில் கற்களைப் போடுகிறது.
4. நீர் குடிக்கிறது.

28. கடிதம் எழுதுதல்

1. நம்முடைய நண்பர்களும் சுற்றத்தாரும் நம் எதிரில் இருந்தால் நம் எண்ணங்களை அவர்களுக்கு நேரில் தெரிவிக்கிறோம். அவர்கள் வேறு ஊர்களில் இருந்தால் நாம் நம்முடைய எண்ணங்களை அவர்களுக்-குக் கடிதத்தின் மூலமாகத் தெரிவிக்கின்றோம். நாம் கடிதம் எழுதும் பொழுது கவனிக்க வேண்டிய விதிகள் சில உள்ளன.

2. கடிதம் எழுதும்பொழுது, கடிதத்தின் இடப் புறத் தலைப்பில் நம் வீட்டு எண், தெருவின் பெயர், ஊரின் பெயர், தேதி என்பவற்றைக் குறிக்கவேண்டும். பிறகு கடிதத்தின் வலப்புறத்தில் யாருக்கு எழுது-கிறோமோ அவர்களுக்குப் பொருந்திய மரியாதை வாசகத்தை எழுத வேண்டும். பிறகு கடிதத்தைத் தொடங்கும் பொழுது, நம் நலத்தை எழுத வேண்டும். பிறகு அவர்கள் நலத்தை அறிய விரும்பும் நம் ஆவலைத் தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு நாம் எழுத விரும்பும் செய்திகளைத் தெளிவாகவும், விளக்க-மாகவும், சுருக்கமாகவும் எழுதவேண்டும். கடிதம் எழு-திய பின், மரியாதை வசனம் எழுதிக் கையெழுத்து இடவேண்டும். யாருக்கு எழுதுகிறோமோ அவர்க-ளுடைய விலாசத்தையும் தெளிவாக எழுத வேண்டும். இதுவே கடிதம் எழுதும் முறை. மாதிரிக் கடிதம் ஒன்று அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அதைப் படிப் போம்.

மாதிரிக் கடிதம்

176, பெருமாள் கோவில் தெரு,
காஞ்சீபுரம்,
26—8—54.

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

வணக்கம். இங்கு எல்லாரும் நலம். அங்குள்ளவர் நலத்தை அறிய விரும்புகிறேன். எனக்கு அடுத்த மாதம் இருபதாம் தேதி காலாண்டுப் பரீட்சை ஆரம்பமாகி, 24-9-54-ல் முடிகிறது. அது முடிந்ததும் நான் உங்களைக் காண வரலாம் என்று எண்ணி இருக்கிறேன்.

என்னை இந்தத் தடவை திருக்குற்ருலத்திற்கு அழைத்துச் சென்று காட்டவேண்டும். எங்கள் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் திருக்குற்ருலத்தைப் பற்றிப் படித்தேன். அது முதல் அதைக் காணவேண்டும் என்னும் ஆசை ஏற்பட்டுள்ளது. ஆதலால், விடுமுறை விட்டதும் நான் அங்கு வருகிறேன். என் வருகையைக் கந்தப்பனுக்குத் தெரிவிக்கவும். என் வணக்கத்தை மாமிக்குச் சொல்லவும்.

இப்படிக்கு,
வணக்கமும் அன்புமுள்ள,
கா. சி. வேலன்.

விலாசம் :

திரு. தெ. பொ. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள், B. A.,
76, சின்னசாமிப் பிள்ளை தெரு,
திருநெல்வேலி.

பயிற்சி

கீழே குறித்துள்ளபடி கடிதங்கள் எழுது :

1. வெளியூரில் உள்ள உன் பாட்டனுருக்கு உனது பள்ளியைப் பற்றி விவரமாக ஒரு கடிதம்.

2. உன் நண்பன் ஒருவனுக்கு நீ பார்த்த ஓர் ஊரைப் பற்றி விவரமாக ஒரு கடிதம்.

29. மௌன வாசிப்பு—3

கீழே உள்ள கதையை மனத்துக்குள் படித்து விஞக்களுக்கு விடை எழுது :

1. கிருஷ்ணதேவ ராயர் சிறந்த அரசர். அவர் நன்ருய்ப் படித்தவர். அவர் விஜயநகர இராச்சியத்தை ஆண்டுவந்தார். அவர் சபையில் ஒரு விகடன் இருந்தான். விகடன் என்பவன் வேடிக்கையாகப் பேசி யாவரையும் மகிழ வைப்பவன். அந்த விகடன் பெயர் **தெஞலிராமன்**.

2. ஒரு சமயம் கிருஷ்ணதேவ ராயரின் தாயார் கொடிய நோயால் வருந்திஞர். எத்தனையோ வைத்தியம் செய்தும் பயனில்லாமல் போயிற்று. அந்த அம்மையார் இறக்கும் சமயத்தில் மாம்பழம் தின்ன ஆசைப் பட்டார். அக்காலம் மாம்பழம் கிடைக்கக்கூடிய காலம் அல்ல. ஆயினும் அரசர் மாம்பழம் வாங்கிவர ஆட்களைப் பல இடங்களுக்கு அனுப்பிஞர். மாம்பழம் வரக் கால தாமதம் ஆயிற்று. அதற்குள் அந்த அம்மையார் இறந்துவிட்டார். அரசர் தாயாரின் உயிரைத் திருப்திசெய்ய விரும்பிஞர். இறந்தவர்க்குப் பதிஞரும் நாள் வந்தது. அரசர் அன்று பிராமணர்களுக்கு அன்னம் அளித்தார்; தாயார் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய அப்பார்ப்பனர்க்குப் பொன்ஞல் செய்த மாம்பழங்களையும் அளித்தார்.

3. சிலநாட் கழித்துத் தெஞலிராமன் தாயாருக்கு நோய் கண்டது. வைத்தியர்கள் மருந்து கொடுத்தும் நோய் குணப்படவில்லை. சூடு போட்டால் குணமாகலாம் என்று வைத்தியர் ஒருவர் கூறினர். அதன்படி இரும்புக் கம்பியை நெருப்பிலிட்டுக் காய்ச்-

சினர். ஆனால் அக்கம்பியை எடுத்து வந்து சூடு போடுவதற்கு முன், அந்த அம்மையார் இறந்துவிட்டார். அந்த அம்மையார் இறந்த பதினாறும் நாள், தெனாலிராமன் அந்தணர்களை அழைத்து அன்னமிட்டான்; பின் அந்தணர்களை ஓர் அறையில் அடைத்தான். இரும்புக் கம்பியை நெருப்பில் காய்ச்சி ஒவ்வொருவருக்கும் ஒரு சூடு வைத்தான். அவர்கள் 'குய்யோ-முறையோ' என்று கூவிக்கொண்டு அரசரிடம் சென்று முறையிட்டார்கள்.

4. கிருஷ்ணதேவ ராயர் தெனாலிராமனை வரவழைத்துக் கேட்டார். அதற்குத் தெனாலிராமன் சிறிதும் அஞ்சாமல், "அரசே, தங்கள் தாயார் இறக்கும் பொழுது மாம்பழத்தை விரும்பிக் கேட்டதால், நீங்கள் பிராமணர்களுக்குத் தங்க மாம்பழம் கொடுத்தீர்கள். என் தாயாரின் நோய் நீங்கச் சூடு போடுவதற்கு முன் அவர் இறந்துவிட்டார். அவர் ஆத்மா திருப்தி அடைய நான் சூடு போட்டேன்," என்றான்.

அதுகேட்ட அரசர் சினப்பதா ? சிரிப்பதா ? அரசர் அந்தணர்களுக்கு வேண்டுவன கொடுத்து அவர்களைச் சமாதானப் படுத்தி அனுப்பினார்.

வினாக்கள்

1. கிருஷ்ணதேவ ராயர் யார்?
2. அவர் சபையில் இருந்த விகடன் பெயர் என்ன?
3. அரசர் யாருக்குப் பொன் மாம்பழங்கள் கொடுத்தார்? ஏன் கொடுத்தார்?
4. தெனாலிராமன் யாருக்குச் சூடு வைத்தான்? ஏன் வைத்தான்?



30. தந்திரத்தால் தாகம் தீர்ந்தது

(கதைப் படம்)

படத்தைப் பார்த்துக் கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக :—

1. தென்னை—நிறைந்த தோப்பு ஒன்று இருந்தது.
2. அத்தோப்பில் பல—வசித்தன.
3. தென்னை மரங்களில்— —இளநீர்க் காய்கள் காணப்பட்டன.
4. வழிப்போக்கன் ஒருவன் அத்— வந்தான்.
5. அவன்——மூட்டையும், கையில்——யும் இருந்தன.
6. வெயில் மிகவும்—இருந்தது.
7. வழிப்போக்கன் தாகத்தினால்——.
8. அவன் —ப் பொறுக்கிக்—மீது விட்டெறிந் தான்.
9. குரங்குகள் பதிலுக்கு—ப் பறித்து எறிந்தன.
10. வழிப்போக்கன்—குடித்துக்—நீங்கினான்.



31. கடலில் காணும் பொருள்கள்

(உரையாடல்)

கந்தன் :—சுந்தரம், இன்று கடற்கரைக்குப் போகலாமா? இதுவரை நீ கடலைப் பார்த்ததில்லை அல்லவா? கோயமுத்தூர் ஜில்லாவில் நீ எப்படிக் கடலைக்காண முடியும்?

சுந்தரம் :—கந்தா, இதோ வந்துவிட்டேன். இன்று எனக்குக் கடலைக் காட்டுகிறாயா? நான் கடலைப் பற்றிப் புத்தகத்தில் படித்தேனே அல்லாமல் நேரில் பார்த்ததே இல்லை.

(கந்தனும் சுந்தரமும் கடற்கரையில் நிற்கிறார்கள்.)

சுந்தரம் :—எவ்வளவு பரந்தது! என்ன அழகு! 'ஜில்' என்று காற்று வீசுகிறது. 'ஓ' என்று கடல் இரைகிறது. அலைகள் ஒன்றன்மேல் ஒன்றாய் 'நான் முந்தி' 'நீ முந்தி' என்று போட்டியிடுவது போல மோதுகின்றன. அலையடிப்பதால் கடல் நீர் கரை

யில் ஏறி ஏறி இறங்குகிறது. அதோ பார், அலைகள் மோதும்பொழுது நுரைகள் வெண் பறவைகள் போலக் காணப்படுகின்றன. ஆகாயமும் நீரும் தொடுவன போல் காணும் அடிவானம் காண்பதற்கு வெகு அழகாய் இருக்கிறது. சூரியனது மஞ்சள் ஒளியில் கடல் நீர், 'தகதக' என மின்னுகிறது. அதோ செல்வது கப்பல்தானே ?

கந்தன்:—சுந்தரம், கடலைப்பற்றி வெகு அழகாகப் பேசினாய். அதோ பார், மேற்கே சூரியன் மறைந்தான்; கிழக்கே பூரண சந்திரன் பொன் தட்டைப் போலத் தோன்றுகிறான். இது எவ்வளவு இன்பம் தருகிறது. வா, மணலில் உட்கார்ந்து சிறிது நேரம் பேசிக்கொண்டிருப்போம்.

(இருவரும் சென்று மணலின்மேல் உட்காருகிறார்கள்.)

சுந்தரம் :—கந்தா, கடலால் ஏற்படும் பயன் என்ன ? கடலினுள் இருப்பன யாவை ? இவற்றைப்பற்றி எனக்கு விளக்கமாகச் சொல்.

கந்தன் :—சுந்தரம்! சொல்கிறேன், கேள். நாம் வசிக்கும் உலகம் உருண்டை வடிவமானது. உலகத்தின் பரப்பில் இரண்டு பங்கு நீரும், கால் பங்கு பூமியும் உள்ளன. மிகப் பரந்ததாகவும், ஆழமாகவும் இருக்கும் நீர்ப் பரப்புக்குச் சமுத்திரம் என்பது பெயர். அதனைப் பெருங்கடல் எனவும் கூறுவர். பரப்பிற் சிறியதும், ஆழம் குறைந்ததுமான நீர்ப் பரப்புக் கடல் என்று கூறப்படும். கடல் நீர் உப்புக்கரிக்கும். அந்நீரிலிருந்து உப்பு விளைவிக்கிறார்கள். கடல் நீர் இல்லையானால் உலகில் மழை இராது. கடல் நீர் சூரியன் வெப்பத்தால் ஆவியாக மாறி, மேகமாகத் திரண்டு, மழையாகப் பொழிகிறது.

கடற்காற்று உடம்பிற்கு நல்லது. கடலிற் பல வகைப்பட்ட மீன்கள் வாழ்கின்றன. அவை நிறத்தாலும் வடிவாலும் வேறுபடுகின்றன. மீன்களுள் மிகச் சிறியவையும் மிகப் பெரியவையும் உண்டு. ஆழமான கடலிற் காணப்படும் திமிங்கிலம் என்பதும் மீன் இனத்தைச் சேர்ந்ததே. அது மிகப்பெரியது. அது ஒரு கப்பலையும் கவிழ்த்துவிடும். சுறு என்னும் ஒரு வகை மீன் ஓர் ஆளையே விழுங்கிவிடும்.

கடலில் வேறு பல உயிர்ப்பிராணிகள் உள்ளன. சோழி, சங்கு முதலியவற்றைப் பார்த்திருக்கிறுய் அல்லவா? அவை கடல் நீருள் வாழும் பிராணிகளின் மேல்ஓடுகளே. சிப்பி, கிளிஞ்சல் என்பனவும் அத்தகையனவே. சிறியனவும் பெரியனவுமாக எத்தனை வகைச் சோழிகளும், சங்குகளும் உள்ளன! அவை கணக்கில் அடங்கா. முத்து உண்டாகும் சிப்பிகளையுடைய பூச்சிகள் கடலில்தான் வாழ்கின்றன. மக்கள் நீருள் மூழ்கித் தரைவரையிலும் சென்று அவற்றைத் திரட்டி எடுக்கிறுர்கள். பவழமும் நீரில் வாழும் பிராணியின் உடலில் தோன்றுவதே. முத்தும், பவழமும் நவரத்தின வகையைச் சேர்ந்தன.

கடலுள் பெருமலைகளும் பாறைகளும் உண்டு. உலகின்மேல் பல அழகிய பொருள்கள் இருப்பது போலவே கடலுள்ளும் அளவற்ற அழகிய பொருள்கள் உள்ளன. சுந்தரம், நேரமாயிற்று; வா, வீட்டுக்குப் போகலாம்.

அரும்பதங்கள்

இரைகிறது	*அலைகள்*	*மோதும்*
கதிரவன்	*இயற்கை*	*காட்சி*
பயன்	*விளக்கமாக*	*இளமை*
சங்கு	*சிப்பி*	*முத்து*

பயிற்சி

1. விடை எழுது :

அ. கடற்கரையில் நின்ருல் காண்பன எவை?

ஆ. கடற்கரையில் நிற்கும் போது சந்திரன் எழுவது எப்படித் தோன்றும்?

இ. கடலில் உள்ள மீன்களைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.

ஈ. திமிங்கிலம், சுரு என்பவை பற்றி நீ அறிவது என்ன?

உ. கடலினுள் காணப்படுவன எவை?

ஊ. உலகில் நிலம் எத்தனை பங்கு? நீர் எத்தனை பங்கு?

எ. கடலுள் கிடைக்கும் இரண்டு நவரத்தினங்கள் யாவை?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

கடற்கரை, சிற்றூர், எளிதான, சொற்பொழிவு-

8. எதிர்ப்பதங்கள் எழுது :

ஏறி ×

இன்பம் ×

கிழக்கு ×

இயற்கை ×

முந்தி ×

32. செய்யுட் பாடங்கள்

1. ஆத்திசூடி

1. ஞயம் பட உரை.
2. இணக்கம் அறிந்து இணங்கு.
3. நன்றி மறவேல்.
4. இலவம் பஞ்சில் துயில்.
5. வஞ்சகம் பேசேல்.
6. அழகு அலாதன செயேல்.
7. இளமையில் கல்.
8. அறனை மறவேல்.
9. அனந்தல் ஆடேல்.

அரும்பத உரை : ஞயம் - இனிமை, இணக்கம் - தகுதி உள்ளவர், இணங்கு - சேர், நன்றி - உபகாரம், இலவம் பஞ்சு - இலவம் பஞ்சால் ஆகிய மெத்தை, வஞ்சகம்–மனத்தில் ஒன்றும் சொல்லில் ஒன்றுமாக இருத்தல், அறன் - தருமம். அனந்தல் - தூக்கம்.

---

2. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
6. ஐயம் புகினும் செய்வன செய்.
7. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
8. கிட்டா தாயின் வெட்டன மற.
9. கீழோர் ஆயினும் தாழ உரை.

10. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
11. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
12. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
13. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
14. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
15. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
16. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
17. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
18. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
19. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.

அரும்பத உரை: சாலவும் - மிகவும், ஈயார் - கொடாதவர், தேட்டை - செல்வம், வேருடன் - அடியோடு, எண் - கணிதம், எழுத்து - இலக்கண இலக்கியம், ஐயம் - பிச்சை, ஒளவியம் - கோள் சொல்லுதல், பொறாமையால் கூறும் சொல். கிட்டாதாயின் - கிடைக்காததானால், தாழ - பணிவாக, கைப்பொருள் - செல்வம், மெய்ப்பொருள் - உண்மையான (அழியாத) பொருள், சீர் - பெருமை, தேம்பி - வருந்தி, திரை - அலை, திரவியம் - செல்வம், தேடாது - சம்பாதிக்காமல், பாடாய் - துன்பமாய், ஊண் - உணவு, நல்லிணக்கம் - நல்ல சிநேகம், அல்லல் - துன்பம், கேடு - அழிவு.

---

3. வெற்றி வேற்கை

1. எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்.
3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்.
5. உழவர்க்கு அழகு ஏர் உழுதூண் விரும்பல்.
6. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
7. அறிவோர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.
8. வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை.

9. கற்கை நன்றே, கற்கை நன்றே,
பிச்சை புகினும் கற்கை நன்றே.

10. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.

11. எக்குடிப் பிறப்பினும், யாவரே ஆயினும்,
அக்குடியில் கற்றோரை 'வருக' என்பர்.

12. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

13. குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்,
நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்.

14. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.

15. குன்று அத்தனை இருநிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

16. வித்தும் ஏரும் உளவாய் இருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

17. தன்ஆ யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கைக் கொடுக்கும் பேதையும் பதரே.

அரும்பத உரை : எழுத்து - இலக்கண இலக்கியம், இறைவன் - கடவுள், செழுங்கிளை - நிறைந்த சுற்றம், ஈட்டல் - சம்பாதித்தல், வறுமை - தரித்திரம். செம்மை - ஒழுக்கம் தவறுதிருத்தல், கற்கை - படித்தல், புகினும் - எடுத்தாலும், கல்லா - படியாத, குலநலம் - குலத்தின் பெருமை, பதர் - அரிசி இல்லாத நெல், குஞ்சரம் - யானை, ஊர்ந்தோர் - நடத்தியவர், நடைமெலிந்து - நடந்து செல்வதால் வருந்தி, நண்ணுவர் - அடைவர், அறக்கூழ்ச் சாலை - தருமத்திற்குக் கஞ்சி ஊற்றும் சத்திரம், இருநிதி - மிக்க செல்வம், எய்த்து - களைத்து, ஏழை - அறிவில்லாதவன், பேதை அறிவில்லாதவன்.

பொன் மொழி வாசகம்

(நான்காம் புத்தகம்)

ஆசிரியர்கள் :

புலவர் பு. செல்வராசனுர்,
தலைமைத் தமிழாசிரியர்,
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

ஆபிரகாம் அருளப்பன், B. A.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அர்ச். சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிப்பாசிரியர் :

சு. சே. உமாபதி, M. A., L. T.. (Dip. in. Geog.)
தலைமையாசிரியர்
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீ வைகுண்டம்

திப்புரிமை] *1954* [விலை அணு 10

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

'பொன் மொழி வாசகம்' என்னும் பெயரோடு வெளி போதரும் தமிழ் வாசக வரிசையில் இது நான்காம் புத்த மாகும். இது 1941-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதன் கண் 700 புதிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. மொழி போதனையில் முக்கியமாகக் கருதப்படுவது மொழி பயிற்சியேயாகும். இப்பயிற்சிக்குப் போதிய வாய்ப்பளிக் கும் முறையில் இதன்கண் பல்வேறு வகையான ஓவியங் கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அவற்றைப் பயன் படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழியறிவு ஆக்கமுறும் வகையில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இப் பயிற்சிகள் அனைத்தையும் குழந்தைகள் செய்யுமாறு தூண்ட வேண்டுவது ஆசிரியர் கடமையாகும். அன்றியும் வகுப்புக்கு ஏற்றவையாகச் சில இலக்கண பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கு இன்பமூட்டத்தக்க இனிய எளிய பாடல்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப் பாட்டுக்களைக் குழந்தைகள் மனப்பாடம் செய்வது நல மாகும். இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ள பாடங்கள் சிறு வர் சிறுமியரின் தமிழறிவையும், பொது அறிவையும் வளரச்செய்யும் என்பது உறுதி. அறிஞர்கள் தமிழ்ச்சிறுவர் சிறுமியர்க்கு இந்நூல் பயனளிக்குமாறு செய்வார்கள் என முற்றிலும் நம்புகின்றோம்.

சென்னை
7-11-54.

ஆசிரியர்கள்.

பொருளடக்கம்

எண்	பாடம்		பக்கம்
1.	தாய்நாடு (பாட்டு)	...	1
2.	தமிழும் தமிழகமும்	...	2
3.	புலவர் வறுமை	...	6
4.	அப்பம் திருடிய எலி (பாட்டு)	...	11
5.	மௌன வாசிப்பு—I	...	13
6.	இளைஞர் சங்கம்	...	15
7.	உலோகங்கள்	...	20
8.	தென்னையும் பனையும்	...	24
9.	பனைமரம் (பாட்டு)	...	28
10.	தெனாலிராமர் செய்த வேடிக்கை	...	30
11.	நூல் நிலையம்	...	33
12.	நவராத்திரி	...	37
13.	ஒட்டகம்	...	40
14.	பாலைவனத்து மக்கள்	...	44
15.	திருக்குற்றாலம்	...	48
16.	ஆறு	...	52
17.	மௌன வாசிப்பு—II	...	54
18.	மான வீரன் [நாடகம்]	...	56
19.	நீரைக் கடத்தல்	...	65
20.	முரசுப் பாட்டு	...	70
21.	மாமல்லபுரம்	...	72
22.	கடிதத்தின் பிரயாணம்	...	76
23.	மனிதருள் மாணிக்கம்	...	79
24.	மௌன வாசிப்பு—III	...	83
25.	பறவைகள்	...	85
26.	தாமஸ் ஆல்வா எடிஸன்	...	89
27.	நாட்டுப் பொது வாழ்த்து	...	93
	செய்யுட் பாடங்கள்		
1.	கடவுள் வணக்கம்	...	94
2.	மூதுரை	...	94
3.	நல்வழி	...	96
4.	குறத்தி பாட்டு	...	99
5.	விவேகசிந்தாமணி	...	99

1. தாய்நாடு

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி
இருந்ததும் இந்நாடே !—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே !—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே !—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ ? (1)

–பாரதியார்

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க !
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க !
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க !
கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க !
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க !
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க !
இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க ! (2)

–நாமக்கல் கவிஞர்

அரும்பத உரை

(1) எந்தை-எமது தந்தை, குலவி-நட்புற்று, முந்தையர் - மூதாதையர், சிந்தை - மனம், வந்தனை - வணக்கம், இருத்தி-வைத்து, வாயுற-வாயார.

(2) படையாமல்-கொடுக்காமல், வள்ளல்-அளவின்றிக் கொடுப்பவன், இல்லாமை - வறுமை, இரவாமை - பிச்சை எடாமை.

2. தமிழும் தமிழகமும்

1. உலகில் வாழும் மாந்தர் பல மொழிகளைப் பேசுகின்றனர். நாம் வசிக்கும் இந்தியாவிலும் பல மொழிகள் வழங்குகின்றன. தென்னிந்தியாவில் முக்கியமாக வழங்கும் மொழிகள் ஐந்து. அவை **தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு** என்பனவாகும். இவற்றுள் துளு என்னும் மொழிக்கு எழுத்துக்கள் இல்லை. அம்மொழி பேச்சு வழக்கில் மட்டும் உள்ளது. மற்ற நான்கிற்கும் எழுத்துக்களும், இலக்கண இலக்கிய நூல்களும் உள்ளன.

2. தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற மொழிகள் ஆதியிலிருந்தது போல இக்காலத்தில் இல்லை. அக்காலத்தில் அம்மொழிகளில் தமிழ்ச்சொற்களே மிகப் பலவாக இருந்தன. இக்காலத்தில் அவை சம்ஸ்கிருத மொழியைப் பின்பற்றி இலக்கண இலக்கியங்களைப் பெருக்கிக்கொண்டன. ஆதலால், இக்காலத்தில் அவற்றில் தமிழ்ச் சொற்கள் சிலவே வழங்குகின்றன. ஆயினும், அவை தமிழ் மொழியின் வழி வந்தவை என்பது நன்கு புலனாகும்.

3. தமிழ் மொழி வழங்கும் நாடு **தமிழ்நாடு** என்பர். இதனைத் **தமிழகம்** என்றும் கூறுவர். தமிழகம் ஒரு காலத்தில் இந்தியாவுக்குத் தெற்கே வெகு தூரம் கடலில் பரவியிருந்தது. கன்னியா குமரிக்குத் தெற்கில் இருந்த நிலப்பகுதி கடலில் மூழ்கி விட்டது. எனவே தமிழகம் வடக்கே **வேங்கட மலையையும்,** தெற்கே **கன்னியா குமரி முனையையும்,** கிழக்கிலும், மேற்கிலும் வங்காளக் குடாக்கடலையும், அரபிக் கடலையும் எல்லைகளாகப் பெற்று விளங்கியது.

4. தமிழகத்தில் உயரமான மலைத்தொடர்களும், பேராறுகளும் இருந்து வளம் செய்கின்றன. நாகரிகம் என்பது தமிழகத்திலிருந்து பல நாடுகளுக்குப் பரவிற்றென்று அறிஞர் கூறுவர். தமிழ் மொழி மிகவும் தொன்மை வாய்ந்ததும், பண்பட்டதுமாகும். இன்று



மிகப் பழமையான நூலாக நமக்குக் கிடைத்துள்ளது தொல்காப்பியம் என்னும் நூல். இந்நூல் கிறிஸ்துவிற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூல் என்பர். எனவே தொல்காப்பியம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூல். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகில் மற்றப் பாகங்களில் மக்கள் நாகரிகமற்று விலங்குகளைப்போல வசித்து

வந்தார்கள். அக்காலத்தில் தமிழகத்தில் தமிழ் மக்கள் பழுத்த நாகரிகம் உடையவர்களாய் வாழ்ந்திருந்தனர் என்பது தொல்காப்பியத்தால் நன்கு விளங்குகிறது. ஆகவே தமிழகத்தின் பழமையும், நாகரிகமும் மிக மிகத் தொன்மையானவை.

5. தமிழகம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று முடி வேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது. **சேரநாடு** என்பதைச் **சேரர்**களும், **சோழநாடு** என்பதைச் **சோழர்**களும், **பாண்டிநாடு** என்பதைப் **பாண்டியர்**களும் ஆண்டு வந்தனர். இவர்களேயன்றிக் குறுநில மன்னர் சிலரும் வாழ்ந்தனர். இம்முடி வேந்தர் மூவரும் தமிழ் மொழியை நன்கு வளர்த்தனர். **தமிழ்ச் சங்கத்தை** ஏற்படுத்தித் தமிழ் மொழியைச் செப்பம் செய்து வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கே உரியதாகும். இம்முடி வேந்தருள் சிலர் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தாமும் கவி பாட வல்லவராய் விளங்கினர்.

6. **அகத்தியர்** என்ற முனிவர் தமிழ் மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் வகுத்தார். அவருக்குப் பன்னிரண்டு மாணவர் இருந்தனர். அம்மாணவர் களுள் சிறந்தவர் **தொல்காப்பியர்**. அவர் இயற்றியது **தொல்**காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். பாண்டியர்கள் அமைத்த **முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்** என்னும் மூன்று சங்கங்களிலும் இருந்த புலவர் பலர், பற்பல நூல்கள் இயற்றினர். அவைகளுள் பல அழிந்தன. சில உள்ளன.

7. சங்க நூல்களைப் படித்தால் தமிழ் மக்கள் **கல்**வி, அறிவு, ஒழுக்கம், **தெய்வபத்தி, போர்**, கைத்தொழில், **கலை** என்பவற்றில் மிகச் சிறந்திருந்தனர் என்பது நன்கு விளங்கும். பலவகைக் கைத்தொழில்

களும், கப்பல் வாணிகமும், வேளாண்மைத் தொழிலும் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கின. மிகப் பழமையான தும், பண்டைக் காலம் முதல் நாகரிகத்தில் மிகச் சிறந்து விளங்குவதுமான தமிழகத்தில் நாம் பிறந்திருக்கிறோம். நம் தமிழகத்தை அதன் பெருமை குன்றாமல் காத்து வருதல் நம் கடமையாகும்.

அரும்பதங்கள்:—மாந்தர், மொழிகள், ஆதியில், வழி வந்தவை, தமிழகம், பேராறுகள், நாகரிகம், பண்பட்டது, பழமை, தொன்மை.

பயிற்சி

விடை எழுதுக :

அ. தமிழ் மொழியின் வழி வந்த பிற மொழிகள் எவை?
ஆ. தமிழகத்தின் எல்லைகள் யாவை?
இ. தொல்காப்பியம் என்பது யாது?
ஈ. அதனால் நாம் அறிவது யாது?
உ. மூவேந்தர் யாவர்?
ஊ. அகத்தியர் தமிழுக்குச் செய்த தொண்டு யாது?

2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:

அ. துளு மொழிக்கு——இல்லை. (இலக்கணம், எழுத்து, சொல்)

ஆ. தமிழ் நாட்டின் வடக்கு எல்லை——. (அகத்திய மலை, காவிரியாறு, வேங்கடமலை.)

இ. ———தமிழ் நூல்களுள் மிகவும் பழமையானது. (நன்னூல், திருக்குறள், தொல்காப்பியம்)

ஈ. முடிவேந்தர் மூவரும் ———வளர்த்தனர். (பகையை, தமிழை, படையை)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

பின்பற்றி—புலனாகும்—வளம் செய்து—அறிஞர்—தொன்மை—செப்பம் செய்து—வல்லவர்—கலை

3. புலவர் வறுமை

1. தென்னாட்டில் சிவகங்கைக்கு அருகில், சிற்றூர் ஒன்றில் செந்தமிழ்ப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர். செய்யுள் இயற்றுவதில் மிகத் திறமை வாய்ந்தவர். அவர் மிகப் பெரிய குடும்பத்தைக் காக்கும் பொறுப்பும் உடையவர். ஆனால் அவர் வறுமையால் வாடி வதங்கினார். வறுமையின் காரணமாக அவர், ஒரு நாள் திருடவும் துணிந்துவிட்டார். எங்குச் சென்று திருடுவது என்று யோசித்தார். அருகில் இருந்த சிவகங்கை மன்னர் வீட்டிலேயே திருடுவது எனத்துணிந்தார்.

2. மன்னருடைய பொக்கிஷசாலையில் உள்ள பணத்தைத் திருட அவர் நினைக்கவில்லை. அப்பணம் குடிமக்களால் அவர்கள் நலத்திற்குச் செலவு செய்யும் பொருட்டுக் கொடுக்கப்பட்டவை. ஆகையால் அரசியாரின் அணிகளுள் ஒன்றைத் திருடிக்கொண்டால், அதனால் அரசருக்குப் பெரிய நஷ்டம் உண்டாகாது என்று அவர் கருதினார்.

3. எவ்வாறு அரசியின் அணியைத் திருடுவது? அரசரும் அரசியாரும் அயர்ந்து நித்திரை செய்யும் காலத்தில், அரசியாரின் கழுத்திலிருக்கும் முத்துமாலையைக் கத்தரிப்பது என்று தீர்மானித்தார். அதற்காக அவர் அரசரும், அரசியாரும் உறங்கும் அறையைக் காத்து நிற்கும் காவலன் வீட்டுக்குச் சென்றார். அவனுடைய தந்தையும், தன் தந்தையும் அண்ணன் தம்பிகள் என்றும், தான் நெடுங்காலமாக வேற்று நாட்டில் வசித்துத் திரும்பி வந்ததாகவும் அவனுக்கு நம்பிக்கை உண்டாகும்படி பலமொழிகளைக் கூறினார்; அவனோடு சில நாள் வசித்தார். அவனோடு அரசர் அரண்மனைக்-

குள் சென்று அறிய வேண்டுவனவற்றை அறிந்து கொண்டார்.

4. ஒரு நாள் புலவர் காவலனை நோக்கி, '' தம்பி, நீ தினந்தோறும் கண் விழிக்கின்றாய். நீ சில நாள் ஓய்வு கொள். நான் உனக்குப் பதிலாகச் செல்கின்றேன்.'' என்றார். அவனும் அதற்கு ஒப்புக்கொண்-

டான். அரசர் படுக்கையறையை இரவில் காவல் செய்யும் வாய்ப்புப் புலவருக்கு கிடைத்தது. சில நாட்கள் புலவர் காவல் தொழிலைச் செம்மையாகவே செய்து வந்தார்.

5. ஒருநாள் புலவர், கட்டிலின் கீழே ஒளிந்து கொண்டார். அன்று இரவு அரசரும் அரசியாரும் அறைக்குள் வந்தார்கள். அரசியார் கட்டிலில் அமர்ந்தார். கட்டிலுக்கு எதிரில் ஒரு சாளரம் இருந்தது. அந்தச் சாளரத்தின் வழியாகப் பார்த்தால், திருப்புவன நாதர் கோயில் கோபுரம் நன்கு தெரியும். அரசர் தமிழை நன்கு கற்றவர்; செய்யுள் இயற்றும் திறம் படைத்தவர். ஆதலால், அவர் தினந்தோறும் ஜன்ன-

லின் அருகே நின்று கோபுரதரிசனம் செய்வார் ; அப்-போது ஒரு பாட்டைப் பாடுவார் ; அதன் பிறகுதான் உறங்குவார். அன்றும் அவர் வழக்கம் போல ஜன்னலின் அருகே சென்று கை கூப்பித் தொழுது நின்று,

> *" தலையில் இரந்துண்பான் தன்னுடலிற் பாதி*
> *மலைமகளுக் கீந்து மகிழ்வான்–உலையில் "*

என்றார். அதற்கு மேல் அரசர்க்குச் சொல் வரவில்லை. அரசர், 'உலையில், உலையில்,' என்று பன்னி பன்னிச் சொல்லிக் கொண்டே நின்றார். நேரம் கழிந்துகொண்டிருந்தது.

6. கட்டிலின் கீழ் ஒளிந்துகொண்டிருந்த புலவர் மனம் புழுங்கியது. பொழுது கழிவதை அவர் உணர்ந்தார். பாட்டு முடியாவிடில் அரசர் தூங்கமாட்டார் என்பதும் புலவருக்குத் தெரிந்தது. பொழுது விடிந்தால் தம் செயல் விளங்கிவிடும். அதனால் ஆபத்து உண்டாகுமே என்றும் அவர் பயந்தார். சொல்லை எடுத்துக் கொடுத்துப் பாட்டை முடித்துக்கொடுத்தால், அரசர் தூங்கினாலும் தூங்கலாம் என்று எண்ணினார். ஆனால் அவ்வாறு செய்தால் " **நுணலும் தன் வாயால் கெடும்** " என்பது போலல்லவா முடியும் என்று கருதினார். புலவர்க்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. திருடனைத் தேள் கொட்டினாற்போலத் தவித்தார். விடிந்தால் எப்படியும் தாம் கண்டுபிடிக்கப் படுவது உறுதி. ஆதலால் அடியெடுத்துக் கொடுத்தால் 'அசரீரி' என்று நினைத்து அரசர் தூங்கினாலும் தூங்கலாம் என்று எண்ணினார். எனவே புலவர் துணிந்து அரசர் 'உலையில் உலையில்' என்ற பொழுது " இருப்புவன மேனியர் என்றாலோ " என்றார். உடனே அரசர் " ஆமாம் திருப்புவன நாதர் திறம்," என்று பாட்டை முடித்தார்.

" தலையில் இரந்துண்பான் தன்னுடலிற் பாதி
மலைமகளுக் கீந்து மகிழ்வான்;—உலையில்
இருப்புவன மேனியான் என்றலோ ஆமாம்
திருப்புவன நாதர் திறம்"

என்று அரசர் மீண்டும் ஒரு முறை கூறி மகிழ்ந்தார்.

[பொழிப்புரை :—பிரம கபாலத்தில் பிச்சை எடுத்து உண்பவன், தன் உடம்பில் பாதியைப் பார்வதிக்குக் கொடுத்து மகிழ்பவன், கொல்லனது உலைக்களத்தில் காய்ச்சின இரும்பைப்போன்ற நிறத்தை உடைய உடலையுடையவன் என்று கூறினலோ திருப்புவன நாதர் தன்மை அதுவேயாகும்.]

பின்னர் அரசர் 'தடைப்பட்ட அடி எவரால் கூறப்பட்டது? எங்கிருந்து வந்தது?' என்று நிதானித்துப் பார்த்தார். தரையினின்றும் ஒலி எழுந்தது போல்

தோன்றியதாக உணர்ந்து, கட்டிலின் சுற்றுத்துணியை நீக்கிப் பார்த்தார். புலவரைத் தம் இரு கைகளாலும் பிடித்து இழுத்தார். அரசி 'திடும்'என எழுந்து நின்ருள். புலவர் உடல் நடுங்கிற்று. அவர் குவித்த கையுடன் நடுங்கி நின்ருர். அரசர் அவரைக் கட்டிலில் அமர்த்தி 'அஞ்சவேண்டா' என்று கூறிய பின்னரே புலவர் தம்

நிலை உணர்ந்தார். பின்பு அரசர், புலவர் வரலாற்றை விசாரித்தார். அரசர் புலவருடைய வறுமை நிலையையும், அவர் கொண்ட துணிவையும் கண்டு வருந்தினர். அரசர் புலவர்க்கு அவர் விரும்பி வந்தபடியே அரசியின் முத்து மாலைகளை அளித்ததோடு, மேலும் பல பொருள்களும் அளித்தார். புலவரைத் தம் அவைப் புலவராக்கி அரசர் சிறப்பித்தார். புலவர், வறுமைக் கடலினின்றும் கரையேறினர்.

அரும்பதங்கள்: இலக்கியம், இயற்றுவது, வறுமை, வாடிவதங்கல், பொக்கிஷ சாலை, அணிகள், கருதினர், காவலன், நம்பிக்கை, அமர்ந்தார், கோபுரம், கைகூப்பி.

பயிற்சி

1. விடை எழுது:

அ. புலவர் எங்கே வசித்தார்?

ஆ. அவர் ஏன் திருடத் துணிந்தார்?

இ. புலவர் அரண்மனைக்குள் செல்வதற்குச் செய்த தந்திரம் யாது?

ஈ. புலவர் அரசனுடைய படுக்கையறையில் என்ன செய்தார்?

உ. அரசர், புலவர் தமது அறையில் இருந்ததை எவ்வாறு அறிந்தார்?

ஊ. அரசர் ஏன் புலவரைத் தண்டிக்கவில்லை?

2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்பு:

அ. புலவர் பெரிய குடும்பத்தைத் தாங்கும் —— உடையவர். (வழக்கம், பொறுப்பு, பெருமை)

ஆ. புலவர் அரசியின் முத்து மாலையைக் —— எண்ணினார். (வெட்ட, அறுக்க, கத்தரிக்க.)

இ. ஓர் இரவு புலவர் —— அறியாமல் அறையில் ஒளிந்து கொண்டார். (மந்திரி, எவரும், அரசி.)

ஈ. கட்டிலின் கீழ் இருந்து —— பிறந்தது. (குழந்தை, கன்று, ஒலி.)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

சிற்றூர் — திறமை — வறுமை — கருதினர் — சிறப்பித்தார் — ஓய்வு — சாளரம் — புழங்கியது — நிதானித்து — சிறப்பித்தார்.



4. அப்பம் திருடிய எலி

[அப்பத்தைத் திருடிய எலி கீழ் வருமாறு நினைத்தது.]

நெய்யினில் சுட்ட பணியாரம்;—இது
நேர்த்தியாய்ச் சுட்ட பணியாரம்;
பையப்பை யக்கடித்(து) உண்பதற்கும்—வெகு
பக்குவமான பணியாரம். (1)

யார்க்கும் கிடையாப் பெருநிதியாம்;—இதை
யான்இன்று பெற்றதென் பாக்கியமே!
பார்க்கும் பொழுதேநீர் வாயினிலே—ஊறிப்
பாய்கின்ற தேபசி யாகின்றதே! (2)

[அச்சமயத்தில் சில எலிகள் சத்தம் செய்ததைக் கேட்டு,]

என்னசத்தம் ஓஓ! தம்பிமார்கள்—கூடி
இங்கு விளையாட வந்தனரோ?
அன்னவர் ஓடி வருமுன்னே—யானும்
அப்பத்தைக் கொண்டு மறைந்திடுவேன். (3)

[என்று எலி எண்ணிற்று. பின்,]

யாரும் அறியாத மூலையிலே—அந்த
அப்பத்தை அவ்வெலி கொண்டு வைத்துக்
கூரிய பல்லால் கரம்பி ஒருபொடி
கூடச் சிதறாமல் தின்றதம்மா! (4)

மட்டுக்கு மிஞ்சி புசித்ததனால்—மூச்சு
வாங்கி வருந்தி வயிறூதிக்
கட்டப்படுவதைச் சுற்றத்தார் எல்லோரும்
கண்டொரு பண்டிதர்க் காளும்விட்டார். (5)

பண்டிதர் வந்துகை பார்த்தனர்;—அவ்வெலி
பண்டம் முழுதையும் உண்டகதை
விண்டதும் கேட்டுக் குறிகளும் நோக்கி
விதிப்படி ஆய்ந்து விளம்பினரே. (6)

'அப்பம் முழுதும்நீ தின்றனையே!—அதை
அன்பிற் குரியஉன் தம்பியர்க்கும்
ஒப்பவே பங்கிட் டளித்திருந்தால்—துன்பம்
ஒன்றும்வந் துன்னை அணுகாதே!' (7)

அன்றியும் உன்தம்பி மாரும் கடும்பசி
ஆறிக் களித்திருப் பார்கள்அன்றோ?
இன்றினிச் செய்வதென்? இவ்வுலகம்—விட்டு
யாத்திரைபோவது திண்ணம் என்றார். (8)

அளவு கடந்திடில் ஆரமுதும்—விஷம்
ஆகும் என்றுநம தான்றோர்கள்
உளபடி யேசொன்ன வாக்கியத் துண்மையை
உள்ளத்திற் கொள்ளுங்கள் தோழர்களே. (9)

—*கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை*

அரும்பதவுரை

1. பணியாரம்–ஒரு வகைத் தின்பண்டம், பைய–மெல்ல
2. நிதி–செல்வம், பாக்கியம்–அதிர்ஷ்டம்
3. அன்னவர்–அவர்கள்
4. கரம்பி–கடித்து, சிதருமல்–சிந்தாமல்
5. மட்டுக்கு–அளவுக்கு, மிஞ்சி–அதிகமாக. கட்டம்–துன்பம், சுற்றத்தார்–உறவினர், பண்டிதர்–வைத்தியர்.
6. கைபார்த்தனர் – நாடி பார்த்தனர், விண்டதும்–அறிந்ததும். விதிப்படி–சாஸ்திரப்படி, ஆய்ந்து–ஆராய்ந்து, விளம்பினுர்–சொன்னுர்.
7. அளித்திருந்தால்–கொடுத்திருந்தால், அணுகாது—நெருங்காது.
8. கடும்பசி–மிக்கபசி, களித்திருப்பார்–மகிழ்ந்திருப்பார், உலகம் விட்டு யாத்திரை போவது – இறப்பது, திண்ணம் - உறுதி.
9. ஆரமுது–தேவாமிர்தம், ஆன்ருேர்–பெரியோர்.

பயிற்சி

இப்பாட்டில் உள்ள கதையை எழுது.

5. மௌன வாசிப்பு—I

கீழ் வரும் கதையை மனத்துள் படித்து, விளுக்-களுக்கு விடையெழுது :

1. ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்தது. எங்கும் நீர் பெருகி ஓடிற்று. அச்சமயத்தில் சில குரங்குகள் குளிரால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு ஒரு மரக்கிளையில் உட்கார்ந்திருந்தன. அப்போது தரையில் ஏதோ 'மினுக் மினுக்'கென்று வெளிச்சம் தெரிந்தது. அதனைக் கண்ட குரங்குகள், '' அதோ நெருப்பு இருக்கின்றது; சென்று குளிர் காயலாம். சுள்ளிகளைப் பொறுக்கிப் போட்டால், பெரு நெருப்பு உண்டாகும். நாம் இனிக் குளிரால் கஷ்டப்பட வேண்டுவதில்லை '' என்று ஒன்றுக்கொன்று பேசிக்-கொண்டன.

2. அதனைப் பக்கத்து மரத்துக் கிளையிலிருந்த குருவி ஒன்று கேட்டது. அது, குரங்குகளைப் பார்த்து, "அது நெருப்பு அன்று ; அது மின்மினிப் பூச்சியின் வெளிச்சம்," என்று கூறிற்று. அம்மட்டோடு நில்லாமல் அக்குருவி, "மின்மினிப் பூச்சியின் வெளிச்சம் குளிர்காய உதவாது," என்றும் கூறியது.

3. அதனைக் கேட்ட குரங்குகள், "அது, நெருப்பு தான். நெருப்பு குளிர்காய உதவாதா ?" என்று கூறின. அதற்குக் குருவி, "அது நெருப்பல்ல; அது ஒருவகைப் பூச்சி ; அது இரவில் 'மினுக் மினுக்'கென்று மின்னும்; அப்போது அது நெருப்புப்போல் தோன்றும்," என்று கூறிற்று.

4. அதனைக் கேட்ட குரங்குகள் சினங் கொண்டன. "எங்களுக்கு நெருப்பு இன்னதென்று தெரியாதா? நாங்கள் நெருப்பைப் பார்த்ததில்லையா ? நீ எங்களைப் பரிகாசம் செய்கிறாய். எங்களுக்குப்புத்தி இல்லை என்று நீ நினைக்கிறாய். நாங்கள் உனக்குப் புத்தி புகட்டுகிறோம்," என்று கூறிக் குரங்குகள் அந்த மரத்திற்குத் தாவிச் சென்று, குருவியின் கூட்டை நாசம் செய்தன.

"அற்பருக்குப் புத்தி சொன்னால் ஆபத்தாக முடியும்," என்பதை அறிந்த குருவி அவ்விடத்தை விட்டுப் பறந்தோடியது.

வினாக்கள்

1. *குரங்குகள் எங்கே தங்கி இருந்தன ?*
2. *அவை எந்த நிலையில் இருந்தன ?*
3. *குரங்குகள் என்ன பேசிக் கொண்டன ?*
4. *குரங்குகள் பேசியதைக் கேட்ட குருவி என்ன சொல்லிற்று ?*
5. *குரங்குகள் குருவிக்குச் செய்த தீங்கு யாது ?*
6. *இதனால் நாம் அறிவது என்ன ?*

6. இளைஞர் சங்கம்

1. மாணவர்களே, நம்நாடு சுதந்தரம் அடைந்து ஏழு ஆண்டுகளாயின. சுதந்தர இந்தியாவை முன்னேற்றம் அடையும்படி செய்வது நம் கடமை. அதற்காக நம் நாட்டில் இளைஞர்கள் ஒவ்வோர் ஊரிலும் சங்கங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அச் சங்கங்கள் அரசியல், மதம், நாடகம், இசை முதலிய கலைகள், மொழி, தொழில், சுகாதாரம் முதலியவை சம்பந்தமாக ஏற்படுத்தப்படுகின்றன. கிராம மக்கள் அவற்றில் தமக்கு விருப்பமான சங்கங்களில் சேர்ந்துகொள்ளுகிறார்கள்.

2. இவ்வாறே ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மாணவர் சங்கம் இருக்கிறது. மாணவ, மாணவியருடைய கல்வி வளர்ச்சி, உடல் வளர்ச்சி, ஒழுக்க நெறி வளர்ச்சி என்பன குறித்துத் தொண்டு செய்வதே பள்ளி மாணவர் சங்கத்தின் கடமையாகும். சங்கம் என்பது பலர் கூடும் இடம். அங்கு ஒரு பொருளைப்பற்றிப் பலரும் தத்தம் கருத்துக்களைக் கூறுவர். அக்கருத்துக்களை மனத்திற்கொண்டு, மாணவ மாணவிகள் முன்னேறுவதற்குச் சங்கம் துணை செய்கிறது.

3. ஒவ்வொருவரும் தமது நலத்தைக் கருதாமல், பிறர் நலங்கருதி உழைக்கவேண்டும். "நாம் பணி செய்யப் பிறந்தோம். பிறருக்கு நன்மை செய்வதே நமது கடமை. பிறருக்கு நாம் நன்மை செய்வதால், நமக்குப் பல நன்மைகள் தாமே வந்து சேரும்,' என்பதை மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் உணர வேண்டும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றார் தமிழ்ப் பெரியார் ஒருவர்.


முதியோர் பாடசாலை

4. நாட்டு நலங்கருதி, உழைக்கும் சங்கங்களே யாவருக்கும் நன்மை செய்வனவாம். பொது மக்களுக்குச் செய்யும் தொண்டே மிகச் சிறந்தது. அது சமூகத்தொண்டு எனப்படும். சமூகத்தொண்டு செய்யும் சங்கங்களில் சேர்ந்து உழைப்பதால் நாம் நமக்கும், சமூகத்திற்கும், நாட்டுக்கும் தொண்டு புரிந்தவர் ஆவோம். ஒருவர் தனித்துச் செய்யும் தொண்டினைக் காட்டிலும் பலர் கூடிச் செய்யும் தொண்டு அதிகமாகவும் நன்மை விளைவிப்பதாகவும் இருக்கும் அல்லவா?

5. இந்தியா மிகப் பரந்த தேசம். இத்தேசத்தில் பயிர் செய்வதே முக்கிய தொழிலாக இருக்கிறது. பயிர்த்தொழில் செய்பவர் அனைவரும் கிராமங்களில் வசிக்கின்றனர். அவருள் பெரும்பாலோர் கல்வி யறிவு அதிகம் இல்லாதவராய் இருக்கின்றனர். அவர்களுக்குச் சுகாதார முறையில் வாழ்வதற்குத் தெரிவதில்லை. கல்வி அறிவு அதிகம் இல்லாதவர்களாய் இருப்பதனால் உலகத்தில் அவ்வப்போது கண்டுபிடிக்கும் புதிய விவசாயக் கருவிகளைத் தொழிலுக்குப் பயன் படுத்த அவர்களால் இயல்வதில்லை. அவர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வியிலும் அக்கறை காட்டுவதில்லை. தாங்கள் வசிக்கும் கிராமங்களை ஒழுங்காகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்வதில்லை. நாகரிக வாழ்க்கையின் நன்மைகளை அவர்கள் அறிவதில்லை. அவர்களைச் செம்மைப்படுத்தி நாகரிக முறையில், சுகாதார நெறியில், கல்வியறிவு வாய்ந்தவர்களாய் வாழும்படி செய்ய வேண்டுவது இளைஞர் சங்கங்களின் கடமையாகும்.

6. அவ்வாறு செய்வதற்குப் பெரியோர்கள் மட்டுமே கடமைப்பட்டவர்கள் என்று நினைக்க வேண்டா. அத்தொண்டில் இளைஞர்களும் பங்குகொள்ள வேண்டும். இளைஞர் தமக்குத் தொண்டு செய்ய முற்படுவ-

தைக் காணும் முதியோராகிய கிராம மக்கள் அவ்விளைஞரின் தொண்டுக்குத் துணைபுரிய முற்படுவார்கள்.

7. இளைஞர் பலர் ஒன்றுகூடிப் பள்ளியில் மட்டுமின்றி, வெளியிலும் சங்கம் அமைக்கவேண்டும். அவர்களுள் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரை உப தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். செயலாளர் இருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நிர்வாக அங்கத்தினர் சிலரையும் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு சங்கம் கிராமங்களில் செய்யவேண்டிய வேலைகளைப் பல வகையாகப் பிரித்துத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். அங்கத்தினர்கள் அத்திட்டங்களைச் செய்து முடிக்கச் சிறு சிறு குழுக்களாகப் பிரியவேண்டும். அந்த அந்தக் குழுவினர் அவரவர்க்கு உரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும். இதுவே இளைஞர் சங்கங்கள் செயலாற்ற வேண்டிய முறை.

8. சங்கத்தினர் ஒழுக்கம், ஒழுங்கு, உழைப்பு, ஒற்றுமை, உண்மை பேசுதல். இனிமையாகப் பேசுதல் முதலிய நற்குணங்கள் நிரம்பியவராயிருக்க வேண்டும். அவர்களுள் கருத்து வேறுபாடு இருக்கவே கூடாது. ஒற்றுமை மனப்பான்மை இருந்தாலன்றி எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க இயலாது. இளைஞர் சங்கத்தார் ஓய்வு நேரத்தில் பள்ளியிற் படிக்காத சிறுவர் சிறுமிகளுக்கு, சுகாதார வழியில் வாழும்படி எடுத்துச் சொல்லி, அதன் பயனை விளங்க வைக்கவேண்டும். கிராமங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு அவர்களுக்குப் போதிப்பதற்கு முன் அதனைத் தாங்களே செய்துகாட்ட வேண்டும்.

9. இக்காலத்தில் கிராம மக்களுக்குத் தொண்டு செய்ய அநேக சாதனங்கள் இருக்கின்றன. ரேடியோ, திரைப்படக் காட்சி, நூல்நிலையம் முதலியவற்றை அர-

சாங்கத்தாரிடம் பெற்றுப் பயன்படுத்தினல் கிராமச் சீர்திருத்தத் தொண்டு நல்ல வெற்றியைப் பெறும். இதற்குச் சலியாத உழைப்பும், ஊக்கமுள்ள இளைஞர் சங்கங்களே ஆங்காங்குத் தேவை. கற்ற இளைஞன் ஒவ்வொருவனும் கல்லாத இளைஞன் ஒருவனுக்கோ, அன்றி, முதியவர் ஒருவருக்கோ கல்வி கற்றுக் கொடுப்பானுனல், பத்தாண்டுகளில் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே எங்கும் இரார். இது நம் நாட்டு அறிஞர்களின் கருத்து. அவ்வாறு செய்வதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் சங்கங்கள் அமைத்துத் தொண்டாற்ற வேண்டும். கல்வி கற்ற சிறுவரும், சிறுமியரும் தாங்கள் நாட்டிற்குச் செய்ய வேண்டிய இக்கடமையை உணர வேண்டும்.

அரும்பதங்கள் : இளைஞர், சுதந்தரம், அறிஞர், தொண்டு, நலம், உணர்தல், கருதாமல், பெரும்பாலோர், அக்கரை, செம்மை, நாகரிகம், முதியோர், திட்டம், குழுக்கள், சாதனங்கள்.

பயிற்சி

1. *விடை எழுது :*
   - அ. நமது நாட்டில் எது எதற்குச் சங்கங்கள் உள்ளன?
   - ஆ. பள்ளி மாணவர் சங்கத்தின் கடமைகள் யாவை?
   - இ. மாணவ மாணவியர்க்குப் பள்ளிச் சங்கம் எவ்வாறு துணை புரிகிறது?
   - ஈ. சமூகத் தொண்டு என்பது யாது?
   - உ. நமது நாட்டின் முக்கியத் தொழில் யாது?
   - ஊ. கிராம மக்களிடம் காணப்படும் குறைகள் யாவை?
   - எ. அவற்றை எப்படி நீக்கலாம்?
2. *எதிர்ப்பதங்கள் எழுது :*

   அறிவாளி ×
   நன்மை ×
   பெரும்பான்மையோர் ×
   இல்லாதவர் ×
   இளைஞர் ×
3. **கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :**

   இளைஞர்—முதியோர்—குழுக்கள்—திட்டம்—அரசாங்கம்—சீர்திருத்தம்—சிறுமி—கடமை.

7. உலோகங்கள்

1. உலகில் வாழும் மக்கள் பல வகையான ஆபரணங்கள் அணிகிறார்கள். அநேக வகையான பாத்திரங்கள் உபயோகிக்கிறார்கள். பல வகையான கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். அவையெல்லாம் எவற்றால் செய்யப்படுகின்றன? அணிகள் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்படுகின்றன. கருவிகள் பெரும்பாலும் இரும்பினால் செய்யப்படுகின்றன. இவற்றுள் தங்கம், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்பு என்பன ஐந்தும் பஞ்சலோகங்கள் எனப்படும். பித்தளையும், வெண்கலமும் உலோகங்களின் கலப்பால் உண்டாக்கப்படுகின்றன.

2. உலோகங்கள் யாவும் பூமியிலிருந்தே வெட்டி எடுக்கப்படுகின்றன. அவை பூமியில் மிக்க ஆழத்தில் மண்ணோடும் கல்லோடும் கலந்திருக்கும். பூமியைக் குடைந்து அவற்றை வெட்டி எடுக்க வேண்டும். உலோகங்களை எடுப்பதற்காகக் குடையப்படும் நில வறை, சுரங்கம் என்றும், கனி என்றும் கூறப்படும்.

3. பஞ்ச உலோகங்களில் விலையுயர்ந்தது பொன். இதற்குத் தங்கம், கனகம் முதலிய வேறு பெயர்களும் உண்டு. இது மஞ்சள் நிறம் உடையது; ஒளி நிறைந்தது; மற்ற உலோகங்களைக் காட்டிலும் மிருதுவானது. உலகில் பல இடங்களில் பொன் வெட்டி எடுக்கப்படுகிறது. ஆனால் தென் ஆப்பிரிக்காவில் இது அதிகமாகக் கிடைக்கிறது. நம் நாட்டில் மைசூரைச் சேர்ந்த கோலார் என்னும் இடத்தில் பொன் கிடைக்கிறது.

4. பொன்னை வெட்டியெடுத்து நகைகள் முதலியன செய்வதற்கு இயலாது. அதனோடு சிறிதளவு

செம்பு கலந்தால்தான் அது உறுதி அடைகிறது. அப்போதுதான் அதனுல் அணிகள் முதலியன செய்ய முடியும். தங்கத்தினின்று தங்க ரேக்குகளும்,தங்கச் சரிகைகளும் செய்கிருர்கள். தங்கச் சரிகைகளை அமைத்து ஆடைகள் செய்கிருர்கள். முற்காலத்தில் நமது நாட்டில் ஆண்ட அரசர்கள் தங்க நாணயங்களை வழங்கி வந்தார்கள். நம் நாட்டில் நாம் பொன்னைப் பவுன் அல்லது சவரன் என்னும் உருவில்தான் பெறுகிருேம். தங்கம் மருந்து செய்யவும் பயன்படுகிறது.

5. பொன்னுக்கு அடுத்தபடி விலையுயர்ந்ததாய் இருப்பது வெள்ளி. வெள்ளி என்ற பெயர் அந்த உலோகத்திற்கு அதன் நிறத்தால் வந்தது. வெள்ளி அதிகமாகப் பயன்படக்கூடிய உலோகம். வெள்ளி வெட்டி எடுக்கப்படும் நாடுகளுள் முதன்மையானது வட அமெரிக்காவின் தென்பாகத்தில் உள்ள மெக்ஸிகோ நாடாகும். அடுத்தபடி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், அதற்கு அடுத்தபடி கனடாவிலும் கிடைக்கின்றது. வெள்ளியும் மண்ணுடன் கலந்தே கிடைக்கும். அதனை வெட்டி எடுத்துச் சுத்தம் செய்வர். வெள்ளியினுல் காலில் அணியப்படும் காப்பு, கொலுசு முதலிய நகைகள் செய்வர். பாத்திரங்கள் செய்வர். நமது நாட்டு மக்கள் வெள்ளியை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். எவ்வளவு ஏழையானுலும் அவனிடத்தும் சிறிதளவு வெள்ளி இருக்கும். எல்லா நாடுகளிலும் நாணயங்களை வெள்ளியினுல் செய்கின்றனர். வெள்ளியினுல் சரிகை செய்து ஆடைகளில் அமைத்து நெய்வார்கள்.

6. செம்பு என்னும் உலோகமும் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுவதே. இது சிவப்பு கலந்த பழுப்பு நிறம் உடையது. இதனை உருக்கிக் காய்ச்சித் தகடுகள்

அடிப்பார்கள். அவற்றைக் கொண்டு பாத்திரங்கள் செய்வார்கள். முற்காலத்தில் செப்புத் தகடுகளில் சாசனங்கள் எழுதினர்கள்; அம்மாதிரியான செப்பேடு-களை இன்றும் பொருட்காட்சிச் சாலைகளில் காணலாம். செம்பில் துரு பிடிக்கும். அதனைக் களிம்பு என்று கூறுவர். செம்பும் நாணயங்கள் செய்வதற்குப் பயன் படுகிறது. செம்புக்குத் தாமிரம் என்னும் வேறு பெய-ரும் உண்டு.

7. ஈயம் என்பது மங்கலான வெண்ணிறம் உள்-ளது. இதுவும் பூமியிலிருந்தே எடுக்கப்படுகிறது. இதற்கு வங்கம் என்ற பெயரும் உண்டு.ஈயமும் பல வகைகளில் பயன்படுகிறது. ஈயத்தினல் பலவகையான பாத்திரங்-கள் செய்கிருர்கள். ஈயம் வெள்ளீயம், காரீயம் என்று இருவகைப்படும். ஈயத்தைக் காகிதம் போன்ற தகடுகளாகச் செய்யலாம். ஈயத்திற்குப் பளப்பளப்பு உண்டு. இதுவும் மருந்துக்கு உபயோகப்படுகிறது.

8. இரும்பு மிகக் கடினமான உலோகம். இது-வும் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. நம் நாட்டில் மைசூர், ஹைதராபாத், ஒரிஸ்ஸா, பீஹார் முதலிய இராச்சியங்களில் இரும்புச் சுரங்கங்கள் இருக்-கின்றன. இரும்பு இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷ்யா, பிரான்சு முதலிய நாடுகளில் அதிக-மாகக் கிடைக்கின்றது. இரும்பைக்கொண்டுதான் நாம் பலவகைக் கருவிகளைச் செய்கிறேம். பெரிய இயந்திரங் கள் எல்லாம் இரும்பினல் செய்யப்படுகின்றன. குண்-டூசி முதல் இரயில் எஞ்சின் வரை இரும்பினல் உண்டா-வனவே. இரும்போடு நிலக்கரியைக் கலந்து காய்ச்சி ஞல் எஃகு உண்டாகிறது. எஃகினல் கூர்மையான கத்தி முதலிய ஆயுதங்களைச் செய்யலாம். இரும்பு, பலவகை மருந்துகள் செய்ய உபயோகப்படுகிறது. ' இளைத்த

தவன் இரும்பைத் தின்க,' என்பது பழமொழியாகும். மக்கள் வாழ்க்கையில் இரும்பைப் போலப் பயன்படும் உலோகம் வேறு எதுவும் இல்லை.

அரும்பதங்கள் : ஆபரணங்கள், வெண்கலம், ஈயம், பித்தளை, பஞ்சலோகம், குடைந்து, நிலவறை, சுரங்கம், கனி, ஒளி, நாணயங்கள், தகடுகள்.

பயிற்சி

1. விடை எழுது :

அ. உலோகங்கள் எங்குக் கிடைக்கும் ?

ஆ. பஞ்சலோகம் என்பவை எவை ?

இ. நமது நாட்டில் பொன் எங்குக் கிடைக்கிறது ?

ஈ. வெள்ளி கிடைக்கும் நாடுகள் எவை ?

உ. செம்பின் நிறம் யாது ? அது எங்கெங்குக் கிடைக்கிறது ?

ஊ. இரும்பின் பயன்கள் யாவை ?

2. கோடுள்ள இடங்களைத் தக்க சொற்களால் நிரப்புக :

அ. மக்கள் பலவகையான———அணிகிறார்கள்.
(சாமான்கள், குடைகள், நகைகள்)

ஆ. உலோகங்கள்———இருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. (வானில், நீரில், பூமியில்)

இ. பொன்னோடு சிறிதளவு———கலக்கவேண்டும்.
(தண்ணீர், செம்பு, நிலக்கரி)

ஈ. ஈயம் என்பது———நிறம் உடையது.
(மஞ்சள், பச்சை, வெண்மை)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

ஆபரணங்கள்—பெரும்பாலும்—இயலாது—சரிகை—பயன்படும்—மங்கலான—அம்மாதிரி.



8. தென்னையும் பனையும்

1. நம் நாட்டில் தென்னை மரங்களையும், பனைமரங்களையும் பாராதவர்களே இருக்க மாட்டார்கள். தமிழ்நாட்டுக் கிராமங்களில் தென்னை மரங்களைக் காணலாம். தென்னை, பனை, கமுகு, ஈந்து என்பன ஓரினமாகும். தென்னை மரம் மணற்பாங்கான இடங்களில் நன்கு வளரும். ஆற்றங்கரைகளிலும் கடலை யடுத்த மணற்பாங்கான இடங்களிலும் தென்னை ஏராளமாகப் பயிராகும். தென்னையைத் **தெங்கு** என்றும் கூறுவர்.

2. தென்னை மரத்திற்குக் கிளை இல்லை. தென்னை மரத்தின் உச்சியில் மட்டைகள் உள்ளன. தென்னை மரம் முப்பது முதல் நாற்பதடி உயரம் வளரும். அதன் இலையை **ஓலை** என்பர். ஓலைகளை உடையது **மட்டை** எனப்படும். ஓலைகள் தனித்தனியாய் இருப்பதால் காற்றினால் மட்டை முறிந்து விழாது.

3. தென்னையின் முற்றின காய்க்கு **நெற்று** என்பது பெயர். நெற்றுக்களைப் பூமியில் புதைத்து நாற்றாக வளரச் செய்து நடுவது வழக்கம். அதனை மூன்று அல்லது நான்கு அடி ஆழம் குழி தோண்டி நடுவார்கள். தென்னையின் சிறு செடியைத் **தென்னம்பிள்ளை**

என்பார்கள். தென்னை ஐந்து அல்லது ஆறு வருடங்கள் கழித்தே பயன் தரும். தென்னையைத் தோப்பாக வைத்து வளர்ப்பார்கள்.

4. வளர்ந்த தென்னை மரத்தில் பாளை தோன்றும். அதிலிருந்து பூவும், குரும்பைகளும் வெளிப்படும். குரும்பைகளில் பல உதிர்ந்து விடும். சில மட்டும் முற்றிக் காயாகும். தென்னை, குலைகுலையாய்க் காய்க்கும். ஒரு தென்னை மரம், ஓர் ஆண்டில் நூற்றுக் கணக்கில் காய்கள் காய்க்கும். ஒரு குலையில் பத்து அல்லது பன்னிரண்டு காய்கள் இருக்கும். சில ஜாதி மரங்களில் ஐம்பது அறுபது காய்களும் இருக்கும். முற்றாத தேங்காய்க்கு **இளநீர்** என்பது பெயர். இது கோடையில் குடிப்பதற்கு இன்பமாக இருக்கும். இளங்காயின் உள்ளிருப்பது **வழுக்கை** எனப்படும். அது முற்றிப்பருப்பாகும். முற்றின காய்களை வெயிலில் உலர்த்தினால் **கொப்பரை** ஆகும். தேங்காய், சமையலுக்கும், தின்பண்டங்கள் செய்வதற்கும் பயன்படும். கொப்பரையைச் செக்கிலிட்டு ஆட்டி, நெய் எடுப்பார்கள். தேங்காய் நெய்யைத் தேங்காய் எண்ணெய் என்று சொல்வது வழக்கமாகி விட்டது. இது தவறு. தேங்காய் நெய் என்று கூறுவதே சரி. தேங்காய் நெய் சமையல் செய்வதற்கும் பயன் படும். தேங்காய் நெய் புண்களை ஆற்றும்.

5. தென்னையோலை, கீற்று முடையவும், குடலைகள் பின்னவும் பயன்படுகிறது. ஓலையின் நடுவிலுள்ள ஈர்க்கு துடைப்பமாகப் பயன்படுகிறது. மரம் வீடு கட்ட உதவுகிறது. தென்னங் கீற்றுக்களை வீட்டுக்குக் கூரைவேயவும், வேலியடைக்கவும் உபயோகிப்பர். தேங்காய் ஓட்டுக்குக் **கொட்டாங்கைச்சி** என்பது பெயர். அதனால் அகப்பை, பொத்தான் முதலியன செய்வார்கள். தேங்காய் மட்டையிலுள்ள நார் உறுதி-

யுள்ளது. ஆகையால் அதனைக் கொண்டு கயிறு திரிப்பார்கள். தாம்புக் கயிறு, தேர் வடம், படகு கட்டும் கயிறு, மிதிபாய் முதலியன தேங்காய் நாரினுல் செய்யப்படுகின்றன. தென்னம்பாளையிலிருந்து பதநீர் இறக்குவர். பதநீரைக் காய்ச்சிக் கருப்புக் கட்டி செய்யப்படுகிறது. தென்னை மரத்தின் ஓலை, மட்டை, பாளை முதலியன யாவும் அடுப்பெரிக்க உதவுகின்றன. தென்னை மரத்தின் ஒவ்வொரு பாகமும் நமக்குப் பயன் படுகிறது.

6. தென்னையைப் போலப் பனையும் உயரமாக வளரும். பனைமரத்தின் உச்சியில் மட்டைகள் அடர்த்தியாய் இருக்கும். பனை மரத்தின் எல்லாப் பாகங்களும் பயன் உடையனவே. அடி மரம் வீடு கட்டப் பயன்படுகிறது. ஓலை கூரை வேயவும், வேலி கட்டவும் பயன்படு கிறது. மட்டையிலிருந்து நார் உரித்துக் கயிறு திரிப்பார்கள். பனையோலையால் இறைகூடை செய்வார்கள். அது தண்ணீர் இறைக்கப் பயன்படும். சிறு பனையை வடலி என்பர். சிறு பனை ஓலையால் விசிறி செய்வார்கள். பனம் பழத்தைச் சுட்டும் அவித்தும் தின் பார்கள். இளங்காய்க்கு நுங்கு என்பது பெயர். பனங்காயினுள் ஒன்று முதல் மூன்று கொட்டைகள் இருக்கும். பனங்கொட்டைகள் மண்ணில் புதையுண்டால், அதிலிருந்து கிழங்கு முளைத்துச் செடியாகும். பனங் கிழங்கைச் சுட்டும், வேக வைத்தும் தின்பர். பனங்குலையையும் கலியாணப் பந்தல்களில் கட்டுவார்கள். பனை மரத்தின் எல்லாப் பாகங்களும் அடுப்பெரிக்க உதவும். பனை, கருமை நிறம் வாய்ந்தது. முற்காலத்தில் நம் நாட்டில் பனையோலைகளில் நூல்கள் எல்லாம் எழுதி வந்தார்கள். இன்னும் நூல் நிலையங்களில் பனையேடு களில் எழுதிய நூல்களைப் பத்திரம் செய்து வைக்கிருக்-

கிறார்கள். பனைமரத்தின் பாளையிலிருந்து சாறு இறக்கு-வார்கள். அதற்குப் பதநீர் என்பது பெயர். அதைக் காய்ச்சி வெல்லமும் கற்கண்டும் செய்வது நமது நாட்டுத் தொழில்களுள் ஒன்று.

அரும்பதங்கள் : கமுகு, ஈந்து, தெங்கு, மணற்பாங்கு, நெற்று, குரும்பைகள், வழுக்கை, குடலை, ஈர்க்கு, கொட்டாங் கைச்சி, வேய்தல், ஏடு, பதநீர்.

பயிற்சி

1. விடை எழுது :

   அ. தென்னை எவ்விடங்களில் நன்றாக வளரும்?

   ஆ. தென்னை எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது?

   இ. தென்னையின் உபயோகங்கள் எவை?

   ஈ. வடலி என்பது யாது?

   உ. பனைமரத்தின் பயன்கள் யாவை?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

   ஈந்து—நெற்று—பாளை—வழுக்கை—கொப்பரை—உச்சி—இறைகூடை—சாறு—நாட்டுத் தொழில்.

3. எது எதற்குப் பொருந்தும்?

தென்னையைத்	வெயிலில் உலர்த்தினால் கொப்பரை ஆகும்.
ஓலைகளை உடையது	கருப்புக்கட்டி செய்கிறார்கள்.
முற்றின காய்களை	இறை கூடை செய்யலாம்.
பதநீரைக் காய்ச்சி	கிழங்கு முளைக்கும்.
பனை ஓலையால்	கலியாணப் பந்தலில் கட்டுவார்கள்.
பனங்கொட்டையிலிருந்து	தெங்கு என்றும் கூறுவர்.
தேங்காய்க் குலைகளை	மட்டை எனப்படும்.





9. பனைமரம்

பாட்டு

பனைமரமே, பனைமரமே,
ஏன்வளர்ந்தாய் பனைமரமே?

நான்வளர்ந்த காரியத்தை
நாடறியச் சொல்லுகிறேன்:

வெட்டநல்ல விறகாவேன்,
வீடுகட்ட மரமாவேன்.

பட்டுப்போகும் பயிர்களுக்குப்
பலத்தநல்ல ஏற்றமாவேன்.

கட்டநல்ல கயிறுவேன்,
கன்றுகட்டத் தும்பாவேன்.

மட்டமுள்ள உறியாவேன்,
மாடுகட்டத் தும்பாவேன்.

எழுதுகின்ற பிள்ளைகட்கு
எழுத்தாணிக் கூடாவேன்.

வாசிக்கும் பிள்ளைகட்கு
வண்ணத் தடுக்காவேன்.

பாலர்பெரி யோர்களுக்குப்
பனம்பதநீர் நானுவேன்.

சித்திரைக் கோடையிலே
சிறந்தநல்ல நுங்காவேன்.

காளையர்க்கும் கன்னியர்க்கும்,
களைதீர்க்கும் விசிறியாவேன்.

தர்க்கங்கள் என்னுலே,
சாத்திரங்கள் என்னுலே.

இராமாயணம் என்னுலே,
பாரதமும் என்னுலே.

வர்த்தகரும் செட்டிகளும்,
வழியறிவ தென்னுலே.

பலசரக்கு மண்டிகளில்
பத்திரமாய் நானிருப்பேன்.

இத்தனைக்கும் உதவிஎன்று
எனைஇறைவன் படைத்திட்டான்.

— ஒரு பழம் பாட்டு.

10. தெனாலி ராமர் செய்த வேடிக்கை

1. விஜயநகர சாம்ராஜ்யத்தைக் கிருஷ்ணதேவ ராயர் என்பவர் ஆண்டு வந்தார். அவர் வீரத்திலும், கல்வி அறிவு ஒழுக்கங்களிலும் சிறந்தவர்; சம்ஸ்-கிருதமும், தெலுங்கும் நன்கு கற்றவர். கிருஷ்ணதேவ ராயர் புலவர்களை ஆதரித்து வந்தார். அவர் சபையில் தெனாலி ராமர் என்ற விகடகவி ஒருவர் இருந்தார்.

2. தெனாலி ராமர் நுண்ணறிவு படைத்தவர். கல்வி கேள்விகளிலும் மிகச் சிறந்தவர். அவ்வப்போது வேடிக்கையாகவும் விநோதமாகவும் பேசி இராயரை மகிழ்விப்பார். அவர் சொல்லும் செயலும் கிருஷ்ண தேவ ராயருக்கு விடாச் சிரிப்பினை விளைவிக்கும். "இன்பச் சிரிப்பு உடலுக்கு நலம்தரும்," என்பர் இராயர்.

3. சில சமயங்களில் தெனாலி ராமர் இராயருக்-குக் கோபம் வரும்படி குறும்புத்தனமாக நடந்து கொள்வதும் உண்டு. அப்பொழுது இராயர் கடிந்து கொள்வார். உடனே தெனாலி ராமர் ஏதாவது விநோத மான செயலாலோ, சொல்லாலோ இராயரை மகிழ்-விப்பார்; சினம் பறந்து போய்விடும். "நீர்கிழிய எய்த வடுபோல மாறுமே, சீரொழுகு சான்றோர் சினம்," என்பது நாம் அறிந்தது அல்லவா?

4. ஒருசமயம் தெனாலி ராமர், இராயருக்கு மிக்க கோபம் உண்டாகும்படி நடந்துகொண்டார். இராயர் சினத்தோடு, "இனி, நீர் என்முன் தலையைக் காட்டாதீர்; காட்டினால் உம் தலையை வெட்டிவிடுவோம்!" என்று மிகவும் கடுமையாக உத்தரவிட்டார். தெனாலி ராமர் அதற்கு அஞ்சுபவரா? இராயர் மனத்தை மகிழ்வித்துப்

பழைய நட்போடு பழகுவதற்கு அவர் ஒரு தந்திரம் செய்தார். தெனாலி ராமர் சலவைத் தொழிலாளி ஒருவரிடம் சென்று, சால் ஒன்றை வாங்கிக்கொண்டு வந்தார். அந்தச் சாலில் கண்கள் மட்டும் தெரியும்படி இரண்டு துவாரங்கள் செய்தார். அதனைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தார். இடைவழியில் யார் எது கேட்டாலும் பேசவில்லை.

5. இராயர் கொலு மண்டபத்திற்கு வரும் சமயம் பார்த்து அரண்மனைக்குள் சென்று, இராயர் காணும்படியாக அங்குமிங்கும் திரிந்தார். அங்கு இருந்தவர் யாவரும் சால் தலையைப் பார்த்துச் சிரித்தனர். அவர்கள் அவரைப் பல கேள்விகள் கேட்டும், பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. இராயர் கொலுமண்டபத்திற்கு வந்தார். அங்குத் திரிந்து கொண்டிருந்த சால்தலையரைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, அவரை அழைத்து வரும்படி உத்தரவிட்டார். அவரைப் பார்த்து, "நீ யார்? ஏன் இந்தக் கோலத்தோடு இங்கு வந்தாய்?" என்று இராயர் சினத்துடன் கேட்டார். தெனாலி ராமர் சிறிதும் அஞ்சாது, "அரசரே, நேற்று உங்கள் முன் தலையைக் காட்டக் கூடாது என்று கட்டளை இட்டீர்கள். ஆதலால் தான், உங்கள் ஆணைப்படி தலையைக் காட்டாமல் இருக்கிறேன்." என்று பதில் கூறினார்.

6. அதைக் கேட்ட இராயருக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவரிடம் கொண்டிருந்த சினம் விலகியது. இராயர் அவரை மன்னித்து, எப்பொழுதும் போல வரும்படி கட்டளையிட்டார்; சிறந்த பரிசுகளும் தந்தார். அது முதல் தெனாலி ராமர் இராயர் சபைக்கு வழக்கம் போலச் சென்று இராயரை மகிழ்வித்து வந்தார்.

அரும்பதங்கள் : சாம்ராஜ்யம், ஒழுக்கம், ஆதரித்து, விகடகவி, நுண்ணறிவு, கல்வி கேள்வி, விளைவிக்கும், குறும்புத்தனம், சினம், வடு, சீர், சான்றோர், கடிந்துகொள், கடுமையாக.

பயிற்சி

1. விடை எழுது :

அ. கிருஷ்ணதேவ ராயர் என்பவர் யார்?

ஆ. தெனாலி ராமர் என்பவர் யார்?

இ. தெனாலி ராமரின் கடமை யாது?

ஈ. கிருஷ்ணதேவர் தெனாலி ராமருக்கு இட்ட கட்டளை யாது?

உ. தெனாலிராமர் ராயரின் கட்டளையை எவ்வாறு மீறினார்?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

ஒழுக்கம், ஆதரித்து, மகிழ்வி, குறும்புத்தனம், அச்சம், ஆச்சரியம், வழக்கம் போல, பரிசுகள்.

3. எதிர்ப் பதங்கள் எழுது :

சிறந்தவர் ×
அஞ்சாமை ×
நலம் ×
கிடைக்கவில்லை ×
காட்டு ×



11. நூல் நிலையம்

1. நூல் நிலையம் என்பது நூல்கள் பல வைத்திருக்கும் இடம். நூல் நிலையத்தில் சரித்திரம், பூகோளம், இலக்கணம், இலக்கியம், கதைகள், சிற்பம், ஓவியம், இசை, சமயம் முதலியவை பற்றிய நூல்கள் இருக்கும். அங்கு வெவ்வேறு மொழிகளில் உள்ள நூல்களையும் திரட்டி வைத்திருப்பார்கள். அவற்றை வகைப்படுத்தி, எண் அமைத்து, வரிசை வரிசையாக அலமாரிகளில் வைத்திருப்பார்கள். எவரும் நூல் நிலையத்திற்குச் சென்று நூல்களை எடுத்துப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்.

2. நூல் நிலையத்துக்குச் செல்பவர்கள் தங்களுக்கு விருப்பமான புத்தகத்தை எடுத்துப் படிக்கலாம். அமைதியாக இருந்து படிப்பதற்கு அங்கு ஏற்ற வசதிகள் உண்டு. அதனால் அங்குச் செல்பவர் தமக்கு வேண்டும் புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஒரு பீடத்-

தில் அமர்ந்து படிக்கலாம். படித்தவற்றின் குறிப்புக்களை எழுதிக் கொள்ளலாம். ஒரு பொருளைப்பற்றிப் பலர் எழுதியுள்ளதைப் படித்துக் குறிப்புக்கள் எழுதிக் கொள்ள நூல் நிலையந்தான் ஏற்ற இடம். நூல் நிலையத்திற்குச் செல்பவர் சத்தம் செய்யக்கூடாது. சத்தம் செய்தால் பிறர் அமைதியாகப் படிக்கமுடியாதல்லவா ?

3. மக்கள் முன்னேற்றம் அடைவது கல்வியால்தான். கல்வியைப் பள்ளிக்கூடத்தில் கற்ருல் மட்டும் போதாது. அங்கு ஒரு குறிப்பிட்ட அளவே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அந்த அளவுக்கு மேல் படித்து, அறிவை வளர்த்துக்கொள்ள நூல் நிலையம் இன்றியமையாதது. ஒவ்வொருவனும் நூல் நிலையத்திற்குச் சென்று தன்னுடைய அறிவை விருத்தி செய்து கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு கலையைப்பற்றியும் பலவேறு வகையான நூல்கள் உள்ளன. அவை யாவற்றையும் படித்தறிய விரும்பும் ஒருவன், அந்நூற்கள் அனைத்தையும் தான் ஒருவனே வாங்குவது முடியாது. எவ்வளவு செல்வம் இருந்தாலும் எல்லாவற்றையும் வாங்குவதும், வைத்துக்கொள்வதும் எளிதான காரியம் அன்று. ஆதலால் அரசாங்கத்தாலோ, பொதுமக்களாலோ நடத்தப்படும் பொது நூல்நிலையங்களில் அவை வாங்கி வைக்கப் பட்டிருக்கும். அங்குச் செல்வதால் அந்த நூல்கள் அனைத்தையும் படிக்க வாய்ப்புக் கிடைக்கும்.

5. பல வகையான நூல்களைக் கொண்ட நூல் நிலையம் ஒன்றினுள் நுழையும்போது நம் மனத்துள் பற்பல எண்ணங்கள் தோன்றும். நூல் நிலையத்திற்குள் சென்றதும் நூல்களின் காட்சி நமது மனத்தைக்கவரும். பல அரிய விஷயங்களை அறியவேண்டும் என்ற ஆவல்

பிறக்கும். இத்தனை நூல்களையும் பயின்றால் அறிவு எவ்வளவு வளர்ச்சியடையும் என்ற எண்ணந்தோன்றும். நாம் படித்தது எவ்வளவு குறைவு; படிக்க வேண்டுவது இன்னும் எவ்வளவு இருக்கின்றது என்ற உணர்ச்சியும் தோன்றும். இறந்தவர்களும், முன்னோர்களுமான பேராசிரியர்களோடு நாம் நேரில் பழகுவது போன்ற உணர்ச்சியும் உண்டாகும். வீண் பொழுது போக்கும் வழக்கம் குறைந்து, கல்வியில் ஊக்கம் உண்டாகும். நாம் நூல்களை எடுத்துப் படிக்கும் பழக்கம் ஏற்பட்டால் தீய நண்பர்களோடு சேர்வது நீங்கிவிடும். நாம் காலத்தை வீணுக்க விரும்பமாட்டோம். நமது அறிவு பெருகும். அதனால் நாம் முன்னேற்றம் அடைவோம்.

6. ஒரு நாடும் அதன் மக்களும் முன்னேற்றம் அடைய நூல் நிலையங்கள் மிகவும் அவசியம். ஒவ்வோர் ஊரிலும், சிறியதாயினும், பெரியதாயினும் ஒரு நூல் நிலையம் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் வீட்டில் சில அரிய நூல்களையேனும் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். நூல்களைச் சேகரித்து வைத்துப் படிக்கும் வழக்கத்தை வளர்க்க வேண்டும். வாழ்நாளை வீணாக்கிக் கழிக்கக் கூடாது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் நூல் நிலையம் இருக்கிறது. ஓய்வு நேரத்தில் அங்குச் சென்று படித்தல் வேண்டும். அப்பழக்கத்தை இளம்பருவத்திலேயே மேற்கொள்ள வேண்டும். மேல் நாடுகளில் இரயிலில் பிரயாணம் செய்யும் போது கூடப் புத்தகங்களைப் பிரயாணிகளுக்குக் கொடுத்துதவும் நூல் நிலையங்கள் உள்ளன. அவற்றால் மக்கள் தம் காலத்தை வீணுக்காமல் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நம்நாடும், நாமும், மொழியும், கலைகளும் ஓங்கி வளர வேண்டு-

மானுல், ஒவ்வொரு சிறு கிராமத்திலும் நூல் நிலேயங்களே ஏற்படுத்த வேண்டும். மக்களுக்குப் படிப்பில் ஆசையை உண்டாக்கி, நூல் நிலேயங்களுக்குச்சென்று படிக்கும் உணர்ச்சியை உண்டாக்க வேண்டும்.

அரும்பதங்கள்: நூல் நிலேயம், சரித்திரம், சிற்பம், ஓவியம், சமயம், மொழிகள், பீடம், குறிப்புக்கள், முன்னேற்றம்.

பயிற்சி

1. *விடை எழுது:*

அ. நூல் நிலேயம் என்பது யாது?

ஆ. நூல் நிலேயத்தில் எவ்வகை நூல்கள் இருக்கும்?

இ. நூல் நிலேயத்தில் நூல்கள் எவ்வாறு வைக்கப்பட்டிருக்கும்?

ஈ. நூல் நிலேயத்தை நாம் எவ்வகைகளில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்?

உ. நூல் நிலேயங்களால் ஏற்படும் நன்மைகள் யாவை?

2. கோடுள்ள இடங்களேத் தக்க சொற்களால் நிரப்புக:

அ. நூல் நிலேயத்தில் பல வகையான நூல்கள்——— வைக்கப்பட்டிருக்கும். (சேகரித்து, அடுக்கடுக்காக, பலவகையாக.)

ஆ. மக்கள்——முன்னேற்றம் அடைகிறார்கள். (பேச்சால், கல்வியால், நட்பால்)

இ. எல்லா நூல்களேயும் வாங்குவது——காரியம் அல்ல. (சரியான, கஷ்டமான, எளிதான.)

ஈ. ஒவ்வோர் ஊரிலும் ஒரு———இருக்க வேண்டும். (சத்திரம், குளம், நூல் நிலேயம்.)



12. நவராத்திரி

1. 'நவராத்திரி' என்பது இந்துக்கள் கொண்டாடும் விழாக்களுள் ஒன்று. 'ஒன்பது இரவுகள்' என்பது இதன் பொருள். இந்தியாவில் இதனை இந்துக்கள் கொண்டாடுகிறார்கள். வட நாட்டில் இவ்விழாவினைப் பத்து நாட்கள் கொண்டாடுகிறார்கள். ஆதலால் அங்கு அதற்குத் 'தசரா' என்னும் பெயர் வழங்குகிறது.

2. இவ்விழா ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசி மாதத்தில் அமாவாசை கழித்த மறுநாள் முதல் பத்து நாட்கள் கொண்டாடப்படும்.பத்தாவது நாளுக்கு 'விஜயதசமி' என்பது பெயர். ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் துர்க்கைக்கு உரியன. அடுத்த மூன்று நாட்கள் இலக்குமிக்கு உரியன. இறுதி மூன்று நாட்கள் கலைமகளுக்கு உரியன என்பர். எனவே வெற்றி, செல்வம், கல்வி இவை மூன்றும் பெருகத் துர்க்கை,

இலக்குமி, சரசுவதி என்னும் தெய்வங்களைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் வணங்குவதே இந்த விழாவின் நோக்கமாகும்.

3. நவராத்திரியில் வீட்டில் பொம்மைக் கொலு வைப்பதைக் காணலாம். அக்கொலுவில் பலவகைப் பதுமைகளையும், மற்றும் அரிய காட்சிப் பொருள்களை-யும் ஒழுங்காக, அழகுபட வைப்பார்கள். துர்க்கை, இலக்குமி, சரசுவதி முதலிய தெய்வங்களின் படங்-களோ, உருவச்சிலைகளோ வைக்கப்பட்டு நன்கு அலங்-கரிக்கப்படும்.

4. மாலையில் பெண்கள் தம்மை அலங்கரித்துக் கொண்டு, தம் உறவினர் வீடுகட்கும், நண்பர் வீடுகட்-கும் சென்று வருவார்கள். அங்கு அவர்கள் இசைப் பாட்டுக்கள் பாடி மகிழ்வார்கள். ஒவ்வொரு வீட்டிலும் கொலு பார்க்க வரும் பெண்களுக்கும், குழந்தைகளுக்-கும் பூ, சந்தனம், வெற்றிலைபாக்கு, வடை, சுண்டல் முதலியன கொடுப்பார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்-வொரு வகையான தின்பண்டம் செய்து வழங்குவது வழக்கம்.

5. விஜயதசமி என்பது வெற்றி பொருந்திய நாள். ஆதலால் அன்று புதிதாகக் குழந்தைகளைப் பள்-ளிக் கூடத்தில் வைப்பர். இதனை 'வித்தியாரம்பம்' என்-பர். வித்தை என்பதற்குக் கல்வி என்பது பொருள். ஆரம்பம் என்பதற்குத் தொடங்கல் என்பது பொருள். புதிதாகத் தொழிலையோ, காரியத்தையோ தொடங்கு-பவர்களும் அன்றைய தினத்தில் ஆரம்பிப்பர். அன்று தொடங்கும் காரியம் வெற்றியோடு நன்கு நடை பெறும் என்பது நம்பிக்கை.

6. விஜயதசமிக்கு முன்தினமாகிய ஒன்பதாம் நாள் கலைமகள் விழா. அதனைச் சரசுவதி பூசை என்-

றும், ஆயுத பூசை என்றும் கூறுவர். அன்று படிப்பவர் புத்தகங்களையும், தொழில் செய்பவர் அத்தொழிலுக்குரிய ஆயுதங்களையும் வைத்து வணங்குவர்.

7. தமிழ் மன்னர் காலத்தில் நவராத்திரி விழாவின்போது பற்பல நாட்டுப் புலவர் பெருமக்களையும், இசை வல்லார்களையும் அம்மன்னர் வர வழைப்பர். அவர்கள் தத்தம் திறமையை அரசவையில் காட்ட வேண்டும். விஜயதசமி அன்று எல்லோர்க்கும் அரசர் தக்கவாறு பரிசளித்துச் சிறப்புச் செய்வார். அந்த முறையை ஒட்டி மைசூர், திருவிதாங்கூர், கொச்சி முதலிய சமஸ்தானங்களில் இக்காலத்திலும் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

அரும்பதங்கள்; இந்துக்கள், கொண்டாடும், தசரா, ஆண்டு, துர்க்கை, இறுதி, தொடர்ந்து, கொலு, பதுமை, அலங்கரி, வழங்கு, வணங்கு.

பயிற்சி

1. *விடை எழுதுக:*

அ. நவராத்திரி என்பதற்குப் பொருள் என்ன?

ஆ. தசரா என்பதற்குப் பொருள் என்ன?

இ. இரண்டிற்கும் வேறுபாடு என்ன?

ஈ. தமிழ் நாட்டில் நவராத்திரி பண்டிகை ஏன் கொண்டாடப் படுகிறது?

உ. அது எப்படிக் கொண்டாடப்படுகிறது?

2. *எதிர்ப் பதங்கள் எழுது:*

வட நாடு	×
பல வகை	×
நண்பர்	×
ஆரம்பம்	×
தொடங்கு	×

3. *கீழ் உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுக:*

கொண்டாடு—ஆண்டு—உரியவை—காட்சிப் பொருள்—உறவினர்—தின்பண்டம்—வழங்கு—ஆரம்பம்—இசை—பரிசு.



13. ஒட்டகம்

1. பூமியில் பல வகை மிருகங்கள் உள்ளன. அவற்றுள் சில, காண்பதற்கு அழகாய் உள்ளன; சில அச்சத்தைத் தருகின்றன; சில விகாரமாய் இருக்கின்றன. மிருகங்களுள் பல, மனிதனுக்குப் பயன்படுவனவாயும் உள்ளன.

2. உலகில் வாழ்வன யாவும் கடவுளால் படைக்கப்பட்டவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் உலகப் பொது வாழ்விற்குத் தொண்டு செய்கிறது. கூர்ந்து கவனித்தால் இறைவனது படைப்பின் விசித்திரம் புலப்படும்.

3. ஒட்டகம் ஒரு விசித்திரமான மிருகம். அதன் முதுகைப் பார். அது எவ்வளவு கோணலாக இருக்கிறது. விகார வடிவிற்கு உதாரணம் கூறவேண்டுமானல் ஒட்டகத்தையும், காண்டா மிருகத்தையும் கூற லாம். ஒட்டகம் மனிதருக்கு எப்படிப் பயன்படுகிறது என்று பார்ப்போம். ஒட்டகம் மிகவும் உயரமான பிராணி. அதன் கழுத்து மிகவும் நீண்டிருக்கும். அதன் கால்களும் மிக நீளமானவை. ஆனல் அதன் வால் மிகவும் குட்டையானது. ஒட்டகத்தின் முகமும் பார்ப்பதற்கு விகாரமாக நீண்டிருக்கும்.

4. ஒட்டகம் ஒரு சாகபட்சணி. மாமிசம் தின்ருத பிராணிக்குச் சாகபட்சணி என்பது பெயர். ஒட்டகத்திற்கு வேப்பிலை தின்பதில் பிரியம் அதிகம். தழைகளையும் முட்புதர்களில் உள்ள இலைகளையும் அது தின்னும். அதன் பாதம் வட்டமாகப் பரந்து இருக்கும். அதன் முதுகில் உயர்ந்த திமில் இருப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

5. ஒட்டகத்திற்குப் பாலைவனக் கப்பல் என்பது பெயர். அது பாலைவனங்களைக் கடப்பவர்கட்கு வாகனமாக உதவுகிறது. பாலைவனம் என்பது நீரற்ற வறண்ட பிரதேசம். அது மிகப் பரந்திருக்கும். சிற்சில இடங்களில் மட்டும் சிறிய நீர் ஊற்றுள்ள புல்வெளிகளும், ஈச்ச மரங்களும் நிரம்பி இருக்கும். அவை பாலை வனச் சோலைகள் எனப்படும். அங்குப் பாலைவனத்தைக் கடக்கும் பிரயாணிகள் தங்கி இளைப்பாறிப் பிரயாணத்தைத்தொடங்குவார்கள். அவ்வாருன நீர் கிடைக்காத மணல் வெளிகளில் சில நாட்கள் வரை நீரும் உணவுமின்றிச் சுமைகளோடு செல்லக்கூடிய மிருகம் ஒட்டகம் ஒன்றே. இதற்குக் காரணம் யாது?

6. ஒட்டகம் உணவும் நீரும் கிடைக்கும் இடத்தில் அவற்றை நிரம்ப உட்கொள்ளும். அவ்வாறு உட்கொண்ட நீர், அதன் திமிலில் சேர்ந்து நிரம்பியிருக்கும். நீர் கிடைக்காத காலத்தில் இந்நீர் அதற்குப் பயன்படுகிறது. அன்றியும், ஒட்டகத்தின் குளம்பு அகன்று பிளவுபட்டிருக்கும். குளம்பின் அடிப்பாகம் கெட்டியான மெத்தை போல இருக்கும். இதனுல் மிகப் பெரிய மிருகமாகிய ஒட்டகம் மணல் வெளியில் நடக்கும்போது, அதன் குளம்புகள் மணலில் அதிக ஆழம் புதைவதில்லை.

7. ஒட்டகத்தை அராபியர் போற்றி வளர்ப்பார்கள். நாம் குதிரையை வளர்ப்பது போல அவர்கள் ஒட்டகத்தை அன்பாய் வளர்ப்பார்கள். அவர்கள் அதன் மாமிசத்தை உண்பார்கள்; பாலேக் குடிப்பார்கள். எகிப்து நாட்டிலும், அரேபியாவிலும் ஒட்டகப் படைகள் உண்டு. மத்திய ஆசியாப் பாலேவனங்களிலும் ஒட்டகம் அதிகம். அங்குக் காணப்படும் ஒட்டகத்துக்கும் அரேபியாவில் காணப்படும் ஒட்டகத்துக்கும் சில வேறுபாடுகள் உண்டு. அராபிய ஒட்டகத்தின் கால்கள் மிக நீண்டிருக்கும். அதன் முதுகில் ஒரே

ஒரு திமில் இருக்கும். ஆசியப் பாலேவனத்து ஒட்டகத்தின் முதுகில் இரண்டு திமில்கள் இருக்கும். அதன் கால்களும் பருத்துக் குட்டையாக இருக்கும். ஒட்டகத்தினிடம் ஒரு மடமைக் குணம் உண்டு. ஒட்டகத்தின்மீது பெரும் பாரங்களே ஏற்றும்போது அது மண்டி இட்டுப் படுத்திருக்கும். சுமை முழுதும் ஏற்றிய பிறகு, ஒரு மணல் மூட்டையையும் அதன்மீது ஏற்றுவார்கள். பின் அதற்குத் தெரியும்படியாக அந்த மணல் மூட்டையைத் 'தொப்'பென்று கீழே தள்ளுவார்கள். ஒட்டகம் தன்மீது ஏற்றிய சுமைகள் எல்லாம் இறக்கப்பட்டு-

விட்டன என்று மனமகிழ்ந்து எழுந்து நடக்குமாம். என்னே அதன் அறியாமை! உண்மையில் ஒரு அராபியர் குடும்பமும், அக்குடும்பத்துச் சாமான்களும் தன் முதுகின்மேல் இருப்பதை அது அறிவதில்லை.

அரும்பதங்கள்: உற்று நோக்கு, அச்சம், விகாரம், படைத்தல், விசித்திரம், புலப்படும், சாகபட்சணி, புதர், திமில், வாகனம்.

பயிற்சி

1. விடை எழுது:

அ. ஒட்டகம் பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?

ஆ. ஒட்டகம் எவற்றைத் தின்னும்?

இ. ஒட்டகத்துக்கு வழங்கும் பெயர் யாது? ஏன் அப்பெயர் வழங்குகிறது?

ஈ. அராபிய ஒட்டகத்துக்கும் மத்திய ஆசியப் பாலைவனத்து ஒட்டகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?

2. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது.

அச்சம்-விகாரம்-புலப்படும்-புதர் - பிரயாணிகள் - நிரம்பபதிகிறது.

3. கோடுள்ள இடங்களைத் தக்க சொற்களால் நிரப்பு:

அ. அவற்றை——நோக்குங்கள்.

(கண்டு, பார்த்து, உற்று.)

ஆ. உலகில் வாழ்வன யாவும்——படைக்கப்பட்டவை.

(மனிதனுல், கடவுளால், மந்திரத்தால்.)

இ. ஒட்டகம் பாலைவனங்களை——உதவுகிறது.

(செல்வதற்கு, போவதற்கு, கடப்பதற்கு.)

ஈ. தண்ணீர் அதன்——சேர்ந்திருக்கும்.

(வாயில், வயிற்றில், திமிலில்.)

14. பாலைவனத்து மக்கள்

1. **ஆப்பிரிக்கா** என்பது ஒரு பெரிய கண்டம். அதில் **சகாரா** என்னும் பாலைவனம் இருக்கிறது. அப் பாலைவனத்தில் பழுப்பு நிறமும், வெண்மை நிறமுமுடைய மணலையே எங்கும் காணலாம். பாலைவனம் என்பது சமமாக இராது. அங்கு மேடு பள்ளம், பாறைகள், குன்றுகள் என்பன உண்டு. நடுப்பகலில் உஷ்ணம் அதிகமாக இருக்கும். ஆதலால் காற்றும் நிலமும் வறட்சியானவை. பல வருஷங்கள் சேர்ந்தாற் போல மழையே பெய்யாமலும் இருக்கும். பல மைல் தொலைவு மணலும் பாறையுமே தோன்றும். இவ்விடங்களில் தண்ணீர் கிடைப்பது அருமை.

2. சகாராவில் அடிக்கடி மணற் காற்று வீசும்; காற்று நெருப்புப்போலச் சுடும். சுடுநெருப்புப் போன்ற மணல், கண்ணிலும் காதிலும் புகுந்து வெம்மையை உண்டாக்கும் ; தொண்டை வறண்டுவிடும். இந்த நிலையில் மனிதன் தப்பும் வழி ஒன்றே ஒன்றுதான். அவன் பூமியில் படுத்துக்கொண்டு, ஆடையால் தன் தலையைப் போர்த்துக் கொள்ளவேண்டும்.

3. பாலைவனத்திலும் சில இடங்களில் நீரூற்றுக்கள் இருக்கும். அவற்றைச் சுற்றிலும் தோட்டங்களும், வயல்களும் இருக்கும். தானியங்களும் பயிராகும். பாலைவனத்தில் வளப்பமுள்ள இப்பகுதியைப் **பாலைவனச் சோலைகள்** என்பர். இதனை ஆங்கிலத்தில் **'ஓயஸிஸ்'** என்பர். இப்பாலைவனப் புற்றரைகள் ஆங்காங்கு இல்லாவிட்டால் மனிதர் பாலைவனத்தைக் கடத்தல் இயலாத செயலாகும்.

4. பாலைவனத்தில் வாழும் அராபிய மக்கள் இரு வகை வாழ்க்கை உடையோர். ஒரு வகையினர் பாலைவனப்புல்வெளிகளில் வசிப்பவர். மற்றொரு வகையினர் பாலைவனத்தில் நாடோடி மக்களாய் வசிப்பவர். பாலைவனப் புல்வெளிகளில் ஆடுமாடுகள் வளர்க்கப்படுகின்றன. தினை, சோளம், ஈந்து முதலியவை அங்குப் பயிர் செய்யப்படுகின்றன. அங்கு வசிக்கும் மக்கள் விவசாயிகளும், வியாபாரிகளும் ஆவர். பாலைவனத்தைக் கடக்கும் பிரயாணிகளிடம் பொருள்களை வாங்குவதும் விற்பதும் அவர்கள் தொழில்.

5. பாலைவனப் புல்வெளிகளில் உள்ள வீடுகள் சுடப்படாத செங்கற்களாலேனும், களிமண்ணாலேனும் கட்டப்பட்டிருக்கும். அவ்வீடுகளுக்கு ஜன்னல்கள் இரா. ஆதலால் உட்பக்கம் இருட்டாக இருக்கும். ஈந்தின் ஓலை வேய்ந்த குடிசை வீட்டில் எளிய மக்கள் வசிப்பார்கள். ஈந்து அவர்களுக்குப் பல வகையில் பயன் படும் மரமாகும். தென்னையும் பனையும் போன்று ஈந்தும் உயரமாக வளரும். அதில் ஈச்சம்பழம் குலைகுலையாய்க் காய்த்திருக்கும். அராபியர்களுக்கு மிகப் பிரியமான முக்கிய உணவு ஈச்சம்பழம். அதை அவர்கள் பச்சையாகவும், காய வைத்தும், சமைத்தும் சாப்பிடுவார்கள்.

6. அராபியர்களுக்குப் பல வகைகளில் பயன் படும் மிருகம் ஒட்டகம். ஒட்டகத்திற்குப் பாலைவனக் கப்பல் என்பது பெயர். மணற்காற்று வீசும்பொழுது மூக்கை மூடிக்கொள்ளும் சக்தி அதற்கு உண்டு. கண் இமை பெரிதாக இருப்பதால், அது கண்களையும் மூடிக்-



கொள்ளும்; அவ்விமைகள் சூரிய ஒளியையும் தடுக்கும். ஒட்டகத்தின் மாமிசத்தை அராபியர் உண்பர்; அதன் பாலைக் குடிப்பர். அதன் மயிரைக் கொண்டு கூடாரத்துக்கு வேண்டிய துணியை நெய்து கொள்வர்; கயிறும் திரித்து உபயோகிப்பர்.

7. அராபியர் கூடாரங்களில் வசிப்பர். அக்-கூடாரத்தில் ஒரு பகுதி பெண்களுக்கும், மற்றொரு பகுதி ஆண்களுக்கும் என இரு பகுதிகள் உண்டு. அவர்கள் ஒட்டகத்தின் தோலால் செய்த பைகளில் நீரை நிரப்பி எடுத்துக்கொண்டு செல்வார்கள். பெண்-

களும் குழந்தைகளும் ஒட்டகத்தின்மீது செல்வார்கள். வேலைக்காரர்கள் நடந்து செல்வார்கள்; தலைவன் குதிரைமீது செல்வான். அரபு நாட்டுக் குதிரை தைரிய முடையது; அழகானது; வேகமுள்ளது; கம்பீரமானது. ஓர் அராபியன் எந்தப் பொருளை வேண்டுமாயினும் கொடுத்து விடுவான்; தனது குதிரையை மட்டும் கொடுக்க இசையான். குதிரையைக் கூடாரத்திற்குள் கட்டிக் காப்பான். அராபியர்கள் அடிக்கடி சண்டை யிடுவார்கள். வழிபறித்து வாழ்வதும் சில அராபியரின் தொழில்.

அரும்பதங்கள் : பாலைவனம், வறட்சி, தொலைவு, அருமை, போர்த்துக்கொள், நீரூற்று, பாலைவனச் சோலை, அராபியர், செங்கல், வேய்ந்த, இமை, சேமித்து.

பயிற்சி

1. விடை எழுதுக:

அ. பாலைவனம் எப்படி இருக்கும் ?

ஆ. உலகில் உள்ள பாலைவனங்களிற் பெரியது எது?

இ. பாலைவனச் சோலை என்பது யாது ?

ஈ. அங்கு மக்கள் எப்படி வாழ்கிறார்கள் ?

உ. பாலைவனக் கப்பல் என்பது எது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன ?

ஊ. அராபியரைப் பற்றி நீ அறிந்தவை யாவை?

2. கீழ் வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக.

பாலைவனம்-வெண்ணிறம்-வறட்சி-வீசு - தொண்டை-நீரூற்று-வாழ்க்கை-நாடோடி.

15. திருக்குற்ருலம்

கந்தன்:—நீ சென்ற விடுமுறைக்கு எங்குச் சென்றிருந்தாய்? நான் உன்னுடன் எந்த ஊருக்கேனும் சென்று வரலாம் என்று எண்ணினேன்.

வேலன்:—கந்தா, எங்கள் மாமா வந்திருந்தார். அவர் என்னைத் திருக்குற்ருலத்திற்கு அழைத்துச் சென்ருர். அவர் காலையில் வந்தவர், அன்று மாலையே புறப்பட்டுவிட்டதால், நான் உன்னிடம் சொல்லிவிட்-டுப்போக முடியவில்லை.

கந்தன்:—அப்படியா! நல்லது. நீ திருக்குற்ருலத்தில் பார்த்தவற்றை எனக்குச் சொல்.

வேலன்:—அவ்வாறே சொல்கிறேன் கேள். திருக் குற்ருலம் என்பது ஒரு சிவஸ்தலம். அது திருநெல்-

வேலி ஜில்லாவில் இருக்கிறது. அது தமிழ் நாட்டி-லுள்ள சுக வாச ஸ்தலம்.

இத்தலத்தில் குறும்பலா மரத்தடியில் சிவபெரு-மான் எழுந்தருளியிருக்கிறார். அதனால் இத்தலத்தில் இருக்கும் சிவபெருமானுக்குக் குறும்பலாநாதர் என்-பது பெயர். தேவியின் பெயர் குழல்வாய் மொழியம்மை என்பது. இத்தலத்தில் நடராச பெருமானுக்கு ஒரு சபை உள்ளது. அதனைச் **சித்திர சபை** என்பர். இத் தலம் திருஞான சம்பந்தர் என்னும் பெரியாரால் பாடப் பெற்றது. இத்தலத்தைப் பற்றித் **திரிகூடராசப்பக் கவிராயர்** என்பவர் பல நூல்கள் எழுதியுள்ளார்.

மேற்கு மலைத்தொடரும், கிழக்கு மலைத்தொடரும் நீலகிரி என்னும் இடத்தில் சந்திக்கின்றன. நீலகிரிக்-குத்தெற்கே, மேற்கு மலைத்தொடர், கடற்கரை ஓரமாய் குமரி முனை வரையிலும் செல்கிறது. நீலகிரிக்குத் தெற்கே உள்ள மேற்கு மலைத்தொடர் **பழனிமலை, யானை மலை, ஏலமலை, அகத்திய மலை** என்று பலபெயர் களுடன் விளங்குகிறது.

திருக்குற்றாலம் அகத்திய மலையின் அடிவாரத்-தில் அமைந்து உள்ளது. இங்கு இதற்குக் குற்றால மலை என்பது பெயர். இம்மலை மூன்று சிகரங்களையுடையது. ஆதலால் குற்றால மலைக்குத் திரிகூடமலை என்னும் பெயரும் வழங்குகிறது. திரிகூட மலையில் **சித்திரா நதி** என்னும் ஒரு யாறு உற்பத்தியாகி ஓடிவருகிறது. அது அம்மலையில் பதினாறு மைல் ஓடிவந்து, **தேனருவி, சண்பகாடவி அருவி, பொங்குமாக் கடல், சிற்றருவி,** வடவருவி என்று ஐந்து அருவிகளாக விழுகிறது. வட-வருவியில்தான் பெரும்பாலோர் நீர் ஆடுவர். இதுவே **குற்றால நீர்வீழ்ச்சி** என்பது.

மலையிலுள்ள மூலிகைகளில் இந்த அருவி நீர் ஊறி வருவதால், பலவகைப் பிணிகளைப் போக்க வல்லதாய் இருக்கிறது. பல இடங்களிலிருந்து மக்கள் ஆனி, ஆடி மாதங்களில் இங்கு நீராட வருவார்கள். தென் மேற்குப் பருவக்காற்று வீசி இம்மலைக்கு மறுபுறத்தில் உள்ள மலையாள நாட்டில் அதிக மழை பெய்யும் பொழுது, இங்கும் சிறிது மழை பெய்யும். இதனை இங்குள்ளார் சாரல் மழை என்பர். இக்காலத்தில் அருவியில் நீர் அதிகமாகவும் தெளிவாகவும் விழும். இது இங்கு நீராடுவதற்கு ஏற்ற காலமாகும்.

குற்றாலமலையின் காட்சி இனிமையானது. அங்குப் பலவகைப்பட்ட மரம் செடி கொடிகள், நிறத்தாலும் வடிவத்தாலும் வேறுபட்ட மலர்களோடு விளங்கும். குரங்குகளின் விளையாட்டுக்கள், பறவைக் கூட்டங்கள் முதலியன மனத்துக்கு இன்பம் தருவனவாகும்.

அருவியில் நீராடும்பொழுது மக்கள் விழுந்து விடாதபடி பிடித்துக்கொண்டு நீராடுதற்கு இரும்புக் கம்பிகள் நட்டுள்ளார்கள். இதன் அருகில் உள்ள கோயிலும் மிகப் பழமையானது. தமிழின் தலைவரான அகத்தியர் வாழ்ந்த பெருமையையும் உடையது. இத்தகைய திருக்குற்றாலத்தை நேரில் கண்டால்தான் அதன் சிறப்பு விளங்கும்.

கந்தன் : வேலா, உனக்கு மிகவும் நன்றி! திருக்குற்றாலத்தின் சிறப்பை ஒருவாறு உணர்ந்தேன். இந்த விடுமுறைக்குத் தவறாமல் அங்குப் போவோம். அதனை நேரில் கண்டு களிப்போம்.

அரும்பதங்கள் : விடுமுறை, சிவஸ்தலம், வாசஸ்தலம், குறும்பலா, சந்திக்கின்றன, அடிவாரம், மூலிகை, நீராடல், இன்பம், அருவி, ஒருவாறு, களிப்போம்.

பயிற்சி

1. விடை எழுது:

அ. திருக்குற்றாலம் எங்கே இருக்கிறது?

ஆ. திருக்குற்றாலத்தில் உள்ள சிவஸ்தலத்தின் பெருமைகள் யாவை?

இ. திருக்குற்றாலத்தைப் பற்றி நூல்கள் இயற்றியவர் யார்?

ஈ. நீலகிரிக்குத் தெற்கே மேற்கு மலைத் தொடரில் உள்ள மலைகளின் பெயர்கள் யாவை?

உ. குற்றால மலையிலிருந்து தோன்றும் அருவிகள் யாவை?

ஊ. குற்றால மலையின் சிறப்புக்கள் யாவை?

2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:

அ. கோடையில் நமது நாட்டில்——அதிகம்.

(குளிர், பனி, வெப்பம்.)

ஆ. மேற்கு மலைத் தொடரும், கிழக்கு மலைத்தொடரும் ——என்னும் இடத்தில் சந்திக்கின்றன.

(கோடைக் கானல், ஏலமலை, நீலகிரிமலை.)

இ. குற்றாலம்———மலையில்———இருக்கிறது.

(யானை, அகத்தியர், உச்சியில், அடிவாரத்தில்.)

ஈ. அருவி நீர்——ஊறி வருகிறது.

(தரையில், மூலிகையில், மணலில்.)

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

கோடை வாசஸ்தலம், நீராடல், அடிவாரம், களிப்பு, மூலிகை, அருவிநீர், உற்பத்தி, சந்திப்பு.

16. ஆறு

கல்லும் மலையும் குதித்துவந்தேன்;—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்;—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து வந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்;—மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்(து)அழல் ஆற்றிவந்தேன்;—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டு வந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்;—அங்கென்
ஆசை தீரவிளை யாடி வந்தேன். 3

ஏருத மேடுகள் ஏறிவந்தேன்;—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்;—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்;—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்;
நேயம்உறப் புன்செய்க் காட்டிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன். 5

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்;—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராக வுஞ்சென்று பாய்ந்து வந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்;—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்;
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்;—மிகத்
தேனும் தினையுமே சேர்த்து வந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்;—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும்; எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா. 8

—**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

அரும்பதவுரை :

1. *விரிந்த—அகன்ற, தவழ்ந்து—நகர்ந்து.*
2. *அணை—அணைக்கட்டு, கண்ணறை—மதகு, மடைச்சீப்பு—மடைவாய்.*
3. *அழல்—வெப்பம், ஆற்றி—குளிரச் செய்து, பொழில்—சோலை.*
4. *ஏருதமேடு—நீர்ஏறிப் பாய முடியாத மேட்டுநிலம்.*
5. *ஆயிரம்கால்—ஆற்றின் பல கிளைகள், நேயம்—நட்பு.*
6. *சீனி—சர்க்கரை.*
7. *தேங்கனி—தேங்காய், வாசமலர்—நறுமணமலர்.*
8. *ஆழி இறைவன்—வருணன்.*

17. மௌன வாசிப்பு—II

கீழ் வருவதை மனத்திற்குள் படித்து வினாக்களுக்கு விடை எழுது.

1. மேல் நாட்டில் ஓர் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். அக்கால முறைமைப்படி இரண்டு சகோதரர்கள் அவரிடம் அடிமைகளாக இருந்தார்கள். அடிமைகள் தங்கள் முயற்சியால் பணம் சம்பாதித்துத் தம் எஜமானருக்குக் கொடுத்து விடுதலை பெறலாம். அந்த அடிமைகள் இருவரில் இளையவன் புத்திசாலி; சுறுசுறுப்புள்ளவன்; நல்ல உழைப்பாளி. மூத்தவன் அவனுக்கு நேர் மாறானவன்.

2. இளையவன் எஜமானர் வீட்டில் கிடைத்த ஓய்வு நேரங்களில் உழைத்து ஆயிரம் பவுன் சேர்த்து விட்டான். இளையவன் மனத்தில் அண்ணனை அடிமை நிலையினின்றும் விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனால் அவன் ஆயிரம் பவுன்களையும் எடுத்துக்கொண்டு எஜமானரிடம் சென்றான்; ஆயிரம் பவுனை எஜமானன் முன் வைத்தான்; தன் அண்ணனை அடிமை நிலையினின்றும் விடுதலை செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

3. அதனைக் கண்ட எஜமானருக்குப் பேராச்சரியம் உண்டாயிற்று. அச்செல்வர் இளையவனுடைய உழைப்பையும் புத்திசாலித்தனத்தையும் எண்ணி வியந்தார். அவர் அவனை நோக்கி, "நீ உன்னை விடுதலை செய்துகொள்ளாமல், ஏன் உன் உழைப்பால் சேர்த்த பணத்தைக் கொடுத்து, உன் அண்ணனை விடுவிக்கக் கேட்கின்றாய்?" என்று கேட்டார்.

4. அதற்கு இளையவன் எஜமானரைப் பணிந்து, ''ஐயனே, என் அண்ணன் என்னைப்போல அவ்வளவு புத்தியுடையவனும் அல்லன்; உழைப்பாளியும் அல்லன். அதிகமாகக் கஷ்டப்பட்டு வேலை செய்வது என்பது அவனால் ஆவதில்லை; அவனுக்கு உடல் நிலையும் இடம் தருவதில்லை. இந்தச்சமயத்தில் அவனை விடுதலையடை-யும்படி செய்யாவிட்டால், அவன் வாழ்நாள் முழுவதும் அடிமையாகவே இருக்க நேரிடும். ஆதலால் அவனை விடுவிப்பதை முதல் கடமையாகக் கொண்டேன். பின், நான் இன்னும் சிறிது காலத்திற்குள் என் புத்திசாலித்-தனத்தாலும், உழைப்பாலும் என்னை விடுதலை செய்து கொள்வேன்,'' என்று பணிவாகக் கூறினான்.

5. அந்தப் பதிலைக் கேட்ட செல்வரின் மனம் கரைந்தது. அச்செல்வர், சகோதரருக்குள் இருந்த அன்பையும், ஒற்றுமையையும், தன்னலம் இல்லாத தன்மையையும் கண்டு, அவர்களிடம் அன்பு கொண்டு, அப்பொழுதே இருவரையும் விடுதலை செய்-தார். அப்பணத்தையும் அவர்களுக்கே கொடுத்தார். சகோதரர் இருவரும் ஒற்றுமையோடு அப்பணத்தைக் கொண்டு தொழில் ஒன்றை நடத்தி இன்பமாய் வாழ்ந்-தார்கள்.

வினாக்கள்

1. அடிமைகளுள் இளையவன் எப்படிப்பட்டவன்?
2. மூத்தவன் எப்படிப்பட்டவன்?
3. இளையவன் சேர்த்த பணத்தை என்ன செய்தான்?
4. அடிமைகளைப்பற்றி எஜமானர் என்ன நினைத்தார்?
5. எஜமானர் அடிமைகளுக்குச் செய்த நன்மை யாது?



18. மான வீரன்

[நாடகம்]

முதற்களம்

இடம் :—உறையூரில் சிறைச்சாலே
காலம் :—பகல்
பாத்திரங்கள் :—சிறைக் காவலர் இருவர், சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை

சேரன் :—[சிறைக்குள்ளிருந்து தனக்குத் தானே பேசிக் கொள்கிருன்.]

ஆ! என் வாழ்க்கையை என்னென்று கூறுவது! சேரர் குலம் எவ்வளவு பெருமையுடையது. அஃது இமயத்தில் வில்லேப் பொறித்த வேந்தர் குலம்! வடநாட்டு ஆரிய மன்னரைப் போரில் வென்ற வீரம் நிறைந்த வானவர் குலம்! கண்ணகியின் உருவம் சமைக்கக் கனகவிசயர் தலேயில் கல்லே ஏற்றிக் கொண்டு

வந்த செங்குட்டுவன் பிறந்த குலம்! அத்தகைய சிறந்த குலத்தில் பிறந்த நான் இன்று எந்த நிலை-யில் இருக்கின்றேன்? சோழனது சிறைச்சாலையில் அல்-லவா அடைப்பட்டிருக்கின்றேன். என்னை யார் இனி மதிப்பார்? வீரர் குலத்தில் தோன்றிய நான் அந்தக் குலத்திற்கு அழியா மாசினைத் தேடி வைத்துவிட்டேனே! எனது குலப் பெருமை என்னால் அல்லவா பழுதுபட்டது! புலவர் பொய்கையார் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? என்னை என் குடிமக்கள் எவ்வாறு தூற்று வார்களோ, ஆ! நினைக்க நினைக்க என் மனம் பதறு கின்றதே!

காலையில் கொண்டு வைத்த உணவு அதோ கிடக்-கின்றது! சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய்க்கு இடும் சோறு போன்றதல்லவோ அது! அதனை உண்டு உயிர் வாழ்ந்திருப்பதா? என் உயிர் என் உடலிலிருந்து தானாகவே நீங்க வேண்டாவா? இன்னும் அது என் உடலில் தங்கி இருக்கின்றதே!

'மானங் கெட்டவனே, நீயும் ஓர் ஆண் மகனா? என்று என் மனம் என்னைக் கேட்கின்றது. என்ன பதில் கூறுவேன்? ஆ? நா வறள்கின்றது. *(சிறைக் காவலனைப் பார்த்து)* காவல, குடிக்க நீர் வேண்டும்.

காவலாளன் :—அவசரமோ! சற்றுப் பொறு. என் நண்பன் வந்திருக்கிறான். அவனிடம் பேசிவிட்டுப் பிறகு கொண்டு வருகிறேன்.

[காவலாளன் பேசிவிட்டு மெல்லச் செல்கிறான். அவன் காலம் தாழ்த்துவதைக் கண்டு, சேரன் மனத்தில் சினமும் அவமானமும் தோன்றுகின்றன.]

[திரை]

இரண்டாம் களம்

இடம் :—உறையூரிலுள்ள சிறைச்சாலை
காலம் :—பகல்
பாத்திரங்கள் :—சேர மன்னன், சிறைக் காவலன்

[சிறைக் காவலன் ஒரு செம்பில் நீர் கொண்டுவந்து இடக்கையால் கொடுக்கிறன்.]

காவலன் :—இந்தாய்யா, தண்ணீர்.

சேரன் :—(நீரை வாங்கிக் கொண்டு, தனக்குள்,)

இக் காவலனுக்கு எவ்வளவு அலட்சியம்! இடக் கையால் அல்லவா நீர் தருகிறன்! அத்துடன் நின்றனு? மரியாதை யின்றியும் பேசுகிறன்! என்னை அவன் மன்னனுக மதிக்க வில்லையே! என் நிலை தாழாமல் இருந்திருந்தால் இவன் என்முன் எவ்வாறு நின்று நடுங்குவான்!

ஒருவன் தன் நிலையினின்றும் தாழ்தல் கூடாது. தாழ்வு வந்தால் உயிர் வாழ்தல் கூடாது. அதுவே மானியின் செயல் என்று பெரியோர் கூறுவர். 'மானம்

அழிந்தபின் வாழாமை முன் இனிதே'!—என்ன அருமை யான பொன்மொழி! ஆ ! இவற்றிற்கெல்லாம் விளக்க மான உரையைப் புலவர் பொய்கையார் உரைக்கக் கேட்டேனே ! கேட்டு என்ன பயன்?

இந்த நீரைக் குடித்து உயிரை வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன் ? சிறையிலிருந்து மீண்டால் எங்குச்செல்வது? நாட்டுக்கும், குலப்பெருமைக்கும் கேட்டை விளைவித்துவிட்டு,வெட்கமின்றி மீண்டும் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிவதா ? அவ்வாறு ஆளச்சென்றால் நாட்டிலுள்ளார் என்ன நினைப்பர் ? என் சொல்லுக்கு மதிப்பு உண்டோ ?



ஏன் இத்தனை எண்ணங்கள் ! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. வீரன் சாவுக்கு அஞ்சுவதா ? இந்த நீரும் வேண்டா ; என் உயிரும் வேண்டா—எனக்கு இனி வாழ்க்கையும் வேண்டா—ஆ !

[செம்பினைத் 'தொப்'பென்று எறிந்து சேரன் 'திடும்' என விழுந்து இறக்கிறான். சேவகன் சத்தம் கேட்டு வருகிறான். சேரன் இறந்து கிடத்தலைப் பார்க்கிறான்]

காவலன் :—ஆ ! செம்பு உருண்டு கிடக்கிறதே ! நீர் சிந்திக் கிடக்கின்றதே ! சேரன் பிணமாய்க் கிடக்கின்றனே ! ஆ ! நீர் கேட்டான் ; கொண்டு வந்து கொடுத்தோம். இவன் நீரைக் குடிக்கவில்லையே. நீர் முழுவதும் சிந்திக் கிடக்கின்றதே. ஆ ! இவன் மான முள்ளவன். இவன் காலையில் வைத்த உணவையும் உண்ணவில்லை. சிறைக்குள்ளே சுற்றிக் கொண்டு ஏதேதோ தனக்குள் பிதற்றிக் கொண்டிருந்தான். இவன் மனம் உடைந்துவிட்டது! வீரன் அல்லவா! சரி, இதை நாம் மன்னனுக்கு அறிவிப்போம்.

[திரை]

மூன்றும் களம்

இடம் :—*உறையூரில் சோழன் அரண்மனை* **காலம் :—***பிற்பகல்* **பாத்திரங்கள் :—***புலவர் பொய்கையார், அரண்மனை வாயிற்காவலன், சோழன் கோச்செங் கணான், சிறைக்காவலன்.*

பொய்கையார் :—வாயிற்காவல ! பொய்கையார் என்னும் புலவர் வந்திருப்பதாக உன் அரசனுக்கு அறிவி.

வாயிற்காவலன் :—ஐயா, இங்குச் சற்றுத் தங்கி இருங்கள்.

[அரசனது கொலு மண்டபம் அடைந்து வாழ்த்தி வணங்கி]

மன்னர் மன்ன ! பொய்கையார் என்னும் புலவர் அரசரைக் காண அரண்மனை வாயிலில் வந்துள்ளார் ! உத்தரவு யாதோ ?

சோழன் :—காவல! விரைந்து சென்று அவரை அழைத்து வா, தாமதிக்காதே.

[காவலன் விரைந்து வந்து, புலவரை உள்ளே விடு கிருன். பொய்கையார் கொலு மண்டபத்தை அடைகிருர்.]

சோழன் :—*(எழுந்து நின்று வணங்கி)* வருக! புலவீர் வருக! தாங்கள் இங்கு வந்தது என் பாக்கியமே. *(ஆசனத்தைக் காட்டி)* இதில் அமருங்கள்.

பொய்கையார் :—மன்ன! உனக்கு வெற்றியுண்டாகுக! அவசரமாக உன்னைக் காண வந்தேன், இந்த அவசரத்திலும் உன்மீது நாற்பது பாடல்கள் கொண்டதான 'களவழி நாற்பது' என்ற நூலைப் பாடி வந்துள்ளேன். கேட்டருள்க.

சோழன் :—எனது பாக்கியம்!

[பொய்கையார் களவழி நாற்பதைப் படித்துக் காட்டல்]

ஆ என்ன சுவை! என் போர்ச் சிறப்பையன்ரே கூறியுள்ளீர்! உங்கள் ஆசியே எனக்கு வெற்றியளித்தது. நீங்கள் வேண்டும் பரிசில் யாதோ?

பொய்கையார் :—நான் கேட்பதை நீ தருவது இயலாது என்று எண்ணுகின்றேன்.

சோழன் :—ஏன் அவ்விதம் கூறுகிறீர்? எதைக் கேட்டாலும் தருவேன். சொன்ன சொல் தவற மாட்டேன்.

பொய்கையார் :—நீ தவருய். ஆனல்......

சோழன் :—ஆனல் என்ன?

பொய்கையார் :—அவன் உயிரை வைத்திருக்க வேண்டுமே!

சோழன் :—எவன்?

பொய்கையார் :—சேரன்தான். சேரன் பெருஞ் சேரல் இரும்பொறை என் மாணவன். அவன் சிறந்த வீரன்; தமிழை நன்கு உணர்ந்தவன். அவன் மான உணர்ச்சி மிக்கவன். சிறைப்பட்டவுடனே உயிரை விட்டிருப்பான்! இருந்தாலும் ஆசை வெட்கம் அறியாதல்லவா? சோழப் பெருந்தகையே, நான் உன்னை வேண்டுவது பொன் அன்று; பொருளும் அன்று; என் மாணவன் சேரனது விடுதலையே. அவனை விடுதலை செய்தருள்க.

சோழன் :—அப்படியா! இதோ விடுவிக்கின்றேன். நாம் இருவரும் சிறைச்சாலைக்குச் சென்று சேரனை அழைத்துக்கொண்டு வருவோம் வாருங்கள்.

[சோழனும் பொய்கையாரும் சிறைச்சாலை நோக்கிப் போகின்றனர். இடை வழியில் சிறைக் காவலன் ஓடோடி வந்து சோழனை வாழ்த்திப் பணிந்து, சேரன் இறந்த செய்தியை அறிவிக்கிறான்.]

பொய்கையார்:--வளவ! கேட்டாயா? நான் நினைத்தது போலவே ஆயிற்று. தம் நிலைக்குத்தாழ்வு வந்தால்

உயிர் வாழ்வரோ தக்கோர்? சேரன் மான வீரன் அல்லனோ! ஆ! பெறலரும் மணியை இழந்தேனே! இக் கொடுமையைக் காணும் விதி எனக்கு நேர்ந்ததே!

சோழன் :—விரைந்து வாருங்கள்; வருந்த வேண்டா. எல்லாம் விதியின் செயல். சேரனது உடலம் அரசர்க்குரிய மரியாதைகளுடன் அவன் நாட்டிற்கு அனுப்பப்படும். இறந்தவரைக் குறித்து வருந்திப் பயன் என்ன? நீர் அறியாதது ஒன்றும் இல்லை. இனிச் செய்ய வேண்டியதைக் கவனிக்க வேண்டுகிறேன். புலவர் பெருமானே, நும் மாணவனுக்குக் கேடு சூழ்ந்தவன் ஆனேன் நான். இப்பழி நீங்க, நான் எழுபது ஆலயங் கள் கட்டுவிப்பேன். புலவரே, தாங்கள் சேர நாட்டிற்குச் சென்று, சேரன் உடலை அடக்கம் செய்துவிட்டு இங்கு என்னுடன் தங்கள் வாழ்நாள் முழுவதும் தங்கியிருக்க வேண்டுகின்றேன்.

பொய்கையார் :—மன்னவ! வேறென்ன செய்யக் கூடும்? மான வீரன் உடலை விரைவில் அனுப்புக. நான் விடைபெற்றுக் கொள்கின்றேன்.

சோழன் :—புலவர் சிங்கமே! அவ்வாறே செய்கிறேன். நான் வேண்டிக்கொண்டபடி தாங்கள் என்னுடன் இருந்தருள வேண்டும்.

பொய்கையார்:—அதுவும் இறைவன் திருவுள்ளம். சென்று வருகிறேன்.

[திரை]

[பொய்கையார் சேர நாடு நோக்கிச் சென்றார். சோழன் அரண்மனைக்குச் சென்றான். சேரனது உடல், ஆடை அணிகளால் அலங்கரிக்கப்பட்டு, தேரில் வைக்கப்பட்டு நால் வகைச் சேனைகளும் சூழ்ந்து செல்லச் சேர நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டது.]

அருஞ்பதங்கள் : சிறை, பொறித்த, வேந்தர், சமைக்க, மாசு, பதறுகிறது, மானம், அலட்சியம், தாழ்வு, எண்ணம், பிதற்று, கொலுமண்டபம், பாக்கியம், கேட்டருள், பிணிக்கப்பட்ட.

பயிற்சி

1. விடை எழுது :

அ. சிறைப்பட்டிருந்தவன் யாவன்?

ஆ. அவனைச் சிறையில் வைத்தவர் யார்?

இ. சிறையிலிருந்தவன் ஏன் உயிரை விட்டான்?

ஈ. அவனைத் தேடிவந்த புலவர் எவர்?

உ. அவர் பாடிக் கொண்டுவந்த நூல் யாது?

2. எதிர்ப்பதங்கள் எழுதுக :

மானம்×
அலட்சியம்×
தாழ்வு×
வேண்டும்×
வருத்தம்×

3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

வாழ்க்கை–வீரம்–குலம்–மதிப்பார்–பழுதுபட்டது –பிணிக்கப்பட்ட–பாக்கியம்–மானம்–அலட்சியம்–தாழ்வு.

19. நீரைக் கடத்தல்

1. வாழ்க்கைக்குரிய வசதிகள் உள்ள இடத்தில் குடியேறி வசிப்பது மக்களின் இயல்பு. ஆறுகள், ஏரி-கள், கடல் என்பவற்றை அடுத்துக் குடியேறி வாழ்வ-தால் சில நன்மைகள் உண்டு. பயிர்த் தொழிலுக்கு நீர் தேவை அன்ருே? நீர்நிலைகளின் அருகில் வசித்தால் பயி ரிடுவதற்கு வசதியாக இருக்கும். மேலும் நீர்நிலைகளின் அருகில் வசிப்பவர்கள் பயிர் செய்வதையன்றி, மீன் பிடித்தலையும் தம் தொழிலாகக் கொண்டனர். ஆறு, ஏரிகளைக் காட்டிலும் கடலில் மீன் பிடித்தல் பெரு வரு-வாயை அளிப்பதாகும். முற்காலத்தில் நீர்நிலைகளின் கரைகளிலிருந்தும், நீரில் முடிந்தவரை இறங்கியும் மீன் பிடித்தனர்.

2. நீரில் வெள்ளம் மிகுந்து வரும் காலங்களில் அதில் பெரிய மரங்களும் மிதந்து வருதலை மக்கள் கண்டனர். எனவே, மரத்துண்டுகள் இரண்டு, மூன்-றைக்கட்டி நீரில் போட்டால் அவை மிதக்கும்; அவற்-றில் ஏறி நீரின்மேல் செல்லலாம் என்பதை அறிந்தார் கள். எனவே, கனம் குறைந்த மரத்துண்டுகள் இரண்டு மூன்றுகளைச் சேர்த்துக் கட்டி, அவற்றின் மூலம் நீரைக் கடக்க முயன்றனர். அதுவே கட்டுமரம் எனப்பட்டது. கட்டுமரத்தைத் துடுப்புக் கொண்டு, தள்ளி நீரில் செலுத்தினர்.

3. மக்கள் ஆறுகளைக் கடக்க மூங்கில்களைச் சிம்புகளாக்கிக் கூடைபோல வளைத்துக் குழிவாக அமைத்து, வெளிப்புறத்தை விலங்குகளின் தோல் களால் போர்த்திப் பரிசல் செய்து உபயோகித்தனர் ; பின்னர் மிகப் பருத்த மரத்துண்டுகளை வட்டமாகவும், நீளமாகவும் குடைந்து மிதக்கவிட்டு நீர் நிலைகளைக் கடந்தனர். வட்டமாகக் குடையப்பட்டதற்குக் குல்லா என்பது பெயர்.

4. துடுப்பால் தள்ளிச் செல்வது என்பது சிறிது தூரம் செல்வதற்கே இயலும்; நெடுந் தொலைவு செல்வதற்கு இயலாதல்லவா ? எனவே, மரங்களைப் பலகை களாக அறுத்து, உட்புறம் குழிவாக வளைத்தனர். அத்தகைய பலகைகள் பலவற்றை ஒன்றாக இணைத்துப் படகு அமைத்தனர். அதன் இருபுற ஓரங்களிலும் சிலர் அமர்ந்து துடுப்புக்களால் தள்ளி நீரைக் கடந்தனர். இதனைப் படகு என்றனர். இதற்குத் தோணி, ஓடம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவையெல்லாம் நீரில் நெடுந்தொலை செல்ல முடியாதல்லவா?

5. படகுகளில் ஏறிக் கடலில் சென்ற பொழுது, அங்குக் காற்றுக் கடுமையாக வீசுவது கண்டு, மக்கள் தங்கள் படகுகளைப் பெரிய வடிவில் அமைத்தனர்.

அதற்கு மரக்கலம் என்பது பெயர். துடுப்பால் தள்ளுதலின்றித் தானே காற்றின் உதவியால் செல்லுமாறு அந்த மரக்கலங்களுக்குப் பாய் மரங்கள் அமைத்தனர். மரக்கலத்தில் இரண்டு மூன்று கம்பங்கள் நட்டு, அவற்றில் பாயை இணைத்தனர். இக்கம்பங்கள் பாய் மரங்கள் எனப்படும். காற்று அடிக்கும் பொழுது அப்பாய் காற்றைத் தடுக்கும். அதனால் கலம் தள்ளப்-



படும். அப்பொழுது காற்று வீசும் திசையில் மரக்கலம் செல்லும். காற்றின் எதிர்ப்புறம் செல்ல வேண்டுமானால், பாய்களை இறக்கிவிட்டுப் பக்கத்துக்குப் பலராக அமர்ந்து துடுப்பைச் சுழற்றி மரக்கலத்தைத் தள்ளுவர். இதற்குப் பாய்மரக் கப்பல் என்பது பெயர்.

6. மனிதன் தன் அறிவின் வலிமையால் உலோகங்களின் பயன்களைக் கண்டறிந்தான்; இரும்பால் எல்லா வகையான பொருள்களையும் செய்து பயன் படுத்தத் தொடங்கினன். விஞ்ஞான அறிவை மனிதன் பெருக்கிப் புதிய புதிய பொருள்களைக் கண்டுபிடிக்கத் தொடங்கினன். நீராவிக்குத் தள்ளும் சத்தி உண்டு என்பதை ஜேம்ஸ் வாட்டு என்பவன் கண்டுபிடித்தான்.

ஜேம்ஸ் வாட்டு, நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்த பின்னர், ஜார்ஜ் ஸ்டீவென்ஸன் என்பவன் நீராவியைக் கொண்டு இரயில் இயந்திரம் ஓடும்படி செய்தான். அதனால் விளைந்த நலத்தை அறிந்து கப்பலை ஓட்டவும் நீராவியை உபயோகித்தனர். இத்தகைய கப்பல் **நீராவிக் கப்பல்** எனப்படும்.



7. தமிழ் நாட்டினர் மிகப்பழைய காலந்தொட்டு மரக்கலங்களில் கடல் மேல் சென்றனர் என்பது தெரிகிறது. அவர்கள் பாய் மரக் கலங்களைக் கொண்டு பிற நாடுகளை வென்றும், அவற்றோடு வாணிகம் செய்தும் செல்வம் திரட்டி வந்தனர் என்றும் அறிகிறோம். "**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**," என்பது இதனை நன்கு விளக்கும்.

நிரைக்கடத்தல்

அரும்பதங்கள்: வசதிகள், மிதந்து, கட்டுமரம், துடுப்பு, சிம்புகள், போர்க்கி, பரிசல், தல்லா, தொலைவு, குழிவு, கடந்தனர், மரக்கலம், பாய்மரம், பாய்மரக்கப்பல்.

பயிற்சி

1. விடை எழுது :

அ. ஆதிகாலத்து மக்கள் எவ்விடங்களில் அதிகமாக வசித்தார்கள்?

ஆ. ஆதிகாலத்து மக்களுக்கு நீரைக் கடந்து செல்ல முடியும் என்ற எண்ணம் எப்படித் தோன்றியது?

இ. கட்டுமரம் என்பது என்ன? அதற்கு ஏன் அப்பெயர் வந்தது?

ஈ. பாய்மரக் கப்பல் எவ்வாறு செலுத்தப்பட்டது?

உ. இக்காலத்துக் கப்பல் எதன் சக்தியால் செல்கின்றது?

2. கீழே உள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது :

கட்டுமரம் – அமர்ந்து – பயன் – நீராவி – சக்தி – நலம் – செல்வம் – திரட்டி – நன்கு.

3. எது எதனோடு பொருந்தும்?

வசதியான இடங்களில் குடியேறுவது	விலங்குகளின் தோலைக் கொண்டு செய்யப்படும்.
நீர் நிலைகளின் அருகில் வசிப்பதால்	சிறிது தூரம் செல்லவே பயன்படும்.
பரிசல் என்பது	நீராவியால் செல்கிறது.
தெப்பம் என்பது	சில நன்மைகள் உண்டு.
இக்காலக் கப்பல்	மக்கள் இயல்பு.

20. முரசுப் பாட்டு

ஊருக்கு நல்லது சொல்வேன்:—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்:
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும். 1

சாதிக் கொடுமைகள் வேண்டா;—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம். 2

தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம். 3

யாரும் பணிந்திடும் தெய்வம்;—பொருள்
யாவிலும் நின்றிடும் தெய்வம்;
பாருக்குள் ளேதெய்வம் ஒன்று;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டா. 4

உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்;—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்? 5

அன்பென்று கொட்டு முரசே!—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால். 6

—பாரதியார்

குறிப்புரை :

1. *சீர்—பெருமை*
2. *வையம்—உலகம். மாண்புற—பெருமையுற*
3. *உய்வது—உயிர் வாழும் பிராணி*
4. *முரசு—ஒருவகைத் தோற் கருவி. நிகராம்—ஒப்பாம்*

21. மாமல்லபுரம்

1. தமிழகத்தை ஆண்ட அரசர்களுள் பல்லவர் என்பார் ஒரு வகுப்பினர். அவர்கள் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் காஞ்சீபுரத்தைத் தலை-நகராகக் கொண்டு ஆண்டு வந்தார்கள். அவர்கள் காலத்தில் சோழநாடும் அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது. தமிழகத்தில் பல கற்கோயில்களைக் கட்டுவித்து நாட்டை அழகுபடுத்தியவர்கள் பல்லவர்களே. அப்பல்லவர்களுள் தலைசிறந்தவர் மகேந்திரவர்மரும் அவர் மைந்தர் நரசிம்மவர்மரும் ஆவர். அவர்கள் மலைகளையும் பாறைகளையும் குடைந்து கோயில்கள் அமைத்தார்கள்; சிற்பங்களைச் செதுக்குவித்தார்கள்.

2. தென்னாட்டில் முதல்முதல் கருங்கல்லால் கோவில் கட்டியவர் மகேந்திரவர்மரே ஆவர். மேலும், அவர் சிற்பிகளைக்கொண்டு மலைகளைக் குடைந்து மண்டபங்கள் அமைத்து அவற்றில் அழகிய உருவங்களைச் செதுக்கினர். அத்தகைய சிற்பங்கள் நிறைந்த இடங்கள் பல, தமிழ் நாட்டில் உள்ளன. அவற்றுள் ஒன்று மாமல்லபுரம். அது இக்காலத்தில் மகாபலிபுரம் என வழங்குகிறது.

3. நரசிம்மவர்மர், மகேந்திரவர்மரின் புதல்வர் ஆவார். அவருக்கு மாமல்லர் என்பது பட்டப்பெயர். அவர் தம் பட்டப்பெயரால் பல்லவ நாட்டின் துறை முகப்பட்டினத்துக்கு **மாமல்லபுரம்** என்னும் பெயரை வழங்கினர். இதற்குக் **கடன்மல்லை, தலசயனம்** என்னும் வேறு பெயர்கள் அக்காலத்தில் வழங்கி வந்தன. அக்காலத்தில் கடற்கரைப் பெருநகராய் விளங்கிய மாமல்லபுரம், இன்று ஒரு சிறு கிராமமாகக் காட்சி யளிக்கிறது. அது சென்னைக்குத் தெற்கில், முப்பத்தைந்து மைல் தொலைவில், கடற்கரையோரத்தில் இருக்கிறது.

4. அது முற்காலத்தில் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாய்த் துலங்கிற்று; அக்காலத்தில் தமிழர் அங்கிருந்து மரக்கலங்களிற் புறப்பட்டுச் **சிங்களம், சாவகம், கடாரம்** என்னும் நாடுகளுக்குக் கப்பலில் சென்று வாணிகம் செய்து வந்தனர். பல்வேறு நாட்டுக் கலங்களும் மாமல்லபுரத் துறையில் வந்து தங்கின. அதனால் " **கலங்கள் இயங்கும் கடன் மல்லை,** " என்று பெரியோர் புகழ்ந்தனர்.

5. மாமல்லபுரத்துக்குச் செங்கற்பட்டு ரயில்வே நிலையத்தில் இறங்கித் திருக்கழுக்குன்றத்தின் வழியாகச் செல்லலாம். பக்கிங்காம் கால்வாய் மூலம் படகிலும் போகலாம். மாமல்லபுரத்தில் இக்காலத்தில் கட்டப்பட்ட கலங்கரை விளக்கம் ஒன்று இருக்கிறது. முற்காலத்திலும் இங்கு ஒரு கலங்கரை விளக்கம் இருந்தது. அதை இப்போதும் நாம் அங்குக் காணலாம். மகேந்திரவர்மரால் தொடங்கப் பெற்று, நரசிம்மவர்மரால் உருவாக்கப்பட்ட சிற்பங்களில் சிதைந்து அழிந்தவை போக, எஞ்சி இருப்பவை இன்று செய்தனபோலக் காணப்படுகின்றன.

6. அங்குள்ள கோயில்களுள் மகிஷாசுர மர்த்தனி கோயில் என்பது ஒன்று. அது ஒரு குகைக் கோயில். குகைக் கோயில் என்பது ஒரு குன்றைக் குடைந்து கோயிலாக அமைப்பதாகும். ஒரே பாறையைக் குடைந்து அமைப்பது ஒற்றைக்கல் கோயில் எனப்படும். மகிஷம் என்றால் எருமை; அசுரன் என்றால் அரக்கன்; மர்த்தனி என்றால் கொன்றவள் என்பது பொருள். எருமையின் தலையைப் பெற்ற அரக்கனைக் கொன்ற தேவி மகிஷாசுர மர்த்தனி. இச்சிற்பம் மிகவும் அழகாக விளங்குகிறது.

7. மற்றோர் இடத்தில் ஐந்து விமானங்கள் உள்ளன. அவை ஒற்றைக் கற்கோயில்கள். அவற்றைப் 'பஞ்சபாண்டவ ரதங்கள்' என்று கூறுகின்றனர். ஆனால் இந்த ரதங்களுக்கும் பஞ்சபாண்டவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கல்லில் செதுக்கப்பட்டனவாக ஒரு யானையும் ஒரு சிங்கமும் உள்ளன. துர்க்காதேவியின் சிலையும், அதன் எதிரில் வீரன் ஒருவன் தன்தலையைத் தானே வெட்டித் தேவிக்குப் பலி இடும் சிலையும் உள்ளன. பீம ரதத்தின் முன்னும் பின்னும் மண்டபங்கள் உள்ளன. மற்ற ரதங்கள் முற்றுப் பெறாதவை.

8. ஒரு பெரிய பாறையின்மீது பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று, ஒருவன் ஒற்றைக்காலில் நின்று, தவம் செய்யும் நிலையில் இருக்கிறது. இதனை 'அருச்சுனன் தவம்' என்றும், 'பகீரதன் தவம்' என்றும் கூறுவர். பல வகை மனித உருவங்களும், விலங்குகளின் உருவங்களும், பறவைகளின் உருவங்களும் தவம் செய்யும் உருவத்தைச் சுற்றிலும் காணப்படுகின்றன. பூனை ஒன்று தவம் செய்வது போன்ற சிற்பம் மிகவும் அழகு வாய்ந்தது.

9. கடற்கரை ஓரத்தில் ஒரு கோயில் உள்ளது. அது பல கருங்கற்களால் கட்டப்பட்டது. அங்கிருந்தவற்றில் சில பகுதியைக் கடல் கொண்டுவிட்டது. இந்நகர் **பூதத்தாழ்வார்** என்ற பெரியார் தோன்றிய தலமும் ஆகும். மாமல்லபுரம் நம் முன்னோரின் சிற்பக் கலையின் திறத்தை விளக்கும் இடமாகும். இச்சிற்பங்களின் அழகினை எழுதிக்காட்ட இயலாது. நேரில் சென்று கண்டு களிக்க வேண்டும்.

அரும்பதங்கள் : வகுப்பினர், கைப்பற்றி, உட்பட்டிருந்தது, மைந்தர், சிற்பி, புதல்வர், தொலைவு, துலங்கிற்று, வாணிகம், தீபஸ்தம்பம், கலங்கரை விளக்கம், குடைந்து.

பயிற்சி

1. விடை எழுது :
   1. பல்லவ இராச்சியத்தின் தலைநகரமும், துறைமுகமும் எவை?
   2. பல்லவ மன்னருள் சிறந்தவர் யாவர்?
   3. அவர்கள் செய்த சிறந்த செயல் யாது?
   4. பஞ்சபாண்டவ ரதங்கள் என்பவை யாவை?
   5. குகைக்கோயில் என்பது யாது?
   6. மாமல்லபுரத்துக்கு ஏன் அப்பெயர் வழங்கியது? அதற்கு வழங்கிய வேறு பெயர்கள் யாவை?
2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களில் நிரப்புக :

   அ. பல்லவ மன்னருள் சிறந்தவர்———
   (நெடுஞ் செழியன், நரசிம்மவர்மர், செங்குட்டுவர்.)

   ஆ. மாமல்லபுரம்————துறைமுகம்.
   (சாதாரணமான, ஒப்பற்ற.

   இ. மாமல்லபுரத்தில்———சிதைந்துள்ளன.
   (ஓவியங்கள், சிற்பங்கள், கற்கள்.)

   ஈ. பஞ்சபாண்டவ ரதங்களுக்கும்————தொடர்பில்லை.
   (பல்லவர்களுக்கும், சோழ மன்னர்கும், பஞ்சபாண்டவர்க்கும்)
3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

   குடைந்து – சிற்பம் – கலங்கரைவிளக்கம் – வாணிகம் – சிதைந்து–திரள்–களிப்பு.



23. கடிதத்தின் பிரயாணம்

வேலன் : அப்பா, தபால்காரர் உங்களுக்கு ஒரு கடிதம் கொடுத்தார். இது எங்கிருந்து வந்தது?

தந்தை : அதை இப்படிக் கொடு. சொல்லுகிறேன். வேலா, இது தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிறது.

வேலன் : அது எப்படி யப்பா தெரிகிறது?

தந்தை : இதோ பார். கடிதத்தின் மீது ஒட்டப்பட்டுள்ள தபால் பில்லைகளின் மீது முத்திரை அடிக்கப்பட்டிருக்கிறது. அம்முத்திரையைப் பார். அதில் கடிதம் எங்கிருந்து வருகிறதோ அந்த ஊரின் பெயர் இருக்கிறது. அது அனுப்பப்பட்ட தேதி இருக்கிறது.

வேலன் : இது எனக்குத் தெரியாது. ஓர் ஊரில் போடப்படும் கடிதம் அது போக வேண்டிய இடத்துக்கு எப்படிப் போய் சேர்கிறது என்பதை விளக்கிக் கூறுங்கள், அப்பா.

தந்தை : அப்படியே சொல்கிறேன்; கேள். நீ உன் அண்ணனுக்குக் கடிதம் எழுதுகிறாய். அதை என்ன செய்கிறாய்?

வேலன் : அதை உறையில் இட்டு ஒட்டுவேன். மேலே அண்ணுவின் முகவரியை எழுதுவேன். இரண்டணுத் தபால் பில்லையை அதன் மீது ஒட்டி, அதைத் தபாற் பெட்டியிற் போடுவேன்.

தந்தை : தபாற் பெட்டியின் மீது, அதனுள் இருக்கும் கடிதங்கள் எடுக்கப்படும் நேரம் குறிக்கப்பட்டிருக்கும். அந்த மணிப்படி தபாற்காரர் தபாற் பெட்டியைத் திறந்து, அதனுள் இருக்கும் கடிதங்களை எடுத்துச் செல்வார்.

வேலன் : அக்கடிதங்களை எங்கே கொண்டு செல்வார்?

தந்தை : கடிதங்களைத் தபால் ஆபீசுக்குக் கொண்டு போவார். 'ஆபீஸ்' என்பது ஆங்கிலப் பதம். அதற்கு '**அலுவல் அகம்**' என்பது தமிழ். அலுவலகத்தில் அக்கடிதங்களின் மீது முன்னே கூறப்பட்டபடி முத்திரை அடிக்கப்படும். பிறகு ஒவ்வோர் ஊருக்கும் போக வேண்டிய கடிதங்களைப் பிரிப்பர். பிரித்தவற்றைத் தனித்தனி உறைகளில் இட்டுக்கட்டி வண்டிகளில் ஏற்றுவர். வண்டியில் ஏற்றப்பட்ட பைகள், புகை வண்டி நிலயத்துக்குக் கொண்டு செல்லப்படும். புகை வண்டித் தொடரில் தபால்கள் கொண்டு செல்வதற்கென ஒரு தனிப் பெட்டி சேர்க்கப்பட்டிருக்கும். அப்பெட்டியில் தபால் பைகள் ஏற்றப்படும். இரயில் போகும்போது அதில் உள்ள அலுவலாளர், அப்பைகளை இறக்க வேண்டிய இடங்களில் இறக்கிவிடுவர். அங்கிருந்து அவை அந்த ஊர் தபால் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்படும். அங்கு அந்தப் பைகளைத் திறந்து, கடிதங்களை எடுத்து, ஒவ்வொன்றின்மீதும் அந்த ஊர் அலுவலகத்தின் முத்திரை அடிக்கப்படும். பிறகு அவற்-

றைத் தபால்காரர்கள் கொண்டு போய் முகவரி-யில் குறிக்கப்பட்டிருப்பவர்களுக்குக் கொடுப்பார்கள். இதனைக் கடிதத்தின் பிரயாணம் என்று கூறுவது பொறுத்தமாக இருக்கிறது அல்லவா ?

வேலன் : கடிதம் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு எப்படிச் செல்கிறது என்பது இதுவரை எனக்குத் தெரியாது. இன்று தெரிந்துகொண்டேன், அப்பா.

பயிற்சி

1. உனக்கு இரண்டு நாட்கள் விடுமுறை தரும்படி கேட்டு உன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

2. சில புத்தகங்கள் வாங்குவதற்குப் பணம் வேண்டுமெனத் தெரிவித்து, உன் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுது.

24. மனிதருள் மாணிக்கம்

1. இந்தியா சிறந்த தேசபக்தர்களையும், கவிஞர்களையும் அவ்வப்போது தோற்றுவித்துள்ளது. மகாத்மா காந்தியடிகள் தோன்றி இந்தியாவிற்கு அழியாப் புகழை உண்டாக்கிவிட்டார். மேல் நாடுகளுக்குச் செல்லும் இந்தியரைப்பார்த்து அங்குள்ளவர்கள் 'காந்தி நாட்டவரா நீங்கள்?' என்று கேட்பதால், காந்தியடிகளின் பெருமையை அறியலாம். காந்தியடிகளைப் பின்பற்றி நடப்பவருள் முதன்மையானவர் **ஜவாஹர்லால் நெஹ்ரூ**. இவரே இன்று நம்நாட்டின் பிரதம மந்திரியாக விளங்குகிறார்.

2. ஜவாஹர்லால் நெஹ்ரு காஷ்மீரத்துப் பண்டி-தர் மரபில் பிறந்தவர். இவர் தந்தையார் **மோதிலால் நெஹ்ரு** என்பவர் ஆவர். இவர் தாயாரின் பெயர் **சொரூபராணி** என்பது. மோதிலால் நெஹ்ரு அலாஹா பாத்து உயர்நீதி மன்றத்தில் நியாயவாதியாக இருந்து புகழ் பெற்றவர் ; நிறைந்த செல்வமும் படைத்தவர்.

3. ஜவாஹர்லால் நெஹ்ரு 1889-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதி பிறந்தார். இவருக்கு **விஜயலட்சுமி, கிருஷ்ணு** என்ற சகோதரிகள் இருவர் இருக்கின்றனர்கள். இளமைப் பருவத்தில் நெஹ்ருவிற்-குக் கல்வி கற்பித்தவர் **ப்ரூக்ஸ்** என்ற அயர்லாந்தினர். அவர் சிறந்த படிப்பாளி. அவர் ஜவாஹருக்கு ஆங்-கிலம் கற்பித்தார். பகவத்கீதை என்னும் நூலைப் போதித்தார். நாட்டின் பெருமைகளை எடுத்துக் கூறி நாட்டுப்பற்றையூட்டினர்.

4. ஜவாஹர் தம் பதினைந்தாம் வயதில் இங்கி-லாந்துக்குச் சென்றார். அங்கு அவர், அரச குமாரர் களும் பிரபுக்களின் புதல்வர்களும் படிக்கும் 'ஹாரோ' பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். பரீட்சைகளில் முதல்வராய்த் தேர்ந்து பல பரிசுகளும் பெற்றார். பின்-னர் அவர் ' ட்ரினிடி ' கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றார். பின் சட்டக் கல்வி படித்துத் தேர்ந்து இந்தியாவிற்கு வந்தார்.

5. ஜவாஹர் 1916-ம் ஆண்டில் கமலா என்ற அம்மையாரை மணந்துகொண்டார். ஜவாஹர் அள-வற்ற தேசப்பற்று உடையவர். 1920-ம் ஆண்டில் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து முதன் முறை சிறை புகுந்தார். அவர் அலாஹாபாத்து நகர சபைத் தலைவராக இருந்து மக்களுக்குப் பல நன்மை களைச் செய்தார்.

6. ஜவாஹர் இந்தியாவில் காங்கிரஸார் நடத்திய பல இயக்கங்களிலும் கலந்துகொண்டு, பலவற்றைத் தாமே தலைமை தாங்கி நடத்தினர். அதனல் அவர் பல முறை சிறைக்குச் சென்ருர். பீஹார் என்னும் இடத்தில் பூகம்பம் உண்டானபோது அவர் மண்வெட்டியையும் கூடையையும் கைக்கொண்டு வேலையாட்களோடு வேலையாளாய்ச் சேர்ந்து உழைத்தார். ஜவாஹரின் மனைவியார் ஐரோப்பாவில் நோயுற்று இறந்தார். ஜவாஹருக்கு '**இந்திரா**' என்னும் ஒரே குமாரத்தி தான் இருக்கிருள்.

7. ஜவாஹர் ஐந்து முறை காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்திருக்கிருர். தேசத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டு ஒன்பதுமுறை சிறை சென்றிருக்கிருர். அவர் தந்தையார் தம் மாபெரு மாளிகையான **ஆனந்த பவன**'த்தைச் '**சுயராச்சிய பவனம்**' எனப் பெயர் மாற்றி நாட்டுக்கு அளித்துள்ளார். ஜவாஹர் தேசத் தொண்டு புரிந்ததற்காக ஆங்கிலேயரால் பதினேழு ஆண்டுகளுக்கு மேல் சிறைவைக்கப்பட்டார்.

8. ஜவாஹர்லால் ஆங்கிலத்தில் சிறந்த முறையில் எழுதவும் பேசவும் வல்லவர். அவர் எழுதும் நூல்களை ஆங்கிலேயரும் விரும்பிப் படிக்கின்றனர். **சுய சரித்திரம், உலக சரித்திரம், இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள்** முதலான நூல்கள் அவர் எழுதியனவாகும். ஜவாஹர் உலகத்திலுள்ள அரிய பெரிய மனிதர்களோடு நெருங்கிப் பழகி உள்ளார். அவற்ருல் நெஹ்ரு பேரறிவுடையவராகவும், அரசியல் நிபுணராகவும் விளங்குகிருர்.

9. நெஹ்ரு அழகிய தோற்றம் உடையவர். அவர் தூய மனம் படைத்தவர். உண்மையைக் கடைப்பிடித்து

ஒழுகுபவர். அவர் எதற்கும் அஞ்சாதவர். தைரியத்தில் அவருக்கு ஒப்பானவர் இக்காலத்தில் நமது நாட்டில் எவரும் இலர் என்றே கூறலாம். தேசப்பற்றில் அவர் ஒப்பு உயர்வு அற்றவர். உயர்ந்த இராசதந்திரமும் சிறந்த அரசியல்அறிவும் வாய்ந்தவர். புகழிற்கு உறை-விடமான ஜவாஹர் நீடு வாழ்ந்து நாட்டிற்கு மேலும் நன்மை பல புரிவாராக!

அரும்பதங்கள் : கவிஞர், மகாத்மா, புகழ், பிரதமர், நீதி மன்றம், நியாயவாதி, தாதிமார்கள், நாட்டுப்பற்று, கல்லூரி, சட்டக்கல்வி, இயக்கம், நோயுற்று.

பயிற்சி

1. விடை எழுது :

   அ. ஜவாஹர்லால் நெஹ்ருவின் தந்தையார் யார்?
   ஆ. ஜவாஹரின் சகோதரிகள் யாவர்?
   இ. ஜவாஹருக்கு நாட்டுப்பற்றை ஊட்டியவர் யார்?
   ஈ. ஜவாஹர், நாட்டுக்குச் செய்த நன்மைகள் யாவை?
   உ. ஜவாஹர் இப்போது வகிக்கும் பதவி யாது?

2. எதிர்ப்பதங்கள் எழுது :

   சிறந்த ×
   பிறப்பு ×
   புகழ் ×
   சேர்ந்து ×
   உயர்வு ×

8. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

   மாணிக்கம்-அழியாப்புகழ்-பின்பற்றி-நீதிமன்றம் - பரீட்சை-இயக்கம்-உழைத்தார்-நிபுணர்.

25. மௌனவாசிப்பு III

கீழே உள்ள கதையை மௌனமாய்ப் படித்து வினுக்களுக்கு விடை எழுது :

1. ஒரு காட்டின் அருகில் பணக்காரர் ஒருவர் மாளிகை கட்டிக்கொண்டு வசித்து வந்தார். அவர் தினந்தோறும் வேட்டையாடச் செல்வது வழக்கம்.

2. ஒரு நாள் அச்செல்வர் குழந்தையுடனும் நாயுடனும் காட்டுக்குச் சென்ருர். அன்று அவர் குழந்தையையும் நாயையும் ஓரிடத்தில் நிறுத்தி விட்டு வேட்டையாடப் போஞர். வேட்டை மேற் சென்ற அவர் நெடுந்தூரம் சென்றுவிட்டார். அப்-போது மாலேவேளே; ஆகாயம் இருண்டது; எங்கும் மூடுபனி சூழ்ந்துகொண்டது. செல்வர்க்கு அதுவரை யிலும் குழந்தையின் நினேவே இல்லே. மூடுபனியைக் கண்டதும், அவருக்குக் குழந்தையின் நினேவு வந்தது. அவர் மிகவும் வேகமாக வந்தும் குழந்தையைக் காண முடியவில்லே. மூடுபனியால் அவர் வழி தவறிவிட்டார். முடிவில் நாயும் குழந்தையும் இல்லாமல் வீடு வந்து சேர்ந்தார். அவரும், மனேவியும், பிறரும் அன்றிரவெல் லாம் மிக வருந்திஞர்கள்.

3. மறுநாள், பொழுது விடிந்தது. செல்வர் வேலே-யாட்கள் சிலருடன் குழந்தையைத் தேடப் போஞர். அவர் போனதும் நாய் வீட்டுக்கு வந்தது. செல்வரின் மனேவி அந்த நாய்க்குச் சில அப்பத்துண்டுகளேப் போட்டாள். அப்போது நாய் மிகவும் பசியால் வாடி இருந்தது. ஆனுலும் அது அப்பத்துண்டுகளே வாயிற் கௌவிக் கொண்டு வெளியே ஓடிற்று.

4. குழந்தையைத் தேடிச் சென்ற செல்வரும் பிறரும் பல இடங்களில் நாள் முழுவதும் சுற்றித்

திரிந்தும், குழந்தையைக் காணமல் வீட்டுக்குத் திரும்பிவந்தனர். செல்வரின் மனைவி அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. செல்வரும் அவர் மனைவியும் அன்றிரவு தூங்கவே இல்லை. மறு நாள் காலையில் செல்வர், வேலையாட்கள் சிலருடன் குழந்தையைத் தேடச் சென்ருர். அவர் சென்றதும் நாய் வந்தது. அது மெலிந்திருந்தது. பசியால் அது வாடுகிறது என்பது அதைப் பார்த்த அளவில் தெரிந்தது. அன்று செல்வரின் மனைவி நாயின் நிலையை அறிந்து நாலைந்து ரொட்டித் துண்டுகளைப் போட்டாள். நாய் அவற்றைக் கௌவிக் கொண்டு விரைவாக வீட்டை விட்டு வெளியே ஓடிற்று.

5. அன்று மாலை செல்வரும் வேலையாட்களும் காடெங்கும் தேடித் தேடிக் குழந்தையைக் காணமல் அலுத்துப்போய் வந்தனர். செல்வரின் மனைவி குழந்தையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் நாய் வந்து போவதையும், மற்ற நேரங்களில் அதனைப் பார்க்க முடியாதிருத்தலையும் கூறினள். அதனைக் கேட்ட செல்வர் மறுநாள் நாயோடு செல்வது எனத்தீர்மானித்து மறைந்திருந்தார். நாய் வந்தது. முன்புபோல் அது பசித்திருந்தும் தனக்கிட்ட ரொட்டியைத் தான் தின்ஞது வாயிற் கௌவிக் கொண்டு ஓடிற்று. அதனைப் பின்தொடர்ந்து செல்வரும் வேலையாளும் சென்ருர்கள். நாய் ஒரு மலைக்குகையருகிற் சென்றது.

6. செல்வரும் வேலையாளும் அக்குகையை அடைந்தனர். என்ன ஆச்சரியம்! குழந்தையும் நாயும் ரொட்டித் துண்டுகளைத் தின்றுகொண்டிருப்பதைச் செல்வர் கண்டார்; ஓடோடிச் சென்று குழந்தையை வாரி எடுத்துக்கொண்டார். வாலை ஆட்டிக் கொண்டு நின்ற நாயை வேலையாள் எடுத்துக்கொண்டான். பிறகு

செல்வர் குழந்தையோடு வீடு வந்து சேர்ந்தார். செல்வரின் மனைவி மிகவும் சந்தோஷப்பட்டாள். நாய் குழந்தையைக் காத்து வந்த முறையைச் செல்வர் சொல்லக் கேட்டாள். மனம் மகிழ்ந்தாள். அன்று முதல் செல்வரும், அவர் மனைவியும் நாயையும் அருமைக் குழந்தை போல் காத்து வந்தனர். 'நாய் போல் நன்றியுள்ள விலங்கு வேறு உண்டா?'

வினாக்கள்

1. செல்வந்தர் எங்கு வசித்தார்?
2. அவர் வேட்டைக்குச் சென்றபோது யாரை அழைத்துக்கொண்டு போனார்?
3. செல்வந்தர் குழந்தைக்கு என்ன நேரிட்டது?
4. தினந்தோறும் நாய் செய்தது என்ன?
5. குழந்தை எங்கிருந்தது?
6. நாயின் குணத்தைப்பற்றி நாம் அறிவது யாது?

26. பறவைகள்

1. உலகில் காணப்படும் பலவகை உயிர் இனங்களுள் பறவை இனம் ஒன்று. பறக்கும் தன்மை உடையன எல்லாம் பறவைகள் என்று கூறப்படும். பூமியிலிருந்து மேலே வானில் சஞ்சரிப்பதைப் பறத்தல் என்று கூறுவர். வானில் பறவைகள் பறக்கும்பொழுது பார்த்தால், மிகவும் விந்தையாகவும், அழகாகவும் இருக்கும். எவ்வாறு அவை அந்தரத்தில் ஆதாரம் இன்றிப் பறக்கின்றன என்று சிந்தித்துப் பாருங்கள். பறவைகள் தம் இரு பக்கங்களிலும் உள்ள இறக்கைகளைப் புடைத்தலால் பறக்கின்றன. அவைகளின் உடல் பறப்பதற்கு ஏற்றவாறு இலேசாக அமைந்திருக்கின்றது. பருத்த உடல்களைப் பெற்றிருக்கும் பறவைகள் வெகு தூரம் பறக்க முடியாது.

2. பறவைகளின் இறகுகளை உற்று நோக்குங்கள். இறகுகள் பல ஒன்ருேடு ஒன்று இணைந்து நின்று இறக்கையாக அமைந்திருக்கின்றன. இறக்கையைச் சிறகு என்றும் கூறுவதுண்டு. அச்சிறகுகள் பறவை உடலின் இருபுறங்களிலும் அமைந்துள்ளன.பறவைகள் பறக்க எழும் காலத்தில் இறக்கையை விரித்துப்புடைக்கும். அவ்வாறு புடைப்பதாலும் அதன் உடல் இலேசாக இருத்தலாலும் அது மேலே எழும். அப்பொழுது பறந்து செல்வது எளிதாகும். அந்த இறக்கைகள் மற்ருெரு வகையிலும் பறவைகளுக்குப் பயன்படுகின்றன. பற-

வாத காலங்களில் இறக்கைகள் உடலோடு குவிந்து ஒடுங்குதலால் பனி, வெயில், குளிர் முதலியவற்ருல் அதன் உடலுக்குத் துன்பம் உண்டாகாதபடி காக்கின்றன.

3. பறவைகளின் கால்களில் விரல்கள் உள்ளன. அவை மரக்கிளைகளில் அமர்வதற்கு ஏற்றவாறு நுனி வளைந்து அமைந்துள்ளன. அவைகளின் நுனியில் கூர்மையான நகங்கள் உண்டு. அக்கால்கள் மிக்க வலிமையுடையனவாகும். இராசாளி, கழுகு, பருந்து, கருடன் என்பன ஓர் இனத்தைச் சேர்ந்தவை. அவற்றுள் இராசாளி என்பது ஓர் ஆட்டுக்குட்டியையும் காலிலேயே தூக்கிக் கொண்டு, மிக்க உயரத்தில் பறந்து செல்லும் ஆற்றல் உடையது.

4. பறவைகளின் மூக்கிற்கு அலகு என்பது பெயர். அவை வெவ்வேறு வகையாக அமைந்திருப்பதைக் காணலாம். அவை மாமிசத்தைக் குத்தித்தின்பதற்கும், கொட்டைகளை உடைத்துத் தின்பதற்கும் ஏற்ற வாறு அமைந்துள்ளன. பறவைகளின் அலகில் இரு துவாரங்கள் இருக்கும். அவை மூக்கைப்போலப் பயன்படுகின்றன. பறவைகளுக்கு நாக்கு என்னும் உறுப்பும் உண்டு. பறவைகளின் கண்கள் சிறியவையாயினும் கூரிய பார்வை உண்டு. சில பறவைகளுக்குப்

பகலில் கண் தெரியாது. அவற்றுள் ஆந்தை ஒன்று. அதற்கு இரவில் கண் நன்ருகத் தெரியும். பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும். வௌவால் என்னும் பறவை மட்டும் மிருகத்தைப்போலக் குட்டி போடும் தன்மையுடையது. வௌவால் மரக் கிளைகளில் தலைகீழாகத் தொங்கும்.

5. சில பறவைகள் மரங்களில் கூடு கட்டி வாழும். இராசாளி, கழுகு போன்ற சில பறவைகள் மலைகளில் உச்சியில் யாரும் செல்லமுடியாத இடத்தில் கூடுகட்டி வாழும். சில பறவைகள் மரப் பொந்துகளில் வாழும். கூடுகளும் பல வகையாக இருக்கும். சில பறவைகள் நீரிலும் நிலத்திலும் வாழும்.

6. கழுகு, ஆந்தை, கோட்டான், பருந்து, கருடன், புறு, காகம், சிட்டுக்குருவி, உள்ளான், மைஞ, கௌதாரி, மயில், குயில், கிளி, கோழி, வாத்து, நாரை, கொக்கு, தீப்பறவை முதலியன வெவ்வேறு வகை யானவை. பறவைகளுள் மிகப்பெரியது தீப்பறவை. அது ஓர் ஆள் உயரம் இருக்கும்; குதிரையைவிட வேகமாக ஓடும். ஆனால் அது தன் பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு பறக்க முடியாது.

அரும்பதங்கள் : உயிரினம், தன்மை, விந்தை, அந்தரம், ஆதாரம், சிந்தித்து, புடைத்தல், அமைந்திருக்கின்றன, உற்றுநோக்கு, இணைந்து, எளிது.

பயிற்சி

1. *விடை எழுது :*

அ. எவை பறவை என்று கூறப்படும்?
ஆ. பறவை எவ்வாறு பறக்கிறது?
இ. இறக்கைகளால் பறவைக்கு என்ன பயன்?
ஈ. எந்தப் பறவைக்குப் பகலில் கண் தெரியாது?
உ. வௌவாலைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
ஊ. பறவைகளில் மிகப் பெரியது எது?

2. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்பு :

அ. பறக்கும்———உடையது பறவை. (சக்தி, வழக்கம், தன்மை)
ஆ. பறவைகள் இறக்கைகளைப்———பறக்கின்றன. (தூக்குவதால், இறக்குவதால், புடைப்பதால்)
இ. பறவையின் விரல்களின்———கூர்மையான நகங்கள் உண்டு. (நடுவில், நுனியில், அடியில்)
ஈ. பறவைக்கு நாக்கு என்னும்———உண்டு. (பாகம், பகுதி, உறுப்பு)
உ. தீப்பறவை ஓர் ஆள்———இருக்கும். (மட்டம், உயரம், அளவு.)

3. கீழே உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:

இனம் – சஞ்சரித்து – வானில் – சிந்தித்து – புடைத்தல் – உற்றுநோக்கு – எளிது – பயன்.



27. தாமஸ் ஆல்வா எடிஸன்

1. இக்காலத்தில் நாம் பற்பல வசதிகளைப் பெற்று வாழ்கிறோம். மின்சாரம் நம் வாழ்க்கையில் பலவகையில் பயன்படுகிறது. மின்சார விளக்கு இருளை நீக்கிப் பளிச்சென்று வெளிச்சம் தருகிறது. ரேடியோ மூலம் பாட்டுக்களைக் கேட்கிறோம். மின்சாரத்தால் வண்டி ஓடுகிறது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இத்தகைய நலங்களைப் பெறவில்லை. இவற்றை யெல்லாம் நமக்குத் தேடித்தந்தவர் யார்? அவரைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டாவா?

2. இவற்றை எல்லாம் நமக்குத் தேடித்தந்த விஞ்ஞானி **தாமஸ் ஆல்வா எடிஸன்** என்பவர் ஆவர். அவர் 1847-ம் ஆண்டு அமெரிக்காவில் ஓகியோ ஜில்லாவில் மிலான் என்ற ஊரில் பிறந்தார். அவருடைய தந்தையார் **சாமுவேல் எடிஸன்** என்பவர் ஆவர். தாயார் **நான்ஸி எலியட்டு** என்பவர். அவர்கள் ஏழைக்-

குடும்பத்தினரே. தாமஸ் ஆல்வா எடிஸன் தம் தாயாரிடமே கல்வி கற்றுர். அவருக்கு எதனையும் கூர்ந்து பார்த்து, ஆராயும் அறிவு, இளமையிலேயே இருந்தது. அவர் சிறுவராயிருந்த பொழுது செய்த செயல்கள் அவரது பேரறிவை விளக்குவனவாயிருந்தன.

3. அவர் தம் தாயாரிடம் கற்ற கல்வியை விருத்தி செய்துகொண்டார். விஞ்ஞான நூல்களையும் இரஸாயன நூல்களையும் அவர் விரும்பிப் படித்தார். ஏழைக் குடும்பத்தில் பிறந்ததனுல், இளமையில் இரயிலில் பத்திரிகைவிற்கும் தொழிலைச்செய்தார். பின் அவர், தாமே செய்திகளை அச்சடித்து விற்றுப் பொருள் திரட்டத் தொடங்கினுர். இரயில் வண்டியில் ஓய்வு நேரத்தில் ஆராய்ச்சி செய்வார். ஒரு சமயம் அவர் ஆராய்ச்சிக்கு வைத்திருந்த தீப்பாஷாணம் கீழே சிந்தியதால் வண்டியில் தீப் பிடித்துக்கொண்டது. அச்சமயம் அங்கிருந்தவர் அடித்ததால், அவருடைய காது செவிடாகி விட்டது.

4. ஒரு நாள் ஒரு தந்திக் குமாஸ்தாவின் குழந்தையை எடிஸன் ஆபத்தினின்றும் காப்பாற்றினுர். அதனுல் அத்தந்திக்குமாஸ்தா அவருக்குத் தந்தியடித்தலைக் கற்பித்தார். பத்து நாட்களில் அதனைக் கற்றுக்கொண்ட எடிஸன், தந்தியடிக்கும் முறையில் பல திருத்தங்களை அமைத்தார். வாக்குரிமைச் சீட்டுக்களை எண்ணும் இயந்திரத்தையும், மற்றும் பல இயந்திரங்களையும் எடிஸன் கண்டுபிடித்தார். அதனுல் அவருக்கு நாற்பதினுயிரம் டாலர் கிடைத்தது. அதனைக் கொண்டு அவர் இரண்டு கம்பெனிகளை ஏற்படுத்தினுர். கம்பெனி என்பது வாணிகக் கழகம். அக்கம்பெனியில் தொழில் புரிந்து வந்த ஸ்டில்வெல் என்ற அம்மையாரை எடிஸன் மணந்துகொண்டார். அவ்வம்மையார் மண

மான ஒன்பது ஆண்டுகளுக்குள் மூன்று மைந்தர்களைப் பெற்றுவிட்டு இறந்து போனார்.

5. எடிஸன் டெலிபோன், கிராமபோன், திரைப் படக் காட்சி முதலானவற்றைக் கண்டுபிடித்தார். எடிஸன் தம் வாழ்நாளில் எண்ணற்ற பல புதிய பொருள்களைக் கண்டுபிடித்து நமக்கு அளித்துள்ளார். உலக நன்மையைக் கருதிச் செய்த அவரது செயலை வியந்து பாராட்டி ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் தங்கப் பதக்கங்களையும் பரிசுகளையும் அவருக்கு அளித்துப் பெருமைப்படுத்தின. அவர் வாழ்ந்த மாளிகை நியூஜெர்ஸியிலுள்ள ஆரஞ்சு மலையின் அடிவாரத்தில் உள்ளது. அம் மாளிகையில் அவர் வேலை செய்த இடம், புத்தக நிலையம், காட்சிப் பொருள்கள் முதலியன எல்லாம் இன்றும் உள்ளன. எடிஸன் 1931-ம் ஆண்டு தமது எண்பத்து நான்காம் வயதில் இறந்தார். அவர் நமக்குக் கூறும் அறிவுரையைக் கவனிப்போம்: "ஏழையாகப் பிறந்ததற்காக எவரும் கவலைப்பட வேண்டுவது இல்லை. நான் ஏழையாகத்தான் பிறந்தேன்; படித்துப் படித்துச் சிறந்த நிலையை அடைந்தேன்; நீங்களும் படித்துப் படித்து முன்னேறுங்கள். அறிவை விருத்தி செய்து கொள்ளுங்கள்; சிந்திக்கும் திறமையைப் பெறுங்கள்; உழைப்பைக் கைக்கொள்ளுங்கள்; தன்னம்பிக்கையுடன் இருங்கள்; செய்யும் காரியங்களில் பல முறை தோல்வியை அடைந்தாலும் தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் கொண்டு உழையுங்கள்; வெற்றி பெறுவது உறுதி. உங்கள் உழைப்பினால் நீங்கள் உயர்வை அடைந்து, நாட்டுக்கும் பெருமையைத் தேடிக் கொடுங்கள்." இவற்றை நாம் அமுத மொழிகளாகக் கொண்டு இவற்றின்படி நடக்க முயன்றால், நாமும் நம் நாடும் முன்னேற்றமடைவது உறுதி.

அரும்பதங்கள் : மின்சாரம், இருள், ரேடியோ, நலங்கள், விஞ்ஞானி, ஆராய்ச்சி, திரட்ட, வாக்குரிமை, கம்பெனி, மணந்தார், டெலிபோன், கிராமபோன், பாராட்டி.

பயிற்சி

1. விடை எழுதுக:

அ. எடிசன் என்பவர் யார்?

ஆ. அவர் எங்கே பிறந்தார்?

இ. அவர் இளமை பற்றி நீ அறிந்தது யாது?

ஈ. எடிசன் உலகத்துக்குச் செய்த நன்மைகள் யாவை?

2. கீழ் வரும் சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது:

வசதிகள் – நூற்றுண்டு – நலங்கள் – விஞ்ஞானி – குடும்பம் – ஆராய்ச்சி – பொருள் திரட்டு.

8. கீழ் வரும் குறை வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:

அ. இக்காலத்தில் நாம் பற்பல வசதிகளைப் ———.

ஆ. முற்காலத்தவர் இத்தகைய நலங்களை ———.

இ. இவற்றையெல்லாம் நமக்குத் தேடித் தந்த விஞ்ஞானி ———.

ஈ. எடிசன் தம் தாயாரிடமே ———.

29. நாட்டுப் பொது வாழ்த்து

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
பஞ்சாப ஸிந்து குஜராத மராதா
திராவிட உத்கல வங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உத்சல ஜலதி தரங்கா,
தவ ஸுப நாமே ஜாகே தவசுப
ஆசிஷ மாங்கே காஹே தவஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
ஜயஹே ஜயஹே ஜயஹே !
ஜய ஜய ஜய ஜயஹே !

பொருள்

மக்களின் உள்ளத்தில் உறையும் பாரதத்தின் பெரும் பேற்றிற்கு முதல்வனாய் உள்ள ஆதி இறைவனே! வெற்றியுண்டாகட்டும்! பஞ்சாப், சிந்து, குஜராத்தி, மராத்தி, திராவிடம், உத்கலம் (ஒரிஸா), வங்காளம், விந்தியம் முதலிய நாடுகளையும், இமயமலையையும், யமுனை, கங்கை முதலிய பொங்கும் அலைகளுடன் பொலிவுறும் யாறுகளையும் கொண்ட உனது மங்கலம் மிகுந்த பெயரைக் கூறி, உனது மங்கல மளிக்கவல்ல ஆசியை வேண்டுகிறோம்.

உன்னுடைய வெற்றியைப் பாடுகிறோம்! மக்களின் மங்கல நல்வாழ்வை நல்கும் இறைவனே! பாரதத்தின் ஆதி முதல்வனே, உனக்கு வெற்றியுண்டாகுக!

வெற்றி! வெற்றி! வெற்றி!

செய்யுட்பாடங்கள்

1. கடவுள் வணக்கம்

வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமலராள்
நோக்குண்டாம், மேனி நுடங்காது;—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. 1

வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு,
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்;—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய். 2

குறிப்புரை :

1. வாக்குண்டாம் - வாக்கு+உண்டாம், பேசும் திறமை உண்டாகும்; மாமலராள் - சரசுவதி; துப்பார் – (துப்பு+ஆர்) துப்பு – பவழ நிறம், ஆர் – பொருந்திய; தும்பிக்கையான் – விநாயகர்; சார்வார் – அடைபவர்.

2. கலை – ஆடை; பணி – ஆபரணம்; கமலம் – தாமரை; அரியாசனம் – சிங்காதனம்;

2. மூதுரை

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா;—நின்று,
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே;—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். 2

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா;—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 3

நீரளவே ஆகுமாம் நீராம்பல்; தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு;—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்;
குலத்தளவே ஆகும் குணம். 4

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. 5

தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே;—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. 6

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்;—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 7

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்;—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா(து) அளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். 8

மடல்பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா;—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா(து); அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 9

சீரியர் கெட்டாலும் சீரியரே ; சீரியர் மற்(று)
அல்லாதார் கெட்டாலங் கென்னாகும்?—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும்; என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்? 10

குறிப்புரை :

1. நன்றி – உதவி; தாளுண்ட நீர் – வேரினால் இரகித்து உண்ட நீர் ;

2. ஈரம் இல்லா – அன்பில்லாத ; ஈந்த – செய்த: நேர் – ஒப்பாகும்.

3. எடுத்த – மேற்கொண்ட; கருமங்கள் – வேலைகள்; தொடுத்த – கிளைத்த; பழா – பழுக்கமாட்டா.

4. நீர் ஆம்பல் – நீரில் இருக்கும் அல்லியின் கொடி; மேலை – பிறப்பு.

5. நலம் மிக்க – நற்குணம் மிகுந்த; இணங்கி – சேர்ந்து;

6. தீயார் – கொடியவர்; திரு அற்ற – நற்குண நற்செயல் இல்லா.

7. பொசியும் – உணவு கொடுக்கும்; தொல்உலகில் – பழமையான உலகில்.

8. பண்டு – முற்பட்ட; விண்டு – பிரிந்து; பேர் ஆற்றல் – மிக்க திறமை ; ஏற்ற கருமம் – மேற்கொண்ட செயல்.

9. மடல் – இதழ்; மண்ணீர் – உடம்பைக் கழுவும் நீர்; சிற்றூறல் – சிறு பள்ளத்தினின்று சுரக்கும் நீர்.

10. சீரியர் – உயர்ந்தவர்; சீரியர் மற்று அல்லாதார் – தாழ்குணம் உள்ளவர்.

3. நல்வழி

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா ;
பொருந்துவன போமினென்றாற் போகா;–இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 1

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 2

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ? மாநிலத்தீர்!—வேண்டா;
நமக்கும் அதுவழியே; நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 3

ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே!—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை; கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 4

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 5

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான். 6

நீறில்லா நெற்றிபாழ்; நெய்யில்லா உண்டிபாழ்;
ஆறில்லா ஊருக்(கு) அழகுபாழ்;—மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ்; பாழே
மடக்கொடி இல்லா மனை. 7

உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்;
எண்பது கோடிநினைந் தெண்ணுவன;—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையும் சஞ்சலமே தான். 8

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்(று) ஈன்றெடுத்த தாய்வேண்டாள்;
செல்லா தவன்வாயிற் சொல். 9

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்(டு) ஒன்றாகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். 10

குறிப்புரை :

1. பொருந்துவன – (தாமே) வந்து அடையக்கூடியவை ; ஏங்கி – வருந்தி; நெடுந்தூரம் – பலவகையாக அல்லது நெடு நாள்; துஞ்சுவது – இறப்பது.

2. பெருக்கு – வெள்ள நீர்; அற்று – நீங்கி; நல்கூர்ந்தார் ஆனாலும் – வறியவர்களானாலும்; ஏற்றவர்க்கு - பிச்சை கேட்டவர்க்கு; இசைந்து – மனம் ஒப்பி.

3. மாநிலத்தீர் – உலகத்தில் வாழும் மக்களே, அதுவழியே–நேரத்தக்கது அதுவே; எமக்கென்னென்றிட்டுண்டிரும் - எமக்கு+ என்+என்று+இட்டு+உண்டு+ இரும்.

4. விழுமன்றே – விழும் + அன்று+ஏ ; விழும் – அழியும்; ஏற்றம் – பெருமையோடு ; கண்டீர் – அறிவீர்; பழுதுண்டு – அழிவு உண்டு ; பணி – தொழில்.

5. சேவித்தும் – (பிறர்க்கு) ஊழியம் செய்தும்; பாவித்தும் –(உயர்ந்தவராக) கருதியும்; போவிப்பம் – அழிவோம்; பாழின் உடம்பு – அழியக்கூடிய உடம்பு.

6. நிலம் பொதியும் – நிலத்திற் பொருந்தியிருக்கும் ; வருந் திரு – இடைவிடாது வளரும் செல்வம் ; தரும் – கொடுப்பாள்; சிவந்த தாமரையாள் – இலக்குமி.

7. நீறில்லா – (நீறு+ இல்லா) விபூதி இல்லாத ; உண்டி – உணவு; மாறில் – மாறுபாடு இல்லாத ; உடன்பிறப்பு – சகோதரர்: மடக்கொடி – மடப்பம் பொருந்திய கொடி போன்ற சாயலை யுடைய பெண்.

8. நாழி – ஒரு முகத்தல் அளவை; எண்ணுவன – எண்ணங்கள்; கண் புதைந்த – கண்மூடித்தனமாக ; மண்ணின் கலம் – மண்ணால் செய்யப்பட்ட பாண்டம் ; சாந்தனையும் – இறக்கும் வரையில் ; சஞ்சலம் – துன்பம்.

9. பொருள் – செல்வம் ; எதிர்கொள்வர் – மரியாதை செய்வர் ; இல்லானை – செல்வம் இல்லாதவனை ; இல்லாள் – மனைவி ; ஈன்று எடுத்த – பெற்று வளர்த்த ; செல்லாது – மதிக்கப்பட மாட்டாது.

10. எய்தும் – அடையும் அல்லது சேரும் ;

குறத்தி பாட்டு

என்றனது திருநாடு கேட்கிறையோ தம்பீ !
ஏற்றமுள்ள இந்திரனூர் ஆளுமெங்கள் நாடு ;
சந்திரர்கள் சூரியர்கள் தவம்புரியும் நாடு ;
தவமுனிவர் ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள் நாடு ;
கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு ;
குமரேசர் வாழுவதும் எங்களது நாடு ;
பச்சைமலை பவளமலை எங்களது நாடு ;
பரமசிவன் வாழுவதும் எங்களது நாடு ;
வங்காளம் சிங்காளம் மகதமெங்கள் நாடு ;
வளம்பாடி குறியுரைக்க வந்தேனடா தம்பீ !

விவேக சிந்தாமணி

ஆபத்துக் குதவாப் பிள்ளை,
அரும்பசிக்(கு), உதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர்,
தரித்திரம் அறியாப் பெண்டிர்,
கோபத்தை அடக்கா வேந்தன்,
குருமொழி கொள்ளாச் சீடன்,
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனிலை ஏழுந் தானே. 1

தண்டா மரையின் உடன்பிறந்தும்
தண்தேன் நுகரா மண்டூகம் ;
வண்டே கானத் திடையிருந்தும்
வந்தே கமல மதுவுண்ணும்.
பண்டே பழகி இருந்தாலும்
அறியார் புல்லர் நல்லோரை ;
கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பர் கற்றோரே. 2

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தான்ஒரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும் ;
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே. 3

குறிப்புரை :

1. தாபம்-தாகம்; பெண்டிர்-மனைவி; வேந்தன்-அரசன்; கொள்ளா-ஏற்றுக்கொள்ளாத.

2. தண்டாமரை-(தண்மை+தாமரை) குளிர்ச்சி பொருந்திய தாமரை; நுகரா-அருந்ாது; மண்டுகம்-தவளை; கானம்-காடு; கமலம்-தாமரை; மது தேன்; பண்டே-பழமையாக; புல்லர்-அற்பர்; உறவாடி-நட்புக்கொண்டு.

3. வானரம்-குரங்கு; தூக்கணம்-தூக்கணங் குருவி: நெறி-நீதி; நவின்ற-கற்ற; ஈனர்-அற்பர்; இடர்-துன்பம்.

பொன் மொழி வாசகம்

(ஐந்தாம் புத்தகம்)

ஆசிரியர்கள் :
புலவர் பு. செல்வராசனர்,
தலைமைத் தமிழாசிரியர்,
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

ஆபிரகாம் அருளப்பன், B. A.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அர்ச். சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிப்பாசிரியர் :
சு. சே. உமாபதி, M. A., L. T.. (Dip. in. Geog.)
தலைமையாசிரியர்
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீ வைகுண்டம்

பதிப்புரிமை] *1954* **[விலை அணு 12**

முதற் பதிப்பு 1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முன்னுரை

பொன் மொழி வாசகம்' என்னும் பெயரோடு வெளிவ
போதரும் தமிழ் வாசக வரிசையில் இது ஐந்தாம் புத்தக
மாகும். இது 1941–ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட
பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதன்
கண் 800 புதிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. மொழிப்
போதனையில் முக்கியமாகக் கருதப்படுவது மொழிப்
பயிற்சியேயாகும். இப்பயிற்சிக்குப் போதிய வாய்ப்பளிக்
கும் முறையில் இதன்கண் பல்வேறு வகையான ஓவியங்
கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் அவற்றைப் பயன்
படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழியறிவு
ஆக்கமுறும் வகையில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இப்
பயிற்சிகள் அனைத்தையும் குழந்தைகள் செய்யுமாறு
தூண்ட வேண்டுவது ஆசிரியர் கடமையாகும். அன்றியும்
வகுப்புக்கு ஏற்றவையாகச் சில இலக்கண பாடங்களும்
சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கு இன்பமூட்டத்தக்க இனிய
எளிய பாடல்கள் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. இப்
பாட்டுக்களைக் குழந்தைகள் மனப்பாடம் செய்வது நல
மாகும். இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ள பாடங்கள் சிறு
வர் சிறுமியரின் தமிழறிவையும், பொது அறிவையும்
வளரச்செய்யும் என்பது உறுதி. அறிஞர்கள் தமிழ்ச்சிறுவர்
சிறுமியர்க்கு இந்நூல் பயனளிக்குமாறு செய்வார்கள் என
முற்றிலும் நம்புகின்றோம்.

சென்னை
7–11–54.

ஆசிரியர்கள்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	அன்னைக்கு விண்ணப்பம்	...	1
2.	தமிழ் மொழி	...	2
3.	திருவள்ளுவர்	...	4
4.	பட்டு	...	8
5.	பொங்கல் விழா	...	12
6.	தைப்பொங்கல்	...	16
7.	பரமார்த்த குரு கதை	...	18
8.	மூங்கில்	...	22
9.	நல்ல நட்பு நன்மை பயக்கும்	...	26
10.	காகம் பாம்பைக் கொன்ற கதை	...	30
11.	செவ்விந்தியர்	...	32
12.	ஏடு காத்த கிழவி	...	37
13.	அஜந்தாக் குகைகள்	...	43
14.	கோழி	...	46
15.	பாரி வள்ளல்	...	48
16.	நிலப்பாகுபாடு	...	53
17.	இராசராச சோழர்	...	58
18.	பேராசையின் விளைவு	...	63
19.	பாண்டித்துரைத் தேவர்	...	65
20.	கூட்டுறவுச் சங்கம்	...	69
21.	மேல்நாட்டுத் தமிழ்த்தொண்டர்	...	74
22.	புதைந்த நகரம்	...	80
23.	விஞ்ஞானப் பேரறிஞர்	...	84
24.	நம் குடியரசுத்தலைவர் பிரசாத்	...	88
25.	கடிதங்கள்	...	92

செய்யுட் பகுதி

I.	வாழ்த்து	...	97
II.	நீதிப்பகுதி	...	97

நாட்டுப் பொது வாழ்த்து

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
பஞ்சாப ஸிந்து குஜராத மராதா
திராவிட உத்கல வங்கா,
விந்திய ஹிமாசல யமுனை கங்கா
உத்சல ஜலதி தரங்கா,
தவ ஸுப ஞமே ஜாகே தவசுப
ஆசிஷ மாங்கே காஹே தவஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
ஜயஹே ஜயஹே ஜயஹே !
ஜய ஜய ஜய ஜயஹே !

பொருள்

மக்களின் உள்ளத்தில் உறையும் பாரதத்தின் பெரும் பேற்றிற்கு முதல்வனய் உள்ள ஆதி இறைவனே! வெற்றியுண்டாகட்டும்! பஞ்சாப், சிந்து, குஜராத்தி, மராத்தி, திராவிடம், உத்கலம் (ஒரிஸா), வங்காளம், விந்தியம் முதலிய நாடுகளையும், இமயமலையையும், யமுனை, கங்கை முதலிய பொங்கும் அலைகளுடன் பொலிவுறும் யாறுகளையும் கொண்ட உனது மங்கலம் மிகுந்த பெயரைக் கூறி, உனது மங்கல மளிக்கவல்ல ஆசியை வேண்டுகிறேம்.

உன்னுடைய வெற்றியைப் பாடுகிறேம்! மக்களின் மங்கல நல்வாழ்வை நல்கும் இறைவனே! பாரதத்தின் ஆதி முதல்வனே, உனக்கு வெற்றியுண்டாகுக!

வெற்றி! வெற்றி! வெற்றி!

1. அன்னைக்கு விண்ணப்பம்

(பாட்டு)

எண்ணிய முடிதல் வேண்டும்!
நல்லவே எண்ணல் வேண்டும்!
திண்ணிய நெஞ்சம் வேண்டும்!
தெளிந்த நல்அறிவு வேண்டும்!
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

—சி. சுப்பிரமணிய பாரதி.

அரும்பதங்கள்: எண்ணிய - நினைத்த செயல்கள்; எண்ணல் - நினைத்தல்; திண்ணிய - உறுதியான; பண்ணிய - செய்த; பரிதி - சூரியன்; நண்ணிய - அடைந்த; நசித்திடல் - அழிதல்; அன்னாய் - அன்னையே.

2. தமிழ் மொழி

1. நமது தாய்மொழி தமிழ் மொழியாகும். தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். ஆகையால் தமிழ் மொழி மிகவும் இனிமையான மொழி என அறியலாம்.

2. இது மிகவும் பழமையான மொழியாகும். இது இன்ன காலத்தில் தோன்றியது என்று யாராலும் கூற முடியாது. முற்காலத்தில் தமிழ்மொழி தென் இந்தியா முழுமையும் பரவி யிருந்தது. பிறகு சிறிது சிறிதாகத்-தமிழ் மொழி பேசப்படும் பகுதி குறைந்துகொண்டே வந்துவிட்டது. இக்காலத்தில் -சென்னை இராச்சியத்-தின் பெரும்பகுதியில் தமிழ் மொழி வழக்கத்தில் இருக்கிறது.

3. நாம் எல்லாரும் தமிழைப் பேசுவதால் தமிழர்கள் என அழைக்கப்படுகிறோம். தமிழ் மொழி வழங்கும் பகுதி **தமிழகம்** அல்லது **தமிழ்நாடு** ஆகும். இம்மொழியில் முற்காலத்தில் உண்டான நூல்கள் **இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ்** என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து விளங்கின. எனவே இது **முத்தமிழ்** எனவும் கூறப்படுகிறது,

4. தமிழ் நாட்டில் முற்காலத்தில் வாழ்ந்துவந்த சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களும் மற்-றைய சிற்றரசர்களும் தமிழை வளர்க்க முயன்றார்கள் ; தமிழ்ப் புலவர்களை ஆதரித்து நூல்கள் இயற்றும்படி செய்தனர். பாண்டியர்கள் தம் தலைநகராகிய மதுரை-யில் **சங்கம்** அமைத்துத் தமிழை வளர்த்துவந்தனர். **முதற்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம்** என்ற மூன்று சங்கங்கள் இருந்தன என்பது தெரிகின்றது.

5. முதற்சங்கத்திற்குத் தலைவராக விளங்கியவர் அகத்தியர். அவரால் இயற்றப்பட்டது **அகத்தியம்** என்னும் இலக்கண நூல் ஆகும். அதுவே தமிழில் மிகவும் பழமையான நூல். அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. முதற்சங்கத்தில் உண்டான மற்றைய நூல்களும் அழிந்துவிட்டன.

6. இடைச்சங்கத்திற்குத் தலைவராகத் **தொல்காப்பியர்** இருந்தார். அவரால் **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூல் இயற்றப்பட்டது, இந்நூல்தான் இக்காலத்தில் நமக்கு மிகவும் பழமையான நூலாகக் கருதப்படுகின்றது. இச்சங்கத்தில் தோன்றிய மற்றைய நூல்கள் கிடைக்கவில்லை.

7. கடைச்சங்கத்திற்கு **நக்கீரர்** என்ற புலவர் தலைவராக விளங்கினர். இச்சங்க காலத்தில் தோன்றிய நூல்களில் மறைந்தவை போக, மற்றவற்றை எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்று வகைப்படுத்தியிருக்கிருர்கள். கடைச்சங்க காலம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

8. கடைச்சங்கத்திற்குப் பிறகும் வேறு பல நூல்கள் தமிழில் தோன்றியிருக்கின்றன. சைவர், வைணவர், பௌத்தர், சமணர், கிறிஸ்தவர், இஸ்லாமியர் ஆகிய எல்லா மதத்தினரும் விரும்பக்கூடிய இனிமையான பல நூல்கள் நம் தாய் மொழியாகிய தமிழில் இருக்கின்றன. நாம் அவற்றையெல்லாம் படித்துச் சிறந்த முறையில் அறிவுபெற்று விளங்க வேண்டும்; **தமிழ் மொழியின் மேன்மைக்காகப் பாடுபட வேண்டும்.**

அரும்பதங்கள் : இசைத்தமிழ், நாடகத்தமிழ், முத்தமிழ், இயற்றுதல், மேன்மை.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. தமிழ் என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?
2. தமிழ் மொழி வழங்கும் பகுதி எது?
3. தமிழின் பிரிவுகள் யாவை?
4. முதற்சங்கத்திற்குத் தலைவர் யார்?
5. கடைச் சங்க நூல்கள் யாவை?

II. பொருத்தி எழுதுக :

பாண்டியர்	அகத்தியத்தை இயற்றினர்.
அகத்தியர்	கடைச் சங்கத்தின் தலைவர்
நக்கீரர்	தமிழை வளர்த்தவர்.

III. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. கடைச்சங்க காலம்——— ———முற்பட்டது.
2. எட்டுத் தொகை, ———, ——— ஆகியவை சங்க நூல்கள் ஆகும்.
3. தமிழ் வழங்கும் பகுதி———ஆகும்.

IV. வாக்கியங்களில் பயன்படுத்துக :

இனிமையான - பிரிந்து - பழமையான - ஏறக்குறைய - மேன்மைக்காக.

3. திருவள்ளுவர்

1. " வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு,"

என்ற பாரதியார் பாடலை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அப்பாடலில் பாரதியார் குறிப்பிடுகின்ற வள்ளுவர் இயற்றிய நூலே திருக்குறள் ஆகும். இது உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் பொதுவான உண்மைக் கருத்துக்களைத் தெரிவிக்கின்றது; பல மொழிகளில் பெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றது. எல்லா மதத்தைச் சேர்ந்த மக்களும் இந்நூலைப் படிக்கின்றார்கள்.

2. இதன் ஆசிரியரான திருவள்ளுவருடைய வரலாற்றைப் பற்றி நாம் தெளிவாக அறிய முடியவில்லை. அவர் சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு நம் தமிழ்நாட்டில் வாழ்ந்த பெரும்புலவர் ஆவர். அவர் சிறந்த தமிழறிவு உடையவராகவும், செய்யுட்கள் இயற்றுவதில் வல்லவராகவும் விளங்கினர்.

[By Courtesy S. S. Kazagam.]

3. ஆதியென்ற அம்மையாருக்கும், பகவன் என்பவர்க்கும் திருவள்ளுவர் மைந்தராகத் தோன்றினர் என்றும், வள்ளுவர் குலத்தைச் சேர்ந்த ஒருவரால் வளர்க்கப்பட்டார் என்றும் ஒருகதை வழங்கி வருகின்றது. வள்ளுவர் எனப்படுவோர் பழந்தமிழ்நாட்டில் சிறப்போடு வாழ்ந்து வந்த குடியினர் ஆவர். அவர்-

கள் அரசனது பிறந்த நாள், திருமண நாள், முடிசூட்டும் நாள் ஆகிய சிறந்த நாட்களில் யானைமீது அமர்ந்து, முரசு கொட்டி, நகர் எங்கும் செய்தியை அறிவிக்கும் தொழிலை மேற்கொண்டவர்.

4. திருவள்ளுவருடைய இயற்பெயர் யாது என அறிய முடியவில்லை. **நாயனார், தேவர், பொய்யாமொழியார், பெருநாவலர்** முதலியன அவருடைய வேறு பெயர்கள் ஆகும். அவர் சென்னைக்கு அருகில் உள்ள **திருமயிலை** என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். அதுவே இந்நாளில் **மயிலாப்பூர்** என்று வழங்கப்படுகிறது. திருவள்ளுவர் அங்கு இருந்து தம் இல்லற வாழ்க்கையைச் சிறப்பாக நடத்திவந்தார். **வாசுகி** என்னும் அம்மையார் வள்ளுவரின் மனைவியாக அமைந்து, அவரது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தினார். அந்த அம்மையார் கற்பிற் சிறந்து, தம் கணவருடைய கருத்து அறிந்து ஒழுகும் இயல்பினை யுடையவர்.

5. திருவள்ளுவர், செய்யும் தொழில்கள் யாவற்றிலும் சிறந்ததாகிய நெய்யும் தொழிலை மேற்கொண்டிருந்தார். அவர் இயற்றிய திருக்குறள் தமிழ் மொழியில் உள்ள **பதினெண் கீழ்க்கணக்கு** என்னும் தொகையைச் சேர்ந்ததாகும். குறள் என்னும் சொல்லுக்குக் குறுகியது என்பது பொருளாகும். இந்நூலில் மொத்தம் ஆயிரத்து முந்நூற்று முப்பது செய்யுட்கள் இருக்கின்றன. அவை யாவும் இரண்டு அடிகளைக் கொண்ட குறுகிய செய்யுட்களாக விளங்குகின்றன. ஆகையால்தான் இந்நூல் 'குறள்' என்னும் பெயரைப் பெற்று விளங்குகிறது. திரு என்பது இதன் சிறப்பைக் குறிக்கின்ற சொல்லாகும். **முப்பால், பொதுமறை, தமிழ்மறை** முதலியன இந்நூலின் வேறு பெயர்கள் ஆகும்.

6. திருவள்ளுவருடைய புகழ் உலகத்தின் பல பகுதிகளிலும் பரவியிருப்பதற்கு இந்நூலே காரணம் ஆகும். நாம் இந்நூலைப் படித்து, இதிற் கூறியுள்ளபடி நடத்தலே திருவள்ளுவருக்குச் செய்யும் தொண்டு ஆகும்.

அரும்பதங்கள் : புலவர், வல்லவர், மைந்தர், இல்லற வாழ்க்கை, செம்மைப்படுத்தினர், குறள், தொண்டு.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. பாரதியார் வள்ளுவரைப் பற்றிக் கூறியுள்ளது யாது?
2. திருவள்ளுவருடைய பெற்றோர் யாவர்?
3. வள்ளுவர் எனப்படும் குலத்தினரின் தொழில் யாது?
4. வாசுகி அம்மையார் யார்?
5. திருக்குறளின் சிறப்பை எழுதுக.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. திருவள்ளுவர் சென்னைக்கு அருகில் உள்ள——— வாழ்ந்து வந்தார்.
2. குறள் என்பதற்கு———என்பது பொருள் ஆகும்.
3. திருக்குறள்———என்னும் தொகையைச் சேர்ந்தது.
4. திருவள்ளுவர் சுமார்———ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெரும் புலவர்.

III. எதிர்ப்பதங்கள் எழுதுக :

பிறப்பு ×
இல்லறம் ×
பெருமை ×

IV. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துக:

பொதுவான, தெளிவாக, சிறப்போடு, கருத்து அறிந்து, பல பகுதிகளிலும், தொண்டு.



4. பட்டு

1. மக்கள் பருத்தி, பட்டு, கம்பளி இவற்றினால் ஆகிய ஆடைகளை அணிகின்றார்கள். செல்வர்கள் உயர்ந்த விலையுள்ள ஆடைகளையும், எளியவர்கள் குறைந்த விலையுள்ள ஆடைகளையும் உடுக்கின்றார்கள். பொதுவாக நம் நாட்டில் எல்லாரும் பருத்தி ஆடையை உடுக்கின்றார்கள். ஏனெனில் பருத்தி ஆடைகள் விலையில் குறைந்தவை. மேலும் அவற்றைத் தினந்தோறும் துவைத்துச் சுத்தம் செய்து கொள்ளலாம்.

2. பட்டாடைகள் விலை உயர்ந்தனவாதலின் அவற்றைச் செல்வரே அணிய முடியும். நம் நாட்டில் சாதாரணமான குடும்பத்திலுள்ள பெண்களும் பட்டாடை உடுத்துவதிலேயே விருப்பம் கொள்கின்றனர். ஆதலால் நம் நாட்டில் பட்டுப் புடைவைகள் நெய்யப்படுகின்றன.

3. பட்டு நூல் ஒரு வகைப் புழுவின் வாய் எச்சிலிலிருந்து உண்டாகிறது. இப்புழு, தான் இருப்பதற்காகக் கூடு கட்டுகிறது. அக்கூடு அதன் வாய்

எச்சில் நூலாலானது. அக்கூட்டிலிருந்தே பட்டு எடுக்கப்படுகிறது.

4. பட்டுப்பூச்சி கடுகு போன்ற சிறிய உருவமுள்ள பல முட்டைகள் இடும். ஒரு தாய்ப் பூச்சி நானூறு முட்டைகளுக்கு மேலாக இடும். இம்முட்டைகள் சூரியனுடைய வெப்பத்தினுல் பொரியும். முட்டையிலிருந்து புழு வெளிப்படும். இது சாம்பல் நிறமாயிருக்கும். இது அரைக்கால் அங்குல நீளமுள்ளதாய் இருக்கும். இப்புழு முசுக்கட்டை இலேயைத் தின்னும். ஒரு வாரத்தில் நன்ருய் வளர்ந்து விடும். பிறகு இது தன் மேல்தோலே உரித்துக் கொண்டு வெண்மை நிறத்தை அடையும். இவ்வாறு இப்புழு ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு ஒரு முறையாக, நான்கு அல்லது ஐந்து முறை தோல் உரிக்கும். தோல் உரிக்க உரிக்க இதன் நிறமும் மாறிக் கொண்டே வரும். முதலில் சாம்பல் நிறத்தோடு காணப்பட்ட புழு, தோல் உரித்த பிறகு, பொன்னிறம் பெற்று விளங்கும். அந்த நிலேயில் பட்டுப்புழு முசுக்கட்டை இலேகளேத் தின்பதை நிறுத்தி விடும்.

5. இவ்வாறு வளர்ச்சி பெற்ற புழு இரண்டு அங்குல நீளம் உடையதாக இருக்கும். இந்நிலேயில் பட்டுப் புழு, தன் வாயின் கீழ்ப் புறத்திலிருந்து ஒரு வகைப் பிசினே வெளிப்படுத்துகின்றது. இந்தப் பிசினிலிருந்து நூல் நூற்று அந்நூலினுல் தன்னேச் சுற்றிக் கூடு கட்டிக் கொள்ளுகின்றது. இவ்வாருன கூட்டைக் கட்டிக் கொள்வதற்கு இப்புழுவிற்கு மூன்று நாட்கள் ஆகின்றன. புழு கூட்டிற்குள் இருக்கும்பொழுதும் ஒரு முறை தோல் உரித்துக் கொண்டு பொன்னிறம் அடைகின்றது. பட்டுப் புழு அந்தக் கூட்டிற்குள் இருபது

நாட்கள் உறங்கிக் கிடக்கின்றது. கடைசியில் இறகுகள் முளைத்துப் பட்டுப் பூச்சி ஆகின்றது.

6. பட்டு எடுப்பவர்கள் இப்பூச்சியை இறகு முளைத்து வெளியே பறக்கவிடுவதில்லை. இது தன்னைச் சுற்றிக் கொண்டு இருக்கின்ற கூட்டைக் கிழித்துக் கொண்டு வந்தால், பட்டு நூல் ஒன்றுக்கும் உதவாததாகி விடும். ஆதலால் மக்கள் பூச்சியோடு கூட்டை வெந்நீரில் போட்டு விடுவார்கள். பூச்சி இறந்து விடும். பின் கூட்டை எடுத்து அதிலிருந்து பட்டு நூலை எடுக்கிறார்கள். நூலின் நுனியைக் கண்டு பிடித்து ஒழுங்காகச் சுற்றுவதென்பது எளிதான வேலையன்று. இரண்டாயிரம் பூச்சிகளைக் கொன்றால்தான் ஒரு பவுண்டு பட்டுக் கிடைக்கும்.

7. பட்டு உற்பத்தி முதலில் சீன நாட்டில்தான் தோன்றியது. பின் அது ஜப்பான் நாட்டிற்குப் பரவிற்று. ஐரோப்பியர் சீனாவிலிருந்துதான் பட்டுப்பூச்சிகளை வளர்த்துப் பட்டு உற்பத்தி செய்யும் முறையை அறிந்தனர். நம் இந்திய நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பட்டு ஆடை நெய்யும் வழக்கம் இருந்து வருகிறது. இக்காலத்தில் சீனா, ஜப்பான், துருக்கி, பிரான்ஸ் முதலிய தேசங்களில் பட்டு மிகுதியும் உண்டாக்கப்படுகிறது. தென்னிந்தியாவில் மைசூர், கொள்ளேகாலம், பெங்களூர் முதலிய இடங்களில் பட்டு உற்பத்தியாகிறது. மைசூர், பெங்களூர், கோயம்புத்தூர், சேலம், காஞ்சீபுரம், கூறைநாடு, மதுரை, பெத்தாபுரம் முதலிய இடங்களில் பட்டு நெசவுத் தொழில் வளர்ச்சியுற்று வருகின்றது.

8. பட்டாடையை நாம் அழகிற்காகவும் ஆசாரத்திற்காகவும் அணிகிறோம். இது உடம்பின் வெப்பத்தை வெளியே விடாது; வெளியில் உள்ள வெப்பத்

தைத் தேகத்தில் தாக்கவும் விடாது. பட்டு, குளிரையும் தடுத்துக் காக்கும் இயல்புடையது. இத்தொழிலை இக் காலத்தில் நமது நாட்டில் சிறிது சிறிதாக வளர்த்து வருகின்றனர்.

அரும்பதங்கள் : விருப்பம் - வெப்பம் - பொரியும் - பொன் னிறம் - வெந்நீர் - எளிதான - ஆகாரம் - மதிப்பு.

பயிற்சி

I. விடை எழுதுக :-

1. மக்கள் பருத்தி ஆடையை ஏன் அதிகமாக உடுக்கின் றனர்?
2. பட்டு நூல் எதனால் உண்டாகிறது?
3. பட்டுப் புழு எப்படி இருக்கும்?
4. பட்டுப் புழு எப்போது பட்டுப் பூச்சி ஆகின்றது?
5. பட்டு நூல் எவ்வாறு எடுக்கப்படுகின்றது?
6. நம் நாட்டில் பட்டு உற்பத்தியாகும் இடங்களை எழுதுக.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :-

1. பட்டுப் புழு ——— தின்னும்.
2. பட்டு உற்பத்தி முதலில் ——— தோன்றியது.
3. பட்டாடை உடம்பின் ——— வெளியே விடாது.
4. பட்டுப் புழுவின் கூடு ——— இருந்து உண்டாகிறது.

III. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துக :-

சாதாரணமாக, பொதுவாக, உயர்ந்த, ஒழுங்காக, முதலில், மிகுதியும்.

IV. எதிர்ப் பதங்கள் எழுதுக :-

1. உயர்ந்த ×
2. எளிய ×
3. சிறிய ×
4. மதிப்பு ×
5. கீழ்ப்புறம் ×



5. பொங்கல் விழா

1. ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் விழாக்கள் பல வற்றைக் கொண்டாடுகிறார்கள். அவற்றில் சில மதத் தொடர்பு உடையனவாகவும், சில சமூகத் தொடர்பு உடையனவாகவும் இருக்கின்றன. மக்கள் நாள்தோறும் பாடுபட்டு உழைக்கிறார்கள். எப்பொழுதும் உழைத்து உழைத்து அலுத்த உள்ளத்திற்கு உற்சாகம் வேண்டு மல்லவா? எளிய மக்கள் எக்காலத்திலும் மிகுந்த செலவு செய்து, உற்றார் உறவினரோடு கூடி விருந் துண்டு மகிழ முடியாது. எனவே ஓர்ஆண்டில் சில குறிப்பிட்ட நாட்களில் பலருடன் கூடி மகிழ்வதற்காக மக்கள் விழாக்களைக் கொண்டாடுகிறார்கள்.

2. நம் தமிழ்நாட்டில் பற்பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானது பொங்கல் விழா. இதனைத் தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இது தமிழர் விழா ஆகும். இவ்விழா உழவர்களுக்கு மிகச் சிறந்த விழாவாகும். ஆனி, ஆடி மாதங்களில் தொடங்கும் பயிர்த் தொழில்

மார்கழி, தை மாதங்களில் முடிவடைகிறது. பயிர்த்-தொழிலுக்குத் தேவையானவை மழையும் வெப்பமும் ஆகும். மழையைத் தருபவன் இந்திரன்; வெப்பத்தைத் தருபவன் சூரியன்.மார்கழியில் நெல் அறுவடை யாகி உழவுத் தொழில் இனிது முடிவடைந்தவுடன், அத் தொழில் சிறக்க உதவிய தெய்வங்களுக்கு நன்றியறிதலைக் காட்டும் பொருட்டுப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

3. பொங்கல் விழா, போகி, பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என்று நான்கு நாட்கள் வரை கொண்டாடப்படுகின்றது. போகி என் பது இந்திரனுக்கு ஒரு பெயர் ஆகும். பயிர்களுக்கு மழையைத் தந்து உதவிய இந்திரனை வணங்கும் நாள் போகி விழாவாகும். மக்கள் பொங்கலுக்கு முன்பே வீடுகளைப் பழுது பார்த்து வெள்ளை யடித்துச் சுத்தம் செய்து வைப்பார்கள். போகி விழாவன்று விடியற் காலையில் வீட்டு வாயிலில் கூடை, முறம் போன்ற பயனற்ற பழைய பொருள்களைப் போட்டு எரிப்பார்கள். அந்த எரி-யைச் சூழ்ந்திருந்து பெரியவர்களும் சிறியவர்களும் பறை கொட்டிப் பாடி மகிழ்வார்கள். இரவில் தின்-பண்டங்கள் செய்து படைத்து இந்திரனை வழிபடுவார் கள். மார்கழி மாதக் கடைசி நாளில் போகிவிழா கொண்டாடப்படும். அந்த நாளில் யாவரும் எண்-ணெய் தேய்த்துத் தலை முழுகுவர்.

4. மறுநாளாகிய தை மாதத்தின் முதல் நாளில் பெரும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. அன்று வீடுகளை அலங்கரிப்பார்கள். புதுப் பானையில் பொங்கல் பொங்குவார்கள். சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்-கல் என இருவகைப் பொங்கல் செய்வார்கள். "பொங்கலோ பொங்கல்," என்று கூவி மகிழ்வார்கள்.

பொங்கல், கரும்பு, பழம், தேங்காய் முதலியனவற்றைச்-சூரியனுக்குப் படைத்து வழிபடுவார்கள். அன்று சிலர் புத்தாடைகளை வாங்கி உடுத்திக்கொள்வதும் உண்டு. அன்று யாவரும் மகிழ்ந்து உற்றார் உறவினர்களோடு பொங்கலை உண்பர்.

5. தை மாதத்தின் இரண்டாம் நாளில் மாட்டுப்-பொங்கல் விழா கொண்டாடப் படுகிறது. பயிர்த்-தொழிலைச் செய்ய மாடு வேண்டுமல்லவா? மாடு உழ-வர்களுக்குப் பல வகைகளில் உதவி புரிகின்றது. அது உழவர்களுக்கு மகத்தான செல்வம். 'மாடு'என்பதற்குச்-செல்வம் என்னும் பொருள் உண்டு. அந்நாளில் உழவர் கள் மாடுகளை நன்றாகக் குளிப்பாட்டி அவற்றின் கொம்புகளுக்குச் சாயம் பூசி அலங்கரிப்பார்கள்; மாடு களின் கழுத்தில் மாலைகளும் புத்தாடைகளும் அணி-விப்பார்கள்; நெற்றியில் மஞ்சள், குங்குமம், சந்தனம் பூசுவார்கள்; வெண் பொங்கல் பொங்கி அதனையும் பழங்களையும் மாடுகளுக்குக் கொடுப்பார்கள்; பிறகு அவற்றை அலங்கரித்துத் தெருக்களில் ஓட்டிக் கொண்டு செல்வார்கள்; மாடுகளை ஓடவிட்டு வேடிக் கை பார்த்து மகிழ்வார்கள்.

6. அதற்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும். அன்று மக்கள் தங்கள் உற்றார் உறவி னர்களைக் காணச் செல்வார்கள். பொங்கல் விழாவின் போது செல்வர்கள் வேலையாட்களுக்குப் பரிசளிப்பார்-கள். முதலாளிகள் பண்ணையாட்களுக்கு ஆடை, பணம் முதலியன அளிப்பார்கள். இவ்வாறு பொங்கல் விழா நான்கு நாட்கள் நடைபெறும். இது தமிழ்நாட்டுக்கு உரிய விழா.

உழவுத் தொழிலின் சிறப்பை விளக்குகின்ற இவ்-விழாவைத் தமிழ் மக்களாகிய நாம் சிறப்புடன் கொண் டாட வேண்டும்.

அரும்பதங்கள் : தொடர்பு, உற்றார் உறவினர், புத்தாடைகள், அலங்கரித்தல், உழைத்து, விருந்துண்டு, பண்ணையாட்கள், பாடுபட்டு, பயனற்ற, சூழ்ந்து.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. மக்கள் ஏன் விழாக்களைக் கொண்டாடுகிறார்கள்?
2. தமிழர் விழா என்று எது ஏன் கூறப்படுகிறது?
3. பொங்கல் விழா எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
4. பொங்கல் விழா எத்தனை நாட்கள் கொண்டாடப்படுகிறது?
5. போகி விழாவன்று மக்கள் என்ன செய்கிறார்கள்?
6. பெரும் பொங்கல் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?
7. உழவர்கள் மாடுகளுக்கு எப்பொழுது பொங்கல் இடுகிறார்கள்?

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. போகி என்பது——ஒரு பெயர் ஆகும்.
2. தை மாதத்தில்——விழா கொண்டாடப்படுகிறது.
3. மாடு என்பதற்கு——என்றும் பொருள் உண்டு.
4. காணும் பொங்கலன்று———காணச்செல்வார்கள்.

III. வாக்கியங்களில் பயன்படுத்துக :

நாள்தோறும், உழைத்து உழைத்து, பற்பல, சிறப்பாக, முக்கியமானது, மகிழ்ந்து, பலவகைகளில், வேடிக்கை.

IV. எதிர்ப்பதங்கள் எழுதுக :

1. பல ×
2. சுத்தம் ×
3. பழைய ×
4. பெரியோர் ×

6. தைப் பொங்கல்

பொங்கல்!இன்று பொங்கல்
புதுவருஷப் பொங்கல் !
மங்கலங்கள் பொங்க
மனையிலிடும் பொங்கல்! 1

சந்தனத்தைக் குழைத்துத்
தரையைமெழு கிடுவோம்;
சிந்துரத்தாற் கோலம்
சேரஅதில் அமைப்போம். 2

எங்கள்கண பதியை
எழுந்தருளச் செய்வோம்;
மங்கலநற் பொருள்கள்
வரிசைகொள வைப்போம். 3

வாசமிக வீசும்
மலர்எடுத்து வருவோம்;
நேசமொடு வீசி
நின்றுதொழு திடுவோம். 4

இலைகள்விரித் திடுவோம்;
இளநீர்கள் வைப்போம்;
குலைகுலையாய்க் கனிகள்
கொண்டுவந்து வைப்போம். 5

பச்சைமஞ்சள் இஞ்சி
படைபடையாய் வைப்போம்;
இச்சைதரு கரும்பும்
இடையிடையே நடுவோம். 6

அகில் விறகை மாட்டி,
அடுப்பில் எரிமூட்டி,
பகவன் அடி போற்றிப்
பானையேற்றி வைப்போம். 7

தங்கத்தினால் பானை,
தரளம் என அரிசி,
பொங்கலும்பால் பொங்கல்
புத்தமுதப் பொங்கல். 8

பானையுமே பொங்கிப்
பால்வடியும் வேளை
வானம்எழக் குரவை
வழங்கி வலம் வருவோம். 9

கடவுட்கமு தளிப்போம்;
காகத்துக்கும் இடுவோம்;
உடனிருந்தெல் லோரும்
உண்டு மகிழ்ந்திடுவோம் ! 10

— *கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை*

அரும்பதவுரை

1. *மனை - வீடு ; மங்கலம் - நல்ல செயல்.*
2. *சிந்துரம் - செந்நிறமான பொட்டு.*
3. *கணபதி - விநாயகர்.*
4. *வாசம்-வாசனை (மணம்) ; நேசம் - அன்பு ;*
5. *கனி - பழம்.*
6. *இச்சை தரும் - விருப்பத்தைக் கொடுக்கின்ற.*
7. *அகில் - அகிற் கட்டை ; மாட்டி - இட்டு (அமைத்து) பகவன் - இறைவன்.*
8. *தரளம் - முத்து ; புத்தமுதம் - புதுச் சோறு.*



7. பரமார்த்த குரு கதை

1. முன் ஒரு காலத்தில் பரமார்த்தர் என்ற ஒரு குரு இருந்தார். அவருக்கு ஐந்து சீடர் இருந்தனர். அவர்கள் குருவைவிட்டு அகலாமல் நெருங்கி இருந்து, அவருக்கு உதவி புரிந்து வந்தனர். ஒருசமயம் பர-மார்த்தர் மற்றைய ஊர்களிலுள்ள தம் மாணவர்களைப் பார்த்து வரும் பொருட்டுத் தம்முடன் இருந்த மாண வர்களோடு புறப்பட்டார். எல்லாரும் கால்நடை யாகச் சென்றனர். பரமார்த்தர் வயதானவர். அவர்-கள் சென்ற வழியில் எதிரில் ஒருவன் குதிரைமேல் ஏறிக்கொண்டு வந்தான். " நம் குருவுக்கும் குதிரை ஒன்றிருந்தால் அவர் நடந்து வருந்தாமல் பிரயாணம் செய்யலாம்," என்று சீடர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். அதனைக் கேட்ட குரு, " குதிரை வாங்குவதற்கு இப்போது பணம் இல்லை. பணம் வந்த பிறகு பார்த்துக்கொள்வோம்," என்று கூறி விட்டார்.

2. குருவும் சீடரும் ஒரு சோலையில் தங்கினர். அச்சோலையின் பக்கத்தில் ஓர் ஏரியும், ஏரியின் கரையில் ஐயனார் கோயிலும் இருந்தன. ஐயனார் கோவிலின்முன் பெரிய குதிரை ஒன்று மண்ணால் செய்யப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. அக்குதிரையின் நிழல் ஏரி நீரில் விழுந்தது. நீர் கொண்டுபோக வந்த சீடர்கள் குதிரையின் நிழலை நீரில் கண்டனர். குதிரை நீரில் நிற்கின்றது என்று எண்ணினர். அதனைப் பிடித்துக் கொண்டு சென்று குருவுக்குக் கொடுக்கலாம் என்று பேசிக்கொண்டனர். அவர்கள் குதிரையைப் பிடிப்பது எப்படி என்று ஆராய்ந்தனர்.

3. "குதிரைக்குக் கொள்ளின்மீது பிரியம் அதிகம். ஆதலால் கொள்ளை வேகவைத்துக் கொண்டு வந்தால் குதிரை மேலே வரும். பிடித்துக்கொள்ளலாம்," என்றான் ஒருசீடன். இரண்டாம் சீடன், "இங்குக் கொள்ளுக்கு எங்கே போவது? புல்லைக்கொண்டு வைத்தால் தின்னவரும்; பிடித்துக் கொள்ளலாம்," என்று கூறினான். மூன்றாம் சீடன், "குதிரை கனைப்பது போல் நாம் கனைத்தால், அது மேலே வரும்; அப்போது பிடித்துக் கொள்ளலாம்," என்று சொன்னான். நான்காம் சீடன், "எருமையை நீரில் விரட்டிவிட்டால் அது தண்ணீரைக் கலக்கும்; அப்போது குதிரை வெளியே வரும்; பிடித்துக் கொள்ளலாம்," என்றான். ஐந்தாம் சீடன், "அவை எல்லாம் இயலாதவை. மீன் பிடிப்பது போல் பிடித்துவிடலாம்," என்றான். "அதுவே சரி," என்று அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

4. அவர்கள் தம் கையிலிருந்த மூங்கில் தடியைத் தூண்டிற் கோலாக்கினர்; மேலே போட்டிருந்த பழந்துணியைக் கோலின் நுனியில் முடிந்தனர். மற்றொரு நுனியில் அரிவாளைத் தூண்டில் முள்ளாக

அமைத்தனர். தாம் உண்ணக் கொண்டுவந்த பழஞ்-சோற்று மூட்டையை இரையாக அமைத்தனர். தூண்-டிலைத் 'தொப்'பென்று நீருக்குள் போட்டனர். தண்-ணீரில் அலைகள் உண்டாயின. அதனால் குதிரை நெளிந்து ஓடுவதுபோலத் தோன்றிற்று. அலை அடங்-கியதும் நீரினுள் இருந்த சோற்று மூட்டையைப் பெரிய மீன்கள் கௌவி இழுத்தன. அரிவாள் கோரைப் புல்-லில் சிக்கிக்கொண்டது. குதிரை அகப்பட்டுவிட்டது என்று கருதித் தூண்டிற்கோலை ஐவரும் பிடித்து இழுத்தனர். பழந்துணி அறுந்துபோகவே அவர்கள் மல்லாந்து விழுந்தனர்.

5. அச்சமயம் அவ்வழியே வழிப்போக்கன் ஒரு-வன் வந்தான். ஐவரும் மல்லாந்து கிடந்ததைப்பார்த்து விஷயம் என்ன என்று கேட்டறிந்தான். அவர்கள் மூடத்தனத்திற்கு அவன் மிக இரங்கித் தன் மேலாடை-யால் கரையில் இருந்த மண்குதிரையை மூடினான். நீரில் குதிரை காணப்படவில்லை; அத்துணியை எடுத்-ததும் நீரில் குதிரை மீண்டும் காணப்பட்டது. அத-னால் ஐவரும் கரையிலிருந்த மண்குதிரையின் நிழலே நீரில் தோன்றியது என அறிந்தனர். அந்த வழிப்-போக்கன், சீடர்கள் குருவின்மேல் வைத்திருந்த அன்பை அறிந்து, அவர்களைத் தன் ஊருக்கு அழைத்-துச் சென்று, தன்னிடமிருந்த நொண்டிக் கிழக் குதிரை யொன்றை அவர்களுக்குக் கொடுத்தான். அக்குதிரை சிறிது ஊனமுள்ளதாயினும் குருவைத்-தாங்கிச் செல்லவல்லதே என்று சீடர்கள் ஐவரும் நினைத்து அக்குதிரையுடன் குருவினிடம் வந்தார்கள். அவர்கள், நடந்த நிகழ்ச்சிகளை அவரிடம் கூறினார்கள். குரு வழிப்போக்கனது அறிவையும், நற்குணத்தையும் புகழ்ந்து பேசினார். பின்பு அவர் குதிரைமேல் ஏறிக்-

கொள்ளச் சீடர்கள் அவரைத்தொடர்ந்து சென்றனர். அவர்கள் பல ஊர்களுக்கும் சென்று, சில நாட்களுக்குப் பின் தம் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள்.

அரும்பதங்கள் : சீடர்கள் - பிரயாணம் - ஆராய்ந்தனர் - தூண்டில் - இரை - அரிவாள் - மல்லாந்து - மூடத்தனம் - இரங்கி — ஊனமுள்ள - நிகழ்ச்சி.

பயிற்சி

I. *விடை எழுதுக :*

1. *சீடர்கள் குதிரைமேல் சென்றவனைக் கண்டபோது என்ன நினைத்தார்கள் ?*
2. *அவர்கள் ஏரி நீரில் கண்டது யாது ?*
3. *சீடர்கள் ஐவரும் குதிரையைப் பிடிப்பதற்காகக் கூறிய உபாயங்கள் யாவை ?*
4. *கடைசியில் அவர்கள் குதிரையைப் பிடிக்க எம்முறையை மேற்கொண்டார்கள் ?*
5. *சீடர்கள் ஏன் கீழே விழ நேர்ந்தது ?*
6. *வழிப்போக்கன் எவ்வாறு அவர்களுடைய அறியாமையைப் போக்கினான் ?*

II. *சந்தர்ப்பம் கூறுக :*

1. *குதிரை வாங்குவதற்கு இப்போது பணம் இல்லை.*
2. *அவை யெல்லாம் இயலாதவை. மீன் பிடிப்பது போல பிடித்துவிடலாம்.*
3. *சிறிது ஊனமுள்ளதாயினும் குருவைத் தாங்கிச் செல்ல வல்லதே.*

III. *வாக்கியங்களில் பயன்படுத்துக .*

எல்லாரும், கால் நடையாக, இரங்கு, நினைத்து, நிகழ்ச்சியை, நற்குணம்.



8. மூங்கில்

1. மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படுவனவாகிய பொருள்கள் பலவற்றுள் மூங்கிலும் ஒன்ருகும். மூங்கில், கரும்பு, நாணல், பேய்க்கரும்பு என்பன ஓர் இனத்தைச் சேர்ந்தவை. வெப்பமும் மழையும் மிக்க காடுகளிலும், மலேகளின்மீதும் அது அதிகமாக வளரும். இந்தியா, சீனு, ஜப்பான் முதலிய நாடுகளில் மூங்கில் மிகுதியாக வளர்கின்றது. அது மக்களுக்குப் பலவகையில் பயன்படுகிறது.

2. மூங்கில் வண்டல் மண் படிந்த செழிப்பான இடங்களில் உயர்ந்து வளருமாதலால் ஆற்றங்கரைகளில் மூங்கில் புதர்கள் ஏராளமாக இருப்பதைக் காணலாம். வீட்டுப் புறக்கடைகளிலும் மூங்கில் புதர்களே வைத்து வளர்ப்பார்கள். மூங்கிலில் இருவகை உண்டு. உட்பக்கம் ஒன்றுமில்லாது குழைபோல இருப்பது ஒரு-

வகை மூங்கிலாகும். உட்பகுதி கெட்டியாக இருப்பது மற்றொரு வகை மூங்கிலாகும். உள்ளே துவாரம் உள்ள மூங்கில் 'போல் மூங்கில்' என்றும், உள்ளே கெட்டியாக இருக்கும் மூங்கில் 'கெட்டி மூங்கில்' என்றும் கூறப்படும். வாழையின் அடியில் கன்றுகள் தோன்றுவதுபோல, மூங்கிலின் அடியிலும் சிறுசெடிகள் தோன்றும். ஆதலால் ஒரு மூங்கில் செடியை வைத்தால் விரைவில் அது ஒரு புதராகப் பெருகிவிடும்.

2. மூங்கிலுக்குச் சாம்பல் நல்ல எரு. மூங்கில் இலை கரும்பின் இலைபோல் சொர சொரப்பாயும், கூர்மையாகவும் இருக்கும். மூங்கிலின் கிழங்கு, முளை, அரிசி என்பனவற்றை மக்கள் உண்பர். மூங்கில் அரிசி கோதுமையைப் போன்றிருக்கும். மலையில் வாழும் மக்களுக்கு மூங்கில் பலவகையில் பயன்படுகின்றது. மூங்கில் புதருள்ள இடத்தில் பாம்புகள் அதிகமாக வசிக்கும். காலையில் பூமியைத் தொடுவதுபோன்று தொங்கிக்கிடக்கும் மூங்கில்கள், வெயில் ஏற ஏற உயர்ந்து நிமிர்ந்து நிற்கும். இரவில் மீண்டும் பூமியை நோக்கி வளைந்துவிடும். மூங்கிலுக்குக் கரும்பைப்போல் கணுக்கள் உண்டு. ஆதலால் 'வரை' என்னும் சொல் மூங்கிலையும் அம்மூங்கில் வளரும் மலையையும் குறிக்கிறது. கழை, வேய் என்பன மூங்கிலின் வேறு பெயர்கள்.

4. மூங்கில் மனிதனுக்குப் பலவகைகளில் பயன்படுகின்றது. கிராமங்களில் நடைபெறும் குடிசைத் தொழிலுக்கு மிகுதியாகப் பயன்படுகிறது. கலியாண வீடுகளில் மூங்கிலைக் கொண்டு பந்தல் போடுகிறார்கள். மாட்டுத் தொழுவம், குடிசை இவை அமைக்க மூங்கில் பயன்படுகிறது. பருத்த கெட்டியான மூங்கில்களை வாரைகளாகவும் தூண்களாகவும் பயன்படுத்துகிறார்கள். பல்லக்கின் மேல்விதானத்தை

அமைக்க மூங்கிலைப் பயன்படுத்துகிறார்கள். பல்லக்குத் தூக்கும் கொம்பாகவும் இது பயன்படுத்தப்படுகிறது. மூங்கிலைப் பிளந்து, சிம்புகளாக்கித் தட்டி, கூடை, முறம், பாய், பெட்டி முதலியன செய்கிறார்கள். நாற்காலி, மேசைகள்கூட மூங்கிலால் செய்யப்படுகின்றன. சிறு ஓடைகளையும்,வாய்க்கால்களையும் கடக்க மூங்கிலினால் பாலம் அமைத்தல் நாட்டுப்புறங்களில் வழக்கமாக இருக்கிறது. மூங்கில் இன்னும் எத்தனையோ வகைகளில் பயன்படுகிறது.

5. வில், அம்பு, ஈட்டி முதலிய ஆயுதங்கள் செய்ய மூங்கில் பயன்படுகின்றது. மூங்கிலை உடைத்து ஊறவைத்து, அரைத்துப் பசையாக்கிக் காகிதம் செய்கின்றனர். மூங்கில் இலை மருந்தாகப் பயன்படுகின்றது. மூங்கில் குருத்தை உடைத்தால் அதிலிருந்து ஒரு வகைப்பால் வரும். அந்தப் பால் கண்நோயை நீக்குகின்றது. குடியானவர்களுக்கு மூங்கில் பெரிதும் பயன்படுதலால், அவர்கள் தோட்டங்களின் வேலி ஓரத்திலும், வீட்டின் பின்புறத்திலும் மூங்கிலை வைத்து வளர்க்கிறார்கள். அவர்கள் மூங்கிலைக் கொண்டு ஓய்வு நேரங்களில் பல பொருள்களைச் செய்து விற்றுத் தம் வருவாயைப் பெருக்கிக்கொள்கின்றார்கள்.

அரும்பதங்கள் : புல்லினம், புதர்கள், புறக்கடை, குழை, சொரசொரப்பு, வேய், வரை, தொழுவம், பாடம் செய்தல், சிம்பு, வருவாய்.

பயிற்சி

I. *விடை எழுது.*

1. புல்லினத்தைச் சேர்ந்தவை யாவை?
2. மூங்கிலின் வகைகள் எவை?

3. மூங்கிலின் வேறு பெயர்கள் யாவை?
4. மூங்கில் பயன்படும் விதங்களில் நான்கினை எழுதுக.
5. இதிலிருந்து எவ்வாறு காகிதம் செய்யப்படுகின்றது?

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. இந்தியா, ———ஜப்பான், ——— முதலிய நாடுகளில் மூங்கில் மிகுதியாக வளர்கின்றது.
2. மூங்கிலுக்கு———நல்ல எரு.
3. மூங்கில் அரிசி———போன்று இருக்கும்.
4. மூங்கிலின் குருத்தை உடைத்தால் அதிலிருந்து——— ———வரும்.

III. வாக்கியங்களில் பயன்படுத்துக :

பலவற்றுள், ஏராளமாக, வழக்கமாக, நாட்டுப்புறங்களில், ஓய்வு நேரங்களில்.

IV. எதிர்ப் பதங்கள் எழுதுக :

1. இரவு ×
2. கிழவர்கள் ×
3. பின்புறம் ×
4. வெப்பம் ×
5. விற்றல் ×

9. நல்ல நட்பு நன்மை பயக்கும்

1. மகத தேசத்தில் **சண்பகவனம்** என்ற ஒரு காடு இருந்தது. அக்காட்டில் மான் ஒன்றும் காகம் ஒன்றும் நட்பாயிருந்தன. மான் அக்காட்டில் எங்கும் சுற்றித் திரிந்து செழுமையான புல்லேத் தின்று, தெள் ளிய நீரைக் குடித்து மிகவும் கொழுத்திருந்தது. அந்த மானே ஒரு நரி பார்த்தது. "இந்த மான் நன்ருய்க் கொழுத்திருக்கிறது. நமக்கு நல்ல உணவாகும். ஆனுல் இதனே நாம் வெல்ல முடியாது. ஆதலால் வஞ்சனேயால் கொன்று தின்னவேண்டும்," என்று நரி தனக்குள் யோசித்துக்கொண்டது.

2. ஒரு நாள் நரி மானின் அருகே வந்து, "நண்பா, சுகமா?" என்று கேட்டது. அதைக் கேட்ட மான், "நீயார்?" என்றது. அதற்கு நரி மிகவும் பணி வோடு, "நண்பா, நான் இக்காட்டில் வாழ்பவன். எனக்கு இக்காட்டில் யாரும் துணேயில்லே. நான் தனியே திரிந்துகொண்டிருந்தேன். இன்று உன்னேக் கண்டது முதல், உன்னிடம் நட்புக்கொண்டு வாழ ஆசைப்படுகிறேன்," என்று கூறியது.

3. மான், "நல்லது," என்று சொல்லிற்று. அன்று மாலேப் பொழுதில் நரியும் மானும் காகம் இருந்த இடத்திற்கு வந்தன. அங்குச் சண்பக மரத்தின் மேல் காகம் இருந்தது. மான் நரிக்குக் காகத்தைக் காண்பித்து, "இவன் என் அருமையான நண்பன்," என்றது. காகம் அதனேக்கேட்டு, மானே நோக்கி, "உன் அருகில் நிற்பவன் யார்?" என்று கேட்டது. மான், "இவன் இந்தக் காட்டில் வசிப்பவன். இவன் இன்று என்னுடன் நட்புக்கொள்ள வந்து இருக்கின் ருன்." என்றது. அதற்குக் காகம், "புதிதாக வந்த

பழக்கம் இல்லாதவனை நம்பலாகாது. ஒருவனுடைய குலத்தையும், நடத்தையையும் அறியாமல் அவனுக்கு இடங்கொடுத்தால் பின் துன்பமே உண்டாகும்,' என்றது.

4. அதனைக் கேட்ட நரி, "ஒருவனுடைய இயல்பை அவனுடன் நட்புக்கொள்ளாமல் எப்படி அறிய முடியும் ? நல்லோர் பிறர் சுபாவத்தை நோக்குவதில்லை. அவர்களுடைய நட்பு ஒருவரையொருவர் கண்ட மாத்திரத்தில் உண்டாகிறது," என்றது. மான் அதைக்கேட்டுக் காகத்தைப் பார்த்து, "நீ எனக்கு நண்பனாய் இருப்பதுபோல இவனும் இருக்கட்டும் ; நீ தடை சொல்லாதே," என்றது.

5. பின்னர் அவை மூன்றும் நட்புக்கொண்டு வாழ்ந்து வந்தன. ஒரு நாள் நரி மானைப்பார்த்து, "நண்பா, இக்காட்டை அடுத்திருக்கும் வயலில் பயிர் செழுமையாக வளர்ந்திருக்கிறது. காட்டுகிறேன், வா," என்று கூறி, அழைத்துக்கொண்டு போய்க் காட்டிற்று. மான் அன்று முதல் அந்த வயலில் பயிரை மேய ஆரம்பித்தது. ஒரு நாள் மான் பயிரை மேய்ந்துகொண்டிருந்தபொழுது வயலுக்குரியவன் பார்த்துவிட்டான்; அடுத்த நாள் வயலுக்கருகே வலையைக் கட்டி வைத்தான். வழக்கம்போல் அங்கு வந்த மான் வலையில் அகப்பட்டுக்கொண்டது. அப்போது மான் தன்னை நரிநண்பன் விடுவிப்பான் என்று எண்ணி, நரியை எதிர் நோக்கிக்கொண்டிருந்தது. மான் வலையில் அகப்பட்டுக்கொண்டு இருக்கக் கண்ட நரி, தன் எண்ணம் நிறைவேறியதென்று மகிழ்ந்து சும்மா இருந்தது.

6. மான் நரியைப் பார்த்து, "ஏன் சும்மா நிற்கிறாய்? என்னைக் கட்டியிருக்கும் வலையை அறுத்து

என்னை விடுவி. ஆபத்தில் உதவுபவன் அன்றோ சிநே-
கிதன்? துன்பம் உண்டான காலத்தில் உடையை இழந்-
தவன் கைபோல, நண்பர் உதவுவார்கள் என்று பெரி-
யோர்கள் கூறியுள்ளாரன்றோ!'' என்றது. நரி அதைக்
கேட்டு, ''நண்பா, உனக்கு உண்டாயிருக்கும் துன்-
பத்தை அறிந்து வருந்துகிறேன். இன்று என்னுடைய
விரத நாள்; ஆதலால் நான் தோல் வலையைத் தொட-
மாட்டேன். நாளையாயின் நீ என்ன சொன்னாலும் செய்-
வேன். நண்பனுக்காக உயிரையும் கொடுப்பவன் நான்,''
என்று கூறி விட்டு, ஓடிச்சென்று மானுக்குத் தெரி-
யாமல் மறைந்துகொண்டது.

7. அன்றிரவு மான் வாராமையால் அதற்கு ஏதோ ஆபத்து உண்டாயிருக்க வேண்டும் என்று காகம் எண்ணியது. அது மானைத் தேடிச்சென்று அதைக் கண்டது. காகம் மானைப் பார்த்து ''உனக்கு இத்துன்பம் எப்படி வந்தது? உன் நண்பன் நரி எங்கே?'' என்று கேட்டது. அதற்கு மான், ''உண்மை நண்பனை உன் சொல்லைக் கேளாமையால் இக்கேடு வந்தது. நரி என் இறைச்சியைத் தின்னப் பக்கத்தில் எங்கேனும் ஒளிந்துகொண்டிருப்பான்,'' என்றது. காகம் அதனைக் கேட்டு வருந்தி, ''தனக்கு நன்மை செய்கிற நண்பர் சொல்லைக் கேளாதவர்க்குத் துன்பம் விரைவில் வரும். அவர்கள் பகைவர்கட்குக் களிப்பை உண்டாக்குகிறார்கள்,'' என்று கூறியது. அப்போது வயலுக்குரியவன் கையில் தடியோடு வந்து விட்டான். அப்போது காகம், ''நண்பா, இப்போது நீ இறந்தாற்போல் மூச்சை அடக்கிக் கொண்டு கிட; நான் உன் கண்ணைப் பொய்யாகக் குத்துகிறேன். அவன் நீ இறந்தனை என்று கருதி வலையை அப்புறப்படுத்துவான். அதையறிந்து நான் கத்துகிறேன்; நீ ஓட்டம் பிடி,'' என்றது.

8. காகம் சொன்னபடியே மான் செய்தது. காகம், மானின் கண்ணைப் பொய்யாகக் குத்திக்கொண்டிருந்தது. வயலுக்குரியவன் மான் இறந்தது என்று எண்ணி, வலையைச் சுருட்டிக்கொண்டிருந்தான். உடனே காகம் கத்திற்று; மான் ஓட்டம் பிடித்தது. அதைப் பார்த்த வயலுக்குரியவன் தன் கையிலிருந்த தடியை வேகமாய் வீசி எறிந்தான். அத்தடி மறைந்திருந்த நரியின் மேல் பட, நரி இறந்தது. பின் காகமும் மானும் இன்பமாய் வாழ்ந்தன.

அரும்பதங்கள் : தெள்ளிய, கொழுத்திருந்தது, வெல்ல முடியாது, வஞ்சனை, நண்பா, பணிவோடு, சண்பகமரம், அருமையான, சடுதி, சுபாவம், தடை.

பயிற்சி

1. விடை எழுது :

அ. சண்பகவனத்தில் வசித்தவை எவை?

ஆ. மானிடம் வஞ்சகமாக நட்புக்கொள்ள வந்தது எது? ஏன் அது அவ்வாறு செய்ய எண்ணியது?

இ. மானுக்கு நேர்ந்தது என்ன?

ஈ. அப்போது நரி என்ன செய்தது?

உ. மானின் உயிரைக் காப்பாற்றியது எது?

ஊ. இதனால் நாம் அறிவது என்ன?

2. எதிர்ப்பதங்கள் எழுது:

ஒன்று ×
காடு ×
கொழுத்து ×
வெற்றி ×
நல்ல நட்பு ×
முடியும் ×

3. கீழ் உள்ள சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுது :

தெள்ளிய–வஞ்சனை–நட்பு–சுற்றித்திரிந்து–கொழுத்து–யோசித்து–பணிவோடு–துணையில்லை–பழக்கம்–இயல்பு.



10. காகம் பாம்பைக் கொன்ற கதை

(பாட்டு)

கோடுறு சினையிற் காகம்
கூடுவைத் தநேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொங்தில் வந்தே
ஆடிய கரும்பாம்(பு) ஒன்றங்
கதுபெறு முட்டை யெல்லாம்

நாடியே குடித்துப் போட
　　நலிந்துளம் மெலிந்து வாடி, 1

தன்னுயிர்ப் பாங்க ஞன
　　சம்புகன் அருகு போய்இங்(கு)
என்னசெய் குவேன்நான்' என்ன,
　　'இதைக்கொலல் அரிதோ ! நீ போய்
மன்னவன் தேவி ஆடும்
　　மஞ்சன சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
　　போடுக புற்றில்' என்ன, 2

காகமப் படியே செய்யக்
　　காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
　　ஈர்ந்தனர் ; ஈரும் போதில்
நாகமங் கிருந்து சீற,
　　நறுக்கினர் இருதுண் டாக ;
ஆகையா லுபாயத் தாகா(து)
　　இல்லைஎன அறைந்த தன்றே. 3

பஞ்ச தந்திரம்] *[வீரமார்த்தாண்ட தேவர்*

குறிப்புரை :

(1) கோடு உறு-கொம்புகள் பொருந்திய; சினையில்-கிளையில்: பேடோடு-பெண் பறவையோடு; நலிந்து - நைந்து உளம் - மனம்; மெலிந்து - வருந்தி: வாடி-துன்புற்று.

(2) பாங்கன்-நண்பன் ; சம்புகன் - நரி ; மன்னவன் தேவி - இராணி ; ஆடும் - குளிக்கும் ; மஞ்சனச் சாலை - குளிக்கும் அறை; புக்கு - புகுந்து : பொன் அணி - பொன்னால் செய்யப் பட்ட நகை.

(8) காவலன் - அரசன் ; ஏவலாளர் – வேலையாட்கள் ; ஏகி - சென்று ; ஈர்ந்தனர் - வெட்டினர் ; ஈரும்போது - வெட்டும்போது ; நாகம்-பாம்பு ; நறுக்கினர் - வெட்டினர் ; உபாயம் - தந்திரம்.



11. செவ்விந்தியர்

1. புதிய கண்டம் என்று அழைக்கப்படும் அமெரிக்கா, வட அமெரிக்கா தென் அமெரிக்கா என்று இரண்டு பிரிவுகளை உடையது. அவற்றுள் வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரை, மேற்குக் கடற்கரை ஓரங்களில் பெரிய மலைத் தொடர்களும், குன்றுகளும் உள்ளன. உயர்ந்த பூமிக்கும் மலைக்கும் இடையில் புல் தவிர வேறு ஒன்றும் முளைக்காத சமவெளிகள் உள்ளன. இங்கு உள்ள நிலம் வளம் பொருந்தியதாக இல்லை. அங்கு மரங்கள் வளர்வதற்கு ஏற்ற மழை பெய்வதில்லை. அங்குள்ள புல்வெளிகள் **பிரெரீஸ்** எனப்படும். அப்புல்வெளிகளின் சில பகுதிகளில் வசிக்கும் மக்கள் **செவ்விந்தியர்கள்** எனப்படுவார்கள்.

2. செவ்விந்தியர் செந்நிறம் உடையவர்களும் அல்லர் ; இந்தியரும் அல்லர். ஆனால் அவர் செவ்விந்தியர் என்று ஏன் தவறாக அழைக்கப்படுகின்றனர் என்பதை அறிவோம். கொலம்பஸ் என்பவர் நாடுகளைக் காணவேண்டும் என்னும் வேட்கையுடன் அட்லாண்-

டிக்குப் பெருங் கடலைக் கடந்து செல்லத் துணிந்து பயணத்தை மேற்கொண்டார். கொலம்பஸின் எண்ணம் இந்தியாவைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதே யாகும். அக்காலத்தில் அமெரிக்கா என்ற நாடு இருப் பதாக மக்களுக்குத் தெரியாது. அவர் வடஅமெரிக்கா வின் கிழக்குக் கரையருகிலுள்ள தீவுகளை அடைந்த போது தவருக அவைகளை இந்தியாவின் பகுதி என்று கருதி விட்டார். அதனால் அவர் அங்கிருந்த மனிதரை இந்தியர் என்று அழைத்தார். அவர் அவர்களைக் கண்டபொழுது அம்மக்கள் தங்கள் முகங்களில் சிவப்பு நிறம் பூசிக்கொண்டிருந்தனர். ஆதலால் கொலம்பஸ் அவர்களைச் செவ்விந்தியர் என்று அழைத்தார். அவர் கள் மங்கலான சிவப்பு நிறம் வாய்ந்தவர்; நீளமாகத் தொங்கும் கருமையான தலை மயிருடையவர்.

3. செவ்விந்தியர் வாழ்க்கை ஏறக்குறைய எஸ்கிமோக்களின் வாழ்க்கையைப் போன்றதேயாகும். வேட்டையாடுவது அவர்களுடைய தொழில் ஆகும். செவ்விந்தியர்களிடம் குதிரை, ஆடு, பசு என்பன இல்லை. கோதுமையோ பிற உணவுக்குரிய தானியங் களோ அங்குப் பயிரிடப்படுவதில்லை. செவ்விந்தியர்கள் **பைஸன்** என்னும் காட்டெருமைகளை வேட்டையாடு கின்றனர். பைஸன் என்னும் காட்டெருமை பெரியது. தோள்களிலும், கழுத்தைச் சுற்றிலும் அதற்கு அடர்த்தி யான மயிர் உண்டு. அது வலிமை மிகுந்த விலங்கு ஆகும். அது அழகுடையது அன்று. அவை கூட்டங் கூட்டமாக ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குச் செல்லும் வழக்கமுடையவை.

4. செவ்விந்தியர்கள் கத்தி, வில், அம்பு, கதை என்பவற்றை வேட்டைக்கு ஏற்ற ஆயுதங்களாக உப

போகிக்கிருர்கள். **தமஹூக்** என்பது அவர்கள் பயன் படுத்தி வந்த கோடரி போன்ற ஒரு வகைக் கருவி யாகும். அது நீண்ட காம்பிணை உடையது. எஸ்கிமோக் களைப்போல் செவ்விந்தியர்களுக்கும் இரும்பின் உப யோகம் தெரியாது. அதனால் அவர்களுடைய கோடரி, கத்தி, அம்பு முதலியன கல், எலும்பு, கொம்பு என்பன வற்றால் ஆகியவைகளே. சமவெளி ஓரத்தில் உள்ள மலைகளிலிருந்து மரங்களைச் செவ்விந்தியர் கொண்டு வந்து பயன்படுத்திக் கொள்கின்றனர்.

5. எஸ்கிமோக்களுக்கு 'ஸீல்' என்னும் கடல் நாய் தேவையாக இருப்பதுபோல, செவ்விந்தியர் களுக்குக் காட்டெருமையும் மானும் தேவையாக இருக் கின்றன. செவ்விந்தியரின் ஆடை காட்டெருமைத் தோலாலும், மான் தோலாலும், காட்டு ஆட்டின் தோலாலும் செய்யப்பட்டவை. அவர்கள் விலங்குகளின் தோல்களை எலும்பினாலாகிய கத்திகளால் சுரண்டிக் கழுவிப் பல நாட்கள் புகையில் வைத்துப் பக்குவப் படுத்தி உடுத்தி வருகின்றனர். அந்த ஆடைகளைச் செய்யும் தொழில் பெண்களுடையதாகும்.

6. செவ்விந்தியர்களில் ஆண்களும் பெண்களும் நீண்ட அங்கி அணிகின்றனர். காட்டெருமைத் தோலைக் குளிரைத் தடுத்துக் கொள்ளும் மேற்போர்வை யாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் காட்டெருமை, மான் ஆகியவற்றின் இறைச்சியை உணவாகக் கொள் கின்றனர்.

7. கூடாரங்களை அமைக்கும் வேலையைப் பெண் களே செய்கின்றனர். ஆண்களுக்கு வேட்டையாடும் தொழிலே முக்கியமானதாக விளங்குகிறது. அவர்க ளுடைய கூடாரங்களுக்கு 'விக்வாம்ஸ்' என்பது பெயர்.

அவர்கள் பல மரக் கொம்புகளை ஒரு பக்கத்தில் சேர்த்துக் கட்டுகின்றனர்; மற்றப் பக்கத்துக் கொம்புகளின் அடிகளை வட்டமாக வரும்படி அமைக்கின்றனர். அவற்றின்மேல் தோல்களை மூடிக் கூடாரம் அமைக்கின்றனர். செவ்விந்தியர்கள் வெள்ளையர்களிடமிருந்து குதிரைகளைப் பெற்று அவற்றைப் பயன்படுத்த அறிந்துகொண்டனர். ஒரு குதிரையின் இரு பக்கங்களிலும் நீளமான இரு கழிகளைக் கட்டுவர். குதிரைக்குப் பின்னுல் நீண்டிருக்கும் இக்கழிகளின் குறுக்கே சிறுகழிகள் வைத்துக் கட்டுவார்கள். அவற்றின்மீது மூட்டைகளை ஏற்றிக் கொள்வார்கள். மற்ருெரு குதிரைமேல் பெண்களும் குழந்தைகளும் ஏறிக்கொண்டு செல்வார்கள். அவர்கள் பனிப் பாறைகளின்மேல் நடக்க நேரும்போது நீண்ட மர மிதியடிகளை உபயோகிப்பார்கள். அவர்களுடைய படகுகள் இலேசான மரத்தால் செய்யப்பட்டவை. அவர்களுக்கு நடனத்திலும், பழமையான பாடல்களைப் பாடுவதிலும் விருப்பம் அதிகம். பூதங்களும் பிசாசுகளும் உண்டு என்று அவர்கள் நம்புகிருர்கள். இறந்தவர்களின் பொருள்களைச் சவத்துடன் வைத்துப் புதைப்பது செவ்விந்தியருடைய வழக்கமாக இருக்கிறது.

8. செவ்விந்தியர்கள் தாம் வளர்க்கின்ற மான்களுக்கும் காட்டெருமைகளுக்கும் தேவையான புல்வெளிகளைத் தேடி இடம் மாறிக்கொண்டே இருக்கின்றனர்; அதனுல் ஓரிடத்தில் நிலையாக வீடுகளைக் கட்டிக் கொள்ளாமல் கூடாரங்களில் வசிக்கின்றனர்.

அருஞ்சொற்கள்: கண்டம், சமவெளி, பயணம், அடர்த்தியான, கோடரி, அங்கி, போர்வை, மிதியடி, வேட்டை.

பயிற்சி

I. 1. புதிய கண்டம் யாது? அதன் பிரிவுகள் யாவை?

2. பிரைரீஸ் என்பது என்ன?

3. கொலம்பஸ் யாரைச் செவ்விந்தியர் என்று கூறினார்? ஏன்?

4. செவ்விந்தியர்களின் உடையும், உணவும் யாவை?

5. அவர்களுடைய கூடாரங்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன?

6. செவ்விந்தியருக்கு விருப்பமான செயல்கள் யாவை?

7. அவர்கள் ஏன் நிலையாக ஓரிடத்தில் வசிப்பதில்லை?

II. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக :-

1. பிரைரீஸ் புல் வெளிகளில் ——— அதிகம்.
(மழை, குளிர், வெப்பம்)

2. செவ்விந்தியர்கள் ——— போர்வையாகப் பயன்படுத்துகின்றனர்.

3. செவ்விந்தியர்கள் ——— வசிக்கிறார்கள்.
(கல் வீடுகளில், கூரை வீடுகளில், கூடாரங்களில்)

III. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துக :-

தவறாக, மங்கலான, கடுமையான, அடர்த்தியான, கூட்டங்கூட்டமாக, பக்குவப்படுத்தி.

IV. எதிர்ப்பதங்கள் எழுதுக:-

1. கருமையான ×
2. நீண்ட ×
3. இலேசான ×
4. வலிமை ×



12. ஏடு காத்த கிழவி

1. சிவகங்கைக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூரில் புலவர் ஒருவர் வசித்து வந்தார். அவர் மிகவும் இனிய கவிகளை விரைவில் இயற்றுவார். அவருடைய முன்னோர்கள் இராமநாதபுரம், சிவகங்கை முதலான குறுநில மன்னர்கள்மீது அவ்வப்போது பல பாடல்கள் பாடிப் பரிசில் பெற்றனர். அவர்களைப் போலவே இவரும் அம்மன்னர்களைப் பாடிப் பரிசில் பெற்றார். அந்தக் கிராமத்திலுள்ளவர்களும் புலவர்களை நன்கு மதித்து ஆதரித்தனர். அதனால் புலவர் நிலபுலங்களுடையவராய்ப் பயிர்த் தொழில் செய்து வந்தார். எனவே, புலவர் கல்விச் செல்வமும், ஓரளவு பொருட் செல்வமும் பெற்று இனிது வாழ்ந்துவந்தார்.

2. அக்காலத்தில் தென்னாட்டில் தீவர்த்திக் கொள்ளைக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் அக் காலத்தில் செல்வர்கள் வீடுகளுக்குச் சென்று கொள்ளையடிப்பார்கள். அவர்கள் கொள்ளையடிக்க

வரும் நாளையும் குறித்துக் கடிதம் அனுப்புவார்கள். அவர்களிடமிருந்து தப்பி வெளியே செல்லவும் முடியாது. ஊரைச் சுற்றி மறைவாக ஆட்கள் நின்று காவல் செய்வார்கள்; பயந்து ஓடுபவர்களைக் கண்டால் கொன்றுவிடுவார்கள்; பொருள்களை மறைத்துவைத்தால் பலவகைத் துன்பங்களைச் செய்வார்கள். ஆதலால் அக்காலத்தில் செல்வர்கள் வாழ்க்கை மிக்க துன்பமுடையதாக இருந்தது.

3. ஒரு கொள்ளைக் கூட்டத்தாருக்குப் புலவர் குறுநில மன்னர்களைக் கண்டு பாடிப் பெரும்பொருள் படைத்துள்ளார் என்பது எப்படியோ தெரிந்தது. அக் கொள்ளைக் கூட்டத்தார் புலவர் வீட்டைக் கொள்ளையிடுவதெனத் தீர்மானித்துத் தாங்கள் கொள்ளையிடுவதற்கு வரும் நாளையும் கடிதமூலம் தெரிவித்துவிட்டனர். புலவர்க்கு யாது செய்வதென்று தெரியவில்லை. பொருள்களை எடுத்துச் செல்லவும் முடியாது. செல்லாமலிருந்தால் கொள்ளைக் கூட்டத்தார் பறித்துக் கொள்வார்கள். எனவே புலவர் நீண்டநேரம் சிந்தித்துக் கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தார். அவர் தம்மிடமுள்ள நகைகள் வெள்ளிப் பாத்திரங்கள் முதலியவற்றைச் சில பெரிய பெட்டிகளில் வைத்துப் பூட்டினர்; அவற்றை வீட்டின் புறக்கடையில் குறிப்பான ஓரிடத்தில் எவரும் அறியாதபடி புதைத்துவைத்தார். அவருடைய தாய்க்கு மட்டும் அந்த இடம் தெரியும். பிறகு அவர் தம் தாயை வீட்டில் நிறுத்திவிட்டு மனைவி மக்களுடன் வேற்றூருக்குச் சென்றுவிட்டார்.

4. கிழவி வீட்டிலிருந்தாள். குறித்த நாளில் குறித்த நேரத்தில் கொள்ளைக் கூட்டத்தார் தவறாமல் வந்தனர். வீட்டின் எல்லா இடங்களிலும் சோதனை இட்டனர். ஒன்றும் அகப்படவில்லை. கள்வர் தலை

வனுக்குச் சினம் பொங்கி எழுந்தது. அவன் கிழவி யைப் பலவாறு பயமுறுத்திப் '' பொருள் எங்கே இருக் கிறது '' எனக் கேட்டான். கிழவி ஒன்றும் சொல்ல வில்லை. என்ன செய்தும் பயன் படாமையால் அவன் எங்கும் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தபொழுது பரணில் ஓலைச்சுவடிக் கட்டுகள் பல இருப்பதைக் கண்டு தன் தோழர்களிடம், 'இந்தச் சுவடிக் கட்டுகளை யாவது எடுத்துக்கொண்டு போவோம்'! என்று கூறினன்.

5. அதைக் கேட்ட கிழவியின் மனம் புண்பட் டது. '' ஐயோ, இக்கள்வர் சுவடிகளை வண்டியில் ஏற்று கின்றனரே; இச்சுவடிகளை எழுதிச் சேர்த்துவைக்க என் குடும்பத்தினர் எத்தனை ஆண்டுகள் உழைத்தனர்! எவ் வளவு உழைப்பு எடுத்துக்கொண்டனர்! இச்சுவடி களால் அல்லவா இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் புலமை பெற்று வழிவழியாகப் புலவர்களாய் விளங்கி வருகின்றனர்? அப்புலமையால் அன்றோ மன்னர் களைப் பாடி மகிழ்வித்துப் பொருள்பெற்று இனிது வாழ் கின்றனர்? கல்விக்கும், பொருளுக்கும், குடும்பத்தின் பெருமைக்கும் காரணமாயிருக்கும் இச்சுவடிகளைக் கள்வர்கள் வாரிக்கொண்டு செல்லவிடுவதா? இது அறமாகுமா? நம்முடைய பிற்காலச் சந்ததியார் புலமை பெற யாது செய்வர்? நூல்களுக்கு எங்குச் சென்று அலைவர்? இவை இருந்தால் பொருளைத் தேடிக்கொள்ள லாம். மற்றும் இக்கள்வர்கள் இச்சுவடிகளின் அருமை பெருமையை உணரார். இவற்றை வீணே எரித்துவிடு வர். ஆதலால் பொருளை மறைத்து வைத்திருக்கும் இடத்தைக் காண்பித்துச் சுவடிகளைக் காப்பதே என் னுடைய கடமையாகும் '' என்று அக்கிழவி தீர்மானித் துக் கொண்டாள்.

6. பிறகு கிழவி, கள்வர் தலைவனை நோக்கி, "அப்பா, ஏன் இந்தப் பழைய சுவடிகளை வண்டியில் ஏற்றுகிறாய்? அவற்றை ஒழுங்காக முன் இருந்தபடி வைத்து விடு! நான் பணம் இருக்கும் இடத்தைக் காண்பிக்கிறேன்" என்றாள். 'பணம்' என்ற சொல்லைக்கேட்டவுடன் கள்வர் தலைவன் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டான். சுவடிகள் மீண்டும் முன்னிருந்தபடியே அடுக்கி வைக்கப்பட்டன; கிழவி சொன்ன சொல் தவறாமல் கள்வர் தலைவனை அழைத்துக் கொண்டு சென்று பெட்டி புதைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தைக் காட்டினாள். திருடர்கள் தோண்டிப் பார்த்தார்கள். உள்ளே பெட்டி இருந்தது. அதனை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் வந்தார்கள்.

7. கிழவியைக் கள்வர் தலைவன் கண்டான். அவனுக்கு எக்காரணத்தாலோ கிழவியிடம் அளவிலா அன்பு உண்டாயிற்று. அவன் கிழவியை நோக்கி, "நீ பணப்பெட்டியைக் காண்பித்துக் கொடுத்துச் சுவடிகளைக் காத்த காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்குக் கிழவி கல்வியின் அருமையையும், தன் குலத்து முன்னோர்கள் அச்சுவடிகளால் அடைந்த பெருமைகளையும் நன்மைகளையும் எடுத்துக் கூறினாள். கள்வர் தலைவன் மனம் கரைந்தது; "கல்வி யில்லாவிட்டால் என் குலக் கொழுந்துகள் தீநெறியில் சென்று விடுவார்களே," என்று கிழவி கூறிய மொழிகள் அவன் மனத்தை உருக்கின. உடனே கள்வர் தலைவன் பெட்டியையும் கிழவியிடமே கொடுத்து, "அம்மையே, இன்று உம்மால் நான் மெய் அறிவு பெற்றேன்; கல்வியில்லாமையால் ஈனமும் பாவமுமான இச்செயலில் இறங்கிக் கொடிய பாவங்களைச் செய்தேன். இனி எக்காலத்திலும் கள்வர்களால் உங்கள்

குடும்பத்தினர்க்குத் தீங்கு நேராதபடி காத்துக்கொள்கிறேன்; சென்று வருகிறேன்.'' என்று கூறித் தன் கூட்டத்தாருடன் போய் விட்டான்.

8. சில நாட்கள் கழிந்த பின்னர்ப் புலவர் குடும்பத்துடன் வந்தார்; புதைத்து வைத்திருந்த பெட்டி வீட்டினுள் இருப்பதைக் கண்டார். திறந்து பார்த்த பொழுது யாவும் இருக்கக் கண்டு வியந்தார். பின் நடந்தவற்றைக் கேட்டறிந்தார். அம்மையாரின் அருஞ் செயலை எண்ணி வியந்தார். 'கல்வியே கருந்தனம்' என்னும் உண்மையை மறந்து, பொருளைப் புதைத்து வைத்து விட்டுச் சுவடிகளைப் போற்றாத தம் செயலுக்கு வெட்க முற்றார்.

அரும்பதங்கள்: கவி, பரிசில், நிவர்த்தி, செல்வர்கள், சினம், உழைப்பு, புலமை, கள்வர், சந்ததியார், சுவடிகள், நெறி, குலக்கொழுந்து, ஈனம், வியந்தார், கருந்தனம், போற்றாத, அறம்.

பயிற்சி

1. விடை எழுதுக:
   1. புலவருடைய முன்னோர்கள் எவ்வாறு சிறப்புப் பெற்றிருந்தார்கள்?
   2. திவர்த்திக் கொள்ளைக்காரர்களுடைய இயல்பை விளக்கி எழுதுக.
   3. புலவர் கொள்ளைக் கூட்டத்தாருக்குப் பயந்து என்ன செய்தார்?
   4. கிழவி கள்வர்கள் சுவடிக் கட்டுகளை எடுத்தபோது என்ன நினைத்தாள்?
   5. அவள் கள்வர் தலைவனிடம் கூறியவை யாவை?
   6. கள்வர் தலைவனின் மனம் எதனால் உருகியது?
   7. நீ இப்பாடத்திலிருந்து அறிந்துகொண்ட நீதி யாது?

II. சந்தர்ப்பம் கூறுக :

1. இந்தச் சுவடிக் கட்டுகளையாவது எடுத்துக்கொண்டு போவோம்.
2. இச்சுவடிகளின் அருமை பெருமையை இக்கள்வர்கள் உணரார்.
3. கல்வி பயில்லாவிட்டால் என் குலக்கொழுந்துகள் தீநெறியிற் சென்றுவிடுவார்களே.
4. உங்கள் குடும்பத்தினர்க்குத் தீங்கு நேராதபடி பார்த்துக் கொள்கின்றேன்.

III. வாக்கியங்களில் பயன்படுத்துக :

விரைவில், மதித்து, குறித்த நேரத்தில், வழிவழியாக, அளவிலா அன்பு, எக்காலத்திலும், உண்மையை.

IV. எதிர்ப்பதங்கள் எழுதுக:

1. துன்பம் ×
2. அருமை ×
3. அறம் ×
4. பாவம் ×
5. போற்றுதல் ×

13. அஜந்தாக் குகைகள்

1. நமது இந்திய நாடு சிறந்த நாடு ஆகும். இந்த நாட்டில் அவ்வப்போது பல மதங்கள் தோன்றிக் கல்வி, கலை, பண்பாடு, நாகரிகம், நல்லொழுக்கம் முதலியவற்றை வளர்த்து வந்திருக்கின்றன. புத்த மதம் நம் நாட்டில் சிறந்து விளங்கிய காலத்தில் புத்தமதத் துறவிகள் தென்னிந்தியாவில் பல இடங்களில் கழகங்களை ஏற்படுத்திக்கொண்டு தம் மதத்தைப் பரப்பி வந்தனர். அவ்விடங்களுள் **அஜந்தாக்** குகைகளும் ஒன்று.

2. அஜந்தா மலைக்குகைகளில் உள்ள ஓவியங்கள் காண்போர் கண்களைக் கவர்கின்றன. அஜந்தாவைப்பற்றி நெடுங்காலமாக மக்கள் அறியாமலிருந்தனர். நூற்றைம்பது வருடங்களுக்கு முன்புதான்

அஜந்தாவின் விவரம் தெரியலாயிற்று. நெடுங்காலம் அஜந்தாக் குகைகள் பெருமரங்கள், செடிகள், கொடிகள் அடர்ந்த காடுகளுக்கு இடையில் தம் பெருமை இழந்து மறைந்து கிடந்தன. அஜந்தா பரத்பூருக்கு நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இங்கே போக விரும்புவோர் பம்பாயிலிருந்து டில்லிக்குச் செல்லும் இரயில் மார்க்கத்தில் உள்ள பச்சோரா என்னும் ஊரில் இறங்க வேண்டும். அங்கிருந்து கிளை இருப்புப் பாதை வழியாகச் சென்று பாஹீரை அடைய வேண்டும். பரத்பூர், பாஹீரிலிருந்து பதின்மூன்று மைல் தொலைவில் உள்ளது. அங்கிருந்து அஜந்தாவிற்குச் செல்லலாம்.

3. அஜந்தா துர்க்கம் நைஜாம் இராஜ்யத்தின் வடகோடியில் உள்ளது. இதன் அருகில் ஒரு சிறிய ஆறும் ஓடுகிறது. அஜந்தாக் குன்றுகளில் இருபத்தொன்பது குகைகள் இருக்கின்றன. காட்டு வழிகளைக் கடந்து, பாறைக்குப் பாறை தாவி, செடி புதர்கள் வழியாக உடலை ஒடுக்கிக்கொண்டு சென்றால்தான் அஜந்தாக் குகைகளின் அழகைக் காணலாம். இக்குகைகளில் பௌத்த துறவிகள் தங்கள் கைத்திறனைக் காட்டியுள்ளார்கள். அஜந்தாக்குகைகளை இரு வகை-யாகப் பிரிக்கலாம். அவை சைத்தியம் என்றும் விஹாரம் என்றும் கூறப்படும்.

4. முன்னால் உயர்ந்த வளைவான மண்டபமும், முட்டை வடிவான ஜன்னல்களும் கொண்ட கோயில்களாகச் சைத்தியங்கள் உள்ளன, அவற்றின் உள்ளே புத்தபகவானுடைய உருவச் சிலைகள் இருக்கின்றன இவ்வாறு நான்கு சைத்தியங்கள் உள்ளன. மற்ற இருபத்தைந்தும் விஹாரங்கள் ஆகும். பௌத்தத் துறவிகள் தங்கி இருந்த விடுதிகள் விஹாரங்கள் ஆகும். விஹாரங்களின் நடுவில் ஒரு பெரிய மண்ட

பத்தின் பக்கங்களில் பல அறைகளும் காணப்படுகின் றன. ஒவ்வொரு மண்டபத்தின் தலைவாயிலுக்கு எதி ரிலும் ஒரு மூலத்தானம் இருக்கிறது. அதில் புத்த பெருமான் சிலையும் இருக்கின்றது. இக் குகைகள் பிறைவடிவான பள்ளத்தாக்கில் அமைந்துள்ளன. குன்றுகளின் கீழும் சில குகைகள் இருக்கின்றன.

அரும்பதங்கள்: பண்பாடு, கழகம், கவர்தல், தொலைவு, கைத்திறன், விடுதிகள், பிறைவடிவம், செதுக்கப்படுதல், ஓவியங்கள்.

பயிற்சி

I. *விடை எழுதுக :*

1. *மதங்கள் எவற்றை வளர்த்து வந்தன ?*
2. *அஜந்தாக் குகைகள் எங்கு இருக்கின்றன?*
3. *அங்குச் செல்வதற்கு உரிய வழி யாது?*
4. *அஜந்தாக் குகைகளின் வகைகள் யாவை?*
5. *சைத்தியம் என்பது என்ன ?*
6. *எவை விஹாரங்கள் எனக் கூறப்பட்டன ?*
7. *அஜந்தாக் குகைகளில் உள்ள காட்சிகள் யாவை?*

II. *கோடிட்ட இடங்களை நிரப்புக :*

1. *அஜந்தா———வடகோடியில் உள்ளது.*
2. *அஜந்தாக் குகைகளில் சைத்தியங்கள்———. விஹா ரங்கள்———.*
3. *பரத்பூர்———இருந்து பதின்மூன்று மைல்———உள்ளது.*

III. *வாக்கியங்களில் பயன்படுத்துக :*

பண்பாடு, அவ்வப்போது, கவர்கின்றன, மிக அழ காக, யாவரும், களித்தல்.

IV. *எதிர்ப்பதங்கள் எழுதுக :*

1. *இறங்குதல்* ×
2. *நல்லொழுக்கம்* ×
3. *தோல்வில்* ×



14. கோழி

சேவற்கோழி

1. கோழீ! கோழீ! வாவா;
கொக்கோகோ என்றுவா
கோழீ! ஓடி வாவா
கொண்டைப்பூவைக் காட்டுவா

2. குத்திச் சண்டை செய்யவோ?
குப்பைகிண்டி மேயவோ?
கத்திபோலுன் கால் விரல்
கடவுள்தந்து விட்டனர்!

3. காலை கூவி எங்களைக்
கட்டில்விட் டெழுப்புவாய்;
வேலை செய்ய ஏவுவாய்
வெற்றிகொண்ட கோழியே!

பெட்டைக் கோழி

4. கோழீ! கோழீ! வாவா;
கூரைவிட் டிறங்கிவா
கோழீ! முட்டை இடவா
கூட்டில்அடை காக்கவா

5. பெட்டைக் கோழீ! வாவா;
பிள்ளைகளைக் கூட்டிவா;
குட்டை நெல்லைக் கொட்டினேன்;
கொத்திக்கொத்தித் தின்னவா.

6. வஞ்சமாய்ப் பருந்து அதோ
வானில்வட்டம் போடுது
குஞ்சு அணைத்துக் காப்பாயோ?
கூட்டில்கொண்டு சேர்ப்பாயோ?

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

15. பாரி வள்ளல்

1. நமது தமிழ் நாடு மிகச் சிறந்த நாடு; மிக்க புகழ் படைத்த நாடு. அதன் சிறப்புக்கும் புகழுக்கும் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று, இந் நாட்டில் வாழ்கின்ற மக்கள் பழங்கால முதல் இன்று வரையில் இல்லை யென்று கூருது கொடுக்கின்ற கொடைத் தன்மையைப் பெற்றிருப்பதேயாகும். கொடைக் குணம் ஒருவரால் கற்பிக்கப்பட்டு வருவது அன்று. அக் குணம் இயல்பாகவே அமைந்திருக்க வேண்டும். இதனுல்தான் ஔவையார், ''நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணம்'' என்று கூறினுர். அத்தகைய பிறவிக் குணமாகிய கொடையை இயல்பாக உடையவர்கள், யார் எது கேட்டாலும் இல்லை என்னுது கொடுப்பவர். அவர்களை 'வள்ளல்' என்று யாவரும் வாயாரப் புகழ்ந்து கூறுவர்.

2. பண்டைக் காலத்தில் தமிழகத்தில் கொடையிற் சிறந்த வள்ளல்கள் எழுவர் இருந்தனர். அவர்களைக் கடை எழு வள்ளல் என்று புலவர் கூறுவர்.

அவர்கள் **பாரி, காரி, ஆய், அதிகமான், ஓரி, நள்ளி, பேகன்** என்போர் ஆவர். அவர்களைப் பற்றிப் புலவர் பெருமக்கள் பலர் பாடியுள்ளனர். அவ்வள்ளல்களுடைய பூத உடம்பு இப் பூமியிலிருந்து மறைந்தாலும் புகழுடம்பு நிலைபெற்றிருக்கின்றது.

3. தமிழ் நாட்டில் பறம்பு நாடு என்று ஒரு பகுதி இருந்தது. அப்பகுதியில் பறம்பு மலை என்ற ஒரு மலையும் இருந்தது. பறம்பு மலையைச் சுற்றி முந்நூறு ஊர்கள் இருந்தன. அம் முந்நூறு ஊர்களைக் கொண்ட சிறு நாட்டைப் பாரி என்னும் குறுநில மன்னன் அரசாண்டு வந்தான். பாரி வேளிர் குலத்தில் பிறந்தவன். ஆதலால் அவனை வேள்பாரி என்றும் கூறுவர். பாரி அருள் நிறைந்த மனம் படைத்தவன். யார் எது கேட்டாலும் இல்லை என்னாது கொடுக்கும் இயல்புடையவன். அவன் தமிழ்க் கல்வியையும் சிறக்கக் கற்றிருந்தான். அவனிடம் நட்புப் பூண்டிருந்தவர் கபிலர் என்னும் புலவர் ஆவர். 'பாரியும் கபிலரும்' என்று சேர்த்துச் சொல்லும் வழக்கம் அவர்கள் கொண்டிருந்த நட்பின் சிறப்பை விளக்குவதாகும். பாரி தனக்குச் சொந்தமான முந்நூறு ஊர்களையும், தன்னை அடைந்த வறியவர்க்குப் பரிசிலாகக் கொடுத்துவிட்டான். என்னே அவனுடைய கொடைத் தன்மை!

4. ஒரு முறை பாரி வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றிருந்தான். அவன் காடுகளில் சுற்றித் திரிந்தான்; வேட்டை முடிந்ததும் தேரின்மீது ஏறிக் கொண்டு வந்தான்; வழியில் அவன் நாட்டின் இயற்கை அழகுகள் பலவற்றைக் கண்டு களித்தான். மான்கள் ஒருபுறம் அச்சம் இன்றித் திரிந்தன. மயில்கள் தோகை விரித்தாடின. குரங்குகள் கிளைக்குக் கிளை தாவிக்குதித்தன. எல்லாக் காட்சிகளும் மன்னன் மனத்-

தைமகிழ்வித்தன. இந்த நிலையில் ஒரு முல்லைக் கொடி மட்டும் பற்றிப் படரக் கொழுகொம்பு இல்லாமல் நிலத்தில் விழுந்து வாடிக் கிடத்தலைப் பாரி கண்டான். அவன் மனத்தில் இரக்கம் உண்டாயிற்று. தன் ஆட்சியில் ஓரறிவு உயிரும் துன்பப்படுதல் ஆகாது என்று பாரி தன் மனத்தில் எண்ணினான். உடனே அவன் சற்றும் தயங்காமல் தன் தேரை ஓட்டிச் சென்று முல்லைக்கொடி அருகில் நிறுத்தினான். அக்கொடியை அதன்மீது படரும்படி எடுத்து விட்டான். பின் பாரி கால் கடுக்க நடந்து தன்னூரை அடைந்தான். அவனுடைய செயலை அறிந்த அனைவரும் வியந்தனர். அவனுடைய கொடைத் திறத்தினைப் போற்றினர். பாரி பசுமையான முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த செய்தி எங்கும் பரவியது; அதனோடு அவன் புகழும் பரவியது.

5. சேரசோழ பாண்டியர் என்பார் தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தர் அல்லவா? அவர்கள் செவிகளிலும் முல்லைக்குத் தேர் ஈந்த பாரியின் கொடைச் சிறப்பு எட்டியது. பாரியின் புகழைப்பற்றிக் குடிமக்கள் வியந்து பேசுதலை அவர்கள் கேட்டார்கள். ''முடியுடை வேந்தராகிய தம்மினும் குறுநில மன்னனாகிய பாரி அத்தகைய பரந்த புகழை அடைவதா?'' என்று அவர்கள் பொறாமை கொண்டார்கள். பொறாமைக் குணம் மேலிட மேலிடப் பாரியினிடத்தில் அவர்களுக்குப் பகைமை உண்டாயிற்று. ஏதாவது ஒரு வகையில் அவனை அழிக்க முயன்றார்கள். பாரிக்கு இரு புதல்வியர் இருந்தனர். அவர்கள் அழகிலும், கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினர். கபிலர் அவர்களுக்கு ஆசிரியராய் இருந்தார். ஆதலால் அப் பெண்கள் கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். முடியுடை மூவேந்தரும் பாரியினுடைய பறம்பு நாட்டிற்குச் சென்றார்கள். பாரி அவர்-

களை அன்போடு வரவேற்று உபசரித்தான். பின், மூவேந்தரும் அவன் பெண்களைத் தங்களுக்கு மணம் செய்து கொடுக்கும்படி கேட்டனர். அம் மூவரில் எவரேனும் இருவருக்குத் தன் பெண்களை மணம் செய்து கொடுத்தால், மற்றைய ஒருவருக்கு வருத்தமுண்டாகும் என்று எண்ணிப் பாரி தன் பெண்களை அவர்களுக்கு மணம் செய்து கொடுக்க முடியாதென மறுத்து விட்டான்.

6. பாரியின் மீது மூவேந்தருக்கும் பகைமை வளர்ந்தது. அதனுல் அவர்கள் ஒருங்கு சேர்ந்து படை திரட்டிக்கொண்டு பாரியைப் போரில் கொல்லத் துணிந்து வந்தனர். மூவரும் சேனைகளுடன் வந்து பறம்பு மலையை முற்றுகையிட்டனர். பாரி அதற்குச் சிறிதும் அஞ்சவில்லை. பாரி தன் சேனையைக்கொண்டு கோட்டையைக் காத்தான். கபிலர் கிளிகளைப் பழக்கி விடுத்து வேறிடங்களிலிருந்து தானியங்களைக் கொண்டு வரச் செய்து உதவினுர். அம்மட்டோ! கபிலர் மூவேந்தரைப் பார்த்து, "முடிவேந்தர்களே, எவ்வளவு காலம் நீங்கள் முற்றுகை இட்டாலும் உங்களால் பறம்பு மலையைக் கைப்பற்ற முடியாது. இம்மலையில் மூங்கில் அரிசி, பலாப் பழம், தேன், அருவி நீர் என்பன உள்ளன. பாரியின் படைவீரர்கள் அஞ்சாமல் போர் புரிவர். அவனே முந்நூறு ஊர்களையும் தன்னை இரந்து கேட்டவர்க்குக் கொடுத்துவிட்டான். நானும் பாரியும் குன்றுமே எஞ்சி இருக்கின்ருேம். போரை நிறுத்தி விட்டு, நீங்கள் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் அவனிடம் சென்று இரப்பீர்களானுல், அவன் தன்னுடைய உயிரையும் கொடுப்பான். அவ்வாறன்றி, அவனை எதிர்த்து வெற்றி பெறுதல் உங்களால் இயலாத காரியமாகும்" என்று கூறினுர்.

7. வேந்தர்கள் மூவரும் கபிலரின் நல்லுரையை ஏற்றுக்கொள்ளாது பலநாட்கள் பாரியுடன் போர்புரிந்தனர். ஆனால் அவர்களால் பாரியை வெல்ல முடியவில்லை. போரினால் பாரியை வெல்ல முடியாதென்பதை நன்குணர்ந்த அவர்கள் போரை நிறுத்திவிட்டு வஞ்சகத்தால் பாரியைக் கொன்றனர். பாரியின் மறைவைக்குறித்துக் கபிலரும், பாரிமகளிரும் பாடிய பாட்டுக்கள் மனத்தை உருக்கும் தன்மையை யுடையன. பின்னர்க் கபிலர், பாரியின் இரு மகளிரையும் அழைத்துக்கொண்டு பறம்பு மலையை விட்டு நீங்கினார். கபிலர் அம் மகளிரைத் தக்கவரிடம் அடைக்கலமாக வைத்து விட்டுப் பாரியின் நினைவாகவே இருந்து, பட்டினி கிடந்து தம் உயிரை விட்டார். மூவேந்தரும் பாரியைக் கொன்று பழி சூடினர். ஆனால் பாரியோ உயிரைக் கொடுத்துப் புகழை நிலை நிறுத்தினான். பாரியைப் போன்ற புரவலனையும், கபிலரைப்போன்ற புலவரையும் தோற்றுவித்துப் பெரும் புகழ் படைத்தது நம் தமிழ் நாடு.

அரும்பதங்கள் : பண்டைக் காலம், கொடைத் தன்மை, தலைய, வள்ளல், பூதவுடம்பு, புகழுடம்பு, அருள், பரிசில், அச்சம், கொழுகொம்பு, ஈதல், கேள்வி, ஆற்றல், முற்றுகை யிடுதல், குறுநில மன்னர், இரத்தல், நல்லுரை, புரவலர்.

பயிற்சி

I. *விடை எழுதுக :-*

1. *தமிழகத்தில் வாழ்ந்த ஏழு வள்ளல்கள் யாவர்?*
2. *பாரி எந்த நாட்டை ஆண்டு வந்தான்?*
3. *பாரியின் இயல்புகள் யாவை?*
4. *கபிலர் என்பவர் யார்?*
5. *பாரி காட்டில் கண்ட இயற்கைக் காட்சிகள் யாவை?*
6. *அவன் செய்த அருஞ்செயல் யாது?*

7. மூவேந்தர்கள் ஏன் பாரிமீது பகைமை கொண்டனர்?
8. கபிலர் மூவேந்தர்களிடம் கூறியவை யாவை?
9. கபிலர் பாரி இறந்த பிறகு என்ன செய்தார்?

II. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:-

1. பாரி வள்ளல் தன்னுடைய——— வறியவர்க்குக் கொடுத்து விட்டான்.
(பறம்பு மலையை, பறம்பு நாட்டை, முந்நூறு ஊர்களை)

2. பாரி———குலத்தில் பிறந்தவன்.
(சேரர், வேளிர், சோழர்.)

3. கபிலர்———உயிர் நண்பராக விளங்கினார்.
(நள்ளியின், ஓரியின், பாரியின், பேகனின்.)

III. வாக்கியங்களில் பயன்படுத்துக:-

புகழ்படைத்த, வாயார, வியந்து, அன்போடு, வரவேற்று, நல்லுரை.

IV. எதிர்ப் பதங்கள் எழுதுக :-

இல்லை ×
இயற்கை ×
துன்பம் ×

16. நிலப் பாகுபாடு

1. தமிழில் இன்று கிடைக்கும் நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம். தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். அதனை இயற்றியவர் தொல்காப்பியர் என்ற புலவர். தொல்காப்பியத்தில் நிலத்தின் பாகு பாடுகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. பூமியின் அமைப்பை நாம் கவனித்தால் மலைப் பகுதி, காட்டுப் பகுதி, சமவெளிப் பகுதி, கடற்கரைப் பகுதி என்ற பிரிவுகள் இருப்பதை அறிந்துகொள்ள முடியும். இவற்றை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் பெயர்களால் தொல்காப்பியர் குறித்-

துள்ளார். இந்த நான்கு வகைப் பிரிவுகளும் உள்ளதால் நிலத்திற்கு 'நானிலம்' என்னும் பெயரும் உண்டா-யிற்று. பாலை என்ற நிலப்பகுதி ஒன்று உண்டு. அங்கு மலையும், காடும் கதிரவன் வெப்பத்தால் நீரும் நிழலு மில்லாமல் வரண்டுபோய்ப் பரற்கற்கள் நிறைந்திருக்-கும். இப் பாலையையும் சேர்த்து நிலத்தை ஐவகையாக வும் கூறுவார்கள்.

2. குறிஞ்சி : மலையும், மலையைச் சார்ந்த இடங் களும் குறிஞ்சி யென்ற நிலப் பகுதியாகும். மலையில் குறிஞ்சிப் பூ பூக்கும். அது நீல நிறமாக இருக்கும். குறிஞ்சிப் பூ பூத்திருக்கும் பொழுது மலையும் நீல நிற-மாயிருக்கும். மலையில் வாழும் மக்களின் வாழ்க்கை கடினமானதே. ஆயினும் இன்பமானது. மலைகளில் வாழ்வோர் உயர்ந்த சிகரங்களையும் அவற்றின்மேல் படியும் மேகங்களையும், அருவிகளையும், மரங்களையும், சூரியனின் தோற்றம், மறைவு என்பவற்றையும் கண்டு களிப்பார்கள். அவர்கள் மலை நெல், மூங்கிலரிசி, வள் ளிக்கிழங்கு, பலாப்பழம், தேன், தினை முதலியனவற்-றைப் பெறுவார்கள். யானை, புலி, கரடி, காட்டுப்பன்றி, மான் முதலிய விலங்குகளை வேட்டையாடுவார்கள். மயில் முதலிய பறவைகளைக் கண்டு மகிழ்வார்கள். அவர்கள் தாம் வாழும் சிறிய ஊரினைச் சிறுகுடி என்-றும் குறிச்சி என்றும் கூறுவார்கள். அவர்கள் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமான முருகனை வழிபடுவார் கள். அவர்கள் முருகனைக் குறித்து ஆடும் கூத்திற்குக் குரவைக் கூத்து என்பது பெயர். இந்நில மக்கள் குற வர், குறத்தியர் எனப்படுவர்.

3. முல்லை : காடும், காட்டைச் சார்ந்த இடங் களும் முல்லை எனப்படும். முல்லை இயற்கைக் காட்சி கள் நிறைந்த நிலம். காடுகளில் பல்வேறு வகை மரங்

கள், செடிகள், கொடிகள் நிறைந்திருக்கும். பல்வேறு வகை வடிவங்களை உடைய இலைகள், காய்கள், பூக்கள் முதலியன கண்களுக்கு இன்பம் அளிக்கும். இந்நிலத்தில் வாழும் மக்கள் மாடுகளை மேய்ப்பதையே சிறப்பான தொழிலாகக் கொண்டவர். இவர்களுடைய ஊர்கள் பாடி என்றும் சேரி என்றும் கூறப்படும். இந்நில மக்கள் புன்செய்ப் பயிர்களான வரகு, சாமை முதலியனவற்றை விளைவிப்பார்கள். பசுக்களிடமிருந்து பெறும் பாலையும், அதிலிருந்து உண்டாக்கப்படும் தயிர் வெண்ணெய் முதலியவற்றையும் விற்பார்கள். இவர்கள் முல்லை நிலக் கடவுளான திருமாலை வழிபடுவார்கள். முல்லை நிலப் பெண்கள் திருமாலைக் குறித்துக் குரவைக் கூத்து ஆடுவர்; இந்நில மக்கள் ஆயர், ஆய்ச்சியர் எனப்படுவர்.

4. மருதம் : வயலும், வயலைச் சார்ந்த இடங்களும் மருதம் எனப்படும். இது சமவெளி; இங்கு ஆறுகள், வாய்க்கால்கள், குளங்கள், ஏரிகள் முதலியன மிகுந்திருக்கும். நீர் வளமும் நிலவளமும் நிறைந்திருக்கும். இங்குள்ள மக்கள் தாம் வாழும் இடங்களை ஊர் என்று அழைப்பார்கள். நன்செய்ப் பயிர்களான நெல், கரும்பு, கோதுமை என்பவற்றை இங்குள்ளவர்கள் பயிர் செய்வார்கள். இந்நில மக்களிற் பெரும்பாலோர் உழவர்களும், உழத்தியரும் ஆவர். உழவுத் தொழிலுக்கு மழை முக்கியமானது. மழையைத் தருபவன் இந்திரன். இந்திரன் தேவர்களுக்குத் தலைவன். இந்நில மக்கள் இந்திரனுக்கு விழா நடத்துவார்கள். பொங்கல் பண்டிகைக்கு முதல் நாளான போகிப் பண்டிகை இந்திரனுக்குச் செய்யும் விழாவே யாகும். போகி என்பது இந்திரனுக்கு ஒரு பெயர். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களில் பண்டைக் காலத்தில்

மருதநில மக்கள் இந்திரனுக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் விழா நடத்தினார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

5. **நெய்தல்**: கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். இங்குக் கடலும் அதனை அடுத்து மணற் பரப்புமே காணப்படும். கடலை அடுத்த நிலங்களில் வாழும் மக்கள் **பரதவர்** எனப்படுவர். இம்மக்கள் உப்புக் காய்ச்சுவதையும், மீன் பிடித்தலையும் தொழிலாக உடையவர்கள். இவர்கள் கட்டுமரங்களிலும், படகுகளிலும் கடலில் நீண்ட தூரம் சென்று மீன் பிடித்து வருவர். கடலில் பலவகை மீன்கள் வாழ்கின்றன. அவற்றுள் **சுறுமீன்** என்பது ஒன்று. அதற்குக் கொம்பு உண்டு. நெய்தலுக்குரிய தெய்வம் **வருணன்**. நெய்தல் நிலமக்கள் வாழும் இடம் **பட்டினம்** என்றும், **பாக்கம்** என்றும் கூறப்படும். நெய்தல் நிலமக்களுக்குக் கதிரவன் தோற்றமும் மறைவும் அளவிலாத இன்பக் காட்சியை அளிக்கும்.

6. பாலை நிலத்து மக்கள் வழிப்போக்கர்களை வழிப்பறி செய்தும், கொள்ளையடித்தும் வாழும் தன்மையுடையோர் என்பர். அந்நிலத்தில் எப்பொருளும் விளைவதில்லை. மரஞ்செடி கொடிகளும், பறவைகளும் அங்கு அதிகமாக இல்லை. இவர்கள் வாழ்க்கை மிகவும் துன்பமானதாகும். இவர்கள் **காளியை** வழிபடுவர்.

7. இவ்வாறான பிரிவுகள் முன்பு இருந்தன என்று நூல்கள் கூறுகின்றன. மனிதன் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்ற நாள்முதல் விஞ்ஞான அறிவு பெருகிக் கொண்டே வருகிறது. விஞ்ஞான அறிவின் வளர்ச்சியினால் மனிதன் தனக்கு நன்மை தருவனவற்றைச் செய்து கொள்கிறான். அதனால் அவன் வாழ்க்கை நடத்துதல் எளியதாகின்றது. நாகரிகம் வளர வளரப்

போக்குவரவுச் சாதனங்கள் பல ஏற்படுகின்றன. மக்கள் ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்கு மிக எளிதில் செல்கிருர்கள். மக்களுக்குள் நட்பு வளர்கின்றது. வாழ்க்கையில் மாறுதல்களும் ஏற்படுகின்றன. மலேயோ, காடோ, பாலேயோ எங்காயினும் மனிதன் தன் வாழ்க்கையை நடத்த வழி செய்துகொள்ளுகிருன். எனவே, இப் பழையகால நிலப் பாகுபாட்டின் வழியே அந்த அந்த நிலத்தின் இயற்கைப் பண்புகளேக் கண்டு நாம் மகிழலாம் அன்ருே !

அரும்பதங்கள்; பாகுபாடு, நானிலம், கதிரவன், பரற்கல், ஐவகை, சிகரம், குரவைக்கூத்து, சார்ந்த, விஞ்ஞானம், நாகரிகம், பண்பு.

பயிற்சி

I. *விடை எழுது:-*

1. *நிலத்தின் பிரிவுகள் யாவை?*
2. *நானிலம் என பூமி ஏன் கூறப்படுகிறது?*
3. *குறிஞ்சி நில மக்களின் இயல்பை எழுதுக.*
4. *முல்லே நிலத்துக் கடவுள் யார்?*
5. *மருத நில மக்களின் தொழில் யாது?*
6. *பரதவர் எந்நிலத்தைச் சேர்ந்தவர்கள்?*

II. *சேர்த்து எழுதுக:-*

குறவர்கள்	*மருத நிலம்*
ஆயர்கள்	*போகி விழா*
உழவர்	*குறிஞ்சி நிலம்*
இந்திரன்	*முல்லே நிலம்.*

III. *வாக்கியங்களில் பயன்படுத்துக:-*

கூத்து, பல்வேறு வகை, வளர்ச்சி, சாதனங்கள், மாறுதல்.



17. இராசராச சோழர்

1. தமிழகம் முற்காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்ற மூன்று பெரும் பிரிவினையுடையதாக இருந்தது. அவற்றைச் சேர, சோழ, பாண்டியர் என்பார் ஆண்டு வந்தனர். அவர்கள் தமிழகத்து முடி மன்னரும் பழங்குடியினருமாவர். அம்மூவேந்தரும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துத் தமிழ் மொழியை வளர்த்து வந்தனர். அம்மன்னர்களிற் பலர் தமிழை நன்கு கற்றுக் கவி பாடும் சிறப்புப் பெற்றிருந்தனர். அவர்களிற் பலர் புலவர் பாடும் புகழுடையோராய் விளங்கினர். கல்வி, அறிவு, ஆண்மை, ஆற்றல், அருள், அளித்தல், ஆட்சித் திறமை முதலியவற்றில் மிகச் சிறந்து விளங்கினர்.

2. அம்மூவேந்தருள் சோழர் குடியினர் தொன்று தொட்டு உறையூரையும் காவிரிப்பூம் பட்டினத்தையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர் . அச்சோழ மன்னர்களின் வரலாறுகளில் சில பகுதிகளைப் புறநானூறு போன்ற நூல்களில் காணலாம். அவர்

களில் மிகச் சிறந்த சோழ மன்னன் **கரிகால் வளவன்** என்பவன். இப்பெரு மன்னன் காலத்தில் சோழநாடு பல்வகையிலும் விரிந்து சிறப்புற்றிருந்தது. இவன் காவிரிக்கு அணை கட்டினான்; நாட்டை வளப்படுத்தினான். இவன் சேர, சோழ, பாண்டிய நாடுகளைத் தன் கீழ்ப்படுத்தி ஆண்டான்.

3. கரிகால் வளவனுடைய காலத்திற்குப் பின், சில நூற்றாண்டுகள் வரையில் சோழர்கள் வலிமை குன்றி இருந்தனர். பல்லவர் என்பார் தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். அவர்கள் சோழ நாட்டைக் கைப்பற்றிச் சோழனைத் தமக்குக் கப்பங் கட்டும் சிற்றரசனாக்கிக் கொண்டார்கள். பிற்காலத்தில் **விசயாலயன்** என்னும் சோழ மன்னன் பல்லவர்களை வென்றான். அவன் பின்னோர் **பிற்காலச் சோழர்** எனப்பட்டனர். அவர்களுள் கரிகாலனைப்போலச் சிறப்புடன் விளங்கியவர் **இராசராச சோழர்** ஆவர்.

4. இராசராச சோழரின் தந்தையார் சுந்தர சோழர் எனப்படுவார். இராசராசர் தம் சிறிய தந்தையாகிய மதுராந்தகச் சோழர் அரசாள விரும்பிய காலம் வரை அதாவது நாற்பது ஆண்டுகள் வரையில் இளவரசராகவே இருந்து, பின் அரசரானார். அதனால் இராசராசர் அரசியல் நுட்பங்களை நன்கு அறிந்து கொள்ள முடிந்தது. இராசராசர் கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்டார். இவர் காலத்தில் தஞ்சாவூர் சோழநாட்டுத் தலைநகராக விளங்கிற்று.

5. இராசராசர் அரசரானதும் தம் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டார். இவரிடத்தில் வலிமை பொருந்திய தரைப்படையும், கப்பற்படையும் இருந்தன. இவர் அரியணை ஏறியதும் தமக்குப் பகைவர்களாய்

இடையூறு செய்து வந்த சேர, பாண்டியர்கள் மீது படையெடுத்துச் சென்று நான்கு ஆண்டுகள் போர் புரிந்து வெற்றி பெற்ருர்; அதனுல் மும்முடிச் சோழர் என்ற பட்டமும் பெற்ருர்.

6. அக்காலத்தில் வேங்கை நாட்டைச் சத்தி வர்மர் என்பவர் ஆண்டு வந்தார். அவரை அவருடைய பகைவர் துன்பப்படுத்தித் துரத்தி விட்டனர். அதனுல், சத்திவர்மர் இராசராசரிடம் வந்து தம்மைக் காப் பாற்றுமாறு வேண்டிக் கொண்டார். இராசராசர் வேங்கை நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, பகைவர்களை ஒழித்துச் சத்திவர்மருக்கு நாட்டை மீட்டுக் கொடுத்தார். சத்திவர்மரின் தம்பியாரான விமலாதித்தருக்குத் தம் மகள் குந்தவ்வை என்பவரை மணம் செய்து கொடுத்தார். சத்திவர்மருக்குப் பின் வேங்கை நாட்டுக்கு விமலாதித்தர் அரசராஞர்.

7. பின்னர், இராசராசர் வேங்கை நாட்டுக்கு வடக்கே இருந்த கலிங்க நாட்டின் மீது படையெடுத் துச் சென்று வெற்றி கொண்டார். இவர் அங்கிருந்த மகேந்திர மலையின் மீது வெற்றித் தூண் ஒன்றையும் நாட்டுவித்தார். பின்னர், இராசராசர், மைசூர் நாட்டின் கீழ்ப் பகுதியான கங்கபாடியை வென்று அதன் தலைநக ரான தழைக் காட்டிற்கு இராசராசபுரம் என்ற பெய ரையும் வைத்தார். இராசராசர் கொங்குநாடு, குடகு நாடு, கொல்லம், கொடுங்கோளூர் முதலியவற்றையும் வென்ருர். இதனுல் சோழ நாடு பெரும் பரப்புடைய தாயிற்று.

8. பின்னர் இராசராசர் இலங்கை மீது படை யெடுத்துச் சென்று, இலங்கை மன்னனை வென்ருர். அதன் தலைநகரான அநுராதபுரத்தை அழித்தார். பொலன்நறுவா என்ற வேறு ஒரு நகரைத் தலைநகராக்-

கிஞர். அந்நகரில் ஒரு சிவன் கோவிலைக் கட்டிஞர். இலங்கை நாட்டிற்கு மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரும் அளித்தார்.

9. இராசராசர் தம் பெருநாட்டை மண்டலம், வளநாடு, கோட்டம், கூற்றம் எனப் பிரித்துப் பிரதிநிதிகளை ஆங்கு ஆங்கு அமைத்து அரசாண்டார். இவர் காலத்தில் நிலம் முழுவதும் அளக்கப்பட்டு நில வரி விதிக்கப்பட்டது. அதஞல் இவருக்கு உலகளந்தான் என்ற பட்டமும் உண்டு. இவருக்கு உலகமகாதேவியார், வானவன்மாதேவியார் என்ற இரு மனைவியர் இருந்தனர். வானவன்மாதேவியார் வயிற்றிற் பிறந்தவரே இவருக்குப் பின் சோழ நாட்டைச் சிறப்புடன் ஆண்ட இராசேந்திர சோழர்.

10. இராசராசர் சிறந்த சிவ பக்தர். ஆஞலும் பிற சமயங்களிடத்தில் வெறுப்பு இல்லாதவர். மைசூரில் இவர் வைணவக் கோயில்களைக் கட்டுவித்தார். நாகப்பட்டினத்திலிருந்த சூடாமணி விஹாரம் என்ற பௌத்த கோவிலுக்கு ஆனைமங்கலம் என்ற ஊரைத் தானமாக அளித்தார். தஞ்சாவூரில் இவர் ஒரு பெரிய சிவன் கோவிலைக் கட்டுவித்தார். அதனைப் பெரிய கோயில் என்றும் கூறுவர். இராசராசர் அதற்குப் பல ஊர்களைத் தானமாக அளித்தார். அப்பெரிய கோவில் கோபுரம் இருநூற்றுப் பதிஞறடி உயரமுள்ளது. அக்கோவிலில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட பன்னிரண்டடி உயரமுள்ள நந்தி ஒன்று இருக்கிறது. அக்கோவிலில் காணப்படும் சித்திரங்களும், சிற்பங்களும் அற்புதமானவை. அக்கோவிலைக் கருவூர்த் தேவர் என்பார் பாடியுள்ளார்.

11. இராசராசர் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் அரிய தொண்டு செய்துள்ளார். திருஞான

சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்பார் மூவரும் பாடிய தேவாரப் பதிகங்கள் தில்லை என்னும் சிதம்பரத்தில் நடராசர் கோவிலில் அடைபட்டிருந்தன. இராச ராச சோழர், நம்பியாண்டார் நம்பி என்பவரைக் கொண்டு, அவற்றைத் தேடியெடுத்து ஏழு திருமுறைகளாக முறைப்படுத்தி அமைத்தார்.

12. அருள்மொழித் தேவன், மும்முடிச் சோழன், ஜயங்கொண்ட சோழன், நிகரிலி சோழன் முதலியன இவருடைய சிறப்புப் பெயர்கள் ஆகும். இவர் காலத்தில் இசை, நடனம், சிற்பம், சித்திரம் முதலான கலைகள் சிறந்தோங்கி விளங்கின.

அரும்பதங்கள்: முடிமன்னர், ஆண்மை, தொன்று தொட்டு, கப்பம், இடையூறு, சமயம், கோட்டம், கூற்றம், தானம், திருமுறை, சிற்பம், கலைகள்.

பயிற்சி

I. விடை எழுதுக:-

1. தமிழகத்தின் முற்காலப் பிரிவுகள் யாவை?
2. பழங் காலச் சோழர்களுக்குத் தலை நகரமாக விளங்கியவை யாவை?
3. கரிகாலனின் இயல்பை விளக்குக.
4. பிற்காலச் சோழர்களில் சிறந்தவர் யார்?
5. பிற்காலச் சோழர்களுக்கு எது தலைநகராக விளங்கியது?
6. இராசராசருக்கு மும்முடிச் சோழர் என்ற பெயர் ஏன் ஏற்பட்டது?
7. சத்திவர்மர் என்பவர் யார்? அவருக்கு இராசராசர் எவ்வாறு உதவி புரிந்தார்?

II. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:-

1. இராசராச சோழருடைய தந்தையார்———
(விஜயாலயர், சுந்தர சோழர், கண்டராதித்தர்)

2. இராசராசர் தம் தங்கையான———விமலாதித்தருக்கு மணம் செய்வித்தார்.
(வானவன் மாதேவியை, குந்தவ்வையை, செம்பியன் மாதேவியை)

3. இராசராசர் மைசூர் நாட்டின் கீழ்ப் பகுதியில் உள்ள ———வென்றார்

(தடிகைபாடி, நுளம்பபாடி, கங்கபாடி)

4. பெரிய கோவிலைப் புகழ்ந்து———பாடியிருக்கிறார்.

(சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, கருவூர்த் தேவர்)

III· பின் வரும் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துக :-

ஆதரித்து, வலிமை, வெற்றி, நுட்பங்கள், அறிகுறியாக, மிகவும்.

18. பேராசையின் விளைவு

1. மூப்புடைப் புலிதா(ன்) ஒன்று
   மூழ்கியோ(ர்) ஏரி யின்கீழ்க்
காப்புடன் தருப்பை தன்னைக்
   கையில்வைத் திருக்கும் போது
நாப்புடை மறைவ லாள(ன்)
   நண்ணியவ் வழியிற் செல்லக்
கூப்பிடல் செய்தன் னோனைக்
   குறித்தந்தப் புலிதான் கூறும்:

2. ‘அந்தணா இந்தக் காப்பை
   யளிப் ப(ன்)நீ வாவென்(று) ஓதச்
சிந்தையில் வேட்கை கூர்ந்து
   செப்புவான்: புலியா ரேநீர்,
வெந்துயிர்க் கொலைமாந் தர்க்கு
   விளைப்பது விட்டுத் தானம்
எந்நல் வழியிற் செய்வீ(ர்)
   எனக்கதை கூறு(க)’ என்றான்.

3. புலியது கேட்டு, ‘நானோ
   பூசுரா நகமும் பல்லும்
இலன்கிழ மானேன்; பாவம்
   இழைப்பது விடுத்து நாளும்

பொலிதரு தானஞ் செய்கை
பொருளெனக் கொண்டே(ன்)! அஞ்சேல்
சலமதின் மூழ்கி வந்து
தருமிதைக் கொடுபோ' என்ன.

4. நன்றென மறையோன் மூழ்க
நண்ணினு(ன்) ஏரி நீரில்
அன்றவன் கால்கள் சேற்றில்
அழுந்திடத் திகைத்து நின்ருன்
சென்றது புலிநா(ன்) உன்னைச்
சேற்றினின்(று) எடுப்பே(ன்) என்னக்
கொன்றது குருதிதன்னைக் குடித்த(து)
என்(று) உரைத்த(து) அன்றே.

—பஞ்ச தந்திரம்.

அரும்பத உரை

1. மூப்பு-முதுமை; நாப்புடை-நாவினுல் சொல்லக்கூடிய; மறை-வேதம்; நண்ணி-அடைந்து.

2. சிந்தை-மனம்; வேட்கை-ஆவல்; செப்புவான்-கூறத் தொடங்கினுன்; வெந்துயர் -(வெம்மை+துயர்) - கொடிய துன்பம்; மாந்தர்-மக்கள்.

8. பூசுரன்-அந்தணன்; இலன்-இல்லாதவன்; இழைப் பது-செய்வது; பொலிதல்-விளங்குதல்; அஞ்சேல்-பயப் படாதே; சலம்-நீர்; கொடுபோ-கொண்டுபோ.

4. மறையோன்-வேதங்களை யுணர்ந்த அந்தணன்; நண்ணினுன்-அடைந்தான்; குருதி-இரத்தம்.

பயிற்சி

1. புலி அந்தணனிடம் என்ன கூறியது?
2. அந்தணன் புலியிடம் கூறியன யாவை?
8. தன்னிடம் வருவதற்கு அஞ்சிய அந்தணனிடம் புலி யாது கூறியது?
4. சேற்றில் திகைத்து நின்ற அந்தணனைப் புலி என்ன செய்தது?
5. இக்கதையால் நீ உணர்ந்து கொள்ளும் அறிவுரை யாது?

19. பாண்டித்துரைத் தேவர்

1. முற்காலத்தில் பாண்டியர்கள் சங்கங்கள் அமைத்துத் தமிழ் மொழியை வளர்த்தார்கள். முன்பு முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்கள் இருந்ததாக அறிஞர்கள் கூறுகின்றனர். அவற்றுள் கடைச் சங்கம் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மதுரையில் இருந்தது என்று கூறப்படுகிறது. சமணர் காலத்தில் கி. பி. நான்காம் நூற்றாண்டில் சமணர் தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்தது. அதன் பின் சங்கம் யாதொன்றும் இருந்ததாகத் தெரிய வில்லை. எனினும், அரசர்களும் குறுநில மன்னர்களும் செல்வர்களும் தமிழ்ப்புலவர்களை ஆதரித்துத் தமிழ்மொழியை வளர்த்தனர்.

2. இற்றைக்கு ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. அதனை ஏற்படுத்தியவர் பாண்டித்துரைத் தேவர் என்னும் தமிழ் வள்ளல். பாண்டிய நாட்டின் ஒரு பகுதி **சேதுநாடு.** அதனை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் **சேதுபதி**கள் எனப்படுவர். இராமநாதபுரம் சேது நாட்டின் தலைநகரம் ஆகும். முத்து ராமலிங்கச் சேதுபதி என்பவரின் மூத்த சகோதரரான பொன்னுசாமித் தேவர் பாலவனத்தம் சமீன்தார் ஆவர். அவருக்கு மூன்று மைந்தர்கள் இருந்தனர். அவர்களில் இளையவரான **பாண்டித் துரைத் தேவர்** கி. பி. 1867-ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்குத் தந்தையார் இட்ட பெயர் **உக்கிர பாண்டி**யர் என்பதாகும்.

3. பாண்டித்துரைத் தேவர் இளமையில் தந்தையை இழந்தார். பின்னர் இராமநாதபுரத்திலுள்ள ஆங்கிலக் கல்வி கற்கும் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்றார். பாண்டித்துரைத் தேவர் தம் பதினெட்டாம் வயதில் சமீனைத் தாமே நிர்வாகம் செய்யத் தொடங்கினார். அவர் சைவ புராணங்களையும் சமய நூல்களையும் நன்கு கற்றார். பாண்டித்துரைத் தேவர் நூலாராய்ச்சியில் தம் காலத்தைக் கழித்தார்.

4. பாண்டித்துரைத் தேவர் கேட்பவர் மகிழும்படி பிரசங்கம் செய்வதில் வல்லவர்; தலைமை தாங்கிப் பெருங் கூட்டங்களை நடத்துவதிலும் வல்லவர். ஒரு சமயம் மதுரைக்குப் பாண்டித்துரைத் தேவர் வந்து சிலகாலம் தங்கியிருந்தார். அவர் பிரசங்கத்தைக் கேட்க மதுரை மக்கள் விரும்பினர். அதற்காகக் கம்பராமாயணமும் திருக்குறளும் பாண்டித்துரைத் தேவருக்கு வேண்டியிருந்தன. அவற்றை எவரிடத்திலிருந்தும் பெற முடியவில்லை. "தமிழ் நிலைபெற்று

வாழ்ந்த இந் நகரத்தில் தமிழ் நூல்கள் கிடைப்பது அரிதாய் இருக்கின்றதே! என்னே நம் மொழியின் நிலை! அதனை வளர்ந்தோங்கச் செய்ய வேண்டுவது நம்முடைய கடமை," என்று தேவர் நினைத்தார்.

5. மதுரையில் அரசியல் மாநாடு கூடியது. அதில் பங்கெடுத்துக்கொண்ட பாண்டித்துரைத் தேவர், அதுவே சமயம் என்று எண்ணித் தமிழ்ச் சங்கம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அங்குக் கூடியிருந்த அறிஞர்களுக்கு விளக்கினர். 1901-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 14-ஆம் தேதி பாண்டித்துரைத் தேவர் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் **நான்காம் தமிழ்ச் சங்கத்தை** நிறுவினர். அப்போது தமிழ்நாட்டிலிருந்த புலவர் பெருமக்கள்பலர் வந்திருந்தனர். அச்சங்கத்தில் **செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச் சாலை** முதலியன அமைக்கப்பட்டன. பாண்டித்துரைத் தேவர் நூல் நிலையத்திற்குப் பல நூல்களை அளித்தார். தேவரவர்கள் மதுரையில் தமக்குச் சொந்தமான பெரிய மாளிகையைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்தார்.

6. பாண்டித் துரைத் தேவர் தமிழ்ச் சங்கத்தைக் குழந்தையைப் பாதுகாப்பது போலக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வந்தார்; மாணவர் பலருக்கு உணவு, உடை, உறையுள் முதலியன அளித்து, அவர்கள் கல்வி கற்கும்படி செய்தார்; தமிழ்ச் சங்கத்திலிருந்து மாதம் ஒரு முறை 'செந்தமிழ்' என்ற பத்திரிகை வெளிவரும்படி செய்தார். பண்டித பரீட்சையை மூன்று வகையாகப் பிரித்து, நடத்தும்படி ஏற்பாடு செய்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஓர் அச்சகத்தையும் ஏற்படுத்தினர். கப்பலோட்டிய தமிழரான வ. உ. சிதம்பரம் பிள்ளை, 'சுதேசக் கப்பற் கம்பெனி' ஒன்றைத்

தொடங்கியபொழுது நாட்டுப் பற்று மிகவும் உடைய பாண்டித்துரைத் தேவர் ஓர் இலட்ச ரூபாய் அளித்தார். இவ்வாறு பல நன்மைகளை மொழிக்கும் நாட்டிற்கும் செய்த பாண்டித்துரைத் தேவர் 1911-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

7. பண்டைச் சங்கங்களைப்போல் பாண்டித்துரைத் தேவர் நிறுவிய இந்தச்சங்கமும் தமிழ்மொழி வளர்ச்சியில் கருத்தைச்செலுத்தி இன்றும் அவர் புகழைப்பரப்பிச்செம்மையாக நடந்து வருகிறது.

அரும்பதங்கள் : குறுநிலமன்னர், நிறுவப்பட்டது, சமீன்தார், கண்காணிப்பு, பிரசங்கம், மாநாடு, புலவர், உறையுள், நீத்தார், பற்று, பேருதவி.

பயிற்சி

I. *விடை எழுதுக :-*

1. *முற்காலத்தில் நம் நாட்டில் இருந்த சங்கங்கள் யாவை?*
2. *சேதுபதி என்போர் யாவர் ?*
3. *பாண்டித்துரை தேவர் எங்குப் பிறந்தார்? அவருடைய தந்தையார் யாவர் ?*
4. *அவர் சங்கம் அமைக்க எண்ணியது எதனால் ?*
5. *நான்காம் தமிழ்ச் சங்கம் எப்போது தோன்றியது ?*

II. *பின்வரும் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துக :-*

ஆதரித்து, கண்காணிப்பில், இளமையில், கண்ணுங் கருத்துமாய், செம்மையாக, பேருதவி.

III. *எதிர்ப்பதங்கள் எழுதுக:-*

முற்காலம் ×
இளமை ×
நன்மை ×
அரிய ×



20. கூட்டுறவுச் சங்கம்

1. இந்திய நாடு பயிர்த்தொழிலில் சிறந்து விளங்கும் நாடு. இந்நாட்டில் கிராமங்கள் மிகுதி. கிராமங்களில் பெரும்பாலும் வாழ்வோர் உழவர்களே. அவர்கள் மிக்க ஏழைகளாய் இருக்கின்றனர்; விவசாயம் செய்வதற்கும் பொருள் இல்லாமல் கடன் வாங்குகின்றனர். கடன் கொடுப்பவர்களோ அதிக வட்டி கேட்கின்றனர். குறைந்த வட்டிக்குப் பணம் கிடைப்பதில்லை. விவசாயத்தில் வரும் வருமானத்தைக் கொண்டு கடனையும் திருப்பிக் கொடுத்துத் தாமும் வாழ அவர்களால் முடிவதில்லை. எனவே அவர்கள் பலவகைக் கஷ்டங்களுக்குள்ளாகின்றனர். முடிவில் கிராமத்திலும் வாழ்க்கை நடத்த முடியாதவர்களாய் எங்கேனும் சென்று பிழைக்க எண்ணிக்கிராமங்களைவிட்டு வெளியேறுகின்றனர். கிராமங்கள் பாழாகின்றன. வேளாண்மைத் தொழிலும் குன்றுகிறது.

2. இந்தக் கொடிய நிலையை நீக்குவது முதன்மையான வேலையாகும். கிராமங்களுக்கு மக்கள் விரும்பிச் செல்லும் நிலையை உண்டாக்க வேண்டும். பயிர்த் தொழிலையும் பிற குடிசைத் தொழில்களையும் கிராம மக்கள் விருப்பத்தோடு செய்ய, அவர்களுக்குத் தக்க வசதிகள் அளிக்க வேண்டும். நகரத்தில் மக்கள் அடையும் நலன்களை யெல்லாம் கிராம மக்களும் பெற்று வாழச் செய்ய வேண்டும். அவர்களுக்குக் கல்வி, சுகாதாரம், நோய்க்குச் சிகிச்சை, குடிசைத் தொழில் வளர்ச்சிக்குரிய வசதி, சாலை வசதி, குடி தண்ணீர் வசதி முதலியன அளிக்க வேண்டும். இவற்றை எல்லாம் அரசாங்கமே செய்யவியலாதன்றோ ? ஆதலால் அரசாங்கமும் குடிமக்களும் சேர்ந்து ஆவன செய்ய வேண்டும்.

3. குடி மக்கள் என்ன செய்யலாம் ? அரசாங்கத்தார் என்ன செய்யலாம் ? அரசாங்கத்தார் கிராமங்களில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் குடியானவர்களுக்கு உதவி புரியலாம். கிராமங்களில் சிறிது வசதியுள்ளவர்கள் அச்சங்கத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும். அச்சங்கத்தில் அவர்கள் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி உறுப்பினராக வேண்டும். அத்தொகையைச் செலுத்தக் கூடிய பலரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதில் விவசாயிகளே அல்லாமல் கற்றவர்களும், செல்வர்களும் சேர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் எல்லோரும் சேர்ந்து சங்கத்தை நடத்துவதற்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு தலைவர், ஒரு காரியதரிசி, நிர்வாகக் குழுவினர் என்பார்களை அமைத்துக்கொள்ள வேண்டும். கடன் வாங்குதல், கடன் கொடுத்தல், என்பன அச்சங்கத்தின் வேலை. அங்கத்தினர்கள்

கொடுக்கும் பங்குத் தொகையையும், அரசாங்கத்தார் கொடுக்கும் பங்குத் தொகையையும் வைத்துக் கொண்டு கடன் கொடுத்துவர வேண்டும். கிராமச் சங்கங்கள் தமக்கு அதிகத் தொகை வேண்டியிருந்தால் தாலுக்கா, ஜில்லாச் சங்கங்களிலிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாம்.

4. ஒவ்வொரு குடியானவனும் இச் சங்கத்தின் உறுப்பினனுக வேண்டும். பழைய கடனைத் தீர்ப்பதற்கும், விவசாயத்திற்கும், கைத்தொழில் செய்ய முதல் போடுவதற்கும் இச்சங்கத்தில் கடன் வாங்கிக்கொள்ளலாம். செல்வர்கள் தங்கள் செலவிற்குப்போக எஞ்சியுள்ள பணத்தை இந்தச் சங்கத்தில் போட்டுவைக்கலாம். அதற்கு வட்டி கிடைக்கும். பின்னும் அப் பணம் தம் ஊர் மக்களுக்கே பயன்படுத்தப்படும். பெரு நலமுமுண்டாகும். இச்சங்கம் குறைந்த வட்டிக்குப் பணத்தைக் கொடுக்கிறது. கடன் வாங்கிய பணத்தை மொத்த தொகையாகச் செலுத்த வேண்டியதுமில்லை. பல தவணைகளில் சிறு சிறு தொகையாகச் செலுத்தி, எளிதில் கடனைந் தீர்த்துவிடலாம்.

5. இத்தகைய கூட்டுறவுச் சங்கத்தைக்கொண்டு பல நன்மைகளைச் செய்துகொள்ளலாம். கூட்டுறவுப் பண்டசாலை ஏற்படுத்தி, நமக்கு வேண்டும் பொருளை அப்பண்டசாலையின் மூலம் தருவித்துக் கொண்டால் குறைந்த விலையில் நல்ல பொருள்களாகக் கிடைக்கும். கூட்டுறவுப் பண்டசாலை, பொருள்களை நேராக உற்பத்தி செய்யுமிடத்திலிருந்து பெறும். அதனுல் நல்ல பொருள்கள் மலிவான விலைக்குக் கிடைக்கும்; அப் பண்டங்களை விற்பதனுல் கிடைக்கும் இலாபத்தினை அங்கத்தினர் அனைவரும் பங்கிட்டுக் கொள்வார்கள்.

6. கூட்டுறவுச் சங்கங்களைப் பல வகைகளிலும் அமைத்துக் கொள்ளலாம். கட்டடக் கூட்டுறவுச் சங்கம் அமைத்து வீடுகள் கட்டிக்கொள்ளலாம். உழவுக்குரிய ஏர், அரிவாள், மண்வெட்டி, கடப்பாறை, இறைசால் முதலியன வாங்குதற்கும், எரு, விதை முதலியன வாங்குதற்கும், துணிகள் வாங்குதற்கும், பாத்திரங்கள் வாங்குதற்கும் தனித்தனிக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொள்ளலாம். அவைபோலவே, துணி நெய்தல், பால் பண்ணை முதலியவற்றிற் கெல்லாம் தனித்தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

7. கிராமத்தில் உற்பத்தியாகும் பொருள்களை எல்லாம் விற்கவும், கிராமத்தினருக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் எளிய விலைக்குக் கொடுக்கவும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதனால் விளையும் நன்மை மிகப் பெரியது. பெரு லாபம் அடையும் வியாபாரிகளின் கொடுமையிலிருந்து குடியானவர்களைக் காக்கலாம். பெரிய வியாபாரிகள் அடையும் இலாபத்தை இதன் மூலம் குடியானவர்களே அடையும்படி செய்யலாம்.

8. கிராம மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, அங்கத்தினர்களாகி, அச்சங்கங்களின் வழியாகப் பலவற்றையும் செய்வதென உறுதி கொண்டுவிட்டால் கிராமங்கள் விரைவில் முன்னேற்றமடையும். அக்கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியைக் கொண்டு, பள்ளிக்கூடம், மருத்துவச்சாலை, குடி தண்ணீர் வசதிகள், சுகாதார வசதிகள், முதலியவற்றையும் கிராம மக்கள் எளிதில் எய்தலாம். எல்லாவற்றிற்கும் அடிப்படையாகக் கிராம மக்களுக்-

குள் ஒற்றுமை மனப்பான்மையும், உதவி செய்யு
உள்ளமும், உண்மையும் இருக்கவேண்டும். இவற்றோடு
ஒவ்வொருவரும் இப்பெருநலனை அடைய முயற்சி
யுடையாராகவும் இருக்க வேண்டும். 'சேர்ந்து வாழ்
வதே சிறந்த வலிமை'; 'ஒன்று பட்டா லுண்டு வாழ்வு
இங்கு ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்,' என்னும் ஆன்றோர்
களின் அமுத வாக்குக்களை நன்கறிய வேண்டும். இந்த
ஞானம் வந்தால் வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

அரும்பதங்கள் : ஆவன, உறுப்பினர், காரியதரிசி, நிர்வாகம், குழு, பெருநலம், தவணை, பண்டசாலை, உழவு, பண்ணை, அடிப்படை, அமுதவாக்கு, ஞானம், முன்னேற்றம்.

பயிற்சி

I. விடை எழுதுக :-

1. விவசாயிகள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்?
2. கிராமங்கள் அழியாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
3. கூட்டுறவுச் சங்கத்தை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும்?
4. கூட்டுறவுப் பண்டசாலைகள் மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றன?
5. கிராமங்கள் முன்னேற்றம் அடைவதற்குரிய வழிகள் யாவை?
6. ஒற்றுமையை விளக்கும் பெரியோர் மொழிகளை எழுதுக.

II. கோடுள்ள இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக :-

1. இந்திய நாடு ——— சிறந்து விளங்கும் நாடு.
(கைத்தொழிலில், பயிர்த்தொழிலில், இயந்திரத் தொழிலில்)

2. நம் நாட்டில் வசிப்பவர்களில் பெரும்பாலான மக்கள் ———.

(உழவர்கள், தொழிலாளிகள், செல்வர்கள்)

3. மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறுவதால் ——— குன்றுகிறது.

(வேளாண்மைத் தொழில், குடிசைத் தொழில், வியாபாரம்)

III. எதிர்ப்பதங்கள் எழுதுக :-

விரும்புதல் ×
குறைந்த ×
இலாபம் ×
ஒற்றுமை ×
உண்மை ×

21. மேல்நாட்டுத் தமிழ்த் தொண்டர்

1. தமிழ் மொழி நம் தாய் மொழி. இது மிகவும் தொன்மையான மொழி. இது எளிய மொழியும் ஆகும். தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். எனவே, இது இனிய மொழி. இம்மொழி ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. பல்வேறு காலங்களில் பல்வேறு நாட்டார் நம் நாட்டில் குடிபுகுந்தனர். அதனால் நாளடைவில் தமிழ் மொழி வழங்கும் நிலப்பகுதி குறுகிக்குறுகி இன்று காணப்படும் எல்லைக்குள் அடங்கிவிட்டது.

2. தமிழ் மொழியை முன்பு சேர, சோழ, பாண்டிய மன்னர் வளர்த்து வந்தனர், அவர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தனர். அதனால் தமிழ் மொழியில் பல நூல்கள் தோன்றின. மொழியும் செம்மையுற்றது. அவ்வாறு தமிழ் மொழியைப் பேணி வந்த பெருமை பாண்டியர்க்கே சிறப்பாக உரியது. பின்னர்க் குறுநில மன்னர்களும் செல்வர்களும் தமிழ்

மொழியை ஆதரித்து வளர்த்தனர். பௌத்தர்களும், சமணர்களும் தமிழ் மொழிக்குச் சிறந்த தொண்டாற்றி வளப்படுத்தினர். அதன் பின்னர்ப் பல்லவ மன்னர்களும் தமிழை ஆதரித்துக் காத்துவந்தனர். நம் நாட்டிற்குத் தம் மதத்தைப் பரப்புவதற்காக வந்த ஐரோப்பியர்களிற் பலர் தமிழை நன்கு கற்றுத் தமிழிற்கு அருந்தொண்டு புரிந்துள்ளனர். அவர்களுள் சிறந்தவர் **கால்டுவெல், ஜி. யூ. போப்,** வீரமா முனிவர் என்ற **கான்ஸ்டன்டைன் பெஸ்கி** என்பவர் ஆவர்.

3. கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிற்குக் கிறிஸ்தவ மதத் தொண்டாற்றுபவராக வந்தவர் இராபர்ட் கால்டுவெல். இப்பெரியார் அயர்லாந்தில் பிறந்தார்; கிளாஸ்கோப் பல்கலைக் கழகத்தில் படித்து, பி. ஏ. பட்டம் பெற்றார். இவர் சித்திரங்கள் எழுதுவதிலும் சிறந்தவர். இவர் மத நூல்களை நன்கு கற்றுச் சமயத் தொண்டாற்றச் சென்னைக்கு வந்தார். சென்னையில் மூன்றாண்டுகள் இருந்து தமிழ் கற்றார். இவர் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள இடையன்குடி என்ற ஊருக்குச் சென்றார். சென்னையிலிருந்து

இடையன்குடி நானூறு மைல் தொலைவில் இருக்கிறது. கால்டுவெல் சென்னையில் இருந்து இடையன் குடிக்கு நடந்தே சென்றார். இடையில் பல ஊர்களில் தங்கித் தமிழர்களோடு உரையாடித் தமிழ் நாட்டைப் பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும் அறிந்துகொண்டார்; இடையன்குடியை யடைந்தார். இவர் அச்சிற்றூரைச் சீர்படுத்தி அங்கு ஒரு பெரிய கோயிலையும் கட்டினார். இவர் அங்கு ஐம்பத்துமூன்று ஆண்டுகள் மதத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்தார். கடைசியில் அங்கேயே இறந்தார். கால்டுவெல் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு என்னும் மொழிகளை ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியுள்ளார்; மற்றும் திருநெல்வேலி வரலாறு என்னும் நூலையும் எழுதியுள்ளார். ஒப்பிலக்கண நூல் மொழி ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படுகிறது.

4. ஜி. யூ. போப் என்ற பெரியார் கி. பி. 1820 ஆம் ஆண்டில் பிறந்தவர். அவர் ஆங்கிலேயர். அவர் பல மொழிகளைக் கற்றுணர்ந்தவர். அவர் கி. பி. 1839-ல் சமயத்தொண்டு புரியச் சென்னைக்கு வந்தார். அங்கிருந்து அவர் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சாயர் புரத்திற்கு அனுப்பப்பட்டார். தூத்துக்குடிக்கு அருகிலுள்ள சிற்றூரான சாயர்புரத்தில் சமயத்தொண்டு செய்து வந்தார். போப்பையர் சாயர்புரத்திற்குச் செய்த தொண்டுகள் பல. போப்பையர் உழைப்பால் சாயர்புரம் பெரிதும் முன்னேற்றம் அடைந்தது.

5. போப், 1850-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குச் சென்று மீண்டும் சென்னைக்கு வந்தார். அவர் தஞ்சாவூரில் எட்டு ஆண்டுகள் தங்கித் தமிழ் மொழியை

நன்கு கற்றுக்கொண்டார். அவர் உள்ளத்தைத் தமிழ் மொழி கவர்ந்துவிட்டது அவர் 1858 முதல் 187 வரை உதகமண்டலத்தில் தங்கினுர்; அங்கு ஒரு பள்ளிக்கூடத்தையும் நடத்தினுர். பின் அவர் பெங்களூருக்குச் சென்று அங்குப் பிஷப் காட்டன் பாடசாலைக்குத் தலைவராயிருந்தார். 1885-ஆம் வருடம் முதல் இறக்கும்வரை அவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். அவர் 1908-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

6. போப்பையர் தமிழ் மொழியைக் குறித்துப் பல சொற்பொழிவுகள் ஆற்றினுர்; பல கட்டுரைகள் வரைந்தார். அவர் **திருக்குறள், நாலடியார், திருவாசகம்** என்பவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. அவருடைய மொழிபெயர்ப்பு நூல்களைப் படித்த பின்னரே மேனுட்டார் தமிழின் சிறப்பை உணர்ந்தனர். மாணவர் எளிதில் படிப்பதற்கு ஏற்றவாறு அவர் இலக்கண நூல் ஒன்று எழுதினுர்; போப்பையர் தாம் இறந்த பின் தமது கல்லறையின் மீது 'தமிழ் மாணவன்' என்று எழுதி வைக்கும்படி சொன்னுர் என்ருல் அவருக்குத் தமிழின் மீது எவ்வளவுபற்று இருந்தது என்று அறியலாம் அல்லவா ?

7. வீரமாமுனிவர் இத்தாலிய நாட்டினர். இவருக்குத் **தைரியநாத சுவாமி** என்ற பெயருமுண்டு. இவர் இயற் பெயர் கான்ஸ்டன்டைன் பெஸ்கி என்பது. இவர் கி. பி. 1680-ல் பிறந்தார். இவர் கிரேக்கம், இலத்தீன், போர்த்துகீசு, தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் முதலான மொழிகளைக் கற்றவர். இவர் காமநாயக்கன்பட்டி, வடக்கன்குளம் என்னும் இடங்-

களில் மதப் பிரசாரம் செய்து வந்தார். பெஸ்கி, இந்தியாவிற்கு வந்து தமிழ் நாட்டில் தங்கியது முதல் தமிழ் முனிவரைப்போலவே உடை, உணவு என்பவற்றைக் கொண்டு வாழ்ந்து வந்தார். திருச்சிராப்பள்ளியில் நவாபாயிருந்த சந்தா சாஹிபிடம் திவானுகவும் இருந்தார். இவர் கி. பி. 1742-ல் மணப்பாடு என்னும் இடத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

8. வீரமாமுனிவர் தமிழ் மொழியை நன்கு கற்றவர். தமிழில் செய்யுட்கள் இயற்றும் ஆற்றல் வாய்ந்தவர். இவர் பல நூல்களைத் தமிழில் இயற்றியுள்ளார். தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலே, தொன்னூல் விளக்கம், சதுர் அகராதி, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பரமார்த்த குரு கதை முதலியன இவர் இயற்றிய நூல்கள். தமிழ் மொழிக்கு முதல் முதல் அகராதி எழுதியவர் இவரே. வெளிநாட்டார் ஒருவர் தமிழ் நாட்டில் வந்து தங்கித் தமிழைக் கற்றுத் தமிழ் மொழியில் நூல்களைச் செய்யுளில் இயற்றுவது எவ்வளவு அருமை! தமிழ் மொழியின் இனிமை அல்லவா அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தது!

9. இவ்வாறு மேனுட்டு மக்களும் போற்றும் படியான நம் தமிழ் மொழியைப்பற்றி நாம் நன்ருக அறிந்துகொள்ள வேண்டும்; பல நூல்களையும் படித்துப் பெருமையுற வேண்டும்.

அரும்பதங்கள் :- தொன்மையான, செம்மை, பேணி, சமயத்தொண்டு, தொலைவு, ஆராய்ச்சியாளர், சொற்பொழிவு, முன்னுரை, பற்று, மதப்பிரசாரம், நவாப், ஆற்றல், அகராதி, சதுர் அகராதி, கவர்ந்து, பொருள் ஆழம்.

பயிற்சி

I. விடை எழுதுக :-

1. நம் தாய் மொழி எது? அது எந்தன்மை பொருந்தியது?
2. தமிழ்மொழிக்குத் தொண்டு புரிந்த மேல் நாட்டு அறிஞர்கள் யாவர்?
3. இராபர்ட் கால்டுவெல் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
4. அவர் இடையன் குடியில் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
5. போப்பையர் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டுகள் யாவை?
6. அவர் தமிழின் மீது பற்றுடையவர் என்பதை எவ்வாறு அறியலாம்?
7. வீரமா முனிவர் இயற்றிய நூல்கள் யாவை?

II. சேர்த்து எழுதுக :-

1. போப்பையர்	திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை இயற்றினர்.
2. வீரமா முனிவர்	திருக்குறளை ஆங்கிலத்தில் பெயர்த்து எழுதினர்.
3. கால்டுவெல்	தேம்பாவணியை இயற்றினர்.

III. பின்வரும் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துக :-

தொன்மையான, சுலபமான, ஆதரித்து, கடைசியில், தொலைவில், அருகில், குறிப்பிடத்தக்க, பற்று.



22. புதைந்த நகரம்

1. உலகிலுள்ள நாடுகளில் மிகப்பழமையானவை **இந்தியா, எகிப்து, பாபிலோனியா, கிரீஸ், சீனு** என்பவைகளாம். இவற்றுள் எகிப்தும், பாபிலோனும் மிகப் பழமையானவை என்று வரலாற்று நூலாசிரியர்கள் கூறுவர். அவ்விரு நாடுகளின் தொன்மையைப்பற்றிப் பேசும் நூல்களும் பல. அவற்றின் பண்பாடுகளோ மிகச் சிறந்தன என்று மக்கள் சமீபகாலம் வரை எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனல் சிந்து நதிக்கரையில் புதைந்து கிடந்த நகரங்களைக் கண்டறிந்து செய்த ஆராய்ச்சிக்குப்பின் எகிப்து, பாபிலோனியா நாகரிகத்தைவிடச் சிந்து வெளி நாகரிகமே மிக மிகப் பழமையானது என்ற முடிவிற்கு ஆராய்ச்சிக்காரர் வந்துள்ளனர்.

2. பழமையான மக்கள் வாழ்ந்த நகரங்கள் பல மண்ணில் மறைந்துவிட்டன. சில ஆண்டுகளுக்குமுன்னர் நம் நாட்டில் சிந்து சமவெளியில் புதைந்து கிடந்த மொஹெஞ்சோதாரோ, ஹாரப்பா என்னும் நகரங்கள்

கண்டு பிடிக்கப்பட்டன. சிந்து என்பது இந்தியாவின் வடமேற்கில் ஓடும் பெரிய ஆறு ஆகும். சிந்து வெளி-யில் பல மண்மேடுகள் காணப்படுகின்றன. பஞ்சாப் மாகாணத்தில் லார்காரு என்னும் இடத்திற்கு வடக்கே இருபத்தைந்து மைல் தூரத்தில் உள்ள மேடான நிலப்-பகுதியைத் தோண்டிப் பார்த்தபோது, அங்குப் பழமை-யான நகரத்தின் சின்னங்கள் காணப்பட்டன. அந்நக-ரமே மொஹெஞ்சோதாரோ என்பதாகும்.

3. 'மொஹெஞ்சோதாரோ' என்பதற்கு இறந்தவர்களின் மேடு என்பது பொருளாம். அந்நகர அமைப்பு இக்காலத்து நகர அமைப்பை ஒத்து விளங்குகின்றது. வீதிகள் ஒழுங்கும் அகலமும் உடையனவாக இருக்கின்றன. பெரிய வீதியிருந்து மற்றொரு வீதிக்குச் செல்லக் குறுக்கு வீதிகள் காணப்படுகின்றன. நகரின் கழிவுநீர் வெளியே போவதற்காகக் கால்வாய்கள் அமைந்துள்ளன. வீதிகளில் பொதுக் கிணறுகள் இருக்கின்றன. நீராடும் குளங்கள் பெரியனவாக இருக்கின்றன. அவற்றிற்கு நாற்புறமும் படிக்கட்டு-களும் இருக்கின்றன. அக்குளத்திற்கு நீரளிக்கும் கிணறுகள் நான்கு பக்கங்களிலும் இருக்கின்றன.

4. பல்வேறு வகையான வீடுகளும் அங்குக் காணப்படுகின்றன. இரண்டே அறைகளை உடைய வீடுகளும் உண்டு வீடுகளின் நடுவில் முற்றம் என்ற அமைப்பும் உண்டு. வீட்டில் அறைகளும் கூடங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் மேல் மாடியும், மேல்மாடியில் குளிக்கும் அறையும், அங்கிருந்து கீழ் நோக்கி இறங்கும் குழாயும் காணப்படுகின்றன. வீட்டிற்கு ஒரே வாயில்தான் உண்டு.

5. அந்நகரில் வாழ்ந்த மக்கள் பருத்தியாடை, கம்பளி யாடை என்பவற்றை உடுத்தினர் என்று தெரிகிறது. அவர்கள் பலவகை அணிகளும் அணிந்திருந்தனர். ஆண்களும் பெண்களும் மேலாடை அணிந்தனர். அவர்கள் நீண்ட போர்வையையும் தரித்துக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது. ஆண்கள் தலைமயிரைப் பின்புறம் முடிந்து கொண்டனர் என்றும், அவர்களுக்குச் சிறிது தாடியும் மீசையும் இருந்தன என்றும் தெரிகிறது.

6. ஆண்கள் ஆபரணங்களை அணிந்திருந்தனர். அவர்களுடைய ஆபரணங்கள் பொன், வெள்ளி, தந்தம், மணிகள் என்பவற்றால் ஆனவை. சங்கு, பித்தளை, கொம்பு, எலும்பு என்பவற்றால் ஆகிய ஆபரணங்களும் காணப்படுகின்றன. இவற்றால் ஏழைகளும், செல்வர்களும் அந்நகரில் வாழ்ந்தனர் என்று அறியலாம். பலவகை வடிவங்களுடைய மண் பாத்திரங்களும், கோப்பைகளும் கிடைத்துள்ளன. ஊதுகுழல், மனித உருவங்கள், பறவைகள், வண்டிகள் முதலியவற்றின் பொம்மைகள் கிடைத்துள்ளன. கல்லாலும் பித்தளையாலும் செய்யப்பட்ட போர்க்கருவிகள் கிடைத்துள்ளன.

7. அந்நகர மக்கள் தானியங்களையும், மாமிசத்தையும் உண்டனர்; சிவனையும், சத்தியையும் வணங்கினர். இறந்தவர்களின் உடல்கள் அங்குப் பெரும்பாலும் எரிக்கப்பட்டன என்பது தெரிகிறது. சுவர்களிலும், பாத்திரங்களின் மேலும் காணப்படும் ஓவியங்கள் அவர்களுடைய ஓவியத் திறமையையும், கடவுள் சிலைகளும் பொம்மைகளும் அவர்களுடைய சிற்பத்திறமையையும் காட்டுகின்றன. அக்காலத்தில் சித்திர வடிவமான எழுத்துக்கள் இருந்தன என்றும் தெரிகின்றது.

8. ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு இந்தியா முழுவதும் திராவிடரே வாழ்ந்தனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர், சிந்து வெளி-யில் வாழ்ந்த மக்கள் திராவிடர்களே. அவர்கள் நாக ரிகம் திராவிட நாகரிகமே யாகும் என்று அறிஞர் கூறுவது இந்திய மக்களுக்குப் பெருமை தரக்கூடிய தாகும்.

அரும்பதங்கள்: பண்பாடு, நாகரிகம், துறை, மேலாடை, அணி, ஓவியம், மட்கலம், பழமை.

பயிற்சி

I. விடை எழுதுக:-

1. உலகில் மிகப் பழமையான நாடுகள் யாவை ?
2. சிந்து வெளியில் புதைந்து கிடந்த நகரங்கள் யாவை?
3. மொஹெஞ்சோதாரோ நகரின் அமைப்பை விளக்குக.
4. மொஹெஞ்சோதாரோவில் வசித்த மக்கள் எவ் வாறு இருந்தனர் ?
5. சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றி அறிஞர் கருத்து யாது ?

II. வாக்கியங்களில் பயன்படுத்துக :-

பண்பாடு, மிகமிக, பல்வேறுவகையான, பெரும்பாலும், காணப்படும்.

III. எதிர்ப்பதங்கள் எழுதுக :-

1. நாகரிகம் ×
2. பழமை ×
3. இறங்குதல் ×
4. ஏழை ×
5. இறந்தவர் ×

23. விஞ்ஞானப் பேரறிஞர் சர் சி. வி. இராமன்

1. உலகமானது அது தோன்றிய காலத்தில்இருந்தது போல் இப்பொழுதில்லை. இன்று இருப்பதுபோல ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் இராது. உலகம் நாளுக்கு நாள் பல மாறுதல்களை அடைந்து கொண்டே வருகிறது. மக்கள் மண் மீது தோன்றி இரண்டரை லட்சம் ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்று அறிவாளர் கூறுகின்றனர். நெருப்பினை உண்டாக்கத்தெரியாத மக்களும் பண்டைக் காலத்தில் வாழ்ந்தனர் என்று நாம் படித்திருக்கிறோம். பிறகு அவர்கள் தாம் கண்டவற்றைத் தம்முடைய சிந்திக்கும் ஆற்றலால் தம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

2. பற்பல அற்புதங்களை இன்று நாம் காண்கின்றோம். நீர்ப்பரப்பின் மீது நீராவிக் கப்பல் செல்கிறது. நிலத்தின் மேல் மோட்டார், புகை வண்டிகள் முதலியன மிகவும் விரைந்து செல்கின்றன. ஆகாய விமானத்தின் மூலம் மக்கள் நீண்ட தூரத்திலுள்ள இடங்-

களுக்குக் குறைந்த கால அளவில் செல்கிறார்கள் மின்சார விளக்கு, விசிறி, படக்காட்சி முதலியவற்றை நாம் உபயோகிக்கிறோம். இவை போன்ற புதுமைகள் மனிதனுடைய சிந்திக்கும் ஆற்றலால் தோன்றிய விஞ்ஞானக் கலையின் விளைவுகளேயாம்.

3. விஞ்ஞானம், மேனாட்டில் மிக வேகமாய் வளர்ந்தது; வளர்ந்துகொண்டு வருகிறது. அங்கு விஞ்ஞானத்தில் வல்ல பெரியார் பலர் தோன்றினர்; இன்றும் பலர் உள்ளனர். அவ்வாறே நம் நாட்டிலும் சிலர் விஞ்ஞானக் கலையில் சிறந்து விளங்கினர்; இன்றும் இருக்கின்றனர். ஸர். பி. ஸி. ரே, ஜகதீச சந்திர போஸ் என்பார் நம் நாட்டில் இருந்த சிறந்த விஞ்ஞானிகள் ஆவர். இக்காலத்தில் நம் நாட்டில் விளங்கும் சர். சி. வி. இராமன் சிறந்த விஞ்ஞானியாக விளங்குகிறார்.

4. சர். சி. வி. இராமன் கி. பி. 1887-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் பிறந்த இடம் திருச்சிராப்பள்ளியாகும். இவர் தந்தையார் பெயர் சந்திரசேகர ஐயர் என்பது. தாயார் பார்வதி அம்மையார். இவரது இயற்பெயர் வேங்கடராமன் என்பதாகும். அப்பெயரே இப்பொழுது சி. வி. இராமன் எனச் சுருக்கமாக வழங்குகிறது. இவரது தந்தையாராகிய சந்திரசேகர ஐயர் ஆசிரியராக இருந்தார். அவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. அவருள் வேங்கடராமன் இரண்டாம் புதல்வர்.

5. இளம் பருவத்திலேயே கூரிய அறிவு படைத்து விளங்கிய வேங்கடராமன் நன்கு படித்துப் பதினாறும் வயதில் பி.ஏ. பட்டமும், பதினெட்டாம் வயதில் எம்.ஏ. பட்டமும் பெற்றார். இவர் கல்லூரியில் படித்துக்

கொண்டிருந்த போதே ஒளியைப் பற்றி ஆராய்ந்து தம் கருத்துக்களை ஒரு கட்டுரையாக எழுதினார். இக் கட்டுரை இங்கிலாந்திலுள்ள விஞ்ஞானக்கலைப் பத்திரிகையில் வெளிவந்தது. அரசாங்கத்தார் நடத்திய போட்டித் தேர்வில் இவர் முதல்வராக வெற்றி பெற்றார். அதனால் இவருக்குக் கல்கத்தாவில் அரசாங்க டதவிக் கணக்கு அதிகாரி பதவி கிடைத்தது. இவர் **உலோக சுந்தராம்பாள்** என்னும் அம்மையாரை மணந்துகொண்டார்.

6. நிதியிலாகாவில் வேலை பார்த்து வந்தாலும், இவருடைய மனம் விஞ்ஞானத்தையே நாடி நின்றது. அதனால் வேங்கடராமன் ஓய்வு கிடைத்த பொழுதெல்லாம் **டாக்டர் மகேந்திரலால் சர்க்கார்** ஏற்படுத்திய விஞ்ஞானக் கலை வளர்ச்சிக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து வந்தார். இந் நிலையில் இவர் இரங்கூனுக்கு மாற்றப்பட்டார். சில மாதங்களுக்குள் இவர் தந்தையார் காலமானார். அதன் பொருட்டு இரங்கூனிலிருந்து திரும்பி வந்த வேங்கடராமன் நாகபுரியில் வேலையை ஒப்புக்கொண்டார்., மீண்டும் இவர் கல்கத்தாவுக்கே மாற்றப்பட்டார். இவ்வாறு இவர் பலவிடங்களுக்கு மாற்றப்பட்டாலும், தாம் இருக்குமிடத்தில் ஓர் அறையை அமைத்துக்கொண்டு விஞ்ஞான ஆராய்ச்சியை விடாமல் நடத்தினார்.

7. கல்கத்தாவில் **சர். அஸ்டோஷ் முகர்ஜி** என்பவர் நிறுவிய விஞ்ஞானக் கல்லூரியில் வேங்கடராமன் பேராசிரியர் பதவியை ஏற்றார். விஞ்ஞானத்தின் மீது வைத்த பற்றினால் அரசாங்க வேலையையும் இவர் விட்டுவிட்டார். வேங்கடராமன் ஒலி, ஒளி என்பவற்றை ஆராய்ந்தார்.

8. கடலும் வானமும் நீல நிறமாய் இருப்பதேன் என்பதைப் பற்றி வேங்கடராமன் ஆராய்ந்தார். இதற்காக இவர் உலகில் சிறந்த அறிஞர்களுக்குக் கொடுக்கப்படும் எண்ணுயிரம் பவுன் மதிப்புள்ள '**நோபெல் பரிசு**' என்பதை 1930-ஆம் ஆண்டில் பெற்ருர்.

9. வேங்கடராமனுக்கு அரசாங்கத்தார் **சர்** பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தினர். வேங்கடராமன் இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, ஸ்வீடன், ஜெர்மனி, பிரான்ஸ் என்னும் நாடுகளுக்குச் சென்று பல அரிய விஞ்ஞானச் சொற்பொழிவுகள் ஆற்றினுர். 1933-ல் பெங்களூரிலுள்ள **டாட்டா இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்** தலைவராக அமர்ந்தார். 1943-ல் அதனை விடுத்து, பெங்களூரில் தம் பெயராலேயே ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலை ஏற்படுத்தி அதனைச் சிறப்பாக நடத்தி வருகிருர். இவருடைய ஊக்கமும், உழைப்பும், தன்னம்பிக்கையும், பொறுமையும் யாவரும் மேற்கொண்டு ஒழுகத் தக்க அரிய பண்புகள் ஆகும்.

அரும்பதங்கள்; **அறிவாளர்**, அற்புதங்கள், **விசையோடு**, **விஞ்ஞானக்கலை**, காலமானுர், பிரதிநிதி, சொற்பொழிவு, **கதிர்**, **ஊக்கம்**, தன்னம்பிக்கை.

பயிற்சி

I. விடை எழுதுக:-

1. உலகம் எவ்வாறு மாறுதல் அடைகிறது?
2. நாம் இக்காலத்தில் காணும் அற்புதங்கள் யாவை?
3. நம் நாட்டின் சிறந்த விஞ்ஞானிகள் யார்?
4. இராமன் எங்கு எப்பொழுது பிறந்தார்?
5. இராமன் முதலில் என்ன வேலை பார்த்து வந்தார்?
6. இவருக்கு எதனுல் நோபெல் பரிசு வழங்கப்பட்டது?
7. இராமன் இப்போது என்ன செய்து வருகிருர்?

II. கோடுள்ள இடங்களை நிரப்புக;-

1. சர். சி. வி. இராமனுடைய இயற்பெயர்———.

2. இராமன்———என்னும் அம்மையாரை மணந்து கொண்டார்.

3. வேங்கடராமன்———, ———நீல நிறமாய் இருப்பது ஏன் என ஆராய்ந்தார்.

III. பின் வரும் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துக:-

அற்புதங்களை, தேவையான, விசையோடு, மிக வேகமாய், நாளுக்கு நாள், சிறப்பாக.

IV. எதிர்ப் பதங்கள் எழுதுக :-

1. குறைந்த ×
2. பலர் ×
3. தெரியாத ×
4. நீண்ட ×
5. பெரியோர் ×

24. நம் குடியரசுத் தலைவர் பிரசாத்

1. நாம் இன்று சுதந்தரக் குடியரசு நாட்டில் வாழ்கிறோம். 1950-ஆம் வருடம், ஜனவரி மாதம், 26-ஆம் தேதியன்று நம் நாடு சுதந்தரக் குடியரசு நாடாயிற்று. அக் குடியரசிற்குத் தலைவராக இருப்பவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஆவர். இவர் காந்தியடிகளின் அன்பைப் பெற்றவர்; தன்னலமற்றவர்; நாட்டுக்குழைத்த பெரியார். இவர் பீகார் இராச்சியத்தைச் சேர்ந்தவர் ; காயஸ்தர் குடியில் பிறந்தவர். காயஸ்தர் என்பார் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்து விளங்கும் குடியினர் ஆவர்.

2. இளமைப் பருவத்திலிருந்தே பிரசாத் நுட்ப புத்தியுடையவராக விளங்கினார். பிரசாத் நன்கு கல்வி கற்றுக் கல்கத்தா சர்வகலாசாலையில் பீ.ஏ. பரீட்சை

யில் முதன்மையாகத் தேறினர். இவர் ஐ. சி. எஸ். பரீட்சைக்குப் படிக்க வேண்டுமென்பது இவரது தந்தையார் விருப்பம். ஆனல் பிரசாத் சட்டக் கல்வி படிக்க வேண்டுமென்று விரும்பினர். இங்கிலே-யில் இவர் தந்தையார் இறந்தார். பிரசாத் எம். ஏ. பரீட்சையிலும் தேர்ச்சி பெற்ருர். உடனே இவருக்கு



முசபர்பூர் கலாசாலேயில் பேராசிரியர் வேலே கிடைத்-தது. பிரசாத் ஓராண்டு ஆசிரியராக வேலே பார்த்-தார். அதன் பின்னர், தம் ஆவலேப் பூர்த்தி செய்து-கொள்ள எண்ணிக் கல்கத்தாவிற்குச் சென்று சட்டக் கல்வி பயின்ருர்; இவர் பி. எல். பட்டமும் பெற்று, உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக வேலே பார்த்து வந்தார். தம் வழக்கறிஞர் தொழிலில் தக்க வருவா-

யையும் புகழையும் பிரசாத் விரைவில் தேடிக்கொண்டார். பிறகு எம்.எல். பரீட்சைக்குப் படித்து அதிலும் முதன்மையாகத் தேறினார்.

3. பிரசாத் பீகாரின் தலைநகராகிய பாட்னாவிற்குச் சென்று வழக்கறிஞர் தொழிலைப் பார்த்து வந்தார். தொழிலில் வெற்றியும், பொருட் பெருக்கமும் உண்டாயின. இவர் செல்வத்தால் பயன் எய்தியவர் பலர். சம்பரான் மாவட்டத்தில் உள்ள குடியானவர்கள் ஓர் ஏக்கர் நிலத்தில் ஆறில் ஒரு பங்கில் அவுரி பயிரிட வேண்டுமென்பது கட்டாயமானதொரு சட்டமாக இருந்தது. அங்குள்ள நிலங்களை ஐரோப்பியர் குத்தகைக்கு வாங்கியிருந்தனர். ஐரோப்பியர் வேலைக்கேற்ற கூலி கொடுப்பதில்லை. அதனால் உழவர்கள் அடைந்த துன்பங்கள் பல. அந்நிலையைக் கண்ட காந்தியடிகள் சம்பரான் சத்தியாக்கிரத்தை நடத்தினார். அச்சத்தியாக்கிரகமும், காந்தியடிகளின் கொள்கைகளும் பிரசாத்தின் மனத்தைக் கவர்ந்துகொண்டன. அன்று முதல் பிரசாத், காந்தியடிகளைப் போல் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து வரலானார்.

4. காந்தியடிகள் இந்தியர் சுதந்தரம் பெறுவதற்காகத் தோற்றுவித்த இயக்கங்கள் பல. அவற்றுள் ஒன்று ஒத்துழையாமை இயக்கம். இந்த இயக்கத்தில் சேர்ந்த பலர் பட்டம் பதவிகளையும், செல்வத்தையும், குடும்பத்தையும் துறந்து நாட்டுப் பணியில் இறங்கினர். பிரசாத்தும் காந்தியடிகளுடன் உப்புச் சத்தியாக்கிரகம் முதலானவற்றில் கலந்து கொண்டு தொண்டாற்றினார். அதனால் பிரசாத் பல முறை சிறைக்குச் சென்றார். பீகார் பூகம்பத்தின்பொழுது பெரும்பொருள் திரட்டுவதற்காக இவர் செய்த தொண்டு யாவராலும்

போற்றிக் கொண்டாடப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து தொண்டாற்றி வந்த அமெரிக்க நாட்டு அம்மையாராகிய நிவேதிதாதேவி பிரசாதைக் காங்கிரஸ் ஊழியராகப் பார்த்தபோது 'பிரசாத் இந்திய நாட்டின் தலைமைப் பதவிக்குத் தகுதியானவர். அவர் அப்பதவியை விரைவில் பெறுவாராக' என்று கூறினார்.

5. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாந்தேதி இந்தியா சுதந்தரம் அடைந்தது. அப்பொழுது, இடைக்கால ஆட்சிக் குழு ஒன்று ஏற்பட்டது. அக்குழுவில் உணவு, உழவு இலாகாக்களின் அமைச்சராக இராஜேந்திர பிரசாத் அமர்ந்து ஒழுங்குற வேலை பார்த்தார். 1950-ஆம் ஆண்டு சுதந்தரக் குடியரசு ஏற்பட்டபொழுது எல்லாக் கட்சியினரும் ஒன்றுகச் சேர்ந்து பிரசாதைக் குடியரசுத் தலைவராக்கினர். அவராட்சியின் நேர்மையைக் கண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகு மறு முறையும் பிரசாதையே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர் என்றால் அவர் எவ்வளவு நேர்மை உடையவர் என்பது புலனாகிறது அன்றோ! பாபு இராஜேந்திர பிரசாத் நீடூழி வாழ்வாராக!

அருஞ்சொற்கள்: சுதந்தரம், குடியரசு, சட்டக் கல்வி, நீதிமன்றம், குத்தகை, பேராசிரியர், வழக்கறிஞர், ஒத்துழையாமை இயக்கம், ஊழியர், ஒழுங்குற, நேர்மை, குழு.

பயிற்சி

I. *விடை எழுதுக:*

1. *நம் நாடு எப்பொழுது குடியரசு நாடாக மாறியது?*
2. *பிரசாத் எவ்விதக் கல்வி கற்றார்?*
3. *சம்பரான் மாவட்டத்தில் உழவர் ஏன் துன்பமுற்றனர்?*
4. *காந்தியடிகளோடு பழகும் வாய்ப்பு இவருக்கு எப்படிக் கிடைத்தது?*

5. பிரசாத் நாடு விடுதலை யடைவதற்குச் செய்த தொண்டுகள் யாவை?

6. நிவேதிதாதேவி இவரைப்பற்றி யாது கூறினர்?

7. பிரசாத் நேர்மையுடையவர் என்பது எவ்வாறு புலனுகின்றது?

கோடுள்ள இடங்களை நிரப்புக :

1. இராசேந்திர பிரசாத் ---- குடியைச் சேர்ந்தவர்.

2. பீகாரின் தலைநகரம் ----.

3. இந்தியா ---- ஆண்டு —— மாதம் --- தேதி சுதந்தரம் அடைந்தது.

4. காந்தியடிகள் தோற்றுவித்த ——— இயக்கத்தில் பிரசாத் கலந்து கொண்டார்.

III. வாக்கியங்களில் பயன்படுத்துக :–

முதன்மையாக, விரைவில், எளிய, துறந்து, நேர்மை, ஒழுங்குற.

IV. எதிர்ப் பதங்கள் எழுதுக ;

1. வெற்றி ×
2. போற்றுதல் ×
3. புகழ்ச்சி ×
4. துன்பம் ×

25. கடிதங்கள்

1. கடிதம் எழுதுவது ஒரு நல்ல முயற்சியாகும். பிற நாட்டு மொழிகள் சிலவற்றில் சிற்சில பெரியோர்கள் எழுதிய கடிதங்கள் இன்றும் நாம் போற்றிப் படிக்கத் தக்க இலக்கியப் பண்புகளுடன் அமைந்துள்ளன. கடிதம் எழுதுவதில் கவனிக்கவேண்டிய விதிகளை முன் வகுப்பில் அறிந்தாய் :—

2. கடிதம் எழுதும்போது இவற்றை மறவாதே. உறையின் வெளிப்புறத்தில் அல்லது கடித அட்டை-

யின் பின்புறத்தில் எழுதப்படுவோரின் முகவரியை தெளிவாகவும், விளக்கமாகவும், தவறின்றியும் எழு வேண்டும்.

3, கடிதம் சுருக்கமாகவும், தாம் அறிவிக் நினைத்த செய்திகள் அனைத்தும் கொண்டதாகவும் படிப்பவருக்கு நன்கு விளங்குவதாயும் இருக் வேண்டும்.

4. கையெழுத்து அழகாக இருக்கவேண்டும் கீழே சில மாதிரிக் கடிதங்களைப் பார்ப்போம்:

1. ஆசிரியருக்குக் கடிதம்

74, தம்புசெட்டித் தெரு,
சென்னை,
15—10—54

ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம் பல. இன்று என் தந்தையார் என்னை என் அக்காளின் திருமணத்திற்கு அழைத்துச் செல்வ தால், இன்று முதல் ஐந்து நாட்கள்வரை எனக்கு விடு முறை அளிக்க வேண்டுமென்று வணக்கத்துடன் கேட் டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிந்துள்ள மாணவன்,
வே. நெடுஞ்செழியன்.

முகவரி :

ஐந்தாம் வகுப்பு 'பி' பிரிவு, ஆசிரியர் அவர்களுக்கு,
முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி,
தம்புசெட்டி தெரு,
சென்னை 1.

2. வாணிகக் கடிதம்

66, மேற்குமாசி வீதி,
மதுரை.
20—10—54

ஐயா,

நீங்கள் வெளியிட்டுள்ள 'சந்திரா வாசகம்' என்னும் புத்தகத்தில் ஒன்றை வி. பி. தபால் மூலமாக அனுப்ப வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
அன்பன்,
க. முருகன்.

முகவரி:

தலைமைக் கணக்கர்,
முருகையபிள்ளை கம்பெனி,
ஸ்ரீவைகுண்டம்,
திருநெல்வேலி ஜில்லா.

3. அழைப்புக் கடிதம்

பாரதி கழகம்,
சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலை,
சேத்துப்பட்டு,
சென்னை 10.
18—11—54

அன்புடையீர் !

எம் கழகத்தின் ஆண்டு விழாவை வரும் டிசம்பர் மாதம் நடத்துவதெனக் கழகத்தார் தீர்மானித்துள்ளனர். அச்சமயம் யோகி சுத்தானந்த பாரதியார் தலைமை வகிக்க இசைந்துள்ளார். எம் பள்ளி மாணவர் அனைவரும் தங்கள் சொற்பொழிவினைக் கேட்கப் பெரு விருப்பினராயுள்ளனர். தாங்கள் அவ்விழாவில் கலந்து

கொண்டு 'பாரதியும் தமிழும்' என்பது பற்றிச் சொ
பொழிவாற்றுதற்கு இசைந்தருள வேண்டுகின்றேம
ஆண்டு விழா டிசம்பர் திங்கள் இருபத்து நான்கா
நாளாகும். தங்கள் இசைவைத் தெரிவிக்குமா
வேண்டுகின்றேன். வணக்கம்.

இப்படிக்குத்
தங்கள் அன்புள்ள,

சா. இளம்வழுதி
செயலாளன்.

முகவரி:

திருவாளர்,
டாக்டர். மு. வரதராசனார் அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சேத்துப்பட்டு,
சென்னை—10.

4. விண்ணப்பக் கடிதம்

75, லிங்கி செட்டித் தெரு,
சென்னை,
18—11—54

திரு.

தலைமை ஆசிரியர் அவர்கட்கு,
இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளி
அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை—1.

அன்புள்ள ஐயா,

தங்கள் பள்ளியில் வேலை செய்ய ஒரு தமிழ் ஆசிரியர் வேண்டியிருப்பதாக அறிந்தேன். நான் S. S. L. C படித்துள்ளேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றுள்ளேன். மற்றும், நான்

ரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளியிலும், கோபி செட்டிப்பாளையம் டையமண்டு ஜூப்ளி உயர்நிலைப் பள்ளியிலும் இரண்டாண்டுகள் தமிழாசிரியனாக இருந் துள்ளேன். சென்னையில், செயின்ட் காபிரியேல் உயர் நிலைப்பள்ளியிலும் ஓராண்டு வேலை பார்த்துள்ளேன். ஆங்காங்குத் தலைமையாசிரியரிடம் வாங்கிய நற் சான்று இதழ்களைத் தங்கள் பார்வைக்கு அனுப்பி யுள்ளேன். எனக்கு அவ்வேலை அளிக்கப்படுமாயின் தங்கள் மனம் மகிழ்ச்சியுறும் வண்ணம் என் கடமை யைச் செய்வேன் என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
வணக்கமும் கீழ்ப்படிதலுமுள்ள,
இரா. நச்சினார்க்கினியன்,

முகவரி.

திரு. தலைமையாசிரியர் அவர்களுக்கு,
இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை—1.

அரும்பதங்கள்: இலக்கியம், பண்பு, உறவினர், முகவரி, சொற்பொழிவு, விருப்பு, இசைவு. வித்துவான், நற்சான்று இதழ், விண்ணப்பம்.

பயிற்சி

1. கடிதம் எழுதும்போது கவனிக்க வேண்டிய முறை கள் யாவை?
2. ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு விடுமுறையை விரும்பி, உன்னுடைய வகுப்பு ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. உனக்கு வேண்டிய புத்தகம் ஒன்றை அனுப்பி வைக்கும்படி ஒரு புத்தகக் கம்பெனிக்குக் கடிதம் எழுதுக.
4. உன் வீட்டில் நடைபெற இருக்கும் கொண்டாட்டத் திற்கு உன் நண்பனை அழைத்துக் கடிதம் எழுதுக.

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

உருவமில் இறைவன் ஒருவன் என்றே
அருளிய முகம்மது பெருநபி வாழி!
'நேசி பகைவரை' என்று பேசி
ஆணி அறைந்த மாணிலர் இடத்தும்
இரக்கம் காட்டிப் பரக்கச் சிலுவையில்
நின்ற கிறிஸ்து அன்பு வாழி!
அருளறம் வளர்த்த அருகன் வாழி!
ஒருமையில் நின்று தருமம் உணர்த்திய
சத்திய ஞானப் புத்தன் வாழி!
அமரன் அழகுக் குமரன் வாழி!

—திரு. வி. கலியாண சுந்தரனா.

அரும்பொருள்

உருவம் இல் – உருவம் இல்லாத; மாண் + இலர் – சிறந்த பண்புகள் இல்லாதவர்; அருள் – கருணை; அருகன் – சமணர்களுடைய கடவுள்; சத்தியம் – உண்மை; அமரன் – அழிவில்லாதவன்; குமரன் – முருகன்.

II. நீதிப்பகுதி

1. நன்னெறி

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கட(ல்)நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 1.

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ(ம்) என்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண்(டு) ஊதுமலர் ஈர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 2.

இன்சொலா(ல்) அன்றி இருநீர் விய(ன்)உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல். 3.

தந்தைநல் கூர்ந்தா(ன்) இரப்பவர்க்கீந்(து) என்றவன்றன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயன்(ன்)உதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவுங் கனி. 4.

கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா(ல்) இய(ல்)உதவி தாம்செய்வர்—அம்மா
முளைக்கு(ம்) எயிறு முதுசுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. 5.

உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குண(ம்)என்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு. 6.

நீக்க(ம்) அறு(ம்)இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்(து)ஆகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 7.

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர் தாமென்றும் மதியாரே—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். 8.

தங்குறைதிர்(வு) உள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை நீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா(து) உலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 9.

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. 10.

—சிவப்பிரகாசர்.

அரும்பொருள்

1. பேறு–செல்வம்; புயல்–மேகம்; முகந்து–கொண்டு; பெய்யாக்கொடுக்கும்–(மழையாய்) பெய்து கொடுக்கும்.

2. தொலையா—அழியாத; தலையாயவர்—சிறந்த பெரியோர் சார்தல்—அடைதல்; இலை—இல்லை; ஆல்—ஈற்றசை இரைக்கும்—ஒலிக்கின்ற; ஈர்ங்கோதை—குளிர்ச்சி பொருந்திய மாலை; வரை-மலை

3. வன்சொல்—கடுஞ்சொல்; இருநீர்—பெரியநீர்(கடல்); வியன் உலகம்—பரந்த உலகம்; அதிர்வளை—ஒலிக்கின்ற வளையல்; அழற் கதிர்—வெப்பம் பொருந்திய கிரணங்களையுடைய சூரியன்; தண் என்கதிர்—குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய சந்திரன்.

4. நல்கூர்ந்தான்—வறுமை யடைந்தான்; ஈகை—கொடுக்கும் தன்மை; பைந்தொடி—பசுமையான வளையல்களை அணிந்தவளே; அரம்பை—வாழை.

4. கைம்மாறு—பதில் உதவி; உகவாமல்—விரும்பாமல்; மெய்—உடம்பு; எயிறு—பல்; வலியன—கடினமான பொருள்களை.

6. கவர்ந்து—வசப்படுத்திக்கொண்டு; சினம்—கோபம்; தடம் கரை—அகன்ற கரை; விடுத்தல்—தண்ணீரை வெளியே விடுதல்; விளம்பு—சொல்லுவாயாக.

7. நீக்கம் அறும்—பிரிதல் அல்லாத; நொய்து—அற்பம்; பூக் குழல்—பூக்களை யணிந்த கூந்தல்; புல்லினும்—கூடினாலும்; திண் மைநிலை—உறுதியான நிலைமை.

8. காமுறுவர்—விரும்புவர்; புளிங்காடி-புளிப்புச்சுவை பொருந் திய காடிநீர்.

9. உள்ளார்-நினையாதவராய்; வெங்துறை-கொடிய துன்பங் கள்; விழுமியோர்-சிறந்தோர்; திங்கள்-சந்திரன்; கறை-களங்கம்.

10. காணின்-பார்த்தால்; ஆயும்-ஆராய்கின்ற; கடவுள்-சிவ பெருமான்; அவிர்சடை-ஒளி பொருந்திய சடை; சுரநீர்-கங்கை.

2. நீதிவெண்பா

செய்யு(ம்) ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர் துயரம் போல். 1.

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்ப(ர்) ஆன்(று) அமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி(ன்) ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி(ல்)உண்டோ ஒலி! 2.

கொம்புளதற்(கு) ஐந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்(கு) ஆயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
திங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. 3

ற்பூரம் போலக் கடலுப்(பு) இருந்தாலும்
ற்பூரம் ஆமோ கடலுப்புப்—பொற்பூரும்
ண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
ண்ணிய(ர்)ஆ வாரோ புகல். 4.

நாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா(து)—ஆ(ம்) அழல்மற்(று)
ங்கே பிறந்தாலு(ம்) எள்ளாரே நல்லோர்கள்
ங்கே பிறந்தாலும் என். 5.

சகு விடந்தலையி(ல் எய்து(ம்)இருந் தேளுங்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்க(ண்)அர வுக்குவிடம் பல்லளவே துச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 6.

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 7

பகைசேரும் எண்ணான்கு பற்கொண்டே நல்நா
வகைசேர் சுவையருந்து மாபோல்—தொகைசேர்
பகைவரிடம் மெய்யன்பு பாவித்(து) அவரால்
சுகமுறுதல் நல்லோர் தொழில். 8

இன்ன(ல்)தரும் பொருளை யீட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே—அன்ன(து)
அழித்தலும் துன்பமே யந்தோ பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம் 9

பொற்(பு)அறிவில் லாதபல புத்திரரைப் பேறலி(ன்)ஓர்
நற்புதல்வ னைப்பெறுத(ல்) நன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனு(ல்) ஏதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன்(று) ஓது. 10

அரும்பொருள்

1. தேர்ந்து - ஆராய்ந்து; மனத்தாபம்-மனவருத்தம். செய்ய-சிறந்த; நகுலன்-கீரி; மறை-வேதம்; பொற்கொடி-பொற்கொடி போன்ற பெண்.

2. சிற்றுணர்வோர்–இழிந்த அறிவினையுடையோர்; சிலுசிலு பர் படபடத்துப் பேசுவர்; ஆன்று–(கல்வியினால்) நிறைந்து; ஒ கலம்–சிறந்த பாத்திரம்.

3. வெம்புகரி–வருத்துகின்ற யானை; வம்புசெறி–கொடுமை மிகுந்த.

4. பொற்பு ஊரும்–அழகு மிகுகின்ற; புல்லியர்–இழிந்தவ புகல்–சொல்வாயாக.

5. சவரம்–சாமரை; பூமருதேன்–பூவில் பொருந்தியுள்ளதேன் அழல்–நெருப்பு; எள்ளார்–இகழார்.

6. விடம்–நஞ்சு; எய்தும்–இருக்கும்; இரும்தேள்–பெரி தேள்; வாய்த்த-பொருந்திய; நோக்கரிய-பார்த்தற்கரிய; துச்சன தீயோர்; அங்கம்-உடம்பு.

7. சின்னம்பட-நிலைகுலையும்படி; நலிந்தாலும்-துன்பமடை தாலும்; நயந்து-மிகுந்து.

8. எண்ணான்கு-முப்பத்திரண்டு; தொகை சேர்-பலவகையாக கூடியுள்ள; பாவித்து-மனத்தில் நினைத்து; உறுதல்-அடைதல்.

9. இன்னல்-துன்பம்; பேணுதல்-பாதுகாத்தல்; அந்தோ ஐயோ.

10. பொற்பு-அழகு; பேறலின்-பெறுவதைக் காட்டிலும்; பய ததனால் பெற்றதனால்; ஒன்றமையாதோ-ஒன்று+அமையாதோ ஒன்று போதாதோ; கரிக்கன்று-யானைக் கன்று.

3. சதகச் செய்யுட்கள்

(1) செய்ய வேண்டிய செயல்கள்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
　　பெரியோரை முனியவேண்டா ;
பின்ஒன்று முன்ஒன்று பேசியே அவமானப்
　　பேர்கொண்டு திரியவேண்டா ;
உற்றவர்கள் போலஉள் பகையான வஞ்சகரை
　　ஒருநாளும் நம்பவேண்டா ;
ஒருவர்க்கு இச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபை
　　ஊமைபோல் நிற்கவேண்டா ; [யில்
சற்றுமே பொறுமையில் லாதவர் சண்டையில்
　　தாம்போய் விலக்கவேண்டா ;
தைரியந் தனில்விக்ர மாதித்தன் என்னினும்
　　தன்னையே புகழவேண்டா ;

4. விவேகசிந்தாமணி

(1) குலத்தின் இயல்பு

குக்கலைப்பிடித்து, நாவிக்
　　கூண்டினில் அடைத்து வைத்து,
மிக்கதோர் மஞ்சள் பூசி,
　　மிகுமணம் செய்தா லும் தான்,
அக்குலம் வேற தாமோ
　　அதனிடம் புனுகுண் டாமோ ?
குக்கலே குக்கல் அல்லால்
　　குலந்தனில் வேற தாமோ ?

(2) இரக்கத்தின் சிறப்பு

கலை எலாம் உணர்ந்தா ரேனும்
　　கரிசறத் தெளிந்தா ரேனும்
மலைஎன உயர்ந்தா ரேனும்
　　மனமயல் அகன்று ரேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க்கு
　　உதவிய கைய ரேனும்
இலகிய இரக்கம் இன்றேல்
　　எழுநர(கு) அடைவர் அன்றே.

1. குக்கல்-நாய், நாவி-புனுகு.
2. கரிசுஅற-குற்றம் இல்லாமல்; மனமயல்-மனமயக்கம்; கயர்-கையினையுடையவர்; இலக்கிய - விளங்கிய; அடைவர்-சேர்வர்.

5. பலசுவைப் பாடல்கள்

(1) பசு

பச்சைப்புல்லைத் தின்று வெள்ளைப்
　　பால்தர நீ என்ன
பக்குவஞ் செய்தாய் ? அதனைப்
　　பகருவையோ ? பசுவே !
உச்சியுடல் நக்கி ஈன்ற
　　உடன்உனது கன்றை
உயிர்எழுப்பும் மாயம் எதோ ?
　　உரைத்திடுவாய், பசுவே ! 1

வாய்க்கினிய பால் தருவாய் ;
வயற்குரமும் தருவாய் ;
வண்டிகட்டக் காளை யும் நீ
வளர்த்தளிப்பாய், பசுவே !
தாயில்லாப் பிள்ளை கட்குத்
தாயாவாய் ; நோயால்
தளர்ப வர்க்கு மருத்துவச்சி
தானுவாய், பசுவே !

(2) நாய்

வீட்டு வாசல் காப்பவன்,
வேட்டை யாட வல்லவன்,
ஆட்டுக் கிடைப் பாண்டியன்,
அன்பு மிக்க தோழன்.
உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்
மண்ட லத்தில் நாய்போல்
வாய்த்த துணை உண்டோ ?

—திரு. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை